XVP, 33

உ

கடவுள் துணை

# சர்வசமயசமரசக்

# கீர்த்தனைகள்

4147

இவை

மாயூரம் மாஜி முன்சீப்

ச. வேதநாயகம் பிள்ளை

அவர்களாலியற்றிய கீர்த்தனைகள்

சிட்டத்தூர்

செங்கல்வராய முதலியார்

அச்சிட்ட பிரதிக்கிணங்க,

LIBRARY

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்

வித்தியா ரத்நாகரம் பிரஸில்

பதிப்பிக்கப்பட்டது

சென்னை

இதன் விலை] 1941 [அணா 12.

கடவுள் துணை

# கீர்த்தனைகளின் அகராதி


| | பக்கம் |
|---|---|
| அடித்தாலும் | 191 |
| அனுதினம் இந்தப்படி | 152 |
| அந்தப்பெரிய துரை | 162 |
| அபயம்நீயருளுவாய் | 67 |
| அப்பா இதென்ன | 160 |
| அப்போதுனைத்தொழல் | 36 |
| அம்புயப்பதம் | 37 |
| அருள்புரிவாயே | 11 |
| * அருமைமைத்துன | 205 |
| ஆண்டருளே | 9 |
| ஆதரித்திடநல்ல | 46 |
| ஆதிபரமநாதாஞான | 50 |
| ஆதிபரமநாதாநல்ல | 53 |
| ஆதிமூலனே | 112 |
| ஆதியேபரஞ்சோதி | 28 |
| ஆரணமயநய | 69 |
| ஆர்வேணுமோ | 172 |
| ஆளாயோஎனையே | 117 |
| ஆள்வாயெனதுளம் | 25 |
| இந்த உத்தியோகம் | 166 |
| இந்த உபகாரம் | 20 |
| இந்த நிமிஷமே | 19 |
| இந்தப் பிழைகளெல்லாம் | 16 |
| இந்தமனம் | 113 |
| இந்தவரந்தருவாய் சுவாமி | 16 |
| இந்தவரந்தருவாய் | 51 |
| இந்தவழக்குக்கெல்லாம் | 159 |
| இந்தவேளை | 79 |
| இப்படிப்பட்டநான் | 102 |
| இரக்கஞ்செய்வாயே | 54 |
| இவ்வளவுதான் | 45 |
| இனியாகிலுமனமே | 122 |
| இன்னமுந்தாமதம் | 77 |
| இன்னந்தாமசம் | 70 |
| இன்னமும் என்மீது | 101 |
| இன்னந்தான்பராமுகமோ | 108 |
| இன்னம்பராமுகம்ஏதோ | 56 |
| இன்னம்பராமுகமாமோ | 105 |
| ஈசனேமலநாசனே | 35 |
| ஈசாநின் | 27 |

| | பக்கம் |
|---|---|
| உடலைநம்பாதே | 141 |
| * உடலைநம்பாதே | 143 |
| உதவிசெய்ய | 82 |
| உய்யும்வகை | 150 |
| உற்றவரேஎனை | 175 |
| உனக்கேநமஸ்காரம் | 115 |
| உனைநானே | 71 |
| உன்னிடத்தில் | 7 |
| உன்னைஎனக்கு | 74 |
| உன்னைத்தவிர | 77 |
| உன்னைநம்பினேன் | 47 |
| உன்னைப்போல்எனக்கு | 89 |
| உன்னைமறவாமல் | 88 |
| ஊருக்கெல்லாம் | 194 |
| எக்காலமும் | 3 |
| எத்தனைகவி | 100 |
| எத்தனையானாலும் | 152 |
| எந்தநாளிலும் | 164 |
| எந்தவிதமும் | 103 |
| எந்தையேஎனக்கும் | 114 |
| எப்படியும்பரமே | 73 |
| எவளோஅவளோ | 182 |
| எவ்வகையிலும் | 37 |
| எனக்குக்கட்டிய | 40 |
| எனை ஆதரிப்பாயே | 5 |
| என்பிழைகள் | 8 |
| என்னசொன்னாலும் | 88 |
| என்னவந்தாலும் | 167 |
| என்னைநீ ஆளுவாய் | 42 |
| என்னை ஆளையா | 13 |
| ஏகநாதா | 105 |
| ஏகபராபரனே | 52 |
| ஏகாகனயோகா | 104 |
| ஏகாதிபனே | 62 |
| ஏதுக்குவாங்கினீர் | 170 |
| ஏதுபராமுகம் | 68 |
| ஏதோஇன்னம் | 91 |
| ஏதோசோதனை | 67 |
| ஏழைக்கிரங்க | 43 |
| ஏனின்னம் | 44 |

| | பக்கம் |
|---|---|
| ஐயனேஉயர் | 33 |
| ஐயனேஉன்னழகை | 41 |
| ஐயாஎனை | 15 |
| ஒருவர்மேலும் | 168 |
| ஓ. ஓ. ஜெகநாதா | 97 |
| ஓ. ஓ. பிரபுத்துவமே | 173 |
| ஓகோகாலமே | 157 |
| ஓடிநான்உனை | 4 |
| கடைக்கண்ணால் | 48 |
| கருணாகடாட்சம் | 52 |
| கருணாகரப்பரம் | 44 |
| கருணாகரமூர்த்தி | 72 |
| கருணாசாகரா | 63 |
| கருணாலயக்தியே | 109 |
| கருணைநீசெய்ய | 66 |
| காக்கவேண்டும் | 34 |
| காக்ஷிஎனக்கு | 11 |
| காத்தருள்வாய் | 65 |
| கேளும்பூமான்களே | 199 |
| கேள்மனமேநான் | 147 |
| [illegible]குலவாய் | 75 |
| சமயமீதையா | 100 |
| சம்மதிஎனக்கு | 32 |
| சரணம்சரணம் | 23 |
| சரணம்சர்வேசா | 70 |
| சருவஜீவாதாரா | 116 |
| சருவவிநோதா | 110 |
| சருவேசாசரணம் | 99 |
| ஜாலம்செய்வதேதோ | 39 |
| சித்தம்இரங்கி | 12 |
| சித்தம்உவந்தருள் | 6 |
| சித்தம்எப்படியோ | 72 |
| சிந்தைக்குள் | 22 |
| சீச்சீநீர்லஞ்சம் | 169 |
| சீலம்நீதா | 24 |
| செய்யவேண்டுமானால் | 153 |
| ஜெகநாதா | 54 |
| ஞானகுருபரவடிவே | 93 |
| ஞானமார்க்கம் | 81 |
| ஞானோதயவ்ரம் | 111 |
| தஞ்சம்நீயே | 59 |
| ததியிதென்முகம் | 38 |
| தயைபுரிய | 64 |

| | பக்கம் |
|---|---|
| தயைபுரியே | 106 |
| தருணங்கருணை | 14 |
| தருணமீதையா | 84 |
| தருணம்தருணம் | 76 |
| தேவநாயகனே | 26 |
| தேவனேஉனை | 29 |
| தேவாதிதேவபல | 80 |
| தேவாதிதேவனேஜீவனே | 86 |
| தேவாதிதேவனேதயை | 18 |
| தேவாதிதேவ | 61 |
| நம்பாதேவாழ்வை | 140 |
| நம்பினேனுனையே | 85 |
| நல்லபெண்ணை | 183 |
| நல்லவரம் | 107 |
| நாதனேதயை | 58 |
| நாதாஅடியேன் | 88 |
| நாதாகனவேதா | 96 |
| நாதாகிடையாதா | 109 |
| நாதாநிரந்தரவிநோதா | 33 |
| நாயகர்பக்ஷமடி | 190 |
| நாளேநல்லநாள் | 90 |
| நானேஉனை | 78 |
| நானேபொதுநீதி | 158 |
| நிச்சயம்இதுதானே | 63 |
| நிதம்நிதம் | 87 |
| நித்தியானந்தத்தைநாடு | 128 |
| நித்தியானந்தமே | 131 |
| நிரந்தரனே | 35 |
| நினைப்பதெப்போது | 165 |
| நின்பதமேதுணை | 25 |
| நீமலைக்காதே | 126 |
| நீயேகதியெனக்குன் | 60 |
| நீயேசர்வசக்தன் | 62 |
| நீயேதுணைபரனே | 96 |
| நெஞ்சேஇந்த | 124 |
| நெடுநாள்நம்பினேனையா | 118 |
| பஞ்சந்தீர் | 119 |
| பஞ்சவர்ணக்கிளி | 185 |
| பணமேஉன்னால் | 144 |
| பணமேஉன்னால் | 145 |
| பத்தினிபோல் | 189 |
| பரப்பிரமமே | 94 |
| பரனேஅடியார் | 30 |

| | பக்கம் |
|---|---|
| பரனேபக்தர் | 55 |
| பாசத்தால் | 49 |
| பாதம்நம்பினேனே | 95 |
| பாழ்மனமேபுன்னை | 125 |
| பிக்ஷைஅருள் | 112 |
| புண்ணியம்போல் | |
| புண்ணியம்போல் | 134 |
| புத்திஇதுமகளே | 180 |
| புத்தியாய்வாழ்வீர் | 207 |
| புரட்டெல்லாம் | 154 |
| பெண்ணாசையே | 149 |
| பொருளைவிரும்ப | 135 |
| போதரஎன்ன | 98 |
| போதும்போதும் | 161 |
| போனதுபோகட்டும் | 127 |
| மங்களம்மங்களம் | 208 |
| மயங்குகிறாய்மனமே | 155 |
| மறவாதேகருணாம் | 123 |
| மனமேஉனக்கு | 148 |
| மனமேஉனக்குஎன் | 137 |
| மனமேநான் | 126 |
| மனமேநீஈசன் | 121 |
| மனமேநீமயங்குவ | 156 |
| மனமேநீமறவாதே | 121 |
| மாதரைநினையாதே | 146 |
| மாதேஎன்வார்த்தை | 121 |
| மார்க்கம்அல்லடிமானே | 195 |
| மார்க்கம்இதுமகனே | 178 |
| மெய்ஞ்ஞான | 79 |
| மெய்யிதுமெய்யிது | 94 |
| மைத்துனரேநாளும் | 203 |
| மைத்துனாரே | 202 |
| வழியிதுஉய்வதற்காதே | 151 |
| வாவாஜெகநாதா | 65 |
| வாவாவாவா | 101 |
| வாவாவாதேவே | 83 |
| வாழ்வைநம்பாதே | 139 |
| வித்தையைப்படிப்பியுங்கள் | 196 |
| வினையேஎனையே | 9 |
| வீண்கர்வமேன் | 136 |
| வேதநாயகனேஎவ்வித | 39 |
| வேதநாயகனேமெய் | 97 |
| வேதநாயகா | 87 |


கீர்த்தனைகளின் அகராதி

முற்றிற்று

உ

கடவுள் துணை

# சர்வசமய சமரச ஸ்தோத்திரம்

பன்னிருசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

சீர்கொண் டிலங்கிடும் சிருட்டிதிதி சம்மாரஞ்
செய்யமுக் குணவஸ்துவாய்
செப்பரிய சகுணமாய் நிர்க்குணத் தாதார
தீண்டிடா ஞானவொளியாய்
பார்கொண் டிலங்கிடும் யாவையுந் தந்தாளும்
பரமனாய்ப் பரஞ்சுடருமாய்
பக்தரி னுளத்தினி லாடுந்தெய்விகனாய்
பவமெனுந் திமிரமோட
பேர்கொண் டிலங்கிடுந் தாரகம தாய்வேதம்
பேசரிய கலையாகியே
பெட்புறை யானந்த முச்சுடரு மாய்நின்ற
பெருமை நிறையாவும் வல்ல
வார்கொண் டிலங்கிடும் தாதாவுமாகிய
வள்ளலே கருணைதரவே
வந்தாமது சுந்தரபதந் தந்தருள் நிந்தையகல்
மாசிலா ஜகதீசனே.

எங்கும் நிராதார நிர்க்குண நிராலம்ப
ஏகாந்த காருண்ணிய
மென்றுந் துலங்கிட மனோதீத மதினினைந்
தெழிலாகும் பரமகுருவாய்
துங்கமெனு மெய்ஞ்ஞான தீபமாயடியவர்
துகளனைத்துந் தீர்த்தரு
டுய்யசை தந்யமாற் றிருமறைக ளோதிதொழும்
சுத்தசின் மயவடிவமாய்
புங்கவர்க ளென்றுதுதி செய்திடுங் காரணப்
பூரணப் பொருளுமாகி
போதங்க ளியாவுக்கு முதன்மையாய் நின்றொழுகும்
புண்யவாழ் வதனையென்றும்
மங்களா கரமாக வருள்மனோ தீதனே
வள்ளலே கருணைகரவே

வந்துமது சுந்த்ரபதந் தந்தருள் நிந்தையகல்
மாசிலா ஜகதீசனே.

பூதலமெ லாம்பரவு நாத நாதாந்தனே 2
பொற்பிலகு மானந்தனே
புகழ்தங்கும் ஞானகா ருண்யனே தொண்டரின்
புரையனைத்தையுந் தீர்த்திடும்
வேதனே வேதாந்த சமரசக் கியானியர்கள்
விரும்பியே துதிபராவும்
விமலனே அமலனே வித்தக நிராலம்ப
விபுதனே சுகுணமலியும்
போதனே பூசுரர்க ளுளமதனி லேநீடும்
பூரணா னந்தவாழ்வே
போக்குவர வில்லாத புண்யகரு ணாம்பரா
பொய்யிலா நுண்மைவடிவே
வாதனையு மும்மலச் சேட்டையு மொழித்திட
வள்ளலே கருணைதரவே
வந்துமது சுந்த்ரபதந் தந்தருள் நிந்தையகல்
மாசிலா ஜகதீசனே.

அண்டர்கள் பணிசெய்யு மாதிமத் யாந்தகா
அற்புதா காரசீலனே
அவனியுட னதிலுள தியாவையு மமைத்தருளும்
ஆனந்த மறைமூலனே
பண்டைவினை யாவையும் தீர்த்தாண்டு கருணைதரும்
பரனே நிரந்த்ரவடிவே
பகரறிய சகுணமே பதமருளும் நம்பனே
பக்ஷமது வைத்தருள்செய்வாய்
எண்டிசையும் துதிமலியும் ஏகவை போகனே
ஏதிலார்க்கருள் தியாகனே
எப்பாரு முனதடி யிலாமல்திக ழாதெனவே
என்னுளம் நினைந்துருகலால்
மண்டல மெலாம்புகழ சமரசக் கீர்த்தனை
வழுத்தினேன் கருணைதரவே
வந்துமது சுந்த்ரபதந் தந்தருள் நிந்தையகல்
மாசிலா ஜகதீசனே.

உ

கடவுள் துணை

# சர்வசமய சமரசக் கீர்த்தனை

## 1. இராகம்-தேவகாந்தாரி-ஆதிதாளம்

### பல்லவி

எக்காலமும் உன்தன் பொற்கால்பணிந்துகொண்
டிருக்கவரம் அருள்வாய் (எக்கா)

### அநுபல்லவி

தக்கோர் அபிமான ஞானசீலா
சகலபுவனரக்ஷ காநுகூலா (எக்கா)

### சரணங்கள்

1. சந்தமேவுபிர பந்தமாலைபாடி
கந்தமார்உன்அர விந்தபாதம்சூடி
வந்தனுதிகள் அநந்தமேசொலி
விழுந்துபூமியில் எழுந்துநைந்துருகி (எக்கா)

2. துங்கசாதுஜ சங்கமோடுகூடி
பொங்கும்ஞான அகலங்கவாரிஆடி
அங்கமேபாவ சங்கொளப்பலப
தங்களோடுசுப மங்களங்கள்சொல்லி (எக்கா)

3. பழுதிலாதுதினம் முழுதும்உன்னைநாடி
தொழுதுநேசமுடன் அழுதுபாடிஆடி
ஒழுகுசெந்தழலின் மெழுகுபோலமனம்
இளகியேஅதிகபு ளகிதாங்கமுடன் (எக்கா)

4. பூதலம்பரவு பாதவேதநாதா
சாதகம்செயும் அபேதகீததாதா
போதநாயகனே பூதநாயகனே
கீதநாயகனே வேதநாயகனே. (எக்கா)

## 2. இராகம்-துசாவந்தி-ஆதிதாளம்

### பல்லவி

ஓடிநான்உனைத்தேடிவந்தேன்-எனக்
குதவிசெய்தருள் ஐயனே. (ஓடி)

### அநுபல்லவி

நாடிஉன்பதம் தொட்டேன்
கோடிதரம் கும்பிட்டேன்
நாதவிநோத பிரசாதபிரபோத
அபேதஅதீத நிர்வாதகியாதனே.

### சரணங்கள்

1. அற்பமானபதம்-சற்றும்விரும்பேன்
ஐயாஇது யாதார்த்தம்
அற்புதபரமார்த்தம்-கொடுத்தருளில்
அதுவேஉப யோகர்த்தம்
பற்பல விசித்திரனே
கற்பனு சமுத்திரனே
பாச விநாச சுரேச நரேச. (ஓடி)

2. வந்துனையேஅடுத்தேன்-கீர்த்தனமாலை
வகைவகை நான்தொடுத்தேன்
வந்தனம்கைஎடுத்தேன்-நீவசிக்கஎன்
மனக்கோயிலுங் கொடுத்தேன்
அந்தமனை உனக்கே
உன்தன் மனைஎனக்கே
ஆய விதேயர்கள் நேய சகாய
அகாய உபாய நியாய விதாயனே. (ஓடி)

3. அன்பர் உபாசனனே-பூதலந்தன்னில்
அதர்ம விமோசனனே
இன்பநிவேசனனே-வேதநாயகன்
இதய சிம்மாசனனே
என்பவங்களைத் தீர்ப்பாய்
உன்பதந் தன்னிற்சேர்ப்பாய்
ஏகஅநேக திரிலோகநிர்வாக
தெய்வீக விவேக அமோக தியாகனே. (ஓடி)

3. இராகம்-கேதாரகெளளம்—ஆதிதாளம்

பல்லவி

எனை ஆதரிப்பாயே-என்மன இருள்
தனையே பிரிப்பாயே. (எனை)

அநுபல்லவி

வினையே அரிக்கும்சொல்லா
வீணனுன் ஒருபுல்லா
நினையா என்மனம்கல்லா
நிதம் அதனுடன்மல்லா
நிசயபிர போதனே
அக்ஷயப் பிரக்கியாதனே
சஜ்ஜனப் பிரசாதனே
துர்ஜ்ஜனப் பிரமாதனே. (எனை)

சரணங்கள்

1. துக்கப்பிர பஞ்சத்தொல்லை
சொல்வதற் குண்டோஎல்லை
இக்குவே றெனக்கில்லை
தெய்வமேகேள் என்சொல்லை
சிஷ்டர் சமுதாயனே
துஷ்டர்கள் அபாயனே
இஷ்டர்கள் சகாயனே
அஷ்டகுண நேயனே. (எனை)

2. அடியனுன் வினைவசம்
ஆயினன் இதுநிசம்
படியிற் கருணாசம்
பாலித் தருள்கலசம்
பக்தஜன நேசனே
சுத்தமன வாசனே
சித்தமல நாசனே
வித்தக விலாசனே. (எனை)

3. மருவிய பாசவலை
மாட்டி உற்றேன்கவலை
தருமை சைதன்யநிலை
தந்தேன் மயக்கந்தொலை

சங்கட நிவாரகா
எங்கள்குல தாரகா
பொங்குசுக தாயகா
துங்கவேத நாயகா. (என)

---

இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

சித்தம் உவந்தருள்செய்ய-இத்தனை தாமதமேது
சீலனே புவனபரி-பாலனே மூலனே மூலனே நீயுன் (சித்தம்)

அநுபல்லவி

நித்தனே புவியெங்கும்-பிரசித்தனே அகிலலோக
கத்தனே ஜீவகோடிகட்-கத்தனே சுத்தனே நீயுன் (சித்தம்)

சரணங்கள்

1. அசடனுனென்பதென்ன ரகசியமா-பெற்ற
அன்னியிடம் உண்மை சொல்லவேபயமா
வசஞ்செய்தருள்வ துனக்கோர்விஷயமா—யாவும்
வல்ல உனக்கிதென்ன அதிசயமா

வசனசாதுரியனே
மனனமாதுரியனே
சுஜனர்கள்பிரியனே
சுரர்தொழும்பெரியனே. (சித்தம்)

2. நிதமும் உனதுபத கைங்கரியமே-செய்ய
நீயருளெனக்குச் சுதந்திரியமே
அதுவேயெனக்குப்பெரும் சௌகரியமே-இனி
ஐயனேவேண்டேன் வேறு ஐசுவரியமே

அதிசய அப்பிரமேயா
அகணித சுப்பிரகாயா
விதிநெறி செப்பும்வாயா
விநய சங்கற்பதூயா. (சித்தம்

3. பூதபௌதிகமெல்லாம் நிறைவோனே-நல்ல
புண்ணியத்திருமறையை அறைவோனே
வேதநாயகன்மனம் உறைவோனே-ஞான
விழியில்லாதவருக்கு மறைவோனே

போதகப்பிர காசனே
புண்ணியப் பிரதேசனே
சாதகக்கிரு பேசனே
தாசருட் பிரவேசனே. (சித்தம்)

---

5. இராகம்-அசாவேரி-ஆதிதாளம்

பல்லவி

உன்னிடத்திற்சொல்லாமல் யாரிடத்திற்சொல்லுவேன்
ஓ—ஓ—ஜகதீசா

அநுபல்லவி

பொன்னிடத் தாசையது புனிதர்கள் தமக்கின்பம்
பொழிதருவே இந்தப் புவியில்நான் படுந்துன்பம் (உன்னி)

சரணங்கள்

1: வயிறுபசிக்கும்பிள்ளை மாதா இடம்போமன்றி
மற்றொருவரிடத்திற் சேருமோ-நாளும்
அயர்வுறும்பெரும்பிணி அருமருந்தாலன்றி
அயலொன்றிலே அதுதீருமோ-கன
வெயிலால் வருந்துவோரே
வேண்டுவர் நிழல்நீரே
உயிர்ப்பயி ரோம்புங்காரே
உனையன்றிக் கதியாரே
உணவுறுசல்லடை போற்பல ஓட்டை
உளதாகியவெறும் புழுமலக்கூட்டை
நிலையென மனக்கவி செயும்பலசேட்டை
நித்தியம் அதனாற்படும்பாட்டை. (உன்னி)

2. நாதனேநான்பிழை யாதுசெய்யினும்நின்னை
நம்பினேன் என்மேலின்னம் க்ஷாத்திரமா-பாரில்
ஓதரும்புலச்சத்து ராதியர்கையில் என்னை
ஒப்புவிக்குதல்தர்ம சாஸ்திரமா—மறு
மாதர்மேற் செல்லும்நேத்திரம்
வாயேஅபத்த பாத்திரம்
தீதுரைகொள்ளுஞ் சுரோத்திரம்
சிற்றின்பம் வேண்டுங்காத்திரம்

தீயஅவயவங்கள் செயுந்தினமோசம்
சிந்தையிற்குடிகொண்ட தாசாபாசம்
நாயேன்செய்கைகளே ஆபாசம்
நான்குபக்கத்திலும் நான்படுங்கிலேசம் (உன்னி)

3. எத்தனைசுமைபாவம் வேண்டுமானாலுமுந்தி
எனக்குக்கொடுக்கலாம் அச்சாரமே-என்தன்
அத்தனேநானுன்சேயென் றறிந்தும்நோய்செய்யுமாயை
யார்தந்தார் இந்த அதிகாரமே-சர்வ
உத்தமஞ்சேர் நிர்தோஷ
உன்னதமா விசேஷ
பத்தர்நித்திய சந்தோஷ
பரசமயத் துவேஷ
யாக்யமலர்ந்தருள் பழிக்கும் உத்தியான
பலபுவனத்மகோடிகள் அபிமான
ஆக்கியவேத நாயகன்ஸ்வாதீன
அன்னைதந்தைகுருதெய்வஞ் சகலமுமான. (உன்னி)

---

## 6. இராகம்-பூரணகௌளை-ஏகதாளம்

### பல்லவி

என்பிழைகள் பொறுத்தருள்வாய்-எனை அலைக்கும்
துன்பவினை அறுத்தருள்வாய்

### அநுபல்லவி

முன்பரவியே ஜெபிக்கும்
அன்பர்கள் அனுபவிக்கும்
இன்பமே அவர்விரும்பும்
நின்பதகமலம் நம்பும் (என்)

### சரணங்கள்

1. நேயனைப்போல்விவகரிப்பேன்-துதிகவிகள்
ஆயிரம் உண்டாக்கிவிரிப்பேன்-என்செய்கையெல்லாம்
வாயின் அன்பலாதுமனங்-தோயும் அன்புளதோசிறு
நாயின் அன்புமேயிலாமல்-தீயவம்பனாய்த்திரியும். (என்)

2. எண்ணவொண்ணுமோ என்பவமே-ஐயனே இந்த
மண்ணினில் என்ஜன்மம் அவமே-தினந்தினமும்
உண்ணலும்நித்திரைதனை-நண்ணலும்பெரும்பவங்கள்
பண்ணலும்அல்லாதுன்பதம்-எண்ணல்செய்தறியேன்ஸ்வாமி

3. போதகம் என்னிடம்லயமே-என்மனம்பஞ்ச
பாதகங்காலயமே-புவனமிசை
மாதவம்புரிபவர்க்குக்-கோதகலும் இகபர
சாதகங்கொடுத்தருளும்-வேதநாயகா இறங்கி. (என்)

7. இராகம்-சுப்பிரதீபம்-திரிபுடை

பல்லவி

வினையே எனையே மேவாதருளே

அநுபல்லவி

நினையேநம்பினே னின்மலப்பொருளே (வினை)

சரணங்கள்

1. கனவிலுந்தருமத்தைக் கண்டறியேனே
அனவரதமும்உன தருள்குறியேனே (வினை)

2. பாவமென்பதற்கொரு பதியானேனே
ஜீவனும்வழிதெரி யாமற்போனேனே (வினை)

3. உகாரபோதனையன்றி உனைநினையேனே
இதயந்தனில் உன்னடி இணைபுனையேனே (வினை)

4. பூதலந்தொழும் அதி புண்ணியர்மித்திரனே
வேதநாயகன்தொழும் விமலபத்திரனே (வினை)

8. இராகம்-பரசு-ரூபகம்

பல்லவி

ஆண்டருளே-கருணை-பூண்டருளே

அநுபல்லவி

தூண்டருஞ் சுடராக விளங்கும்
சோதியே-உயிர்-நீதியே எனை (ஆண்ட)

சரணங்கள்

1. என்னை ஆள்வது பாரமா என
திடம்வா வெகு தூரமா
அன்னைக்கும் உப சாரமா எனக்
கருள்புரிய இக் நேரமா கன

ஆரியனே-மெய்ஞ்ஞான
சூரியனே-சர்வலோக
காரியனே-மிகுந்தஔ
தாரியனே-ஜகந்தனில்

உன்னையல்லது பின்னையார்துணை
யோகனே-சுக-போகனே-எனை (ஆண்ட)

2. எனதுடலெனும் புல்லையே காக்க
எவர்க்குங் காட்டுவன் பல்லையே
தினமும் ஆயிரந் தொல்லையே இதில்
சிறிது மேசுகம் இல்லையே கன

சேதனனே-பெரியபு
ராதனனே-பாவநி
சேதனனே-மெய்ஞ்ஞான
சாதனனே-அநுதினம்

நினது பாதம் நம்பினேன் அதி
நேசனே-பிர-காசனே-எனை (ஆண்ட)

3. பொறுமை உனக்குச் சொந்தமே நான்
புரியும்பிழை அநந்தமே
மறுமையுறு நிர்ப்பந்தமே கெட
மலர் பாதார விந்தமே கன

மாக்ஷியனே-அமரர்கள்
காக்ஷியனே-சர்வாண்ட
சாக்ஷியனே-தனிஅர
சாக்ஷியனே-தினந்தினம்

சிறுவன் வேதநாயகன் பணி
கீர்த்தியே-அற-மூர்த்தியே-எனை (ஆண்ட)

## 9. இராகம்-மோகனம்-திரிபுடை தாளம்

பல்லவி

காக்ஷியெனக்குக் கொடாமலிருக்கின்ற
காரணம் ஏதையா (காக்ஷி)

அநுபல்லவி

சாக்ஷியாய்நிற்கும் சருவாதிகாரனே
மாக்ஷியுடையோர்மகிழ் நிர்விகாரனே (காக்ஷி)

சரணங்கள்

1. அந்தரங்கபக்தி அற்றவனென்றோ
அக்கிரமத்தில்பெயர் பெற்றவனென்றோ
பந்தப்பேய்க்குள்ளத்தை விற்றவனென்றோ
பாதகங்களெல்லாங் கற்றவனென்றோ (காக்ஷி)

2. மறந்தும்ஒருமெய்சொல் லாதவனென்றோ
மருந்துக்கும்நன்மைஇல் லாதவனென்றோ
சிறந்தமெய்ஞ்ஞானங்கல் லாதவனென்றோ
தேசத்தார்க்கெல்லாம்பொல் லாதவனென்றோ (காக்ஷி)

3. ஏசிமறையை இகழ்ந்தவனென்றோ
ஈனமதத்தைப் புகழ்ந்தவனென்றோ
நீசெய்தநன்றி மறந்தவனென்றோ
நீசர்க்குள்மெத்தச் சிறந்தவனென்றோ (காக்ஷி)

4. ஆதிமத்தியாந்த ரஹிதமகேசா
அற்புதசின்மயா னந்தவிலாசா
தேவேதாந்த விதிஉபதேசா
வேதநாயகன் இதயப்பிரகாசா (காக்ஷி)

---

## 10. இராகம்—நாதநாமக்கிரியை—ரூபகதாளம்

பல்லவி

அருள்புரிவாயே-எனதுள
மருள்தெரிவாயே (அருள்)

அநுபல்லவி

இருளை நிகரும் சுருள் கொள் ஓதியர்
இலகும்பொருள்-உலகபுரி-கலகம்படர்-விலகும்படி (அருள்)

சரணங்கள்

1. நினைவெல்லாம் உன்நினைவதாயென் நெஞ்சம்உன்னுதோ-பழி
புனையும்வாய்வெறும்பேச்சைவிட்டுனைப்புகழ்ந்துபன்னுதோசிறு
தினையளவு மெய்தனைவிடாது
சிந்திக்துனை-வந்தித்திடு-புந்தித்திடம்-வந்துற்றிட (அருள்)

2. எத்திசையும் உன்னுருவமாகவே இதைக்காணேனோ-சொந்த
அந்தம்யாவும்நீயென்றேமிக ஆசைபூணேனோ-கன
பத்தியாயுனை நித்தம்போற்றிப்
பாடித்தினம்-நாடித்தவம்-நீடிக்கதி-கூடிக்கொள (அருள்)

3. நீதமாயரும் போதமாயெங்கும் நிறையுங்கர்த்தாவே நாளும்
வேதநாயகன்காதல்மனப்பெண்மேவும்பர்த்தாவே-கொண்ட
சூதமறப்பிர சாதம்உதவி
இழிவண்டிய—பழிவிண்டுநல்-வழிகொண்டுனை—விழிகண்டிட

---

## 11. இராகம்—மணிரங்கு-திரிபுடைதாளம்

பல்லவி

சித்தம்இரங்கிநல் முத்தர்தங்கோஷ்டியிற்
சேர்த்தெனைக்காத்தருளே

அநுபல்லவி

உத்தமசீலர்தஞ் சித்தமலர்உறை
வோனே-கோனே-வானே-தேனே (சித்த)

சரணங்கள்

1. நின்னடித்தொண்டனு னென்ன அறியும்
நிதம் உலகந்தானே
என்னஉன்தொண்டின் பலனென்றெனைப்புவி
ஏசில்என் சொல்வேனே
பன்னரும் உன்னருள் என்னருகாகிடப்
பண்ணே-சண்ணே-எண்ணே-விண்ணே (சித்த)

2. பொய்த்தெய்வந்தங்களைப் போற்றிப்பெரும்பழி
பூண்டவர்தம்முளமே
மெய்த்தெய்வம்உன்னைத் தொழும்எனக்கென்ன
விசேஷப் பிரயோஜனமே
கைத்தொழில் அண்டம் அனைத்துந்தாங்கிடு
கையா-துய்யா-மெய்யா-ஐயா (சித்த)

3. கழுவக்கழுவ அழுக்குடல்மீது
கலந்தருட ருந்தன்மையே
கழுவி என்னெஞ்சுறு மாசுகள்நீங்கிடத்
தந்தருள்வாய் நன்மையே
எழுமன்பெடுவேத நாயகன் போற்றிடும்
ஏகா-யோகா-வாகா-தியாகா (சித்த)

---

## 12. இராகம்-தர்பார்-திரிபுடைதாளம்

### பல்லவி

என்னை ஆளையா-என்விண்ணப்பம்
தன்னைக் கேளையா

### அநுபல்லவி

மின்னைநிகரும்வாழ்வை வெறுப்பவர்க்குரியோனே
அன்னைபிதாசற்குரு வாகியபெரியோனே (என்னை)

### சரணங்கள்

1. அடியன்மேற்சினமா-என்குறை நீக்கி
ஆள்வதுகனமா
கடினம்நின்மனமா-எனதுநெஞ்சங்
கவலைக்காசனமா
படியில் என்னகத்துறு பாவ இருளைமாற்றித்
திடமுறவேமெய்ஞ்ஞான தீபமதனையேற்றி (என்னை)

2. என்றுஞ்சஞ்சலமா-ஐயனேமாயைக்
கிறவுபலமா
வென்றுகொள்புலமா-அதனால் ஏழை
மெலிவது நலமா
நன்றுருவாகியநாதா என்முகம்நோக்கிக்
குன்றெனநான்செயுங் கொடுவினைகளைப்போக்கி (என்னை)

3. கைவிடலாமா-என்னிடம்வரக்
கால்மலர்நோமா
நைவினைபோமா-இனிமைதங்கும்
நன்னயநாமா
தெய்வநாயகனாகித் திகழும் அளங்கா
கைவல்லியஞானநெறி கமழ்மதுராப்பிரசங்கா (என்னை)

4. தித்திக்குந்தேனே-அமுதேகன
தேவர்கள்கோனே
எத்திக்குந்தானே-எள்ளுளெண்ணெய்போல்
இருக்குங்கோமானே
புத்தியுடையோர்சூட்டும் புகழ்மாலை அணிவோனே
பத்தியுடனேவேதநாயகன் பணிவோனே (என்னை)

13. இராகம்-கல்யாணி-ரூபகதாளம்

பல்லவி

தருணங்கருணை புரிகுவாய்-ஐயா-உனக்கனந்தங்கோடி
சரணஞ்சரணங்-தெரிகுவாய்மெய்யா

அநுபல்லவி

அருணகோடிதேஜோமயனே பொன்
திரணமென்றுண்ணுவோர்பயனே இத் (தருணம்)

சரணங்கள்

1. இந்திரியசத்துருக்கள் செய்மோசம்
என்னசெய்வேணிர்வகித்தல் பிரயாசம்
நிந்தனையான அது பந்தபாசம்
நீங்கள்செய்வாய்புண்ணிய உபதேசம்
நீயேகதியென்றே ஒரு
தாயேதுயர்ஒன்றே சிறு
நாயேன்கெடல்நன்றே கன
தீயேன்உடல்குன்றே இது (தருணங்)

2. கோரமாய்த்தன்பிள்ளைசெய்யினுந் தீது
கோபித்துயக்கிடுந்தாயுண்டோ ஓது
காரமானான்செயும்பாவம்பொ றுவீ
கைவிடில்வேறெனக்காதார வேது
காயத்தைஎரித்தேன் அரு
மாயத்தை அடுத்தேன் அனி
யாயத்தை உடுத்தேன் திரு
நேயத்தைவிடுத்தேன் இது (தருணங்)

3. நச்சுமரத்தையும் வைத்தவன் தானே
நாள்தோறுங்காவல் செய்யாமல் இ ரானே
இச்சகமீதில் எனை அமைத் தோனே
என்னை நீ ஆளாவிடிற்பிழை யோனே

ஏகந்தழையுருவே சுக
போகந்தழைதருவே கன
யோகந்தழைதிருவே முதிர்
பாதகந்தழைகுருவே இது (தருணம்)

4. நிதமும்நானும்பாதகச்-சேறு
நீக்கிடப்போதுமோ நின்னருள்-ஆறு
விதியுங்கதியும் இல்லையே-வேறு
வேதநாயகனே அருள்-பேறு
வேதத்துருவோனே பல
பூதப்பெருமானே கன
போதத்தமர்கோனே இரு
பாதத்தைவிடேனே இது (தருணம்)

---

## 14. இராகம்-தேசிகதோடி—ஆதிதாளம்

பல்லவி

ஐயா எனை ஆண்டருளே—உனை
அண்டினனே-மனம்—வேண்டினனே (ஐயா)

அநுபல்லவி

பொய்யாம்வாழ்வினில்நான்குழையாமல்
போகாதிகளில் என்மனம் நுழையாமல் (ஐயா)

சரணங்கள்

1. ஒருநிமிஷமுமுனை கடிமறவாமல்
உலகழியினுமுனதருள் துறவாமல்
இருதயமதனிலோரிடர்பிறவாமல்
இழிவுறுபழியொடுநானிறவாமல் (ஐயா)

2. உன்னையலாதொருவரையுந்தொழாமல்
உதாசிமித்தம் எங்கும் ஓடியழாமல்
இங்கிலமீது துராசை எழாமல்
இறந்ததன்னெனிநாகில்விழாமல் (ஐயா)

3. நல்வழிதனை எந்நாளும்விடாமல்
நாட்டில் அசடனெனநான்பேரெடாமல்
பல்வகையாகியபழிகள்தொடாமல்
பாவையர்மோகத்தில்படிந்துகெடாமல் (ஐயா)

4. என்னுயிர்போல எவ்வுயிரையும்பேண
இகசுகபோகத்தை என்றுமேநாண
மின்னுங்குணபூர ணந்தனைப்பூண
வேதநாயகனே நானுனைக்காண (ஐயா)

### 15. இராகம்-நாதநாமக்கிரியை—ஆதிதாளம்

பல்லவி

இந்தவரந்தருவாய்-ஸ்வாமி-இந்த

அநுபல்லவி

பந்தவினையெலாம் அறவேண்டும்-உன்
பாததரிசனம் பெறவேண்டும்

சரணங்கள்

1. தினமும்உன்பதமலர் தொழவேண்டும்—நான்
தேகபரவசமா யெழவேண்டும்
அனல்மெழுகாயுருகி யழவேண்டும்-இனி
ஆனந்தக்கடலில்நான் விழவேண்டும் (இந்த)

2. தேகவிஷயாதிகள் கெடவேண்டும்-ஞான
தீபத்தை என்னுளத்தில் இடவேண்டும்
யாக அறப்பயிரை நடவேண்டும்-அந்தப்
பயிர்க்குன் அருட்புனலை விடவேண்டும் (இந்த)

3. மோகப்பாசந்தனை வெலவேண்டும்-வேத
முத்திநெறியிலே செலவேண்டும்
நாகமெனும்புலனைக் கொலவேண்டும்—வேத
நாயகனேயுன்னைமஞ் சொலவேண்டும்

### 16. இராகம்-பைரவி—ஆதிதாளம்

பல்லவி

இந்தப்பிழைகளெல்லாம் பொறுப்பாயே-பாச
பந்தங்களை வேரறுப்பாயே (இந்த)

அநுபல்லவி

சொந்தப்பிள்ளைகளான தூயவர்க்கும்பிதாவே
அந்தப்பரமசுகம் அளிக்குங்கனதாதாவே (இந்த)

1. ஆதியானபரஞ்சோதி உன்னைநான்வெறுத்தேன்
   என்மனந்தனை
ஆகமாதிகள்சொல் யோகசாதனையில் நிறுத்தேன்
   அனுதினமும்
வேதவேதியர்கள் ஓது நீதியையுமறுத்தேன்
   சமர்த்தன்போலே
வீம்புபேசிப்பெரும்பாம்பு போலவிடம்பொறுத்தேன்
   சதாகாலமும்
பூதலவாழ்வுதனை நாடினேன் மறு
மாதர்கள்சுகந்தனைத் தேடினேன் பஞ்ச
பாதகரோடும் உறவாடினேன் கன
காதகனென்றுபெயர் சூடினேன்
   ஆதுலர்க்குமீயாமலே தடுத்தேன்
   சாதுசனங்களைக்கண்டே தடியெடுத்தேன் (இந்த)

2. நேயமானதந்தை தாயரைச்சற்குருவைப்பழித்தேன்
   ஜெபதபத்தை
நித்தியகர்மங்களைப்பத்திமார்க்கங்களை ஒழித்தேன்
   கைப்பொருளெல்லாம்
காயமோசுகமாயவாழ்விற் செலவழித்தேன்
   உனைத்தொழாமல்
காட்டில்வாழ்மிருகக்கூட்டம் போலநாள்கழித்தேன்
   அனுதினமும்
தூயரைக்குறைசொல்லித் தூற்றினேன் பெருந்
தீயரைத்தினந்தினம் போற்றினேன் நல்ல
ஞாயவழக்குகளை மாற்றினேன் பதி
னாயிரம்பொய்சொல்லத் தோற்றினேன்
   வாயில்வந்தபடிவம்புகள் தொடுத்தேன்
   கோயில்மணியமெனக் குடிகளைக்கெடுத்தேன் (இந்த)

3. புவியிலேபாவியென்று பேரெடுத்தேன்
   புரட்டுருட்டும்
பொய்யும்வஞ்சனையுஞ்செய்யு மார்க்கந்தனையடுத்தேன்
   உன்றுமந்தனை
நாவிலேஎனதுபாவிலே சொலாமல்விடுத்தேன்
   ஞானியைப்போல
நாட்டில்மாயவேஷங்காட்டி என்னைநான்கெடுத்தேன்
   அனுதினமும்

பாவமுப்பழிகளுந் தாங்கினேன் — பெருங்
கோவமுங்குரோதமும் ஓங்கினேன் — புண்ணிய
ஜீவனஞ்செய்யாமல் தூங்கினேன் — நல்ல
பாவனஞ்செய்யும்வழி நீங்கினேன்
ஆவலாகப்பலர்பொருள் அபகரித்தேன்
காவலர்நெறியைக் கடந்துசஞ்சரித்தேன் (இந்த)

4. வாரங்கூலிகளிற்சோரஞ் செய்துநான்குறைத்தேன்
பிறரிடத்தில்
வாங்கியபொருள்களை ஈங்கிலையென்றுநான்மறைத்தேன்
பஞ்சத்திலேவியா
பாரஞ்செய்யப்பலசேரில்நெல்லைக்கட்டி நிறைத்தேன்
நல்லதண்ணீரைப்
பாழிலேசகலநாழிகையும் விழலுக்கிறைத்தேன்
முதலினொடு
நேரவட்டிதனைக் கூட்டினேன் — வெகு
தூரம்அகவிலையை நீட்டினேன் — வழக்
கோரஞ்சொல்லிச்சண்டை மூட்டினேன் — உப
காரஞ்செய்தோர்க்குக்கத்தி தீட்டினேன்
தாரம்பிள்ளைகளுக்குந் தான்செய்தேன்வஞ்சம்
நேரில்வேதநாயகா நின்னடிதஞ்சம் (இந்த)

---

17. இராகம்-சுருட்டி-திஸ்ரஜாதி-ரூபகம்

பல்லவி

தேவாதிதேவனே-தயை-செய்தருள்வாயே

அநுபல்லவி

பாவஉடலம் எடுத்துமீளும்
பாதகனால் என்னைநாளும்
பந்தப்பகை சாடாமல்
சிந்தைத்துயர் கூடாமல்
நிந்தைப்பழி மூடாமல்
இந்தப்படி வாடாமல் (தேவாதி)

1. கற்பகோடிகாலம்போல அற்பவாழ்வினை — மதித்தேன்
காரமாகஎங்நேரமும் அலங்காரமும்நெஞ்சினிற் — பதித்தேன்
தற்பரஉன்பொற்பாதாம்புயந் தாழ்ந்திடாதெனைத் — துதித்தேன்
சாந்தமாம்யோகாந்தமார்க்கஞ் சார்ந்திடாமற் — குதித்தேன்

நற்பதந்தனைநாளுஞ் சார்ந்து
நாசவினைகள்யாவுந் தீர்ந்து
ஞானந்தனிலே கீட
மோனந்தனையே நாட
வானந்தனையே தேட
ஆனந்தமே கூட (தேவாதி)

2. பாசமாம்பிசாச என்மனம்வாசஞ்செய்வது நிலையே
பாபமுங்கடுங்கோபமும் பலர்சாபமும்பெரு மலையே
நேசமும்விசுவாசமும் பிரகாசமும்எனக் கிலையே
சிந்தையான அகந்தைமூடுஞ் என்சிந்தையுங்கடுஞ் சிலையே
ஈசனேஎன்பாவம் நீக்கி
என்னை நீயஉன்தாச னாக்கி
இன்பக்கடலே தோத
துன்பக்கடலே பேச
அன்பர்க்கினமே சார
என்பொய்க்குணமே தீர (தேவாதி)

3. அன்பர்களிக்க இன்பம் அளிக்கும் ஆனந்தப்பெருந்நதியே
அனவரதமுங்கனவிரதர்கள் அகத்தில்ஒளிரு மதியே
துன்பசாகரம்என்பதுகெடத்தோன்றிடும்பா கதியே
தொண்டன்வேதநாயகன் மணப்பெண்டகமகிழ் பதியே
நின்பதந்தனைநாளும் ஏத்தி
நேசமாய்க்கவிமாலை சாத்தி
நீதிப்பயனே விள்ள
ஆதிப்பழியே தள்ள
வேதப்பயனே கொள்ள
போதக்கனியே துள்ள (தேவாதி)

---

### 18. இராகம்-பியாகு-ரூபகதாளம்

பல்லவி

இந்தநிமிஷமேபாபநிவர்த்தி
எனக்கருள்வாய்ஸ்வாமி

அநுபல்லவி

எந்தநிமிஷத்தில்சாவுவருமோவென்
றேங்கியேநான் பயந்தேனேஉயிர்
நீங்கிடிலென்னசெய்வேனே-சுரர்கோனே

சரணங்கள்

1. காலையோமாலையோநாளையோசாவெனுங்
காலங்கணக்கறியேனே வந்த
வேலைமுடியுமுன் ஓடியனுப்பிட
வேண்டாஞ்சொன்னேன்சிறியேனே என்னை
ஆண்டானுனைப்பிரியேனே பெரியோனே (இந்த)

2. பொட்டென்றுதேகந்தான் சட்டென்று வீழ்ந்திடில்
இட்ட ஒருவர்நில்லாரே குழி
வெட்டென்பார்பிரேதத்தைகட்டென்பார்மண்ணைமேற்
கொட்டென்பார்போவர்பொல்லாரே ஆன்ம
நட்டம்வாராமற்கண்பாரே துயர் (இந்த)

3. கம்பம்இல்லாமலேஎப்படியேனுங்
கடலைக்கடக்கவொண்ணுதே நாளும்
அப்படிநின்பதத்தெப்பமில்லார்க்கந்த
ஆநந்தவீடுநண்ணுதே நல்ல
ஞானந்தருவாயிப்போதே கைவிடாதே (இந்த)

4. ஆதிமத்தியாந்தரகிதப்பிரபோத
அபேதபுராதனநாதா நாளும்
காதலுடன்வேதநாயகனுள்ளக்
கமலந்தங்குந்திருப்பாதா எனக்
கமலந்தா இன்னம்வாதா கிடையாதா (இந்த)

---

19. இராகம்-கல்யாணி-அடதாளசாப்பு

பல்லவி

இந்தஉபகார மறவேனே-பூமி
அந்தரம்எங்குநிறை-கோனே

அநுபல்லவி

விந்தநரஜன்மம்நான் மேவஅருள்நோக்கிணுய்
தந்தைதாம்மனைசேயர் தந்துகுறைநீக்கிணுய்

சரணங்கள்

1. குருதியாகியசேறு கூட்டி நல்ல
கொழுமாமிசச்சுவரை நாட்டி
வரிஎன்புவிட்டங்கள் பூட்டி தட்டும்
வடமாநரம்புகளை மாட்டி

இருகாவல்நவவாசல் உடல்மனையை வீக்கினாய்
இன்பங்கள் நுகர இந்திரியம் ஆக்கினாய்
அரிய ஆன்மா அங்குகுடிபுகப் போக்கினாய்
அந்த ஆன்மாவில்நல்லறிவினைத் தேக்கினாய் (இந்த)

2. பூகியாகியவீ டமைத்தாய் பஞ்ச
பூதாதிஜீவழியர் சமைத்தாய்
மாமதுர உணவுகள் கொடுத்தாய் அந்த
வானமாம்பந்தலும் எடுத்தாய்

சோமசூரியதாரகாதீபம் ஏற்றினாய்
சுகவாயுவாய்உஷ்பணசோகத்தை மாற்றினாய்
சேமஉணவாக்கவேதேபுவினை ஆற்றினாய்
சீதக்கடங்கொண்டுசெதண்ணீரை ஊற்றினாய் (இந்த)

3. கடலாறுகுளம்ஓடை தந்தாய் மலர்க்
காவுகளும்உதவினை யெந்தாய்
தடமலைதருக்களும் வகுத்தாய் வசனம்
சார்மிருகபக்ஷிகள் பகுத்தாய்

திடமானநவமணிஉலோகாதி நீட்டினாய்
ஜெகஜோதியாகவேசிங்காரம் காட்டினாய்
அடமின்றிநானுவினோதங்கள் ஊற்றினாய் (இந்த)

4. சிலபறவைகான இசை பாடும் வேறு
சிலபறவைதிருநடனம் ஆடும்
பலமிருகம்கார்வேலை புரியும் நல்ல
பசுவாதிபாலினைச் சொரியும்

மலர்கனிகள்காய்நிழலைமரமெலாம் நீட்டுமே
மண்ணன்னம்விளைவித்துவயிறார ஊட்டும்
பலதாமுமெங்களைத்தலைமுழுக் காட்டுமே
சர்வபொருள்களும்நல்லசந்தோஷம் மூட்டுமே (இந்த)

5. பித்தர்க்குநீசெய் பாளகமே வளம்
பெரிதெனினுமீ தற்பசுகமே
சுத்தர்க்குநீசெய் போகமே பரம
சுகமெனவிரும்பும்என் அகமே

பக்தர் அநுகூலநற்பரமகா ருண்ணியனே
பகிரண்டகோடிகள்பரித்திடுந் திண்ணியனே
வித்தகசொரூபமேமேருநற் புண்ணியனே
வேதநாயகன்உள்ளமீதுவளர் கண்ணியனே (இந்த)

---

20. இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்

பல்லவி

சிந்தைக்குள்உறைந்தும்நீ சிந்தைத்துயரந்தனைத்
தெரியாயோசுவாமி

அநுபல்லவி

அந்தரம்புவியெங்கும் அரசாக்ஷி யளிப்போனே
எந்தப்பொருளின்உள்ளும் இருந்தகங்களிப்போனே (சிந்)

சரணங்கள்

1. பாலையும்விஷம்ஆக்கும் பாம்புபோல்கொடுமனம்
பலசுகத்தையும்துன்பம் ஆக்குமே
பூலோகமெல்லாம்வசமாயினும்வேறொரு
புவனத்தையும்பிடிக்க நோக்குமே
காலமுழுதும்இந்தக் கருத்தே யதனுருபம்
கலியாணவீட்டிலும்கட்டிக்கொண் டழும்சோபம்
மேலவனேஎனக் கிதுவாய்த்த தென்னபாவம்
வேதநாயகனே பாராயோஎன் பரிதாபம் (சிந்)

2. இருதலைக்கொள்ளிநடுவிருக்கும் எறும்புபோல
எந்நாளுந்தொலையா விசாரமே
ஒருசாணுகிய உதரக்குடியடைக்க
உலகில்படுங்கஷ்டம் அபாரமே
தரணியில்வாழ்வென்பதுதானே விஷவிருக்ஷம்
சார்வதாஇதில்வரும் சங்கடம் கோலக்ஷம்
தருமயோகாந்தநிலை சார்தல் உத்தமபக்ஷம்
சர்வாநுகூலாஉனக் கெல்லாம் பிரத்தியக்ஷம் (சிந்)

3. போர்க்களநடுவிலேகுடியிருப்பதுபோலப்
புலச்சத்துருக்களிபோ ராட்டமே
சேர்க்குந்தசைவடிவாந் தேகமிதுபிணியுந்
தீவினைகளும்வளர் தோட்டமே

பார்க்கின் இதுவே ஆசா பாச நடனசாலை
பகலும்இரவும்இது படியுமே மோகவேலை
தீர்க்கவைத்தியர்க்குத்தினமுன் கொடுக்கும்வேலை
தினம்வேதநாயகா நேர்ந்தேன் உன் திருக்காலை (சின்)

---

## 21. இராகம்-யமுனாகல்யாணி-ரூபகதாளம்

### பல்லவி

சரணம்சரணம் நாதா-உன்
சரணம்தர ஒண்ணாதா

### அநுபல்லவி

திரணமாகிய காயமே இதில்
தினம்அனந்தம் அபாயமே
மரணம்வருமுன் னேயமே பெற
மகிழ்ந்தருள் சகாயனே கோடி

### சரணங்கள்

1. பாவியேன் இரு தயமே பவ
பாதகங்களின் மயமே
மேவிநின்றுர்வி ஷயமே வினை
விலக்கி அருள் நன் னயமே
மாயவினைகளை மாற்றுவாய் எதிர்
வந்தென்சிந்தையில் தோற்றுவாய் இந்தத்
தியக்கரை யேற்றுவாய் (சரணம்)

2. மதப் இராகத் வேஷம் பொய்
வஞ்சகம்பல தோஷம்
எதிலும்நான் விசேஷம் எனக்
கில்லைபுண்ணிய விசேஷமனை
மதனப்பேயை ஓட்டுவாய் நல்ல
மார்க்கத்திலெனைக் கூட்டுவாய்
வீதனநகரைப் பூட்டுவாய் உன்
வீட்டுக்குவழி காட்டுவாய் (சரணம்)

3. தாசர்கள் பரிபாலா கன
சாத்வீக குணசீலா
நீதர்கள் பிரதிகூலா சத்ய
நீதியுறு செங்கோலா

ஆறுமுதல் நூலனே அகி
லாண்டகோடிவி சாலனே
காசரகித மூலனே வேத
நாயகன் அநு கூலனே (சரணம்)

---

22. இராகம்-கற்கடா-ஆதிதாளம்

பல்லவி

சீலம்மீதா தேவநாதா
சிறியன்மீது வாதா-அபேதா

அநுபல்லவி

மூலகாரண தயாபர வேதா
மோக்ஷசாம்பிராச் சியப்பிரதாதா (சீலம்)

சரணங்கள்

1. நன்மைதுன்மைஇன்ன தென்பதுதெரியேன்
ஞானமார்க்கந்தனையே அநுசரியேன்
சின்மயாநந்தனே ஜெயம்புரியேன்
தீயனானநான் பாபத்திற்பெரியோன் (சீலம்)

2. தாயிருக்கப்பிள்ளை தயங்குதல்சரியோ
சாமிநீஎன்மனம் வாழ்வும்வரியோ
நீயிருக்கஎன்தன் துன்பம்உபரியோ
நீயேதாமசிக்க என்னுடல்கிரியோ (சீலம்)

3. ஜீவசிருஷ்டிஸ்திதி லயஅதிகாரா
ஜென்மசாபல்யப்பிய தானஉதாரா
தேவதேவகண பூசிததீரா
சிறியன்வேதநா யகன்உபகாரா (சீலம்)

## 15. இராகம்-உசேனி-ஆதிதாளம்

பல்லவி

நின்பதமேதுணை ஐயா-மனத்
துன்பம்அகலஅருள்செய்வாய்

அநுபல்லவி

இன்பமகோததியே இனியதயாநிதியே
அன்பர்பரகெதியே அமரர்க்கதிபதியே

1. என்மனம்இளகாத பொருப்பே
என்னைக்குஅதிற்குடி யிருப்பே
தன்மமேஅதற்கரு வருப்பே கெட்ட
தாமசகுணமென்றால் விருப்பே
நன்மைகெடுக்கும் இச்சை நாசக்கொடுநெருப்பே
துன்மையெல்லாம்அகலத் திருவருட்கண்திருப்பே (நின்)

2. ஏதும்அறியேன்ஞான சாஸ்திரம் புவ
னேசாஉனக்குநானாம் மாத்திரம்
சோதனைக்கெளியேன் அபாத்திரம் அதி
தூயனே என் இன்னம் க்ஷாத்திரம்
வேதனைமிகக்கொண்டு மெலிவுநம்மன் அகோராத்திரம்
சாதகமுறவேநீ தருவாய்மெய்ஞ்ஞான நேத்திரம் (நின்)

3. நீசனென்வினைக்கெல்லா மூலம் என்தன்
நெஞ்சஞ்செய்வதும் பிரதிகூலம்
பாசபந்தஉலக ஜாலம்
படிந்துநொந்தேன் பலகாலம்
ஈசனேகேளாயோ ஏழைநானிடும் ஓலம்
தாசன்வேதநாயகன் தனக்குநீயருள் சீலம் (நின்)

---

## 24. இராகம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி

ஆள்வாயெனைநாள் மூள்வாயெனக்குன்றன்
அடியிணையே துணையே

அநுபல்லவி

நீள்சுகக்கனியே நேசருக்கினியனே
நாள்வளர்தனியனே நயமறைத்தொனியனே (ஆள்)

சரணங்கள்

1. பேதைநான் பயனில்லாப் பேசிற்சண்டப் பிரசண்டம்
பிறரைமயக்குவதிற் பெரியஉற்பாத பிண்டம்
வேதவினையெனக்கு விளைசருக்கரைக் கண்டம்
விரைந்தருள்புரிஉனக் காயிரங்கோடி தண்டம்
வேதனே-வரப்ர-சாதனே-ஆசீர்
வாதனே-சுரர்புகழ்கொள்-காதனே-நாதனே எனை (ஆள்)

2. மனமெனுங்குரங்குக்குக் கனஅறமே உபேக்ஷை
வாதனைநீக்கிடாமல்ஏதின்னமும் பரீக்ஷை
தினகரரூபனே திவ்யமெல்லாஞ்ஞான தீக்ஷை
திடமுடன்கொடுத்தருள் அதுவே என தபேக்ஷை
தேவனே-மனோ-பாவனே-மறைசொல்
நாதனே-தனைபநிறை-சுபாவனே-ஜீவனே எனை (ஆள்)

3. நிகரில்கனதெய்வீக நின்மல சுலக்ஷண
நித்தியம்நினையும்பக்தர் நெஞ்சப் பிரதக்ஷண
சகலஜீவாத்மகோடிதாங்கும் சம்ரக்ஷண
சாஸ்திரம்புகலும்சுரர் ஸ்தோத்திர மிர்தபக்ஷண
தாங்குவாய்-நெஞ்சில்-ஓங்குவாய்-துயரம்
நீங்கவே-வேதநாயகன்-பாங்காய்-நின்றனுதினம் (ஆள்)

---

## 25. இராகம்-ஆரபி-ஆதிதாளம்

பல்லவி

தேவநாயகனே என்மீதிலுள்ள
திருவுளம் இரங்குவையே

அனுபல்லவி

ஜீவன்முக்தியூர்ஜித சீலர்பிதுரார்ஜித
தாவில்அதிபூஜித சர்வசமயோசித (தேவ)

சரணங்கள்

1. கரதலாமலகம்போல் உனக்குயாவுந் திர்ஷ்டாந்தம்
கர்த்தனே அறியாயோ நீஎனது விர்த்தாந்தம்
பரவும்பதங்களென்றால் பாலகர்க்கும் ஆனந்தமே
பலபதங்கேட்டுந்தயை பண்ணுமோ தோசித்தாந்தம்
பற்பல-நற்பல-உற்பவ-வுற்பன
கற்பனை-செப்பரும்-அற்புத-உற்பன (தேவ)

2. தனமிகுவேண்டுவோர்க்குச் சல்லியோடு தனமோ
தாகமுள்ளோர்க்குக் கானல்ஜலமது பானமே
கனசுகங்தேடெனக்குக் கவலைசன் மானமோ
கதியருள்வாவுனக் கதுபாவ தீனமோ
கர்த்த-சமர்த்த-பிம்வர்த்தன
பக்தர்கள்-சுத்த-அகத்துறு-நிர்த்தன (தேவ)

3. தினமும்அனந்தபாவஞ் செய்வதென் சாம்பிரதாயம்
சிந்தைக்கறங்கசப்புசேர்வேப்பிலைக் கஷாயம்
இனவேதநாயகனென்றேற்றேன் உன் னுமதேயம்
எனக்கல்லாவிடினும்அப்பெயர்க்கேனுஞ் செய்சகாயம்
எம்பா-உம்பரும்-அன்பரும்-நம்பிய
அம்பர-சம்பிர-இன்பம்-நிரம்பிய (தேவ)

---

## 26. இராகம்-அடாணா-ஆதிதாளம்

### பல்லவி

ஈசாவின்பொற்பாத மலர்நம்பினேன் என்னை
இக்ஷணமேவந்து ரக்ஷணைஞ்செய்தருள்

### அநுபல்லவி

தாசர்மனகமல லாசனதேகா
சாசுவதயோக சாம்ராஜ்யகிரமேகசுர
ஆசைக்கினிய அவாங்கமனோகோசர
அண்டபிரமாண்ட அகண்டசராசர (ஈசா)

### சரணங்கள்

1. ஈத்தனையோபேர் சுகித்தமர் வீட்டில்
உனக்கிடம்பூச்சியமா தனய
சித்தங்கொள்வாயென்ப் பித்தனெனக்குத்
தினமனோராச்சியமா நல்ல
சித்தனே இன்ப மிகுந்தமுத்தி நலன்
நீதரில்வானவ ரோதுவரோ கலன்
சுத்தில்வழக்கவர் பேசிஎன்ன பலன்
தாயேஉற்றதுணை நீயேபின்வேறிலேன் (ஈசா)

2. மாகுணபாகசை யோகமின்றிப்புவி
வாழ்ந்தவர்தாமெவரோ எங்கும்
ஏகும்நெஞ்சுன்னரு காகவாரா திதற்
கெருறுக்குச்சுவரோ விஷ
நாகமாயைக்கெங்குஞ் சர்வ கொள்ளையோ
நான்பயனில்லாமற் பேசிடுங் கிள்ளையோ
ஆகிலுமென்புத்தி தான்சுத்த வெள்ளையோ
ஐயனேநானென்ன தாயிலாப் பிள்ளையோ (ஈசா)

3. வந்துன் தரிசனந் தந்தருளிலென்
மனக்குறைதீறேனோ உன் தன்
சுந்தரபாதமென் சிந்தனையூன்றிற்
சுகக்கடல்சாறேனோ பெரும்
பந்தநெருப்புக்கென சிந்தனை செத்தையா
பாவியென்றெனைக்கை நீவிடில் சத்தையா
விந்தைதநலந்தந்திடில் பெரு வித்தையா
வேதநாயகன்பங் கென்ன சொத்தையா (ஈசா)

---

27. இராகம்-துவாசந்தி-ஆதிதாளம்

பல்லவி

ஆதியே பரஞ்சோதியேஎனை
ஆதரித்தருள்வாயே

அநுபல்லவி

ஓதிஉணர ஒண்ணு தோங்குங்குணகர
நீதிவடிவமுறு நின்மலசாகர (ஆதியே)

சரணங்கள்

1. உலகாரியத்தில் நான்வெகுதிராணி உன்னை
உன்னுவதிற்கேவலம் அப்பிராணி
நலம்என்பதெனக் குண்டோமாகாணி என்தன்
நவையேற்றுப்போதுமோ ஆயிரந்தோணி
மலவசமாகிச் சோர்ந்தேன்
தலைவாஉன்னடி சார்ந்தேன்
மதிக்கும்அடியார்கள் துதிக்கும்ஆரிய
குதிக்கநானென்ன உதிக்கும்வீரிய (ஆதியே)

2. கண்ணுள்ளபோதல்லவோ கண்காட்சி சிவன்
கழியும்முன்னல்லவோ புண்ணியமாட்சி
மண்ணிலெனக்கு ஞானஅரசாட்சி மிக
வாய்க்கும்படிஐயனே கீகடாட்சி
எண்ணரிய பிரதாபா
நண்ணரும் சுப்பிரதீபா
இணங்கும்அமரர்கள் வணங்குபெருவா
மணங்குலா சுகுணங்கொள் குருபர (ஆதி)

3. தீதுபொறுத்தல் தெய்வகுலதர்மமே
செய்கைகளே மனுஷகுலதர்மமே
ஓதிவிட்டேன் உனக்கென்உள்மர்மமே-என்மேல்
ஓகோஐயனே இன்னம்என்வர்மமே
பாதகம்அணி வேதநாயகன்பணி
படர்ந்ததிருவருள் அடர்ந்திடும்பிரம
கடந்தஞானியர் தொடர்ந்தசம்பிரம (ஆதி)

---

## 28. இராகம்-கேதாரம்-ஏகதாளம்

பல்லவி

தேவனே உனை நம்பினேன்
அடியேனை ஆண்டருள்

அநுபல்லவி

தேவகதுரித-அபால-சுகுண-சுபால
மகானு—பாவா-வாவா (தேவனே)

சரணங்கள்

1. ஐயாநிலை அறு பொய்யாம்உலகினில்
மையாவனைஅருள் செய்யாயோஉயர் (தேவனே)

2. வாராயோமுகம் பாராயோ அருள்
கூராயோவினை தீராயோகண (தேவனே)

3. பெரியாய்கைவிடல் சரியாநான்வினை
புரியானவிதம்அருள் சொரியாயோஉயர் (தேவனே)

4. நொந்தேன்வினையுடன் வெந்தேன்உனதிடம்
வந்தேன்சுகநிலை தந்தேஅருள்புரி (தேவனே)

5. தாதா அருளஒண்ணு தாமனம்இரங்
காதா அனுதினம் வேதநாயகன்பணி (தேவனே)

---

5. இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

பானே-அடியார்மனோ-கரனே-நிமலநின
கரனே-நீ அருள்வானே.

அநுபல்லவி

அரனேமிருப்புலனே தரனே அகண்டசரா
சரனேபரமசுககரனே தீரனே அரும் (பானே)

சரணங்கள்

1. என்னைவந்திரக்கும்ஏழை தன்னைநான் தள்ளிவிடில்
ஈசனேகோபம்பண்ணுயோ தங்கை
அன்னையேஎனையிரக்கும் என்னைநீ தள்ளில்எனக்கும்
அவ்விதமென்றே எண்ணுயோ
முன்னைநீ அநேகரை உன்பொன்னடியிற்சேர்த்தனை
இன்னமும்பலபேர்தமைப் பின்னும்வினை தீர்த்தவனை
என்னவேநான்கேட்டுன்மீது சொன்னேன்பலகீர்த்தனை
பின்னையொன்றும் வேண்டேன் அருள் உன்னையிதென் பிரார்த்
[தனை பானே.

2. உத்தமனேநான்பெரிய பித்தனுயினும்உனை
அடுத்தவனெனஉன்னுயோ பாரில்
சித்தமிசைபத்திய மிருந்தபாலகனைக்கை
விடுத்தாள்வதாளாயோ
முத்தொழிலில்முதல்தொழில் கொண்டுசெய்தாயென்சடம்
முத்தஞானம்அளித் தெனைக்காத்தருளாயேஹடம்
அத்தனே அவ்விரண்டாந் தொழிலில்என்சங்கடம்
அது தரில்மூன்றுந்தொழிற்கஞ்சிடேன்இதுதிடம் (பானே)

3. பாடுகவியிற்கற்பனை தேடுவதல்லால் உன்னருள்
கூடும்வகைகுறியேனே-என்னை
நாடும்எவரோடுமேதாடுவதல்லால் என்வாயை
மூடும்வகை அறியேனே
வாடுதலிற்பாதமலர் சூடுபெரியோராக
வாசபுவனேச வரபாசவினைமாரக்
கீடுதவுதியாக அலையாடுகடற்பாராக
மீதுவேதநாயகன் எப்போதுமேகொள்தாரக (பரனே)

---

30. இராகம்-பியாகடை-திரிபுடைதாளம்

பல்லவி

அம்புயப்பதம்நம்பினேன்ஐயா-பரலோகசாதக
சம்பிரமத்தைவிரும்பினேன் மெய்யா
கனதியாகக்கையா

அநுபல்லவி

தம்பமாம்அவலம்பம்வேறிலையே தேவாதிதேவர்கள்
சகிதமாகியசுகிதமாமலையே மெய்ப்போதநிலையே (அம்)

சரணங்கள்

1. தினமும்அலையுமென்மனமேகிசகமா-அடியேனுன்பால்இஷ்ட
சித்திவேண்டியே நித்தியம்யாசகமா
கனஅநீதமெனன்மீதமோசகமா-என்சொல்உன்காதுக்குக்
கடினமாகிய கொடியவாசகமா
நாரொருமசகா (அம்புய)

2. மண்ணின்வாழ்க்கையில்எண்ணியவாதனையேஅதுநீங்கவேயருள்
மன்னிடாமலேன் இன்னஞ்சோதனையே
இன்னியம்பெரு புண்ணியசாதனையே-அடியேனுக்கேஸ்வர
தீனமாகச்செய்ஞானபோதனையே
செய்தென்வந்தனையே (அம்புய)

3. எண்ணிமகிழ்ந்திடு புண்ணியவிக்கிரகமே-பரிசுத்தசீலர்கள்
இஷ்டபூரண துஷ்டநிக்கிரகமே
விண்ணினோர்தினம் நண்ணுசுக்கிரகமே-இனிநீபுரிந்தருள்
வேதநாயகன் தனக்கனுக்கிரகமே
பணியார் எக்கிரகமே (அம்புய)

---

## 31. இராகம்-ஆகிரி-திரிபுடைதாளம்

பல்லவி

சம்மதியெனக்குமெய்யனே உனைநினைக்க
நன்மதிதந்திடில்ஐயனே

அநுபல்லவி

அம்மவென்றழ மேன்மேலும்
வெம்மனநோயே சூழ்ந்தாலும் (சம்மதி)

சரணங்கள்

1. தன்னைஉன்னவே கூடாதென்றே தடைசெய்வோன் தன்
இந்நிலத்துண்டோ குணக்குன்றே
நின்னையேதொழவிரதம்
நேர்ந்துளை அனவரதம்
உன்னவே என்மனோரதம்
உதவுவாய் கருணாமிர்தம்
ஓங்கிவளர்தனம் நீங்கியொழியினும்
வீங்கியுடல்பிணி தாங்கியழியினும் (சம்மதி)

2. பாதமலர்மேல் ஆசைகொண்டேனை உலகவாழ்வு
சதமலவென்றுண்மைகண்டேனே
நிதமுனைப்பணியுமதி
நீதா இலையோவிதி.
அண்டினேனுனுன்சந்நிதி
அதற்குறையுமோஉன்நிதி
அடரும்வறுமையோடிடர்கள்சூழினும்
படருமனத்துயர்க் கடலில்ஆழினும் (சம்மதி)

3. உத்தமபிரமசைதன்னியமே யெஜென்னியமேமெய்ப்
பத்தர்கள்அல்லா தார்க்கன்னியமே
சுத்தமதுரபாஷணா
சோபனகுணபூஷணா
வித்தகவிசேஷணா
வேதநாயகன்போஷணா
விலகியேஎனை உலகம்நகைக்கினும்
கலகமாகவேபாலர்கள் பகைக்கினும் (சம்மதி)

## 32. இராகம்-கேதாரம்-ஆதிதாளம்

பல்லவி

ஐயனே-உயர்-மெய்யனே

அநுபல்லவி

உய்யவே அருள்புரி-செய்யபதந்தந்தனே (ஐயனே)

சரணங்கள்

1. ஈசனே நான் ஆத்ம இரக்ஷண்ணியமே பெற
இரங்கியருள் கடாக்ஷ வீக்ஷண்ணியமே
தாசன்நானுனக்கென்னுந் தாக்ஷண்ணியமே கொண்டு
தந்தருள்வாய்விவேக தீக்ஷண்ணியமே (ஐயனே)

2. இகபிணி அழிந்து போம்படில்லாது அதை
ஈந்தனம்போது மென்றால்சொல்லாது
நிகர்நித்தியசுகந் தந்தால் அல்லாது சற்றும்
நில்லாமல்நச்சும் என்வாய்பொல்லாது (ஐயனே)

3. கோதையர்மைந்தர் முதற்பரிஜனமே சந்தைக்
கூட்டம்அவர்மேற் கொள்ளுந்தரிசனமே
வேதைதரும்இது நீதரிசனமே அருள்
வேதநாயகனுக்குன் தெரிசனமே

---

## 33. இராகம்-ஜயந்தஸ்ரீ-ஏகதாளம்

பல்லவி

நாதாநிரந்தர-விநோதா-உன்தன்
பாதாரவிந்தம்-எனக்-காதாரம்-நாதா

அநுபல்லவி

வேதாந்தசார நயபோத பஞ்ச
பூதாந்தகால விபரீதா பிரக்கியாதா ஜெக (நாதா)

சரணங்கள்

1. பேசருஞ்சர்வ புவனேசா நல்ல
ஸ்ரீசர்மனுலயவாசா புவநாசா ஜெக (நாதா)

2. மாவரந்தரலாகாதா வினை
போவெனநீசொலிற் போகாதா சாகாதாபுவி (நாதா)

3. மாயையின்சப்தமேவிசமா அந்தப்
பேயைக்கொல்வ துனக்கவசமா தாமசமாதெய்வ

4. அடியேன்மனங் கடின இரும்பா அருள்
கொடியவினை அதற்குக்கரும்பா நானோர் துரு
[ம்பா ஜெக (நாதா)

5. ஆதிமத்திய அந்தரகிதா சுயஞ்
சோதிமய அமரர்சகிதா கனசுகிர்தாமகி ()

6. மாயாந்தகாரம் அகிலகிரணா வேத
நாயகன் தொழுமலர்ச்சரணா அந்தக்காரணா தெய்வ (நாதா)

## 34. இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்

### பல்லவி

காக்கவேண்டும்-கடவுளே-நீகாக்கவேண்டும்

### அநுபல்லவி

காக்கவேண்டும் எனை அன்பன் ஆக்கவேண்டும் என்கவலை
நீக்கவேண்டும் பாவமெலாம் போக்கவேண்டும் தினமெனைக்

### சரணங்கள்

1. பண்ணியவினையுமனம் எண்ணியவினையும்வாக்கில்
நண்ணியவினையுந்தீரக் கண்ணியவாந்தந்தெனைக் (கா)

2. ஆரணனே நீகொடுத்த தாரணிச்செல்வத்தின்மனம்
பூரணமானேன் பவகி வாரணசுகந்தந்தெனைக் (கா)

3. எந்தவேளை மரணமோ அந்தவேளைவந்துன் அர
விந்தமலரேங்கருஞ் சுந்தர அடிதந்தெனைக் (கா)

4. பூதமுதலானஜீவ பேதகாரணனே நாளும்
வேதநாயகன்பணிபிரக் கியாதபூரணனே எனைக் (கா)

## 35. இராகம்-கேதாரகௌளம்-திரிபுடை-தாளம்

பல்லவி

ஈசனேமல நாசனேமல வாசனேபிர காசனே

அநுபல்லவி

பாசஇருளினை நீக்குவாய் உந்தன்
பாதத்துக்கே உற வாக்குவாய் (ஈசனே)

சரணங்கள்

1. சிறியன்மதிவெறும் ஸ்தூலனே அதன்
செயலெல்லாம்அலங் கோலமே
குறிகொள்பாச நிர் மூலமே செய்து
குணந்தந்திட இது காலமே
அறியநாடும் ஓலமே செவிப்
பொறிகொண்டுத வனு கூலமே (ஈசனே)

2. அருங்காமங்கொள் பேரிழையே நிகர்
ஆகும்உடலெனும் பாழையே
இடமென்றுன் னும்நான் ஏழையே குறை
தீரக்கற்றறி மோழையே
தொடுசிலேட்டுமங் கோழையே உயர்ந்த
திடுமுன்தொலைப்பவப் பீழையே (ஈசனே)

3. என்னைக்கொடுத்திடக் கச்சையே இடை
இறுக்கிக்கட்டிக்கொண் டிச்சையே
முன்னைவருத்திடக் கொச்சையே கொண்டுன்
முன்வந்திரந்தனன் பிச்சையே
உன்னுமாவரத தியாக மழைபொழி
பன்னும்வேதநாயகன் வென்வினையொழி (ஈசனே)

---

## 36. இராகம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்

பல்லவி

நிரந்தரனேமா துரந்தரனே கன
நிர்மலத்துவ தர்மகர்த்தத்துவ

அநுபல்லவி

பரந்தபூரருள் சுரந்துகாத்தருள்
வரந்தந்தென்வினை விரைந்துதீர்த்தருள (நிரந்தரனே)

சரணங்கள்

1. சித்தமிரங்கிஎள் எத்தனைநீதயை
செய்யிற்பிழையேனோ-கன
நித்தனேஎன்பிழை எத்தனையென்னினும்
நீங்கித்தழையேனோ-நல்ல
உத்தமம்என்னிடம் சுத்தசரித்திரம்
என்றோபலவிதம் என் துர்ச்சரித்திரம்
நித்தம்என்னெஞ்சம் உடுத்தாமல்வஸ்திரம்
நீக்கினைச்சேர் சௌபாக்கியசமுத்திரம் (நிரந்தரனே)

2. உதிமதிகதிர் முதலெல்லாஞ்செல்லும்
உன் ஆணைவழியே-எந்தன்
கதியொரேஅந்த விதியைக்கடந்து
வளர்க்குமாபழியே-இந்தப்
பொதிமதிக்கேன் தனியரசாக்ஷியே
புனிதஞ்செய்குவ தூன்பெயர்மாக்ஷியே
புனிதனுனென்பதற் கென்செய்கைசாக்ஷியே
பாவன்னியென ஈவாய்அத்தாக்ஷியே (நிரந்தரனே)

3. பாரிருள்நீக்காத சூரியனாலேஅப்
பாருக்கென்னசாரம்-ஞான
சூரியனேஉன்முன் சாரலாமோஎன்
அகத்தில்அந்தகாரம்-நாளும்
சாரமில்லாச் சமுசாரகோலாகலம்
சாருமெனக்கென்றுநீ தீராவியாகூலம்
வீரனேநீயறிவா யென்பலாபலம்
வேதநாயகனே நீதருவாய்நலம் (நிரந்தரனே)

---

37. இராகம்-ஆனந்தபைரவி-ஆதிதாளம்

பல்லவி

அப்போதுனைத்தொழல் அரிதையா-உனை
இப்போதேதொழ அருள்செய்வாய்

அநுபல்லவி

முப்போதும்உணரு முதலேசுரர்தொழும்
அப்பாமரணம்உற் றடியேன்உடல்விழும் (அப்போ)

சரணங்கள்

1. இடமாய்கற்பாறைபோலே திரண்டுகோழைகள்மட்டும்
சிறிதும்பேசாதவண்ணஞ் சேர்ந்திறுகிப்பல்கிட்டும்
படர்ஜீவவாரிவெளிப் படஎங்கும்ஓடுமூட்டும்
பாரிதுவேளையெனப் படுமாயைதொடைதட்டும்
பலங்கொள் உணர்வது கலங்கிநிலைகெட
இலங்குடலையுயிர் விலங்கிமெலிவுறும் (அப்போ)

2. மனைவிசேய்கடன்காரர் மண்டிவார்த்தைதவிரிப்பார்
வகையெமக்கென்னவென்று மணல்கயிறுத்திரிப்பார்
மனையிற்பொருளையெல்லா மாவலைபோட்டரிப்பார்
வகையென்றுமின்றேறற்கையால் மணித்தொண்டையைநெரிப்
மடங்குகழல்கா முடங்குசெயலொடு [பார்
இடங்கொள்கானமும் அடங்கிமாறுறும் (அப்போ)

3. அழுகைக்குராலும்பல முழக்கமும்நாறுபேதம்
ஆகப்பலபக்கத்தும் அடக்குமேகடனுதம்
விழுகையுறும்உடலின் வேதனையும்பிரமாதம்
வேதநாயகனேஅப் போதுணைஎன்னவேதம்
விரிக்கும்இடர்பல தரிக்கும்உடலினை
முரிக்கும்இசிவொடு மரிக்கும்வேளையில் (அப்போ)

---

18. இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

எவ்வகையிலும் நானே-நல்லவழிபற்றி
உய்வகை அருள் கோனே

அநுபல்லவி

செல்வழிநிற்போர்மனத் தேன்கள்வளரும்பூவே
செலமாகப்பேரின்பம் பழுக்குங்கற்பக்காவே (எவ்வ)

சரணங்கள்

வறியாக்கிடவென்றலென் குறியகைகளிற்குலை
வாங்கநீட்டன்உலகும் வானமும்எந்தமூலை
பிணீர்நோய்செய்யில்எனக்குப் பெருங்கோபாக்கினிச்சுவாலை
பேதைஎன்பிழைஎழு திடவேண்டுங்கோடியோலை (எவ்வ)

2. நால்வழிநடக்கவென் றால்இருகாற்குந்தனை
நாளுந்துர்வழிநடப் பதில்எனக்குண்டோகனை
புல்வினையேன்செவி பொய்கள்நுழையும்வளை
புண்ணியோபதேசமென்றால் புகஅதில்லதுகளை (எவ்)

3. உன்னைத்துதிக்கவென்றால் உலகில்என்வாய்க்குநோயே
ஊர்வம்புபேசஎனக் குடம்புமுழுதும்வாயே
மின்னநிகர்பிரபஞ்ச வேதனைநீக்குவாயே
வேதநாயகனுக்குச் சாதகமான தாயே(எவ்)

---

## 39. இராகம்-செஞ்சுருட்டி-ரூபகதாளம்

### பல்லவி

கதியிதென்முகம் பார்ஐயா
கதிநினையன்றி ஆர்ஐயா

### அநுபல்லவி

மதியுள்ளோர்கள் சித்திக்கும்அமிர்த
வாரியேஅருள் மாரியே (கதி)

### சரணங்கள்

1. உனக்கென்எண்ணம் அந்தரங்கமா
உதவிதான்செய்யிற் பங்கமா
எனக்கிங்கசுப அங்கமா
இன்னமென்ன ஆடங்கமா
தனக்குநிகரில்லாத-ஞானசாகர குணாகரா(கதி)

2. அதஞ்செய்யும்வினை கற்கண்டோ
அதைத்தொலைப்பதென் பலங்கொண்டோ
நிதம்நான்செய்வது வீண்தொண்டோ
நீயல்லாற்கதி வேறுண்டோ
பாதகமலங்கள் பாவும்பத்தர்கள் பாக்கியமே மனோக்கியமே(கதி)

3. அன்னைக்குப்பிள்ளைமேற் குரோதமா
அருள்செய்வது பிரமாதமா
வினைக்குநான்முதற் பாதமா
விலக்கஇன்னம் விவாதமா
நினைக்கும்வேதநாயகன்பணி நீதனே பிரபோதனே(கதி)

## 40. இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி

ஜாலஞ்செய்வதேதோ-ஐயா
சீலம்-ஈயொண்ணாதோ-மெய்யா

அநுபல்லவி

ஞாலமெல்லாந் தாங்குங்கையா
நற்குணமில் லார்க்குமெய்யா (ஜாலம்)

சரணங்கள்

1. பெண்டுபிள்ளை யோ டினமே
பேய்ச்சுரை படர் வனமே
அண்டுமே இவரால் தினமே
ஐயையோ நொந்தேன் மனமே (ஜாலம்)

2. பாழுமனமே மற் கடம்
பண்ணும் அசட விகடம்
ஊழ்வினை தரும் சங்கடம்
ஒழித்துநீ யருள்வாய் திடம் (ஜாலம்)

3. நீதிவழுவாச் செங் கோலா
நித்திய சங்கீத கோலா
வேதியர் பரவுஞ் சீலா
வேதநாயகன் சேர் காலா (ஜாலம்)

## 41. இராகம்-சாமா-திரிபுடைதாளம்

பல்லவி

வேதநாயகனே-எவ்விதமும்-உன்
பாதமலர்-அருளே

அநுபல்லவி

போதநாயகனே பொய்நீங்கிய
புனிதநாயகனே மெய்தாங்கிய

LIBRARY

சரணங்கள்

1. எண்ணுமனமே துர்க் குணங்கள்கொள் பாண்டம்
ஏதும்அறிகிலேன் ஞான காண்டம்
புண்ணும்பாவங்களே பிர மாண்டம்
பகரும் வார்த்தைகளே அபாண்டம் (வே)

2. மண்ணில்அநு தினம்பூத தேகம்
வளர்ப்பதெனக் ககலர்உத்தி யோகம்
புண்ணியஉடல் வளர்ந்திடும் வைதீகம்
பூண்டிலேன் அருள்வாய் விவேகம்(வே)

3. விதாவிஷதரு கிரகஸ்தாச் சிரமம்
நிதங்கொண்டேன் இந்தவாழ்விலே பிரமம்
நீங்கவேத நாயகனே அருள் கிரமம்(வே)

---

### 42. இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

எனக்குக்கட்டியவீட்டை-எனக்குக்கொடாதிருப்ப
தென்னஞாயம் ஸ்வாமி

அநுபல்லவி

இனிக்கும்அவ்வீடு செய்தெங்கள் நித்தியமே
என்றுநீசெய்ய வில்லையோவாக்கு தத்தமே
உனக்குநான்பிள்ளை யென்பதுலகப்பிர சித்தமே
உவந்துகேளாயோ என்பிரலாப சத்தமே

சரணங்கள்

1. சித்தவிகாரமுற்று நரர்க்குச்செய்யிவ்வுலகம்
சிறப்புள்ளதெனின்கோனே நல்ல
உத்தமர்க்கமைத்தநித்தி யானந்தமுமதியின்பம்
உணர்வதெப்படி நானே
சுத்தமணிபொன் அங்கேதுரும்புகள் ஈட்டமே
தொல்லுலகின்பமெல்லாந் துன்பம்போல்ஓட்டமே
அந்தமிலாநித்திய சூரியர்அன்பர்கூட்டமே
அநுதினம்எனக்கந்த வீட்டினில் நாட்டமே (எனக்கு)

2. முகமுகமாகஉனைத் தரிசிக்கும்பாக்கியத்தை
மொழியநினைக்க ஒண்ணுமோ இந்த
இகமிசைமனமொடு புலன்கட்கெட்டாத அந்த
இன்பம்எப்போது நண்ணுமோ

அகமிசைஉன்னஉன்ன ஆனந்தம்பொங்குமே
ஆயிரங்கோடி சூரியர்ஒளிமங்குமே
நிகரறுகீத விநோதங்கள்எங்குமே (எனக்கு)

3. இகமனைகட்டிநரர் குடும்பப்பிரதிஷ்டைசெய்த
இணையறும் எந்தாயே நித்திய
சுகமனைதன்னில் பிரவேசிக்கவேநல்ல
சுதந்தரம் அருள்வாயே
அகிலலோகப்பிரபஞ்ச நாடகசூத்திரனே
அற்புதபரமசித்தி யானந்தக்ஷேத்திரனே
நிகரறுசௌந்த்ர நிர்மலகாத்திரனே
நிதம்வேதநாயகன்தொழு குணபாத்திரனே (எனக்கு)

---

43. இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி

ஐயனே-உன்-அழகைக்காண
ஆசைநான்-கொண்டேனே (ஐயனே)

அநுபல்லவி

வையமீதுபல அழகையும்
வகைவகையா வகுத்துக்காட்டும் (ஐயனே)

சரணங்கள்

1. உதயசூரியன் சோமன்தாரகை
உன்முன்னே மின்மினியே
நிதிநவமணி யென்னும்குப்பைகள்
நிகருமேஉனை இனியே (ஐயனே)

2. கனியுந்தேனும் பாலும்சீனியும்
கண்டுங்கரும்பும் சிறுமை
இனியஉனது தரிசனத்தின்முன்
இவைகள்யாவும் வெறுமை (ஐயனே)

3. செழுமையாகிய வண்ணமலர்கொள்
சிங்கார வனக்காட்சி
அழகின்ஆலய மானஉன்முன்
அதற்கெடிதனையோ தாட்சி (ஐயனே)

4. அதிசவுந்திர மயில்குயில்கிளி
யாதிபறவைக் கூட்டம்
விதியின் அவை செய்யின்னமுகின் முன்
வெட்கிப்பஞ்சுபோ லோட்டம் (ஐயனே)

5. சத்தஸ்பரிச ரசரூபகந்தந்
தான் அல்லாத பொருளே
எத்தன்மைஉன துருவென் றறிய
இன்பக்காட்சி யருளே (ஐயனே)

6. பதியில்நீசெய் பலபொருள்களைப்
பார்க்கப்பார்க்க வடிவே
அதிசயம்தரும்உன் தன் அற்புத
அளகினுக்குண்டோ முடிவே (ஐயனே)

7. பிறந்தநாள்முதல் தாயைக்காணுப்
பிள்ளை தன்னை ஒத்தேனே
சிறந்தவேத நாயகாஉன்மேல்
சிந்தையாவும் வைத்தேனே (ஐயனே)

---

## 44. இராகம்-மாஞ்சி-ரூபகதாளம்

### பல்லவி

என்னை நீ ஆளுவாய்-ஏகனே-போகனே-என்னை

### அநுபல்லவி

பொன்னைமாதரைப்பூவை எண்ணம்
பூண்டுநான்கெடாத வண்ணம் (என்னை)

### சரணங்கள்

1. யாதனுசரீரமே யாதுமில்லாசாரமே
வாதபித்தவிகாரமே வாதனைகள் அபாரமே
மலநிவாரணு வடிவபூரணு
நலஉதாரணு ஞானகாரணு (என்னை)

2. எந்நாளும்கிலேசமே என்னெஞ்சிற்பிரவேசமே
பந்தவினையைநாசமே பண்ணிநீசெய்வாசமே
பதிதபாவனு பரமஜீவனு
அதிகசோபனு அகிலஸ்தாபனு (என்னை)

4. அன்னை தந்தை நீ அல்லவோ ஆயிரந்தரஞ்சொல்லவோ
என்னை மாயைகொல்லவோ எங்கு நான் இனிச்செல்லவோ
ஏகபேதகா இனியசாதகா
வேதநாயகா விமலநாயகா (என்)

---

## 45. இராகம்-சைந்தவி-திரிபுடைதாளம்

பல்லவி

ஏழைக்கிரங்கலுண்ணு தா—இந்த—ஏழை

அநுபல்லவி

ஆழக்கடல்உலகை ஆளும்விநோதா

சரணங்கள்

1. சாடும்பிரசண்டக் காற்றுலே-திசை
தப்பியேஅலைபடும் கப்பலைப்போலே
நாடும்பிரபஞ்ச மாலே-என்னை
நைவிக்கவாடினேன் ஞான்புவிமேலே (ஏழை)

2. நீசெய்வதெல்லாம் சகாயம்-இங்கே
நிரந்தரம்என்செய்கை யாவும்அன்னியாயம்
ஈசனேநின்பத நேயம்-எனக்
கெள்ளளவுமில்லை ஈதென்னமாயம் (ஏழை)

3. அற்பசுகத்துக் குழைத்தேன்-பாரில்
அநுதினம்ஆயிரம்பொய் சொல்லிப்பிழைத்தேன்
பற்பலதீவினை உழைத்தேன்-துன்பப்
பாரம்பொறுமலே பரிந்துன்னை அழைத்தேன் (ஏழை)

4. ஆன்மபத்தினி மணவாளா-அகி
லாண்டபிரமாண்ட அகண்டிதகோலா
வான்மகிழ்தீனதயாளா-தினம்
மகிழ்வேதநாயகன் வணங்கும்பொற்பாதா

## 46. இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி

கருணாகரப்பரம்பொருளே-அடியனைக்
கண்பார்த்தருள்வாயே

அநுபல்லவி

இருணாசஞ்செய்யும் இரவிசமான
தெருணாடிய தேஜோமயம்ஆன (கருணா)

சரணங்கள்

1. தோன்றினநாள்முதல் சுகுணமொன்றறியேன்
சொப்பனந்தன்னிலுந் துர்க்குணம்பிரியேன்
ஈன்றவனீயென என்றுமேகுறியேன்
என்னசெய்வாயோ என்றுமேகுறியேன் (கரு)

2. தாரணியில்நான்ஒரு தருவெனமுளைத்தேன்
தவகுணம்யாவுமே சாகையாக்கிளைத்தேன்
கருமமாகியவிஷக் கனிகளைவிடுத்தேன்
கண்டனைசெய்வை யென்றஞ்சியேகளைத்தேன் (கரு)

3. நிகிலலோகங்கட் கெல்லாம்நீயதிகாரி
நிச்சயமாஎன் மனம்நினக்கோருபகாரி
அகிலந்தனிலே அந்தமனம்அகங்காரி
அடக்கிஆளாவிட்டால் அழியாளேநாரி (கரு)

4. அழகுக்காலயமான அமிர்தசுந்தரமே
அன்பருக்கருண்மழை பொழியுங்கந்தரமே
தொழுதிடும்வேதநாயகன் சுதந்தரமே
துணைநீஉனை நம்பினேனிரந்தரமே (கரு)

---

## 47. இராகம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி

ஏனின்னம் தாமதமையா
என்னிடம்வா

அநுபல்லவி

தானேஉமக்குமுத்திக் தலமொன்றுமில்லையோ
வானமுத்தரைவிட்டு வரமனமில்லையோ (ஏனின்)

சரணங்கள்

1. சூரியனைத்தூண்ட அகன்றீரோ-அந்தச்
சோமனுக்கொளிதரச் சென்றீரோ
பாரினைப்புரட்டியே நின்றீரோ-அதில்
பகல்இரவுண்டாக்க முயன்றீரோ
காரிலிருந்து கனமழைசொரிந்தீரோ
கற்பத்தில்சிசுக்களையே புரிந்தீரோ
சாரும்பல்லுயிர்க்குயிராய் விரிந்தீரோ
சர்வலோககாரியஞ் செய்துதிரிந்தீரோ (ஏனி)

2. அண்டகோடிகளைத் தூக்கினீரோ - நவம்
ஆகச்சிலஅண்டம் ஆக்கினீரோ
கண்டகர்உலகை நீக்கினீரோ
கரையைக்கடவாமல் தேக்கினீரோ
அண்டும்பல்லுயிர்க்கமு தூட்டுகின்றீரோ
ஐம்பூதங்கட்கும் வேலைகாட்டுகின்றீரோ
மண்டுங்கனிக்குச் சுவைகூட்டுகின்றீரோ
மலருக்குபலவண்ணந் தீட்டுகின்றீரோ (ஏனி)

3. மரஞ்செடிபயிர்கள் நிறைத்தீரோ - அவை
வளரவேதண்ணீரை இறைத்தீரோ
சுரர்கள்இசைகேட்டுக் களித்தீரோ - நல்ல
தொண்டர்இதயத்தில் ஒளித்தீரோ
பரமகிருபாகர பரஹிதநேசரே
பாமதகண்டன பாவவிநாசரே
சருவவிநோத சராசரவாசரே
தாசன்வேதநாயகன் தன்பிராணேசரே (ஏனி)

48. இராகம்-மத்தியமாவதி-ரூபகதாளம்

பல்லவி

இவ்வளவுதான்ஐயனே-அதிகம்அல்ல
இரங்கி யருள்மெய்யனே

அநுபல்லவி

அவனியில்வளரும் மூவாசையைப்பரிகரி
எவ்வளவுமேதுன்பம் இல்லாமல்ஆதரி
இதயமலர்தரி விதனமதுபிரி
நிதமும்அருள்புரி இதுவேசரிசரி (இவ்வ)

சரணங்கள்

1. எனைஎந்தநாளும்நீ நீங்காதே-நான்போம்
இடமெங்குங்கூடவாபின் வாங்காதே
வினையனென்றென்மேற்கோபம்வீங்காதே-மன
வேதைசுமக்கவென்றால் தாங்காதே
நினைவிலுந்தீதைநான் நினையாமற்பார்த்திரு
நித்திரைசெயும்போதென் பக்கத்தில்காத்திரு
நெடியநிலைபெறு கொடியபிழைபொறு
அடியன்பனமுறு கடிதுயர்அறு (இவ்வள)

2. மாயையில்மனம்புக ஓட்டாதே-என்னை
வஞ்சமனைக்காளென்று சுட்டாதே
ஆயிரம்தண்டம் என்சொல்தட்டாதே-உன
தனுக்கிரகமின்றி நலங்கிட்டாதே
நாயேன்விரும்பிய நல்லவரங்கள்கொடு
நரகையடைத்துமோக்ஷ நாட்டைத்திறந்துவிடு
நனவுகொடுகொடு-சினமும்விடுவிடு
தினமுமகிழ்வொடு-கனசுகுணம்இடு (இவ்வள)

3. நலமன்றிக்குறையை ஆராயாதே-பெரு
நன்மைகள்கொடுப்பதில் ஓயாதே
பலவேலைவிட்டேனென்று காயாதே-அற்பப்
பாக்கியம்நான்கேட்கினும் ஈயாதே
புலனில்வேதநாயகன் புகழும்சுகுணசீலா
பூதபவிஷியார்த்த மானமெனுந்திரிகாலா
போதமழைபொழி-மாதவர்வயலுழி
பாதகமதொழி-ஏதமறவிழி (இவ்வள)

49. இராகம்-சாரங்கா-அடதாளசாப்பு

பல்லவி

ஆதரித்திடநல்ல தருணம்-என
தையாவுனக் கனந்தஞ்சரணம் (ஆதரி)

அநுபல்லவி

பாதகநாசனு-பரமகிருபாசனு
சாதகமோசனு-தர்மப்பிரயோசனு (ஆதரி)

சரணங்கள்

1. என்பழிமறைப்பதில் யானைபதப்பாதாளம்
இதர்பழிதூற்றலில் என்வாய்பெரியமேளம்
அன்பின்மனம்பேராசை அம்புவியினும்நீளம்
அண்டம்வசமானாலும் அடங்காப்பெரும்வேதாளம்
ஆட்டிமயல்வலை-பூட்டி அநுதினம்
கோட்டிசெயும்வினை-ஓட்டி அடியனை (ஆதரி)

2. ஓடிஅலையநெஞ்சுக் குலகமும்வானும்அற்பம்
உன்னிடம்வாவென்றால் ஒழியாதஅசந்தர்ப்பம்
தேடிநற்கருமங்கள் செய்துங்கஜகர்ப்பம்
தீவினைசெய்வதேஎன் சிந்தனையின்சங்கற்பம்
திருத்தமுடனேயென் கருத்துநலமிசைப்
பொருத்தமுறச்செய்து வருத்தங்கொலைத்தே (ஆதரி)

3. என்குறைகாணவென்றால் என்னிருகண்ணும்ஊனம்
இதரர்பிழைகாணக்கண் இரவிகோடிசமானம்
வன்கண்மொழிகளுக்கென் வாயேமுக்கியஸ்தானம்
மதுரச்சொல்பேசவென்றால் மாறுதீர்க்கமோனம்
மாதமொடுபல பூதகாரண
வேதநாயக நீதனேஎனை (ஆதரி)

50. இராகம்-நாதநாமக்கிரியை-திரிபுடை-தாளம்

பல்லவி

உன்னைநம்பினேன்-ஐயனே-எனையாதரி
உன்னைநம்பியஏழை தன்னைமுகம்பாராமல் (உன்னை)

அநுபல்லவி

அன்னைபிதாவேநீ கைவிடலாமா
நான்கெடலாமா (உன்னை)
துன்பப் படலாமா

சரணங்கள்

1. தனமுமின்னார்கள்பு வனமும்உலகவாழ்வின்
கனமும்வேண்டிலன் இது தேராயோ
தினமும்உனைக்கருத்து மனமும்உனதுதரி
சனமும்வேண்டினன் அருள்கூராயோ
மருள் தீராயோ
பொருள் தாராயோ (உன்னை)

2. படிமீதினில் எண்ணமுடியா உதவிகள்
அடியேனுறச்செய்த பெரியோனே
கொடியேன்உனை அரை நொடியாகிலுந்தொழும்
படியேஅருள்நலம் பிரியானே
தூயர்க் குரியானே
தீயர்க் கரியானே (உன்னை)

3. அயமேபெருங்கல்லின் மயமேயெனும்இரு
தயமேமெழுகென உருகாதோ
ஸ்வயமேபரமாதி சயமேவேதநாயகன்
நயமேவினைதெய்வம் பருகாதோ
துன்பு கருகாதோ
இன்பு பெருகாதோ (உன்னை)

---

## 51. இராகம்-பந்துவராளி-ரூபகம்

### பல்லவி

கடைக்கண்ணால் எனைப்பாராய் உன
தடைக்கலம் வினைதீராய் (கடைக்)

### அநுபல்லவி

கிடைக்கொண்ணாப் பதந்தாராய்
படைக்கவேஅருள்கூராய் அருட்
கொடைக்குநானென்னவே யவதரித்த
கோலாகல-மூலா-அநு-கூலாகுண-சீலா-நிதம் (கடைக்)

### சரணங்கள்

1. வஞ்சகமாயையில் ஆழ்ந்தேன்-ஒரு
தஞ்சமென்றுன்னடி தாழ்ந்தேன்
அஞ்சலென்றேஎனை ஆதரித்தாளுவாய்
ஐயாமிரு-பொய்யால்மனம்-நையாதருள்-மெய்யா-ஒரு (கடை)

2. ஐயனேதீரா யென்பாபம் அருள்
செய்யஉனக் கென்னலோபம்
வையகமாதி வளர்அண்டம்யாவினும்
வாசாபுவி-நேசாமற-நாசாபர-காசாஒரு (கடைக்)

3. அஞ்சலெனில் உன்வாய் நோமோ-ஏழை
நெஞ்சம்வருந்திட லாமோ
பஞ்சமோகைப்பொருள் கொஞ்சமோபூபரி
பாலா-அநு-கூலா-ஒரு-மேலாமுதல்-நூலா-ஒரு (கடைக்)

4. இத்தரைமீதினில் நீயே—நல்ல
பத்தரைக்கார்க்கவந் தாயே
சித்தமுவந்தெனை நித்தமும் ஆலொளிர்
தேகாகன-யோகாஅதி-தியாகாதனி-ஏகாகுளிர் (கடைக்)

5. பூதலம்போற்றும்பொற்பாதா—அரு
மாதவஞானப்பிர சாதா
வேதநாயகன்பாடுந் தமிழ்க்கருள்
வேதாஉயிர்-நீதாகன-தாதாநய-போதா-உன் (கடைக்)

---

### 52. இராகம்-அசாவேரி-திரிபுடைதாளம்

பல்லவி

பாசத்தால் மனம்வாடினேன்—உந்தன்
வாசத்தாள் மலர்கூடினேன்

அநுபல்லவி

நேசத்தோர்கள்கை வல்லியமே உயர்
நிர்மலாதித்த துல்லியமே கன
மாசற்றோங்கும் பிரபல்லியமேஜெகம்
மகிழும்பக்தவாற் சல்லியமேமல (பாசத்)

சரணங்கள்

1. நினைவிலேன் பிழையாவுமே எண்ண
நினைக்குந்தானென்ன சாத்தியமா
எனைவருத்தும் இந்திரியப்பேய்தனக்
கித்தனை ஆகாத்தியமா
வினை எனக்கு விரோதியா என்றும்
விலகிடாக்கர்ம வியாதியா கொடு
மனமுமே பிரதிவாதியா கெட்ட
மாயை என்ன தாயாதியா ஐயா (பாசத்)

2. இருதலைக்கொள்ளி எறும்புபோலெனக்
கிடைவிடாமன வாட்டமே
மருவும்பந்தபாசந் தன்னோடு
மாறிடாத போராட்டமே
கருமமாயா விகாரமே செய்யும்
கலகஜாலம் விஸ்தாரமே நல்ல
தருமம் எனக்குத் தூரமே பின்னும்
தப்புகள்கற்பக பாரமே ஐயா (பாசத்)

3. வளர்கல்லியாணத்தில் தாலிபூட்டிட
மறக்குமூடர்கள் போலவே
தளர்பிரபஞ்சவியாபாரத்தால் உன் தன்
தாள்மறந்தன்ன சாலவே
உளவியாதிக்கா ரோக்கியமே நிதம்
உன்னுவோர்கள் மனோக்கியமே நலம்
விளையமாமறை வாக்கியமே தொழும்
வேதநாயகன் பாக்கியமே பந்த (பாசத்)

---

53. இராகம்-கன்னடகௌளை-ஆதிதாளம்

பல்லவி

ஆதிபரமநாதா-ஞான-ஜோதிதர-ஒண்ணாதா

அநுபல்லவி

பூதம்பரவும் விநோதனேகன அ
நீதமாய் இருள் பேதமாகவே (ஆதி)

சரணங்கள்

1. காமக்குரோதமதம் லோபம் அகங்
காரம்பொய்மாற்சரியங் கோபம் இன்னும்
பூமியிற்பலபல பாபம் செய்யும்
புல்லன்மனம் அவித்யா ரூபம் நல்ல (ஆதி)

2. பெண்டுபிள்ளைகள் சமுசாரம் முதற்
பேசும்லௌகிக வியாபாரம் தன்னில்
மண்டுமேமோகாந்த காரம் தீர்
மாற்றியருள்வை நிர்விகாரம் நல்ல (ஆதி)

3. பாவக்கடல்கடக்குங் கலமே தொண்டர்
பயிர்கள்வளருந்தெய்வ நிலமே கன
நாவலர்போற்றிடும் நிர்மலமே வேத
நாயகநாதனுன் அடைக்கலமே (ஆதி)

54. இராகம்—காப்பிரியை—ரூபகதாளம்

பல்லவி

இந்தவரந்தருவாய் எனக்
கெந்தவரங்களு மில்லையென்றாலும்

அநுபல்லவி

சுந்தரமாகத் துலங்குந்தெய்வீகனே
சந்ததமும்புவி தாங்கும்நிர்வாகனே (இந்த)

சரணங்கள்

1. காமிகநிமித்தங் கலங்கி நையாமல்
கண்டவர்க்கெல்லாம்நான்தொண்டு செய்யாமல்
மாயப்பிரபஞ்சல் மாட்டி வையாமல்
மாதர்கண்ணம்பென் மனதில் வையாமல் (இந்த)

2. எங்கெங்குமேஉன் னுருவாய் மின்ன
எண்ணம்வேறின்றி உனைமன முன்ன
மங்களநாமமென் வாய்நிதம் பன்ன
வார்த்தைகள்யாவுமுன் வார்த்தையாய் மன்ன (இந்த)

3. சுத்தசைதன்னிய நிலைமையில் சார
தோஷகர்மானுபவந் தங்களுந் தீர
அத்தனேநித்த முனக்கன்பு கூர
ஆனந்தவீட்டிலே நான்வந்து சேர (இந்த)

4. சூதுபொறுமைபொய் கோபமில்லாமல்
சோரமும்லோபந்துன் மார்க்கங்கல்லாமல்
வேதநெறியை விலகிநில்லாமல்
வேதநாயக விளம்பஞ்சொல்லாமல் (இந்த)

### 55. இராகம்-கமாஸ்-ரூபகதாளம்

பல்லவி

ஏகபராபரனே—கருணைப்பிர
வாகமனோகரனே

அநுபல்லவி

தேகமுறும்பல மோகஉபாதிகள்
ஏகஎனக்கு விவேகமருந்தருள் (ஏ)

சரணங்கள்

1. சஞ்சலமானேனே-மனம்நொந்து
தளர்ந்துபோனேனே
அஞ்சலெனத்தானே-அடியேனை
ஆண்டருள்வாய்கோனே
பஞ்சபூதாதிபிரபஞ்சமெலாஞ்செய்து
தஞ்சம்செயும்நிஷ்பிர பஞ்சப்பொருளான (ஏக)

2. சங்கடமாற்ருயோ-எளியேன்
தன்முனந்தோற்ருயோ
இங்கிதஞ்சாற்ருயோ-தமியனை
யேகரையேற்ருயோ
அங்குமிங்கும்புவி-எங்கும்உயிரென்த்
தங்கும்படிஅருள்-பொங்குங்குணுகர (ஏக)

3. நேயர்சகாயனே-அருமறை
நீதிசொல்வாயனே
தூயதியாகனே-அமரர்கள்
சூழசமுதாயனே
மாயவியாதி-நோயணுகாமலே
தாயெனவேவேத நாயகனே ஆளும் (ஏக)

---

### 56. இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

பல்லவி

கருணைகடாக்ஷஞ் செய்வாயோ-சுவாமி

அநுபல்லவி

மருணசமாகவே மகிழ்வாசநீயே (கருணை)

சரணங்கள்

1. அநியாயம் உலகவிர்த்தாந்தம்-இதில்
அழியாதவண்ணம்நீ அருள்வைஉபசாந்தம்
தணிழன்றனோடு மோகாந்தம்-கொள்ள
சார்த்ராகாலமு மௌனதுசித்தாந்தம் (கருணை)

2. நாமரூபகமாம் பிரபஞ்சம்-ஆன்ம
நன்மையை அழிக்கும் எந்நாளும்இதுநஞ்சம்
காமவிஷயாதிகளில் நெஞ்சம்-நாளும்
கலங்கினேனின்பாத கமலமேதஞ்சம் (கருணை)

3. போதாந்தநிலைமை யுறுதேதவே-நல்ல
புவனகோடிகள்செய் தளிக்கின்றகோவே
வேதாந்தரச மொழுகுகாவே-நிதம்
வேதநாயகன்இதய வண்டுவளர்பூவே (கருணை)

---

## 57. இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

ஆதிபரமநாதா-நல்ல
அற்புதநற்பதம்பெறப் பொற்பதம்எனக்கருள்செய்

அநுபல்லவி

ஓதரும்உயிர்க்குயி ராகியெங்கும்நிறையும்
பூதசராசரப் பொருள்எல்லாம்உறையும்

சரணங்கள்

1. ஜீவன்பிழைக்கும்வழி அறியேனே-நான்
தெற்குவடக்கறியாச் சிறியேனே
பாவலகரிகொண்ட வெறியேனே-பந்த
பாசக்களையைவெட்டி எறியேனே
ஆவலுடனேஎங்கும் அலைந்தகம்வெம்பினேன்
தேவநாயகனே உன்திருவடிநம்பினேன் (ஆதி)

2. ஐயனேஎனக்கருள் ஊட்டாயோ-கெட்ட
அகங்காரமெனும்பேயை ஓட்டாயோ
உய்யவழியெனக்குக் காட்டாயோ-எந்தன்
உள்ளத்தில்உன்பதத்தை நாட்டாயோ
பொய்யுலகநடையைப் பொருளெனநாடினேன்
மெய்யறிவில்லாமலே மிகமிகவாடினேன் (ஆதி)

3. அண்டங்கள்படைத்தளித் தழிப்போனே-கணம்
ஆகப்பலகோடிகாலங் கழிப்போனே
தொண்டர்மனத்துயரம் ஒழிப்போனே-நல்ல
சுகமுத்தரோடுகூடிச் செழிப்போனே
அண்டும்வேதநாயகன் அகத்தொளிர்ஜோதியே
மீண்டும்வினைகளெல்லா மாற்றுதல்நீதியே (ஆதி)

---

58. இராகம்-பரசு-அடதாளசாப்பு

பல்லவி

ஜெகநாதா-வினை-அகலாதா

அநுபல்லவி

பகலோவென்னஅரும் பவஇருள்நீக்கும் (ஜெக)

சரணங்கள்

1. பரிதாபம்பரிதாபம் ஐயாஎன்னிலைமை
பஞ்சப்புலாதியர்க் கார்தந்தார்தலைமை
தரைமிசைஎன்செய்கை யாவுமேபுலைமை
தந்தருளினிஞான சாஸ்திரப்புலமை (ஜெக)

2. அநுகூலசத்துரு வாகுமென்னுள்ளம்
அநுதினஞ்செய்வதெல்லாம் பெருங்கள்ளம்
தினமுமேபடித்திடுந் தீவினைப்பள்ளம்
தீர்த்தெனையாட்டுவை திருவருள்வெள்ளம் (ஜெக)

3. ஈசனேஅறநெறி எனக்கென்றும்விலக்கம்
என்பிழைகளையெண்ண இல்லையேஇலக்கம்
கூசியேநான்மிகக் கொண்டேன்கலக்கம்
குணவேதநாயகா கொடுத்தருள்துலக்கம் (ஜெக)

---

59. இராகம்-மத்தியமாவதி-திரிபுடைதாளம்

பல்லவி

இரக்கஞ்செய்வாயோ புரக்குமெந்தாயே

அநுபல்லவி

இரக்கஞ்செய்வாயோ புரக்குமெந்தாயே
ஏகமாகிய-யோகபூரண-பாகமேபெற-மோகமேஅற (இரக்)

சரணங்கள்

1. தேகநிமித்தம் செய்வதனர்த்தம்
ஏகப்பிரசித்தம் எக்கினேன்சித்தம்
இன்பமேவிய நின்பதாம்புய
அன்புதங்கிட துன்பமங்கிட (இரக்)

2. நாஞெருமூடன் நாயினுங்கேடன்
ஈனர்கள்சீடன் என்றுபொய்வேடன்
ஈனமும்ஆவ மானமுங்கெட
ஞானமுங்கன மோகமுங்தொட (இரக்)

3. உலகவியாபாரம் ஓயாவிசாரம்
கலகம்அபாரம் கர்மவிசாரம்
கஷ்டமுங்கன நஷ்டமும்பெறு
துஷ்டனுலுன் திஷ்டனுகவே (இரக்)

4. தாசர்கள்நேசா தர்மவிலாசா
பாசவிநாசா பாக்கியப்பிரதேசா
பாதமேதொழும் வேதநாயகன்
மீதருள்மற வாதநாதனே (இரக்)

60. இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி

பரனேபக்தர்சுதந்-தரனேநாளும்
பட்சம்வைத்தென்னைசம்-ரட்சணைசெய்தருள்

அநுபல்லவி

இரவிகோடியென ஒளிவீசிடும்
ஏகஅநேகவைபோகநிர்தேகதற் (பர)

சரணங்கள்

1. உன்னையல்லால்கதி பின்னையில்லையென்
றுனக்குத்தெரியாதா நாளும்
உற்றதன்பிள்ளையைப் பெற்றதாய்தள்ளின்
உலகஞ்சிறியாதா மேகம்
தன்னைப்பயிர்வேண்டு முன்னே அருமழை
தானேசொரியாதா அந்தத்
தன்மைபோல்நீஉயர் நன்மையுதவியென
தாபம் மரியாதா

இங்கிலமீதினிலென்னைப் போலார்ஜடன்
இல்லையேயைங்கிளிச் சொல்லையற்றுவிடன்
டன்னிமோகக்கடல் தன்னில்விழும்விடன்
மாளுமுன்னாளும் வந்தாளுவதுன்கடன் (பர)

2\. நீவிய அண்டங்கள் மேவிஆகாயத்தில்
நிற்கச்செய்வதாய்நீயே எந்தன்
நெஞ்சம்என்தாளிணைக் கஞ்சம்பதிந்திட
நீவரம்ஈவாயே உனக்
கோவியமோஇது காவியங்கொள்ளரும்
உத்தமளந்தாயே எனக்
குன்னைத்தருமட்டும் நின்னை அலட்டா
தொழியுமோ என்வாயே
தீவினைநாசனெனப் புகழ்மாலையே
சேர்ந்தஉனக்கென்ன சாந்தணர்கண்வேலையே
பாவியென்பாலுண்டு வேலைபங்காலையே
பட்டேன்பொய்விட்டேன் கும்பிட்டேன்உன்காலையே (பர)

3\. தீதகலும்பஞ்ச பூதம்வளர்சர்வ
சாதகபூமியே வினை
தீர்ந்திடவேஞானக் காந்திசொரியுந்
சர்வாந்தரியாமியே என்று
வேதநாயகன்மீ தருள்மறவாத
ஸ்வாமியே உண்மை
விளங்கவேபல வளங்கள்சாரும்நிஷ்
களங்க நேமியே
போதனேநீங்காயென் பாதசவெட்டையே
பொய்யுருவாகிய மெய்யனுங்கட்டையே
நாதனேநீங்குமுன் சாதகநிட்டையே
நண்ணிடப்பண்ணுவாய் புண்ணியப்பிரதிஷ்டை (பர)

---

61. இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

பல்லவி

இன்னும்பராமுகம்-ஏதோஎந்தன்
முன்னம்வந்தாள-ஒண்ணாதோ

அநுபல்லவி

தன்னவரைரட்சிக்கத் தானேகநிகணமே
தரித்தவேளையென ஆதரித்தல்வங்கணமே (இன்ன)

சரணங்கள்

1. யார்க்கோசொல்வதுபோல் நீ அசட்டை-செய்யில்
எப்படித்துலைப்பேன் என்கன்மக்கட்டை
மார்க்கமுடனேநீ மெஞ்ஞானநிஷ்டை
மட்டும்நான்விடுவேனோ என் அசட்டை
மூர்க்கவினைகளுக்கு நாமொருபையோ
மூடமனமுமாயையும் ஒருகையோ
தீர்க்கமாஉனைநான் அடுத்ததுபொய்யோ
தெய்வமேநீகைவிடில் என்செய்வனே ஐயோ (இன்)

2. தீனருக்குதவுவதே தியாகம்-பெருஞ்
செல்வருக்கிவது துர்விநியோகம்
மானமுள்ளோர்க்குன் அருள்பிரவாகம்-பின்னும்
நலம்அவர்க்கிவதில் என்னுபயோகம்
ஈசனுனைஎனக்கு ஞானசையோகம்
ஈவதுவேநல்லதி யாகப்பிரயோகம்
நானுன்சந்ததி அதிலென்னசந்தேகம்
நான்விடேன்விடேன் பூர்வார்ஜிதபாகம் (இன்)

3. பிள்ளைக்கும்தாய்க்கும் உண்டோபிணக்கு
பெருகும்உன்கருணைக் குண்டோகணக்கு
கள்ளமயலுறு மென்மனக்குணக்கு
கனங்கொள் நன்மார்க்கத்தில் எனைஇணக்கு
தள்ளரிதாகிய பரமசத்துவமே
சாக்ஷாதுலகெங்கும் விளங்குந்தத்துவமே
விள்ளரிதாகிய சர்வஞ்ஞத்துவமே
வேதநாயகன் தனக்குரியசொத்துவமே (இன்)

---

62. இராகம்—ஸ்ரீராகம்—அடதாளசாப்பு

பல்லவி

வேதநாயகா-நம்பினேன்-உனை

அநுபல்லவி

ஏகமும்விப ரீதமுங்கெட
சீதமுங்கன போதமுங்கொடு (வேத)

சரணங்கள்

1. தினமும்உன்பணி விடையே-நான்மறவாமல்
செய அருள் நன்னடையே
இனமாகும் அருட்கொடையே-வழங்கிட
ஏனின்னமுந் தடையே
கனமுமேலவர் இனமும்நிர்மல
மனமும்உன் தரிசனமுமேயருள் (வேத)

2. பொய்வளர்மெய்க் கும்பமே-உடையமுன
போதிபுண்ணி யாரம்பமே
தெய்வநி ராலம்பமே-என்கவிகளைச்
செவிகொண்டு சிரக்கம்பமே
செய்குவாயுளம் வைகுவாயருள்
பெய்குவாய்விலை எய்குவாயுயர் (வேத)

3. தயைசெய்யிற் பொல்லாங்கா-எந்தனையாளத்
தாமதஞ்செயல் பாங்கா
பயன்உதவிடில் தீங்கா-வேதநாயகன்
பரவுங்குண தராங்கா
நயமும்ஆணவ ஜெயமும்நாளும்அ
பயமும்பாதபங்கயமுமேயருள் (வேத)

---

63. இராகம்—ஆகிரி—ரூபகதாளம்

பல்லவி

நாதனே தயைபுரிவாய்-எனக்குமெய்ப்
போதமா-மழைசொரிவாய்

அநுபல்லவி

தீதகல்பரம்பர திவ்யகுணாடம்பர
ஓதருஞ்சுயம்வர உலகமுடன்அம்பர (நாத)

சரணங்கள்

1. நண்ணிநல்வினைகளைப் பண்ணியறிகிலாத
நான்நரன்போலியா இந்த
மண்ணின்மிசைஎனக்கும் புண்ணியமென்பதற்கும்
மத்தியில்வேலியா எந்தன்
எண்ணமெல்லாங் கறுப்பே
எனக்குன் னடிவெறுப்பே
பண்ணுதே தீமறுப்பே
புரிந்தாள்வ துன்பொறுப்பே (நாத)

2. என்பாட்டில்இரங்காமல் உன்பாட்டில்நீசும்மா
இருந்திடில்அதுதகுமா என்றும்
தன்பாட்டில்மகிழ்ந்தோனே இன்பூட்டிங்கதியுந்தன்
தயையின்றிக்கைபுகுமா என்தன்
அன்பெல்லாம் வெறும்பேச்சே
துன்பம்பிரளயம் நீச்சே
தொல்புவி எங்கும்ஏச்சே (நாத)

3. தினையளவும்நன்னெறி தனையறியாதநான்
தீவினைக்கேஇலக்கா பாரில்
நினையன்றிமற்றெவையும் நினையும்என்னெஞ்சுக்கு
நீமாத்திரம்இலக்கா நன்மை
புனையும்நீதிப்பிரமாண
புவனகோடிநிர்மாண
விநயநித்தியகல்யாண
வேதநாயகன்பிராண (நாத)

---

### 64. இராகம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி

தஞ்சம்நீயே தயைபுரிவாயே-தஞ்சம்

அநுபல்லவி

அஞ்சலென்றேதினம் ஆளும்எந்தாயே (தஞ்)

சரணங்கள்

1. தினமனவேதை சேர்ந்தநான்பேதை
உனதடிப்போதை உறஅருள்பாதை (தஞ்)

2. பாதகபஞ்சன பண்டிதரஞ்சன
போதகாஞ்சன புண்ணியநிரஞ்சன (தஞ்)

3. தருமசிங்காரா சருவசங்காரா
வரும்வேதநாயகன் மனஅலங்காரா (தஞ்)

---

### 65. இராகம்-பரசு-ஆதிதாளம்

பல்லவி

நீயேகதிஎனக்குன் அருள்கூரே
தாயேநினைஅல்லது துணையாரே

அநுபல்லவி

தூயகருணைமழை சொரியாரோ
சொலஅரு-நலமுறு-தலமிசை-நிலவென
மலஅருள்-செலஅருள்-அலரும்உதாரா (நீயே)

சரணங்கள்

1. முத்தியென்பதெவர்க்குஞ் சமுதாயம்
முத்தர்மட்டுக்கும்என்ப தென்னநாயம்
நித்தியனேவிடுவேனே என்தாயம்
நீதியின்படிசெய்குவாய் விதாயம்
சத்தியனேஏதோ உன்அபிப்பிராயம்
தகவென-தகமிசை-மிகமதி-புகஅரும்
இகபர-சுகமருள்-அகல்ஜகநாதா (நீயே)

2. வாழ்மனைதந்திடில் வேண்டாமே
மாநிலத்துண்போ மருப்பவர்தாமே
ஆழவேநீயெனது மனப்பூமேல்-குடி
ஆகிடின்உனக்கென்ன குறைவாமே
சூழநீகுடிபுகில் வினைபோமே
துதிபுரி-விதியினர்-சதியெனும்-நிதிபெற
அதிதயை-பதிவுறும்-அதிசயமோகா (நீயே)

3. சாகனேஎன்துயர் தெரியாயோ-நல்லச்
சர்வாந்தர்யாமியெனும் பெரியாயோ
பாதகம்அறஅருள் புரியாயோ-பரி
பக்குவஞானமழை சொரியாயோ
வேதநாயகன் மனந்தரியாயோ
முழுதுறு-சுடரவன்-உடுபதி-தடவரை
கடவிட-முடன்இடர்-கெடஅடர்-தேவா (நீயே)

## 66. இராகம்-பூபாளம்-ரூபகதாளம்

பல்லவி

தேவாதிதேவே திருவருள்
செய்தென்னை-நீகாவே

அநுபல்லவி

ஜீவசம்ரக்ஷணை செய்யுங்கிருபாநிதியே
தினந்துஷ்டர்கள் இனஞ்சுட்டலர்
முனஞ்சிஷ்டர்கள் இனஞ்சுட்டமர்

சரணங்கள்

1. பாழுமனமேசுத்த பாஷாணம்-பெரும்
பாவமென்றால் அதற்குக்கலியாணம்
வாழும்இந்நாளொழிந்து நிரியாணம்-கிட்டி
வருமுன்னம்அருள் புண்ணியப்பிரமாணம்
ஏழையென்செய்கையுன்னில் எனக்குமேவரும்நாணம்
இழைக்குஞ்சுகம் அழைக்குந்தகை
தழைக்கும்படி பிழைக்கும்படி (தேவா)

2. அருள்செய்யின் அலதுன்னைவிடுவேனோ-உனை
அன்றிமற்றோரைக் கும்பிடுவேனோ
மருவுமயலிற்சிக்கிக் கெடுவேனோ-உன்பால்
வழக்கிட்டிரக்கப்பயப் படுவேனோ
மருள்செய்யும்பொருளை நீ வழங்கினுந்தொடுவேனோ
மனந்தங்கிடும் அனந்தத்துயர்
முனஞ்சிந்திடு கனந்தங்கிட (தேவா)

3. சிஷ்டபாலகங்கண தாரணனே-பெரும்
தீயபசாசகண மாரணனே
துஷ்டகண்டன் மந்திரோச்சாரணனே-நாளுஞ்
சுயம்பிரகாச நிஷ்காரணனே
இஷ்டன்வேதநாயகன் ஏதநிவாரணனே
இணங்கண்டார்கள் கணங்கண்டடி
வணங்கும்படி குணங்கொண்டுயர் (தேவா)

67. இராகம்-நீலாம்புரி-ஆதிதாளம்

பல்லவி

ஏகாதிபரனே-அருள்புரி-யோகாதிகரனே

அநுபல்லவி

ஆகாமியமுறும் மாகாமியம்அறும்
அகணிதசிற்பர அதிகுணதற்பர
இகபரநற்பத இணையறுஅற்புத (ஏகாதி)

சரணங்கள்

1. பழிக்குநான்குருபீடம் பத்தனைப்போல்நான்
பரிப்பது வெளிவேடம்
அழிக்கும்பொய்வாய்பாடம் கொடுமாயைக்கென்
அகமே நடனகூடம்
செழிக்கும்வரங்கள் ஈவாய்
சிந்தையிற்குடி யாவாய்
தினகரசுந்தர திருவளர்மந்தர
அனகநிரந்தர அகிலதுரந்தர (ஏகாதி)

2. படியாக்கொடுநெஞ்சமா ஐயனேஅது
படருந்துற்குண விஞ்சமா
அடிமேன்துயர்கொஞ்சமா வரப்பிரசாதம்
அருள்உனக்குப் பஞ்சமா
படியெல்லாம் ஈன்றதாயே
பாரில்நற்சதி நீயே
பரமபவித்திர பதிதஉபத்திர
தருமசமுத்திர சகலவிசித்திர (ஏகாதி)

3. சுரசேவிதபாதா மலரகித
சுஜநவற்சகலதாதா
மனவாலயகியாதா
நரபரிபாலன நயகுணலாலன்
நாகரிகத்துவ நாமமகத்துவ
போகபிரபுத்துவ புண்ணியதத்துவ (ஏகாதி)

## 68. இராகம்-தன்யாசி-ரூபகதாளம்

பல்லவி

நிச்சயம்இதுதானே மதி நீயருள்கோனே

அநுபல்லவி

நச்சுமரம்போல் நாளும்வளர்ந்தேன்
இச்சகந்தனில் இதயந்தளர்ந்தேன் (நிச்சயம்)

சரணங்கள்

1. அல்லும்பகலும் பொருளில்லூக்கம்
அநித்தியசுகங்களே என்னேக்கம்
நல்லவர்சபை எனக்குநீக்கம்
ஞானவழியில் நாளுந்தூக்கம் (நிச்ச)

2. துஷ்டர்களிட அன்யோன்யம்
துர்க்குணமெல்லாம் சர்வமான்மியம்
இஷ்டம்வைப்பது வேதனதான்யம்
ஈசனேஎனக் கறிவுசூன்னியம் (நிச்ச)

3. நீதுறும்எனக் குனதுவேதம்
செவிடன்காதிற் குனதுநாதம்
வேதநாயகனே என்பாதம்
விரும்பிவாழ்த லேபிரமாதம் (நிச்ச)

---

## 69. இராகம்-அடாணா-ஆதிதாளம்

பல்லவி

கருணாசாகரா கனஉபகாரா
காத்தருள்வாய்கோவே

அநுபல்லவி

அருணோதயமென அடியார்க்குக்காட்டும்
ஆத்மகோடிகள் உஜ்ஜீவனஅமுதூட்டும்

சரணங்கள்

1. நிச்சயஞானமே நினதுஸ்வாதீனம்
நீ தாராவிடில்எனக் கேதுமெய்ஞ்ஞானம்
அச்சமில்லாமலே அபயப்பிரதானம்
அருள்செய்யேனடியேனுக் கில்லைசமானம்(கருணா

2. சிஷ்டன்போல்யாவர்க்குந் திவ்யப்பிரசங்கம்
செய்வதிலேஎனைப் போலெவர்சிங்கம்
சட்டமாய்நடப்பதே சர்வவில்லங்கம்
சாமிநீ அறியாயோ தமயன் அந்தரங்கம்(கருணை)

3. எத்தனையோசெய்தேன் உனக்கபராதம்
இதுநிமித்தம்உனக் கென்மேல்விரோதம்
அத்தனேபிழைபொருத் தாள்வதேநீதம்
அருள்புரியஇனி வேண்டாம்விவகாரம்(கருணை)

4. தலைவன்இல்லாவிடில் தழைக்குமோராஜ்யம்
தரையிலேநீயல்லால் சகலமும்பூஜ்யம்
விலகிடாதருள்உயிர் விமலசாம்பிராஜ்யம்
வேதநாயகாஇன்னந் தாமென்னவியாஜ்யம்(கருணை)

---

## 70. இராகம்-தோடி-ஏகதாளம்

பல்லவி

தயைபுரிய-இன்னந்தாமசமோ

அநுபல்லவி

பயநிவாரண பாக்கியபூரண
உயரும்ஆரண உலககாரண (தயை)

சரணங்கள்

1. அத்தனேஒருசா ணுகியகுக்ஷிக்
காகநான்ஊரெல்லாம் அலைந்திடும்பக்ஷி
நித்தமும்பேசுவேன் ஆயிரங்கக்ஷி
நீதிநெறியில்லா னிரக்ஷரகுக்ஷி (தயை)

2. தத்துவஞானத்தைத் தள்ளியேபோட்டேன்
சாமிநான் இந்திரிய வாசலைப்பூட்டேன்
உத்தமம்எனக்கருள் பலதரங்கேட்டேன்
உதவிசெய்யாவிடில் உனைவிடமாட்டேன் (தயை)

3. சர்வவிநோத விசித்திரநிர்மாண
சாசுவதமங்கள சத்தகல்யாண
பரமநித்தியாநந்த பாக்கியஉக்கிராண
பாலவேதநாயக பிரமாண (தயை)

## 71. இராகம்-முகாரி-ரூபகதாளம்

பல்லவி

காத்தருள்வாய்-எனைக்-காத்தருள்வாய்

அநுபல்லவி

சாஸ்திரவேதம் ஸ்தோத்திரமேசெய்யப்
பாத்திரனேதயை நேத்திரனேதினம் (காத்தருள்)

சரணங்கள்

1. ஆனாலும்என்பாபம் அநியாயம்அநியாயம்
ஞானியைப்போல்நான்காட்டும் நடையேமுழுமாயம்
ஈனமுறுந்தமகுணங்கள் என்தனக்கேகந்தாயம்
தீனனென்மேல்நீகோபஞ் செய்யிலென்ன ஆதாயம் (காத்)

2. மாதாநீஉன்மகனுன் மன்னவநீகுடிநானே
தாதாநீயாசகநான் ஸ்வாமிநீ அடியேனே
சாதகஞ்செய்தற்குநீ தமியேன்சீஷன்தானே
ஆதாரமாகஉனை அடுத்துவந்தேன்சுரர்கோனே (காத்)

3. வாக்குமனம்எட்டாத வாசமகோசனே
பாக்கியபலதான பரிபாலபரமேசுரனே
தேக்குமலவிருள்நாசஞ் செயும்உதயபாஸ்கரனே
ஆக்கும்வேதநாயகனுக் கனுக்கிரகதயாபரனே (காத்)

---

## 72. இராகம்-தோடி-ரூபகதாளம்

பல்லவி

வாவாஜகநாதா-ஆவாஜகநாதா

அநுபல்லவி

பாவங்களை நிர்மூலமாகப்
பரமாத்தர்கள் கொடுத்துக்காக்க (வாவா)

சரணங்கள்

1. தர்மாதர்மந் தெரியேன் ஜெப
தபசாதிகள் புரியேன்
கர்மம்அனு சரியேன் உனைக்
கண்டால்இனிப் பிரியேன் (வாவா)

2. எனைநீ விடலாமா பல
இடர்நான் படலாமா
வினையே தொடலாமா ஏழை
வீணே கெடலாமா (வாவா)

3. வர்மஞ்செய்தல் முறையா என்தன்
வாழ்நாள்வளர் பிறையா
தர்மந்தவறிற் குறையா இன்னஞ்
சலஞ்சாதித்தல் பொறையா (வாவா)

4. ஆலோலித முகனே நித்ய
அமலானந்த சுகனே
மேலோர்கள் சமுகனே தயை
மிகும்வேத நாயகனே (வாவா)

---

73. இராகம்-சஹானா-ஆதிதாளம்

பல்லவி

கருணை நீசெய்யவேண்டுமே-சுவாமி

அநுபல்லவி

சரணகதியென உனையடைந்தேனே
சாதம்வேண்டியே உனைத்தொடர்ந்தேனே (கருணை)

சரணங்கள்

1. மாயவாழ்வெனும்பெரு வாரிதிச்சுழலே
மாட்டியேஅலைபடும் நானொருவிழலே
காயமாயேசிறு காற்றசைகுழலே
கழியும்போதுநற் கதிமலர்கழலே (கருணை)

2. சலத்தையல்லாது தாமரைக்குண்டோநிலையே
தரையில்ஊன்றுப்பயிர் எடுக்குமோதலையே
நிலத்திலேநீயலால் நிலையெனக்கிலையே
நீமுகம்பார்த்தருள் நிரஞ்சனமலையே (கருணை)

3. சந்திரசூரியர்உள்ள மட்டும்வாழ்நாளா
சாயையேஜெயித்திட என்னகயில்வாளா
தந்தையேயுனதுசோ தனைக்குநான் ஆளா
சர்வசாதக பரமதயாளா (கருணை)

4. அகணிதகுண அகிலாண்டவிலாசா
அபரிமிதானந்த கரபரமேசா
விகசகிருபாகர விமலப்பிரகாசா
வேதநாயகன் இதயநிவேசா (கருணை)

---

## 74. இராகம்-ஈசமனோகரி-ரூபகதாளம்

பல்லவி

அபயம்நீயருளுவாய்-ஆதியே- அநுதினம்

அநுபல்லவி

உபயபாதம் நம்பினேன் ஓ அனாதியே-அநுதினம் (அபய)

சரணங்கள்

1. அலைகடற்சிறுதுரும்புபோல அலைந்துவாடினேன்
உலைமெழுகெனஉள்ளமுருகி உன்னைநாடினேன் தினமும் (அ)

2. நீர்க்குமிழியைநிகரும் வாழ்வைநிலையென்றெண்ணினேன்
மூர்க்கமாகக்கொடிய பாவமுழுதும் பண்ணினேன் தினமும் (அ)

3. பாசக்கயிற்றிற்பஞ்சுபோல பறந்துதயங்கினேன்
ஆசைக்கடலில்மூழ்கிமூழ்கி அறிவும்மயங்கினேன் தினமும் (அ)

4. ஆண்டவநீ அடிமைநான் எனை ஆளவொண்ணாதோ
நீண்டவுலகம்ஏழையென்றெனைநிந்தப்பண்ணாதோ தினமும் (அ)

5. புவனரக்ஷகார னார்த்தபுருஷவேஷனே
பவவிமோசனவேதநாயகபலவிசேஷனே தினமும் (அ)

---

## 75. இராகம்-பியாகடை-ஆதிதாளம்

பல்லவி

ஏதோசோதனை-இன்னம் ஏன்சாதனை
ஏகாதிபதியோநிதியே-எளியன்மேல்

அநுபல்லவி

போதோயசுர பூஜிதபாதா
பூதமேற் காரணசுகநாதா

சரணங்கள்

1. தந்தைதாயொடு பலதனையரையெடுத்தாய்
தாரங்கள்மூவர்க்குச் சாசுவதம்கொடுத்தாய்
சொந்தமாகியஉடற் சுகத்தினைக்கெடுத்தாய்
ஸ்வாமிநீயிந்த வாறுகைவிடுத்தாய்(ஏதோ)

2. ஒருகையால்அடிப்பாய் ஒருகையாற்பிடிப்பாய்
உதவியில்லாமலே உன்னெண்ணமுடிப்பாய்
பெருமலைகளையுமே பிடுங்கிப்பந்தடிப்பாய்
பிரம்மாண்டங்களைப் பிளந்திட இடிப்பாய்(ஏதோ)

3. துன்பஞ்செய்வதுபோல் சுகங்களைக்கொடுப்பாய்
துஷ்டர்கள்மீதில் எப்போதுங்கையெடுப்பாய்
அன்புள்ளதாயைப்போல் அடியரை அடுப்பாய்
இவர்களைத்துயரணுகாமலே தடுப்பாய்(ஏதோ)

4. அதுலஅக்ஷயகுளி பரநரவேஷா
அமிர்தவருஷ துல்லியமிருதுபாஷா
விதுரநிர்தோஷ நிர்விகற்பவிசேஷா
வேதநாயகவந் திதகுணபூஷா(ஏதோ)

---

76. இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

ஏதுபராமுகம்-ஏழையென்மீது
ஏகனே-யோகனே-மாகனே-தியாகனே

அநுபல்லவி

வேதபோதக-அநாதரக்ஷணனே
மேகவாகன-தெய்வீகலக்ஷணனே

சரணங்கள்

1. அநித்தியசுகந்தந்தாய் அதைநான்கேட்டேனோ
ஆனந்தரித்தல் அநுபவிக்கமாட்டேனோ
இனித்தஉன்பாதத்தில் இதயம்நாட்டேனோ
ஈனமாரம்பையை எதிர்த்துவாட்டேனோ(ஏது)

2. ஐயனேஎன்னைக் கேளாமல்முன்னீயே
அரியமானிட ஜன்மந்தந்தாயே
வையகமீதுநான் உனக்கொருசேயே
மதியருள்வாய்பெற்று வளர்ந்திடுந்தாயே (ஏது)

3. முந்திநீபலருக்குக் காட்டினுயுனையே
முக்தர்க்குக்கொடுத்தனை மோக்ஷமாமனையே
பந்தியிலாகுமோ ஓரவஞ்சனையே
பக்ஷமாயெனக்கருள் பரசுகந்தனையே (ஏது)

4. அகடநாடகன்சா மர்த்தியப்பிரதாபா
அச்சுகஜநவாற் சல்லியநிஷ்கோபா
சகலசுலக்ஷண தத்துவசொரூபா
தாசன்வேதநாய கன்மனோதீபா (ஏது)

---

## 77. இராகம்-கமாஸ்-ஆதிதாளம்

பல்லவி

ஆரணமயநயபூரணனே
உனதமலஅடிசரணம்

அநுபல்லவி

பாரகோரபரி காரகுணகர
வீரதீரஉப காரமனோகர (ஆரண)

சரணங்கள்

1. உனைநிதம்நினைவுறும்எனை அடர்வினைஅகலாதா-நாதா
உலககலசமயல்விலகஇலகருணை நீதா
கனஉலகஜநக அநகநிகரமெய்
காவலா-அடியர்-ஆவலாயருள்செய் (ஆரண)

2. துரிதரஹிதகுண சரிதசுகிர்தபுரமேசா-நேசா
சுஜனபஜனமிர்து வசனரசனஇதிகாசா
சரதவரதஅனவரதவிரததர
சாபமோசனபிர-தாபவிலாசன (ஆரண)

3. கனககனபுவன பவனகவனபரிபாலா-மூலா
கரணசரணகுண கிரணபரண அநுகூலா
விநயநிலயஸ்வயவிஜயமயஅபய
வேதநாயகன்மனோதயஅதிசய (ஆரண)

78. இராகம்-ரீதிகௌளை-ரூபகதாளம்

பல்லவி

சரணஞ்சர்வேசா-எனைரக்ஷிக்கத்
தருணமிதுபிரகாசா

அநுபல்லவி

கருணாலயபரகாயப்பிரவேசா
பரமசுகோதயபவ விநாசா (சரணஞ்)

சரணங்கள்

1. நீயேகுருமூர்த்தி உனக்குச்சிறு
நாயேன் விர்த்தியாத்தி
தூயஉபதேசஞ் சொலிலிஷ்டபூர்த்தி
ஈயிற்குருசிஷர் இருவர்க்குங்கீர்த்தி (சரண)

2. நீதான்பரஞ்சோதி எனஉலகின்
மீதேபெருங்கியாதி
வேதாமலவிருள் விலங்குதல்நீதி
ஆதாரமாகஎன் னருளைப்பிரசாதி (சரண)

3. ஆதிகாரண நாதாபரமஞான
சோதிமய அபேதா
பார்க்கமோசன பாக்கியப்பிரசாதா
நீதமேவதநாயக நித்தியசங்கீத (சரண)

---

79. இராகம்-லலிதா-ரூபகதாளம்

பல்லவி

இன்னந்தாமசம்ஏது-ஜகநாதா

அநுபல்லவி

நன்னயமதாக-உனை-நம்பினவனுன் அலவோ (இன்னந்)

சரணங்கள்

1. சீலம்அருளிற் செலவோ
சேயுனக்குநான் அலவோ
மேலுமென்னதான் சொலவோ
வேலையுனக்குப் பலவோ (இன்னந்)

2. சாதுஜன ரக்ஷணனே
தாசர்கள்பிர தக்ஷணனே
நீதாமிர்த பக்ஷணனே
கீர்த்திகொள் சுலக்ஷணனே (இன்னங்)

3. ஈசனேநான் உன்னடிமை
எப்பொருளும் உன்னுடைய
நேசமுடன் என்மடைமை
நீக்கிடுவ துன்கடமை (இன்னங்)

4. சாதக குணபரண
சர்வபுவ நாதரண
வேதநாயகன் ஸ்மரண
வேகதுரி தஹரண (இன்னங்)

80. இராகம்-கெங்காதரங்கணி-ஆதிதாளம்

பல்லவி

உனைநானே தொழவரம் அருள்கோனே
விநயசுஜன சேவிதபெருமானே

அநுபல்லவி

வேதமுடிவில் நடம்புரிவோனே (உனை)

சரணங்கள்

1. சிந்தைமீதுனது பர்தமேதியானம்
செய்யநீயருள்வாய் திவ்யஞானம்
தந்தைநீயறியுமே சமஸ்தானம்
தநயன்மீதில்லையே அபிமானம் (உனை)

2. ஈசனேஎனது வார்த்தைகள்பொய்யே
இந்தவார்த்தையொன்று மாத்திரமெய்யே
பாசமூடுமனம் வெயிலுறுநெய்யே
பாவம்நீங்கும்படி தயைசெய்யே (உனை)

3. அட்டுமலசலாதிகள் நிறையேழை
ஆனமாயஉடலாகியபாழை
திடமென்றெண்ணிநிறைப்பேன் அதிற்கூழை
சினஞ்செய்யாதேநான் மிகஏழை (உனை)

4. சகலலோகம் அடங்காதுயர்காத்ரா
சமமிலாக்கபட நாடகசூத்ரா
சுகப்பிரதாயக கிருபாகரநேத்ரா
துதிவேதநாயகன் மனக்ஷேத்ரா (உனை)

## 81. இராகம்-பூரிகல்யாணி-ரூபகதாளம்

பல்லவி

கருணாகரமூர்த்தி-காப்பதுவேகீர்த்தி

அநுபல்லவி

அருணோதயமாசரீர
அற்புதநவராவதார

சரணங்கள்

1. தேகம்வளர்ப்பதே ஏன்விர்த்தி
தினந்துர்க்குணமே பிரவர்த்தி
ஏகமான சக்கரவர்த்தி
எனக்குநீஅருள் பாபநிவர்த்தி (கரு)

2. அற்பமானமோக போக்கியம்
அழிந்துபோம் இதுவேதவாக்கியம்
தற்பராநினைக்காணில் பாக்கியம்
தந்திடில்அதுசர்வ சிலாக்கியம் (கரு)

3. பாதகந்தனைச்சர்வ நாசம்
பண்ணுவதில்உண்டோ பிரயாசம்
வேதநாயகா நின்னேசம்
விளங்கிடஅருள்வாய் பிரகாசம் (கரு)

## 82. இராகம்-பரசு-திரிபுடைதாளம்

பல்லவி

சித்தம்எப்படியோ ஐயாநின் சித்தம்எப்படியோ

அநுபல்லவி

உத்தமனேஎன்னை உயர்த்திடுவாயோ
கர்த்தனேநீயென்னைக் கைவிடுவாயோ (சித்)

1. அருள்புரிவாயே அருந்தனப்
பொருள்சொரிவாயே
தருமவானும்படி தான்தெரிவாயோ
இருள்மூடும்பாவியென் றெனைப்பிரிவாயோ (சித்)

2. பாதஞ்சேர்ப்பாயோ என் தன்மனக்
கேதந்தீர்ப்பாயோ
ஆதன்செய்வினை அடியோடேபேர்ப்பாயோ
ஏதுங்கதியில்லானென் றிரங்கிப்பார்ப்பாயோ (சித்)

3. வாடிநொந்தேனே மெய்ஞ்ஞானக்கண்
மூடிநைந்தேனே
நாடியாள்வாயென்று நம்பிவந்தேனே
பாடும்வேதநாயகன் பருகுஞ்செந்தேனே (சித்)

---

## 83. இராகம்-சஹானா—அடதாளசாப்பு

### பல்லவி

எப்படியும்பரமே நலம்பெற
ஈந்தருள்வாய்வரமே

### அநுபல்லவி

செப்பருமாணிக்கதீபசொரூபனே
தேவமனமேநொந்தேன்-சாலவேயெனவேவருந்தேன் (எப்)

### சரணங்கள்

1. கேவலம்வாடினேன்கேள்வி முறையில்லையோ-என்தன்
சீவன்பிழைக்கச்செய்ய வல்லனீயல்லையோ
பாவனுனைஎனைப் பண்ணுதல்பாரமோ
பாகேகனியேசத்தே ஓகோதனியேவித்தே (எப்)

2. அற்பன் ஆனாலும் அன்னைக்குப்பிள்ளையல்லவோ
பற்பலவாய்படித்து படித்துச்சொல்லவோ
கற்பகோடிகாலங் கண்டுமுடிவில்லாக்
கண்ணேமணியேபொன்னேவிண்ணே அணியேசொன்னேன்

3. இன்பதுன்பங்கள் இரண்டிற்சமித்தமே-தந்து
நின்பதசேவைநிலைக்கச் செய்வாய்நித்தமே
அன்பன்வேதநாயகன் அகத்தேயணி
ஆணிப்பொருளேமுத்தே காணப்பெறுவோர்சொத்தே (எப்)

---

84. இராகம்-கல்யாணி—அடதாளசாப்பு

பல்லவி

உன்னையெனக்குக் காட்டையாகாட்டாமல்சும்மா
ஒளித்தென்னவிளையாட்டையா

அநுபல்லவி

தன்னைப்பாராமலே தன்பிள்ளைகண்மூடி
தனபஊட்டுந்தாயுண்டோ சாமிநீதயைகூடி (உன்)

சரணங்கள்

1. கறவைதனைப்பிரிந்த கன்றுகதறல்போலும்
கணவன்தனைப்பிரிந்து கலங்கும்உத்தமிபோலும்
இறகுகள்பறிகொடுத் தேங்கும்பறவைபோலும்
இருகண்ணுந்தெரியாத ஈனக்குருடர்போலும்
ஏங்கினேன்சுகம்-நீங்கினேன்துயர்
தாங்கினேன்மனம்-வீங்கினேன்-நீ (உன்)

2. நினைக்கநினைக்கவென்ற னெஞ்சமெல்லாம்ருசிக்கும்
நின்னைப்புகழும்வாயே நித்தியாமிர்தம்புசிக்கும்
கலக்கும்நின்னடிகாணக் கண்கள்தினம்பசிக்கும்
கர்த்தனேஉனைக்கண்டாற் கவலையெல்லாம்நசிக்கும்
கனத்திலேனுங்க-சனத்திலேனுமென்
மனத்திலேனும்சொப் பனத்திலேனும்-நீ (உன்)

3. விண்ணேநினையல்லாமல் வேறொன்றைத்தொடுவேனே
மேதினியெங்குந்தேடி வேதனைபடுவேனே
கண்ணேமணியேநினைக் கண்டால்நான்விடுவேனே
கட்டிக்கொண்டாநந்தங் கலக்கப்பின்னிடுவேனே
கருத்தில்மூடுவன்-வருத்தம்போடுவன்
திருத்தமாடுவன்-விருத்தம்பாடுவன் (உன்னை)

4. தேவனே உனைக்கண்டால்    திட்டிதோஷங்கெடுமோ
திவ்யதேஜோமயம்    என் தேகந்தனைக்கூடுமோ
கூவுங்கோழிமிதித்தாற்    குஞ்சுமுடம்படுமோ
கொல்லுஞ்சிங்கமானாலும்    குட்டிகள் அஞ்சிடுமோ
கோலனே அநு-கூலனே பரி
பாலனே கன-மூலனே நீ    (உன்)

5. ஆணல்லபெண்ணல்ல    ஐம்பூதஞ்சுடரல்ல
அரியயன்சிவனல்ல    அதுவல்ல இதுவல்ல
காணருமுன் திவ்ய    காந்திவிரியும்நல்ல
கனலடிவினைக்காணக்    காதல்கொண்டேனல்ல
காரணசுக-பூரணகுண
தாரணகன-ஆரண நீ    (உன்)

6. தேனே கனியே தெவிட    டாததெள்ளமிர்தமே
சீனியே கரும்பே    தித்திக்கும் இரதமே
வானே புவியே சுக    வாழ்வே பெரும்பதமே
மதிக்கும் வேதநாயகன்    மகிழுமனோரதமே
வாடினேன் கவி-பாடினேன் உனை
நாடினேன் தினந்—தேடினேன் நீ    (உன்)

---

## 85. இராகம்—பங்களா-ஆதிதாளம்

### பல்லவி

சஞ்சலமாய்நெஞ்சமிக உடைந்தேனே—இனித்
தஞ்சமெனஉன்சரணம் அடைந்தேனே—ஸ்வாமி

### அநுபல்லவி

வஞ்சப்பிர பஞ்சமெனும்
நஞ்சநதிமூழ்கியே    (சஞ்)

### சரணங்கள்

1. இட்டவினைபட்டயரும்    மான்போலே    வெயில்
சுட்டசலம்விட்டகலும்    மீன்போலே    ஸ்வாமி (சஞ்)

2. பொய்புலைமெய்யெனவே    தடுமாறி
ஐயகோகோமையலெனுங்    கடுமீறி    ஸ்வாமி (சஞ்)

3. கொட்டுமத்திற்பட்டுடையுந் தயிர்போலே சலத்
தட்டுவரக்கெட்டு வாடும்பயிர்போலே ஸ்வாமி(சஞ்)

4. பாய்புலியின்பாயில் உறுபசும்போலே பெற்ற
தாய்காம்விட்டே அலறுஞ்சிசுபோலே ஸ்வாமி(சஞ்)

5. ஈயவேககாயமொன்றுங் கிடையாதோ நல்ல
தூயமனம்நீயருளத் தடையேதோ ஸ்வாமி(சஞ்)

6. மாயமலநோயகனும் விசுவேசா வேத
நாயகனன்னேயமனக் குகைவாசா ஸ்வாமி(சஞ்)

---

86. இராகம்—சுத்தசாவேரி-ரூபகதாளம்

பல்லவி

தருணந்தருணந் தயைசெய்வாயையா-ஓ
தேவதேவா

அநுபல்லவி

ஒருவனே ஜன்மலய அபாவா
ஓ-ஓ-மகானுபாவா (தருணம்)

சரணங்கள்

1. சித்தஞ்சேற்றின் நட்டகம்பம்
ஜெகத்தில்இதற்குத் தினமும்கம்பம்
நித்தங்கவலை நிறைந்தகும்பம்
நீயேஇனியெனக் கவலம்பம்(தரு)

2. சோதனைக்குநான் பாத்திரவானே
துன்பமூட்டை சுமக்கநானே
சாதகஞ்செய்யிற் பழுதுநானே
தள்ளினாலும்நான் போவேனே(தரு)

3. வயிறுவளர்ப்பதே என்வேலை
மற்றநேரம் விஷயலீலை
உயிருக்குயிரே ஞானப்பாலை
ஊட்டிவாய்தொழுதேன் உன்காலை(தரு)

4. சப்தஸ்பரிச ரசசுகந்தா
தர்மரூபபிர மாநந்தா
வித்தகசுஜ நானுபந்தா
வேதநாயகம் பிரபந்தா(தரு)

87. இராகம்-தேவமனோஹரி-ஏகதாளம்

பல்லவி

இன்னமும்தாமதமேன்-என்ஸ்வாமி

அநுபல்லவி

உன்னதமாகிய துரியாதீதா
உலகாதிசர்வகாரணபூதா (இன்ன)

சரணங்கள்

1. மழைமுகங்காணாப் பயிர்போல்வாடி
மாதைதனைவிட்ட சேய்போலாடி
தழையுமுன்குணசரித் திரந்தனைப்பாடி
சாமிநானுனை யடைந்தேன்கதிதேடி (இன்)

2. பத்தனைப்போலநான் பாடுவேன்வெளிச்சம்
பாவத்தின்கடனுக்கு நாணொருமச்சம்
அத்தனேமுனியாதே கொண்டேன் அச்சம்
அருவினைபோக்கி நீயருள்வாய்ஸ்வச்சம் (இன்)

3. அரசேநீயெனைக் கைவிடலாமா
அருளேசெயில்உன்கைப் பொருளேபோமா
இருவரமசயா விடில்வினைசாமா
தேவமனோகர திவ்யசோமா (இன்)

4. அவைவரசகிர்த ஆத்மசொரூபா
அனந்தகல்யாணகுண அனகப்பிரதாபா
தினகரதினகர ஞகியதீயா
சிறியன்வேதநாயகன் இதயசல்லாபா (இன்)

---

88. இராகம்-சாமா-ஆதிதாளம்

பல்லவி

உன்னைத்தவிரவேறெனைத்தாங்கிடப்
பின்னைத்துணையிலைமன்னர்க்கரசே

அநுபல்லவி

அன்னைக்கிணையாகியகனபிரபுவே
உன்னற்கரிதாகியமாவிபுவே (உன்னை)

சரணங்கள்

1. நீமுகம்பார்த்திடில் அணுவும்பர்வதமே
நீமுனிந்தால் பெருமலைகளும்அதமே
தாமதம்நீசெயிற் பிழைப்பதெவ்விதமே
தயைநீபுரிய இச்சமயம்உசிதமே (உன்)

2. நீரை அடுத்தவர்க்களோ ஜலகஷ்டம்
நின்னையடுத்தவர்க் குண்டோநஷ்டம்
ஆரையடுக்கினும் உண்டோ அதிஷ்டம்
ஐயாநினக்கன்பனாக என்னிஷ்டம் (உன்)

3. ஊரார்மெச்சிடப் பாடுவேன்பாட்டு
உன்புகழ்பாடவென்றால் வாய்ப்பூட்டு
சீராகியபெரியோர் சபைநீட்டு
தீயோருடன் எனக்கனுதினங்கூட்டு (உன்)

4. ஆதிமத்தியானந்த அபாவப்பிரகாரா
அண்டசராசர அகிலாதாரா
பூதநிர்மாண நிர்வாகசங்காரா
போதவேதநாயக புண்யசரீரா (உன்)

---

89. இராகம்-சுத்தசாவேரி-ஆதிதாளம்

பல்லவி

நானேஉனைநம்பினேன்-நலம்
தானேயருள்கனவானே

அநுபல்லவி

வானேஎனச்சுகத்தேனேபொழிந்திடும்
மன்னுபிர-சன்னுதினம்-என்னுவுறும்-முன்னுதினம் (நா)

சரணங்கள்

1. காயம்பலதுவாரக் கந்தல்அதைக்
காக்கநான்போடுவேன் வாய்ப்பந்தல்
மாயவலையிற்பட்டு மதியும்விதியும்கெட்டு
மண்டுவினை-கொண்டுமிக-அண்டுதுய-ருண்டுதினம் (நா)

2. அருணகோடிப் பிரகாசகாத்திரா-அது
அற்புதவேதாகம சாஸ்திரா
கருணாநந்தநேத்திரா கனபக்தஜனனஸ்தோத்திரா
காப்பாய்-முகம்பார்ப்பாய்-வினை தீர்ப்பாய் அடிசேர்ப்பாய்நிதம்

3. விபுதகணவந்திதச் சரணா நாளும்
வேதநாயகன் அந்தக்கரணா
சுபமங்களதாரணா சுஜநகுலாதாரணா
தூயாகன-நேயாபுவித்-தாயாண-சகாயாநிதம் (நா)

---

### 90. இராகம்-சஹானா-ஆதிதாளம்

பல்லவி

இந்தவேளை-வந்துன்-அருள்-தந்தருள்வாய்

அநுபல்லவி

வந்தனை நிரந்தரம் புரிந்தேன் ஐயனே (இந்)

சரணங்கள்

1. அன்னைபிதாஉன்னையன்றிப் பின்னையாரையா
என்னைநிதந்தின்னும்வினை தன்னைத்தீரையா
பின்னுகின்றபொன்னுலகந் தனில்வாழ்மெய்யா (இந்)

2. பூதலத்தில்ஆதரவுன்பாத இணையே
பேதகமாயேதுனக்கிங்கோத இணையே
நீதகலுஞ்சாதகர்க்கபேத துணையே (இந்)

3. தீயநெஞ்சில்தூயஅறந்தோய இலையே
மாயையெனும்பேய்செய் அநியாயமலையே
நேயன்வேதநாயகனுக்காக நிலையே (இந்)

---

### 91. இராகம்-சாமந்தா-ஆதிதாளம்

பல்லவி

மெய்ஞ்ஞானங்கொடுப்பாய்-ஸ்வாமி
அஞ்ஞானந்தடுப்பாய்-ஸ்வாமி

அநுபல்லவி

பொய்ஞ்ஞானியர் அல்லார்மேற்கருணை
பூண்டவனே என் ஆண்டவனேநீ (மெய்)

சரணங்கள்

1. ஆஸ்திகள் பாஸ்திகள் யாவையும் வேண்டேன்
அநித்தியப்பொருள் நீ அருளினுந் தீண்டேன்
சாஸ்திரஞ்சொல்லும் வழி இனித் தாண்டேன்
தருவென நீண்டேன் திருவடி பூண்டேன் (மெ)

2. ஆகமே கட்டுக் கடங்காக் காளை
ஐயோ வினை அழித்தது நாளை
இகமே யநம்பினேன் மலர்த்தாளை
என்ன வேநாளை இதுநல்லவேளை (மெ)

3. அந்நியர்க்குரைப்பேனுன் உபதேசம்
அடியேன் செய்கைகளோ ஆபாசம்
என்ன சொல்வேன் என் இதயப்பசாசம்
இதற்குன் மேல் நேசம் இல்லைலவலேசம் (மெ)

4. அத்தனே எளியர்க் கன்னமும் ஊட்டேன்
அறுத்தகைக்குச் சுண்ணாம்புமே நீட்டேன்
உத்தமமார்க்கத்தில் உள்ளத்தை நாட்டேன்
உனை வரங்கேட்டேன் இனிவிடமாட்டேன் (மெ)

5. அவன் அவள் அதுவென அடங்காமூலா
அகண்டாதீத. அபேதவிசாலா
சிவமுறுதேவநாயகன் அநுகூலா
ஜெகபரிபாலா சுகமுறுசீலா (மெ)

---

92. இராகம்-பரசு-ஆதிதாளம்

பல்லவி

தேவாதிதேவபல-ஜீவாதிகாரணு-உன்
சேவடியை-நம்பினேனே-ஓ

அநுபல்லவி

நாவாரநானேபல தேவாரம்பாடவே
நாதா-வரம்-நீதா-கன (தேவா)

சரணங்கள்

1. அகஇருள்மூடினேன் மிகமிகவாடினேன்
அஞ்சாதேயென்றுசொல்லி ஆளொண்ணுதோ
இகபரம்காடினேன் சுகநிலைதேடினேன்
என்மேல்இரக்கம் உனக்கேநண்ணுதோ
பகவானேநீயெனது முகம்நோக்கியே தயை
பண்ணியருள் புண்ணியர்தொழும் (தேவாதி)

2. அன்னையும்பிதாவும்நீ ஆவியும்வுடலும்நீ
ஆசாரியன்கடவுள் யாவும்நீயே
முன்னும்நீபின்னும்நீ முத்திநீசித்திநீ
மூலாதிகாரணமும் மூர்த்திநீயே
நின்னைசவாரியில் நான்என்னேரமும்படிய
நித்தியம்பல சித்தியருள் (தேவாதி)

3. ஏழைநான்அல்லவோ என்னதான்சொல்லவோ
ஈசாஎன்மீது தயைஎண்ணுவாயே
பாழுடலைநம்பினேன் தாழுமனம்வெம்பினேன்
பாசாந்தகாரம் அறப்பண்ணுவாயே
சூழும்அடியார்கள்மனம் வாழும்வேதநாயகா
சத்துமுறுசித்தம் அருள் (தேவாதி)

---

93. இராகம்-பலஹம்சா-ஆதிதாளம்

பல்லவி

ஞானமார்க்கம் நானேசேர
நல்வரம் அருளையனே

அநுபல்லவி

ஈனஅசேதன இருள்வழிநீங்கத்
தானமுமோனமுந் தர்மமும்ஓங்க (ஞான)

சரணங்கள்

1. நீசனானாலும்உன்தாச னன்அலவோ
நின்னை அல்லால்தெய்வம் இன்னமும் பலவோ
ஈசனே என்குறை எவரிடஞ் சொலவோ
என்மொழிகாட்டிலே எரித்திடு நிலவோ (ஞான)

2. கர்த்தனே ஒழியாக் கவலைப்பிரபஞ்சம்
கண்ணியிற்பறவைபோற் கலங்கினேன்நெஞ்சம்
உத்தமகுணந்தர உனக்குண்டோபஞ்சம்
உன்னையல்லால் இனி வேறில்லை தஞ்சம் (ஞான)

3. அமரநரர்சோபன அமிர்தபக்ஷணனே
அனந்தபேதக ஜீவாத்மரக்ஷணனே
சமரஞானசற் குணசுலக்ஷணனே
தாசன்வேதநாயகன் பிரதக்ஷணனே (ஞான)

---

94. இராகம்-சஹானா-ரூபகதாளம்

பல்லவி

உதவிசெய்யலாகாதா-ஓ-ஜகநாதா

அநுபல்லவி

நிதநிதம் உன்நிணையடிகளை
நெஞ்சில்நினைத்திட வரம்நீ (உதவி).

சரணங்கள்

1. அடியேன்துயர் படவேதகுமா
சுடர்முன்இருள் தானேபுகுமா
கொடிதாகிய வினையால்நிலை
குலைந்தேன்-மனம்-மலைந்தேன் (உதவி)

2. மனைவாழ்வுறு துயர்தான்மலையே
உனையல்லது கதிவேறிலையே
அனையேகொடு வினையால்மனம்
அயர்ந்தேன்-தினம்-பயந்தேன் (உதவி)

3. சுரசேவித பரமேசுரனே
நரபோஷக கருணாகரனே
வரவேத நாயகனேகுண
வானே-பரம்-பரனே (உதவி)

---

### 95. இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி

உன்னைமறவாமல்-எனக்கருள்வரமே
பரம-சுபகரமே (உன்னை)

அநுபல்லவி

பொன்னைநாடெளியர்போலும் எக்காலும்
அன்னை தன்னைமறவாப் பிள்ளைபோலும் (உன்னை)

சரணங்கள்

1. மங்களமாகப் பெருவாழ்வுவந்தாலும்
சங்கடமுடன்கன வாழ்வுவந்தாலும் (உன்னை)

2. பூமண்டலம்எங்கும் புகழ்ச்சிவந்தாலும்
ஈமங்கொள்மாலையென இகழ்ச்சிவந்தாலும் (உன்னை)

3. மகிழ்வுறவேவெகு மானம்வந்தாலும்
இகழ்வுறவேகன ஈனம்வந்தாலும் (உன்னை)

4. தலைகீழாக இத்தரைபுரண்டாலும்
அலைகடல்பெயர்ந்த தன்கரைபுரண்டாலும் (உன்னை)

5. அருமையாகிய சதானந்தநிலையே
மருவும்வேதநாயகன் மகிழ்கலையே (உன்னை)

---

### 96. இராகம்-கானடா-ஆதிதாளம்

பல்லவி

வாவாவாதேவே-வந்தெனைக்
காவாயாகோவே (வாவா)

அநுபல்லவி

காவார்பூவே கலையோர்பாவே
ஓ ஓ வேதாவே (வாவா)

சரணங்கள்

1. வனவேடன்வலையே-மாட்டி-மனநோயுறுங்கலையே
எனவேதுயர் அலையே-சார்ந்தஎன்-இடர்யாவையுந்தொலையே
வனமார்நிலையே மதியோர்கலையே
கனமார்குணமலையே (வாவா)

2. உடல்விழுந்திடுமுனமே-பரனே-உனையே-அநுதினமே
திடமா என்மனமே-நினைந்தறம்-செயவே-அருள்கனமே
அடியார்தனமே அயலார்சினமே
யடியார்தமக்கினமே (வாவா)

3. நினையா என்மதியே-உலகில்-நிதமும்செயும்சதியே
வினைதீர் இதுததியே-பரவும்-வேதநாயகன்நிதியே
அனைவோர்திதியே அருள்வாரிதியே
தனைநேர்பரகதியே (வாவா)

---

97. இராகம்-உசேனி-ஏகதாளம்

பல்லவி

தருணம் ஈதையா-இக்கால-ஹரணம் ஏதையா

அநுபல்லவி

கருணையால் உலகனைத்துந் தாங்குபகாரா-தீரா-உதாரா
காணும்பிரபஞ்சம்-தனிற்சிக்கிக்
கோணும் என்னெஞ்சம் அநுதினம்
பேணும்பொய்வஞ்சம் இனி உன்தன்
மாணடிதஞ்சம் எனைத்தொடா
கருமந்தனையேநீக்க தருமந்தனைநிலையாக்க (தருணம்)

சரணங்கள்

1. ஆண்டான் அடிமையை வேண்டாமெனத்தள்ளின்
ஐயாபுகலினி ஏது-மிக
நீண்டநின்கால்களைப் பூண்டுகொண்டேன்விடேன்
நீ எங்கினிச்செல்வதோது-சற்றும்
நீண்டாதெனைத்தள்ளினாலும் விடுவேனோ
திருவே-தருவே-குருவே
தீனன் என்மீது நினதபி
மானம்விடாது தினமதி
யீனன்செய்தீது தொலையமெய்ஞ்
ஞானம்நீ ஓது பழுதறு
சித்தத்தமரும்கோதே கர்த்தத்துவமுறுதேவே (தருணம்)

2. நீயெனைநீங்கிடின் எங்கும்உள்ளோமெனும்
நின்பெயர்க்குக் குறைவாமோ-அழுஞ்
சேயர்தமக்குமு தியாதிருப்பாரோ
சிறந்தஅன்னையர்தாமே-வரம்
ஆயிரந்தரங்கேட்டுக்கொடாயிது
அழகா-குழகா-பழகா
தற்றபொன்போலே நடையின்றி
முற்றமென்மேலே பலகலை
கற்றும்பொய்மாலே கொண்டேன்எந்தன்
சிற்றறிவாலே எனைநிதம்
ஆளாய்பலபுவிநாதா மாளாநலமுறுநீதா (தருணம்)

3. எத்தனைசொல்லினுஞ் சித்தம்நன்மார்க்கத்தில்
என்றும்பதிந்திட இல்லை-மிக
இத்தரையெங்கும் பிரசித்தனேநீசற்
றிளக்கச்செய்யாயிந்தக் கல்லை-உயர்
வித்தகனே வேதநாயகன் போற்றிடும்
மேதா-நாதா-அபேதா
மின்னும்பிரக்கியாதா அடியன்மேல்
இன்னமும் நாதா எனை அஞ்சல்
என்னஒண்ணாதா நின்காதில்-என்
சொன்னுழையாதா அநுதினம்
வேதத்தமர்சர்வேதா தீதற்றவர்மனவாசா (தருணம்)

---

98. இராகம்-பூரிகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

நம்பினேன்உனையே-தற்காத்தருள்
வெம்பியஎனையே-அநுதினம்-நம்பினேன்

அநுபல்லவி

அம்புவியெங்கும் நிரம்பும்பலஉயிர்க்
கின்பம்பொழிபுயலே உன்தன்செயலே
உண்டோஅயலே அநுதினம் (நம்பினேன்)

சரணங்கள்

1. புவனகாரண-பவநிவாரண-நவஉதாரணனே
சம்பூரணனே-மெய்யாரணனே-அநுதினம் (நம்பினேன்)

2. கோரவினைப்பரி காச அகில்விஷ-தார அதிகாசா
உபகார-அதி தீரா-அநுதினம் (நம்பி)

3. சுகுணசேகர-மிகுமனோகர-சுகிர்தசாகரனே
பராபரனே-தயாபரனே-அநுதினம் (நம்பி)

4. பஜிக்கும்தொண்டர்கள்-புசிக்கப்புசிக்க-ருசிக்கும்
தேன்மயமே-அதிசயமே-அருள்நயமே-அநுதினம் (நம்பி)

---

## 99. இராகம்-நாகத்தொனி-திசிரம்-திரிபுடைதாளம்

பல்லவி

தேவாதிதேவனே-ஜீவனேபரபாவனே

அநுபல்லவி

ஜீவாதிகாரனே தீரனே-சூரனே
ஜெகத்திலே மனம்வாடிநொந்தேன்
மகத்துவேஉனைநாடி வந்தேன் (தேவாதி)

சரணங்கள்

1. எங்கும்நிறையும்நீ என்றைக்குநினைக்கமாட்டார்
ஈதென்னகண்கட்டு மாயமோ
அங்கும்இங்குமே உனைத்தேடி
அலையவைத்தா யிதுஞாயமோ
தங்குபதேசம் செய்யார்பின்னம்
தான் அடியேன் சிறுபிராயமோ
எங்குலதெய்வமே தாயேதந்தையே
இதுதான்புத்திர நேயமோ-கன (தேவாதி)

2. எத்தனையோபிழை செய்தேன் அப்பிழை
எண்ண உன்னாலும் கூடுமோ
கத்தனேநீயருள் செய்தால்என்னோடு
கருவப்பேய் போராடுமோ
அத்தனேஎன்பால் நீவரில்உன்தன்
அடிகள்வருந்தி வாடுமோ
இத்தலம்நீவரில் முத்தர்கள்சமுகம்
எங்கேஎன்றுனைத் தேடுமோ-உயர் (தேவாதி)

3. அருளிற்பெரியனீ மருளிற்பெரியனுன்
ஆதரிப்பதுன் பாரமே
பொருளிற்பிரியனு-யிருளுக்குரியனுய்ப்
புரிந்தேன்துயர் வியாபாரமே
ஒருமைப்பாடறு மனதுக்கேதினம்
ஊரெல்லாம் சஞ்சாரமே
திருளற்புதனே வேதநாயகனே
செய்வாய்நீ உபகாரமே-ஒரு (தேவாதி)

---

## 100. இராகம்-குந்தவராளி-ஆதிதாளம்

### பல்லவி

நிதம்நிதம்உனையே-தொழுதேனே
பதமலர்-அருள்கோனே

### அநுபல்லவி

சுத்தவைபோகா சகலநிர்வாகா
மதுரப்பிரவாகா வரகுணயோகா (நிதம்)

### சரணங்கள்

1. அறம்வரஇலையே அகம்அறவிலையே
மறம்ஒருமலையே மனமொருசிலையே
புறமயல்வலையே புகுமதிகலையே
அறவறநிலையே துயர்வினைதொலையே (நிதம்)

2. மலம்வளர்தீயே மனமொருபேயே
புலமொருநாயே புவிகொடுமாயே
பலவிதமாயே படர்வுறும்நோயே
தலமிசைநீயே தயைபுரிவாயே (நிதம்)

3. அடியவர்இனமே அருள்மலர்வனமே
கொடியவர்சினமே குறையறுகனமே
மூடிவறுதினமே முறையுறுகனமே
அடிதொழும்வேத நாயகன்தரிசனமே (நிதம்)

---

101. இராகம்-சாமா-ஆதிதாளம்

பல்லவி

என்னசொன்னாலும்நீ-இரங்கிடாதிருப்பது
ஏதோகுணக்கடலே

அநுபல்லவி

உன்னதவுகனே உலகநிர்வாகனே (என்ன)

சரணங்கள்

1. இகசுகம்அநுசிதம் என்பதென்அபிமதம்
தகவுறும்உயர்பதம் தாவெனவேங்கிதம்(என்ன)

2. இன்னமும்என்சினம் எனக்குநின்தரிசனம்
மன்னஎன்கண்முனம் வாவெனவேதினம்(என்ன)

3. மாயைபடாந்திரம் மாறஓர்தந்திரம்
நீயருட்சுதந்தரம் நீட்டெனநிதந்தரம்(என்ன)

4. உலகவியாபாரமே ஒழியாவிசாரமே
கலகசம்சாரமே கவலைஅபாரமே(என்ன)

5. அருமறையாசகா அடியர்பிரயோசகா
தருமப்பிரதாளகா தனிவேதநாயகா(என்ன)

---

102. இராகம்-இந்துஸ்தான்காப்பி-ரூபகதாளம்

பல்லவி

நாதா அடியேன்-மீதேன்கோபம்

அநுபல்லவி

ஆதாரமாகவே அகிலத்தைத்தாங்கும் (நாதா)

சரணங்கள்

1. தாரம்சுதர்இல்லாச் சந்நியாசிஎன்றேனோ
சீரூரில்லாப் பரதேசிஎன்றேனோ (நாதா)

2. தந்தைதாயில்லாத தனியர்என்றேனோ
எந்தஉயிரும்பெற்ற இனியர்என்றேனோ (நாதா)

3. மன்னும்கைப்பொருள்இல்லா வறியர்என்றேனோ
சின்னஅணுவும்நுழை சிறியர்என்றேனோ (நாதா)

4. உரிய ஆண்பெண்ணல்லா ஒருத்தர் என்றேனே
விதிபலயுகங்கண்ட விருத்தர் என்றேனே (நாதா)

5. ஆதி அந்தம்இல்லா அநாதி என்றேனே
ஜாதிகுலமில்லா நிர்ஜாதி என்றேனே (நாதா)

6. வீடுவாசல் இல்லாத வெளியர் என்றேனே
ஈடன்னம்துணியில்லா எளியர் என்றேனே (நாதா)

7. மனம்புகுந்தொளிக்கின்ற மாயர் என்றேனே
உனும்நெஞ்சுக்கெட்டா உபாயர் என்றேனே (நாதா)

8. சகல உலகச்சுமை தாங்கி என்றேனே
மிகநரர் அன்புக்கு வீங்கி என்றேனே (நாதா)

9. மற்றோர்கண்ணிற்படாத மாணி என்றேனே
முற்றும்வாய்பேசாத மோனி என்றேனே (நாதா)

10. குணமில்லாக்களைக்காயும் கோபி என்றேனே
அணி அங்கமில்லா அரூபி என்றேனே (நாதா)

11. சீர்பேர் இல்லாஅநாம தேயர் என்றேனே
ஆரும்துணை இல்லா அபாயர் என்றேனே (நாதா)

12. மாதின்றி உலகீன்ற மாயம் சொன்னேனே
வேதநாயகா இன்னம் வேறென்ன சொன்னேனே

---

103. இராகம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி

உன்னைப்போல எனக்குற்றபேர்கள் இந்த
உலகந்தன்னில் உண்டோ

அநுபல்லவி

அன்னை தந்தைகுருதேவே-இந்த-அகிலகாரணபிதாவே (உன்)

சரணங்கள்

1. தந்தைதாய்க்கு மனஸ்தாபம்வரில்
சாற்றுவார்கள் பலசாபம் மண்ணில்
எந்தநேரமுமே பாவம் செய்யும்
எனக்குநீசெய்வது லாபம் (உன்)

2. அண்ணன் தம்பிக் குண்டுபாகம்அதை
அடையுமட்டும் அவர் ஸ்நேகம் பின்பு
எண்ணுவார்கள் பல துரோகம் நீ
ஈவைநன்மைகள் அநேகம் (உன்)

3. மனைவிபாலர்க்கன்ன வஸ்திரம் தரும்
மட்டுமே அவர்கள் மித்திரம் பின்பு
நினைவர்செய்வர்பல சூத்திரம் என்றும்
நீடும் உன்னருள் சமுத்திரம் (உன்)

4. ஏவல்மன்னர்க்குண்டு திறையே அதை
ஈந்திடாதவர்க்குச் சிறையே உன்னை
மேவினோருக்கில்லை குறையே தொழும்
வேதநாயகன் தன் இறையே (உன்)

---

104. இராகம்-காப்பி-ரூபகதாளம்

பல்லவி

நாளே நல்லநாள்-புண்ணியம்செய்யும்

அநுபல்லவி

ஆளும்வேதநாயகன் தாளிணைபூசிக்கும் (நாளே)

சரணங்கள்

1. பாபமில்லாதகால க்ஷேபமும்சுஜனசல்
லாபமுமேபரம லாபமாகக்கொள்ளும் (நாளே)

2. வேதமும்பெரியவர் போதமும்தேவசங்
கீதமும்முதலான நாதங்களுடன்செல்லும் (நாளே)

3. ஞானமும்ஜீவாபி மானமும்பரன்பத
தியானமுமேசெய்து மோனநிலையில்நிற்கும் (நாளே)

4. பத்தினிசுதர்குடும் பத்தவர்யாவரும்
சித்தநிர்மலமுடன் பக்திபுரிந்திடும் (நாளே)

5. கூனர்குருடர் அங்க ஈனர்பிணி உடையோர்
தீனர்முதலியோர்க்குத் தானதருமஞ்செய்யும் (நாளே)

## 105. இராகம்-சாவேரி-ஆதிதாளம்

பல்லவி

ஏதோ இன்னம்வாதோ இரங்காதோ உன்மனமே

அநுபல்லவி

வேதவரோதய விமலச்சந்திரோதய
வித்தநயகுண உத்தமசிரேஷ்டா
பத்தர்கள்பழுதறு சித்தஅபீஷ்டா (ஏதோ)

சரணங்கள்

1. ஐம்புலவேடர்வேட்டை ஆடித்திரியுங்காட்டை
வெம்பாசப்பேய்வாழ்வீட்டை விரும்பியேதுன்பமூட்டை
மேவிமனம்அயர்ந்தேன் நிலைமையில்லாப்
பூவின்சுகம்வியந்தேன் அநுதினமும்
பாவவழிநயந்தேன் இனிமேல்வரும்
சாவையெண்ணிப்பயந்தேன் நிரந்தரமும்
தரைமுதலாகவெங்கும் விரியும்சுந்தரமே
அரியகருணைமழை சொரியுங்கந்தரமே (ஏதோ)

2. தீயமனோவியாபாரம் தீர்ந்திடவேஇந்நேரம்
நீயருள்பரிகாரம் நின்பதமேஆதாரம்
நேசஅபிமானம் சற்றும்இல்லாமல்
பேசுவேன்ஞானம் எனக்குலவ
லேசம்அநுஷ்டானம் இலையேஉப
தேசசன்மானம் கொடுத்தருள்செய்
தினமனமகிழ்வுறு கனதிரவியமே
அனவரதமும்ஒளிர் தினகரமயனே (ஏதோ)

3. நீர்க்குமிழியெனவே நிலையாவாழ்வுகனமே
பார்க்குள்உனைவினவே பரிந்தருள்வாய்நனவே
பாசம்குலையாதா எனக்குமோகா
வேசம்கலையாதா உலகம்செய்யும்
மோசம்தொலையாயா உன்மீதுகன
நேசம்நிலையாதா நிலைமைபெறு
நீதநிரஞ்சன அபேதசுகுணமே
வேதநாயகன்மனப் போதமர்மணமே (ஏதோ)

## 106. இராகம்-பந்து-ஆதிதாளம்

### பல்லவி

நீயேசர்வசந்தன்-நல்ல
நிக்ஷயனேகன அக்ஷயனே

### அநுபல்லவி

தாயுந்தந்தையுந் தமரும்அற்றாயே
மாயுந்தொழிலறு வாழ்வுபெற்றாயே (நீயே)

### சரணங்கள்

1. பல்லாயிரம்அண்டம் படைப்பாய்உடைப்பாய்
எல்லாஉலகமும் எள்ளினுள் அடைப்பாய் (நீயே)

2. அஸ்திவாரந்தூண் அருஞ்சுவரிலேயே
பத்தியாநீசெய்த பகிரண்டநிலேயே (நீயே)

3. பலபொருள் தாங்கிடும் பர்வதம்போலே
தலையண்டகோடிகள் தாங்குவாய்மேலே (நீயே)

4. திரிநெய்செப்பில்லாத் தீபங்கள்போலே
பரிதிசந்திரமீன் பலசெய்ததாலே (நீயே)

5. அண்டம்அகண்டம் அடங்காதசரீரம்
தொண்டர்கள்மனமலர் சுமக்குமோபாயம் (நீயே)

6. பாரபூதங்கள்உன் பணிசெய்யுஞ்சரியே
சூரியன்உனதுடற் சோதிமுன்கரியே (நீயே)

7. யுகம்பலகோடிகள் உனக்கரைக்ஷணமே
நிகழுமுக்காலமு நினக்குக்கிரகணமே (நீயே)

8. சகலர்க்கும்ஊட்டிநீ தானென்றும்உண்ணாய்
நிகழ்பெருங்காவலால் நித்திரைபண்ணாய் (நீயே)

9, தினகரசந்திர தீபம்ஏற்றிடுவாய்
வனமுகிற்கடத்தால் மழையீற்றிடுவாய் (நீயே)

10. நடவாய்வறவாய் நாடெங்கும்இருப்பாய்
உடலாய்உயிராய் உயிர்வாய்பொருப்பாய் (நீயே)

11. மரங்களினுழைந்தே மலர்வாய்கிளைப்பாய்
கரங்களில்லாதே தருமங்கள்விளைப்பாய் (நீயே

12. கண்ணுய்ப்பொருள்களைக் கட்டுவாய்பார்ப்பாய்
அண்ணுசகலமும் ஆட்டியேதீர்ப்பாய் (நீயே)

13. கனைகடல்உன தருட் கடலிலோர்திவலை
இனிவேதநாயகா எனக்கென்னகவலை (நீயே)

---

107. இராகம்-தோடி-ரூபகதாளம்

பல்லவி

ஞானகுருபரவடிவே அருமறையின்முடிவே

அநுபல்லவி

மோகனசுகாசனசப்பிரம் முத்தியளித்திடும்நித்தியபரப்பிரம் (ஞா)

சரணங்கள்

1. பரமானுனென்மீ துனக்குக்கிருபையில்லையா
பாவம்தொலைத்தெனை ஆள்வதுனக்கொருமலையா
தாமதம்நீசெய்யதேகம் எனக்கென்னநிலையா நிதம்
தஞ்சம்பத கஞ்சம்பிர பஞ்சம்தரு நஞ்சம்தொலை (ஞான)

2. தீனகிருபாநிதியென்று பேர்கொண்டநீ அலவா
செய்தெனை ஆள்வதினுல் உனக்கியாதொருசெலவா
ஆனமலர்பதம் நான்கிள்ளைநீ இலவா புவி
அஞ்சும்புலன்-அஞ்சப்பகை நெஞ்சம்செயும் வஞ்சம்தொலை (ஞான)

3. நின்மலநித்திய நிரஞ்சனநீதவிநோதா நாளும்
நிகிலசராசரம் யாவையும்தாங்கும்பிரக்கியாதா
தன்மவிலாச சுகானுபவானந்தநீதா எனைச்
சாடும்வினை வாடும்வழி பாடும்பர வீடும்கொடு (ஞான)

4. நம்பும்அடியவர் துன்பம்அகற்றுங்குணுளா பவ
நாசமகேசபிர காசவிலாசதயாளா இங்கும்
அம்புவியில்வேதநாயகன் போற்றும்பொற்றுளா இங்கும்
அங்கும்புவி எங்கும்புகழ் தங்கும்பகி ரங்கம்பெறு (ஞான)

108. இராகம்-ஈசமனோகரி-ஏகதாளம்

பல்லவி

மெய்யிது மெய்யிது மெய்யிது தேவே

அநுபல்லவி

ஐயையோஎன்செய்வேன் அருள்புரிகோவே (மெய்)

சரணங்கள்

1. மலர்ந்துனைப்போற்றாத வாயனும்நானே
கலந்துநின்பணிசெய்யாக் காலனும்நானே (மெய்)

2. கண்டுநீர்பெருகாத கண்ணனும்நானே
அண்டும்பாவியர்க்கெல்லாம் அண்ணனும்நானே (மெய்)

3. நிதம்உனைநினையாத நெஞ்சனும்நானே
மதங்கொண்டுதிரிகின்ற வஞ்சனும்நானே (மெய்)

4. கனிந்துனைச்சேவியாக் கரத்தனும்நானே
தினந்தினம்வணங்காத சிரத்தனும்நானே (மெய்)

5. கருதிஉன்புகழ்கேளாக் காதனும்நானே
கருதியைமறுத்திடும் சூதனும்நானே (மெய்)

6. கடுகஆலயம்செல்லாக் காலனும்நானே
முடுகியவினைக்கெல்லாம் மூலனும்நானே (மெய்)

7. போதஅபேத புநிதநிஷ்கோப
வேதநாயகன்தொழும் விமலசொரூபா (மெய்)

---

109. இராகம்—சாமா—ரூபகதாளம்

பல்லவி

பரபிரம்ம திருவருள் தரல்கிரமமே அநுதினம்

அநுபல்லவி

வரகுணசுகாநுபாவ
சுரகணபூஜிதவைபவ (பரபிர)

சரணங்கள்

1. செய்வதெல்லாம் தீவினையே
இனையளவும்உனை நினையேன்
தெய்வமேநம்பினேன் உனையே
தீர்த்தருள்வாய்துயர் தனையே (பரபிர)

2. அறியேன்மேற்குக் கிழக்கு
அன்புமில்லேன்நின் கழற்கு
சிறியேன்மேல்என் வழக்கு
ஜெபதபத்தில்எனைப் பழக்கு (பரம)

3. பாழ்மனமோவல் விரும்பு
பாவம்அதற்குக் கரும்பு
தாழ்வுறுநான்சிறு துரும்பு
சாமிஎன்மேல்மனந் திரும்பு (பரம)

4. நினையேன் தர்மம் அதர்மம்
நிலமிசைநான்மூட ஜென்மம்
அணையேஎதின்னம் வர்மம்
அகற்றிடுவாய்எனது கர்மம் (பரம)

5. அகண்டமண்டலாதி பத்திய
ஆதியந்தரகித நித்திய
மிகுந்தகுணபூரண சத்திய
வேதநாயகன் ஸ்துதிய (பரம)

---

## 110. இராகம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி

பாதம்நம்பினேனே போதம்அருள்கோனே

அநுபல்லவி

வேதமுதலோனே மாதவர்பிரானே (பாத)

சரணங்கள்

1. ஆதரவுநீயே ஐயனேஎன் தாயே
வாதைமலநோயே மாற்றிஅருள்வாயே (பாத)

2. தீங்குகள்அனேகம் செய்திடும்என துரோகம்
நீங்கிடவிவேகம் நீஅருள்அமோகம் (பாத)

3. மூத்தர்கள்சமுகனே முக்கியபிரமுகனே
உத்தமசுமுகனே ஓவேதநாயகனே (பாத)

### 111. இராகம்-கனகமஅந்தம்-ஆதிதாளம்

பல்லவி

நீயே துணைபரனே-துன்பம்
நீங்கிட அருமானே

அநுபல்லவி

மாயாதிபிர விஜயதினகரனே
தாயாகியசர்வசாதககரனே (நீயே)

சரணங்கள்

1. அடியேன்செய்வதெல்லாம் அரும்பாவம்
கொடியேன்மீது கொள்ளாதேகோபம் (நீயே)

2. பண்ணேன் துதியே படியேன்விதியே
கண்ணேமணியே கதியேநிதியே (நீயே)

3. உனையேநம்பிடில் உண்டோபயமே
அனையேவினைதீர்த் தருள்வாய்ஜெயமே (நீயே)

4. மாதவம்உடையவர் மகிழ்மலாகிதா
வேதநாயகன்தொழும் விபுதர்கள்சகிதா (நீயே)

---

### 112. இராகம்-பைரவி-திரிபுடைதாளம்

பல்லவி

நாதாகன-மேதாதினம்-நீதாவரமே

அநுபல்லவி

போதாசுக-தாதா-அதி-கியாதாபிர-சாதாபுவி (நாதா)

சரணங்கள்

1. நித்தியம்அநித்திய சுகத்தினைமதித்திடு
பைத்தியம்விடுத்தினிய சத்தியம்உதித்திடவே (நாதா)

2. சுந்தரமடந்தையர்கள் சந்திரமுகந்தனை
நினைந்தெனது சிந்தைசெய் தந்திரம்ஒழிந்திடவே (நாதா)

3. சொப்பனமேஒப்பனைகொள் அற்பஉடலைப்பொருள்
எனப்பிரியம்வெப்பதர் நற்பலன்உறப்புவன (நாதா)

4. மாதர்மிதிபூதலமேல் ஆதரம்உறுதபடி
சாதகப்பிரபோதமருள் வேதநாயகன்புகழும் (நாதா)

## 113. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி

வேதநாயகனே—மெய்—மெய்—மெய்

அநுபல்லவி

பாதகஞ்செய்துழலும் பாழ்மதியே ஐயன்
பாதகங்கள் அன்றி நமக்கார்கதியே
பூதலவாழ்வினொடு புகழ்நீதியே வெறும்
பொய்—பொய்—பொய்—பொய் (வேத)

சரணங்கள்

1. அத்தமியாதொளிர் திவாகரனை அதி
அற்புதமான சிவாகரனை
சித்தமிசைஒளி சுதாகரனைத் துதி
செய்—செய்—செய்—செய் (வேத)

2. பூதலம்எங்கும் இசையோனவனை
புனிதனைஉயிர்க்குயிர் ஆனவனை
மாதவர்காணுகின்ற மானவனை உண்ணும்
வை—வை—வை—வை (வேத)

3. நாதபூதபௌதிகஸ் தாபகனை
நாயகன்மீதில்லென்றும் ஞாபகனை
ஓதரிதானசர்வ வியாபகனைப் (பணிந்)
து—உய்—உய்—உய் (வேத)

## 114. இராகம்-கௌளிபந்து-ஆதிதாளம்

பல்லவி

ஓஓஜெகநாதா—ஒருவரம்—உதவிடல்ஆகாதா

அநுபல்லவி

தேமேவுதினம்பல பாவேபாடிஎன்
நாவேயினித்தேனே (ஓஓ)

சரணங்கள்

1. மனம்விஷயப் பிரியம் சகலமும்
வாசா கைங்கரியம்
சினம்மதம் மாற்சரியம் பூண்டஎன்
செய்கைகள் ஆச்சரியம்
இனமாகியபக்த ஜனமுடன்ஐக்கியம்
கனவினும்நீங்காமல் (ஓஓ)

2. பொய்மைமெய் யெனநாடி அநித்தியப்
பொருள்களை யேதேடி
வையகம் எங்கும்ஓடி நான்செய்த
வஞ்சகம் பலகோடி
மையற்கரி இடர்கள்-செய்யவேதொடருதே
ஐயோ—கூ—கூ—கூ (ஓஓ)

3. நேசர்சிந்தா மணியே அடியேன்
நெஞ்சக பூண் அணியே
ஆசையில்வரும் பிணியே தொலைந்துநல்
அறமேவிடப் பணியே
ஈசனேஉனைத்தொழும் தாசன்வேதநாயகன்
பாசவலைஉறாமல் (ஓஓ)

## 115. இராகம்-தேசமுகாரி-ஆதிதாளம்

பல்லவி

போதம்தாஎன்ன விவாதம்-எனக்கமல
போதம்தாஎன்ன விவாதம்

அநுபல்லவி

வேதம் உணர்ந்தொழுகும்
நீதம் உடையவர்க்குப்
பேதம் அறவரப்பிர
சாதம் அருள்தெய்வமே (போத)

சரணங்கள்

1. மோகம்பெருகியவெள்ள
சோகனும்எனும்பெரும்பிர
வாகந்தனில்அழுந்தி
ஆகம்மெலிந்தேன்ஐயா (போத)

2. நெஞ்சோர் புறம்புலன்கள்
அஞ்சோர் புறம்மின்னார்கண்
நஞ்சோர் புறம்வருத்தும்
என்சோர் வெலாம்அகலம் (போத)

3. பெண்ணாசை யாலும்வளர்
மண்ணாசை யாலும்நிதி
எண்ணாசை யாலும்மனம்
புண்ணாகி வடிவானேனே (போத)

4. ஏதும் அறிவில்லாஎன்
மீது வர்மஞ்செய்தல்த
காது பரமபக்தர்
ஓதும் வேதநாயகா (போத)

---

## 116. இராகம்-கௌளிபந்து-ஆதிதாளம்

பல்லவி

சருவேசாசரணம்-எனக்குன்-தாளே ஆபரணம்

அநுபல்லவி

இரவும்பகலும் உனையே அனுசாரணம்
இசைந்திடச்செய்பிது நல்லபிரகரணம் (சரு)

சரணங்கள்

1. நீயேசெய்வதெல்லாம் உபகாரம்
நின்மேற்சொல்லவுண்டோ விவகாரம்
தீயேன்புரிந்திடும்பிழைகள் அபாரம்
தேவரதிசெய்இதற்கோர் பரிகாரம் (சரு

2. புண்ணியம்செய்திலன்கடுகுப் பிரமாணம்
பொய்யன்நான் ஆபினும்இது பிரமாணம்
எண்ணிடில்எனக்குமின்னார் விழிபாணம்
என்சரித்திரம்பெருங்கதா புராணம் (சரு)

3. பேசுவதெல்லாம்வாசா ஞானம்
பெரும்பாவியர்க்கெல்லாம்நான்பிர தானம்
நேசர்சகலமும்உனதா தினம்
நீயருள்எனக்கிருபாரச பானம் (சரு)

4\. ஈமேல்தொடுக்கின்றபாணப் பிரயோகம்
எனநீமுனிந்திடில்எது நிர்வாகம்
மாமோகாதியில்மயங்கி னேன்ஆதம்
வரவேதநாயகாஅருள் பரிபாகம் (சரு)

---

## 117. இராகம்-நாதநாமக்கிரியை-ரூபகதாளம்

பல்லவி

சமயம்ஈதையா-நலம்எனக்-கமையாஐதையா

அநுபல்லவி

அமர்செய்ததீவினைச் சுமைதொலைத்தெனை
அமலன்ஆக்கிடல்கீர்த்தி-ஒரு
சமமில்லாஅருள்பூர்த்தி-அறு
நிமலகாரணமூர்த்தி (சம)

சரணங்கள்

1\. இன்னங் தாமசமோ வினைசுமந்
திடஎன்றால் வசமோ எனக்
கின்னல் சகசமோ உனக்கருள்
ஈய அவசமோ
அன்னமென்னடை மின்னல்நேரிடைக்
கன்னியர்விழி இணையே மனம்
தன்னில்பாய்ந்திடும் கணையே இனி
என்செய்வேன்நீ துணையே (சம)

2\. கருணை கூராயோ எனதுளக்
கவலை தீராயோ இந்தத்
தருணம் வாராயோ எளியேன்
தன்முகம் பாராயோ
இரணியம்பெண்கள் தரணிமீதந்தக்
காரணமேவமெசு துறந்தேன் கடல்
திரணம்போலெங்கும் பறந்தேன் அன்றன்
சரணபங்கயம் மறந்தேன் (சம)

3\. மாயை நீக்காயோ எனைமுகம்
மலர்ந்து நோக்காயோ வினைத்
தீயைப் போக்காயோ எனைவிதி
சீலன் ஆக்காயே

நீயலாதுசகாயம் ஏதினித்
தீயவர்பயங்கரனே-மல
நோய்அற அருள்வறவே-வேத
நாயகன்தொழும்பரனே (சம)

---

118. இராகம்-இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்

பல்லவி

வாவா-வாவா-என் இருதயந்தன்னில்
வந்தேமலரடி-தந்தே ஆண்டிட (வாவா)

அநுபல்லவி

சாவால்வருந்துமுன் காவாகாத்திடில்
தாவார்-பூவார்-ஜீவா-தேவா (வாவா)

சரணங்கள்

1. மின்னார்கள்விழிவலை தன்னால்தயங்கினேன்
உன்னாதரவில்லாமல் பன்னாள்மயங்கினேன் (வாவா)

2. பொய்யானவாழ்வதனை மெய்யாகநம்பினேன்
ஐயாநின்னடிக்கன்பு செய்யாமல்நம்பினேன் (வாவா)

2. சிந்தாகுலங்கெட விரைந்தாளில்தின்மையா
எந்தாயேநீஎனை முனிந்தேதகல்நன்மையா (வாவா)

4. வேதநாயகன்தொழும் சீதமலர்ப்பாகனே
ஆதவன் எனப்புவி மீதில்வரும்நாதனே (வாவா)

---

119. இராகம்-இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்

பல்லவி

இன்னமும் என்மீதுனக்-கேன்பராக்கு
நின்னதருள் தந்தே-யெனைநீகைதூக்கு (இன்ன)

அநுபல்லவி

பன்னரியபுவன மனோகரா
உன்னதப்பிரதாப கிருபாகரா (இன்ன)

சரணங்கள்

1. ஏதுங்கதியில்லா ஏழைநானே
என்னசெய்யும்சலம் நீங்குமீனே
பாதவனஜமலரே நம்பினேனே
பாகேஅமுதே பசுந்தேனே (இன்ன)

2. கானலெனும்காயசுக போகம்நாடிக்
கர்த்தனேயென்செய்தேன் வினைகோடிகோடி
வேனில்வெயிலுற்ற புழுப்போலவாடி
வேதனைவந்தேன் உந்தன்பாதந்தேடி (இன்ன)

3. அண்டபகிரண்ட சர்வாதிகாரா
அவ்வியக்தமய அசகாயசூரா
தொண்டன்வேதநாயகன் மனோசஞ்சாரா
தோஷபரிகாரா உதாரதீரா (இன்ன)

---

## 120. இராகம்-சுருட்டி-சாப்புதாளம்

பல்லவி

இப்படிப்பட்டநான் எப்படி உன்முகத்
தேவந்துவிழிப்பேன்-ஐயா (இப்ப)

அநுபல்லவி

கப்பறியாதவர் தமதற்றினைத்தூண்டும்
தாயேதந்தையேஎன்மேல் நீயே இரங்கவேண்டும் (இப்ப)

சரணங்கள்

1. பாதாதிகேசபரியந்தமும் நான்விடம்
பகலும்இரவும்மாயைபண்ணும் என்நெஞ்சில்நடம்
ஏதம்அறஅந்நெஞ்சம்ஏகா இடம்எவ்விடம்
எனினும்உன்னிடம்வரவெனில் அநுமுழுமுடம் (இப்ப)

2. கர்த்தனேஎன்மேல் அற்பக்காற்றடிக்கினும்போறேன்
காசினியெல்லாங்கேட்டுங் கலங்கினும்துயருறேன்
எத்தனைபொருள்பிறர் எனக்கீந்திடினுமறேன்
எச்சிற்கையாலுங்காகம் ஓட்டிநான்இழிவறேன் (இப்ப)

3. இகமிசைநான்சுமந் திடுவதுபழிச்சுமை
எனினும்பிறர்செய்யற்ப இடருக்கும்செய்யேன்க்ஷமை
மிகஅற்பர்தமைச்சேர்வ தல்லால்தேலவர்தமை
வேதநாயகனேநான் மேவிஅறியேன்இமை (இப்ப)

## 121. இராகம்-மோகனம்-திரிபுடைதாளம்

பல்லவி

எந்தவிதமும்உன்-கந்தமலர்ப்பதமே-அடியேன் அடைந்திடச்
சிந்தைமகிழ்ந்துநீ-தந்தருள்வாயிதமே (எந்த)

அநுபல்லவி

அந்தரமெங்கும்-அமர்சர்வசாக்ஷியே
வந்தனைசெய்பவர் மானசக்காக்ஷியே (எந்த)

சரணங்கள்

1. சகசமானிடர்தமக்குப்பாவமே-பிழையாவும்பொறுத்துத்
தயைசெய்தாள்வதுநின் சுபாவமே
தாவே உன்சரித்திரப்பிரபாவமேஅநுதினமும்பாடிச்
சாதகம்பெற என்மனோ பாவமே
தந்தைநீதானே-உனக்கொரு
மைந்தனும்நானே-இவ்வாறுநான்
சொந்தமானேனே-தரிசனம்
தந்தருள்கோனே-புவிதனில்
நிகரில்லாத நியாயம்பிரசுத்தனே
சகலலோக சராசரகர்த்தனே (எந்த)

2. மணல்அன்னத்தில்கல்லாய்ந்திடும்வகையே-எனைச்சோதித்திடில்
மனத்தில்உள்ளதெல்லாம் வினைத்தொகையே [என்
குணம்உண்டோபுவிவாழ்வுவெறும்புகையே அதைவிரும்பிஎன்மனக்
குரங்கும் ஐம்புலன்களும் செயும்பகையே
கோதையர்மோகம் தனில்வரும்
வாதைஅநேகம் எவர்க்குமே
ஈதனுபோகம் எனக்கினிப்
போதும்இப்போகம் அநுதினம்
பூணரும் ஆநந்த பொக்கிஷசாலையே
மணமிகுந்தருள் மலரும்சோலையே (எந்த)

3. தாதைபிள்ளையைத்தள்ளல்பாந்தமா இதுநான்குபேரும்
சரியொன்றேப்புக்கொள்ளும் சித்தாந்தமா
நாதனேஎனைமுனிதல்சாந்தமா எனதுள இரும்பையெந்
நாளும் இழுக்கும்விஷயம்காந்தமா உனையேகெதியென
நண்ணியசித்தர் பெருந்தவம்
பண்ணியசித்தர் நிகராறு
புண்ணியபத்தர் முதலிய
எண்ணிலாமுத்தர் அடையுமுன்
பாதநிதி அவர்க்கேபிதிராஸ்தியா
வேதநாயகன்பங்கென்னநாஸ்தியா (எந்த)

---

## 122. இராகம்-பைரவி-ஆதிதாளம்

பல்லவி

ஏகாகனயோகா-அநுதினம்-எனையாண்டருள்வாயே

அநுபல்லவி

சேகரகுணதிவ்ய தேஜோமயகாத்திர
பாகநித்தியானந்த பாக்கியபரமக்ஷேத்திர

சரணங்கள்

1. கண்டுநிகர்மொழியும் வண்டுநிகர்விழியும்
தண்டுநிகர்புயமும் கொண்டுமயக்குமந்தப்
பெண்டுபிள்ளைகட்குழைத்துண்டுறங்கிநிதமும்
மண்டுவினையலாதுன் தொண்டுசெய்தறிகிலன் (ஏகா)

2. நாடேன்பெரியரோடு கூடேன்புண்ணியந்தன்னில்
நீடேன்உனதருளைத் தேடேன்உனதுபுகழ்
பாடேன்அனுதினங் கொண்டாடேன்பதமலரைச்
சூடேன்அருவினையைச் சாடேன்சுரர்புகழும் (ஏகா)

3. நாதாதிவ்யவரப்பிரசாதா அகண்டசமு
தீதாநினைவினுக்கதீதா அடியர்கள்ச
மேதாநிலைகொள்பஞ்ச பூதாதிரிகர்மவி
நோதாதினந்தினமும் வேதநாயகன்புகழ் (ஏகா)

## 123. இராகம்-மோகனம்-ரூபகதாளம்

பல்லவி

இன்னம்பராமுகமா-வினை
நின்னருள் தானின்றிப்-போமோ

அநுபல்லவி

மின்னல்உருபுகழ் நன்னலமேவிய
வேதார்த்த-கன-போதார்த்தா-ஓ (இன்)

சரணங்கள்

1. வன்பிழைஒப்புக்கொண் டாவே கூழையை
மன்னர்செய்வார்புவி மேலே
என்பிழையைப்பல காலே ஒப்பி
னேனேமுனிவேறெதன் பாலே
அன்பெனும்தெப்பம் இல்லாமல்வினைக்கடல்
ஆழ்ந்தேனே-துயர்-சூழ்ந்தேனே-ஓ (இன்)

2. தன்பதியெப்பகை யோரே கொள்ளத்
தான்பார்த்திருப்பவன் யாரே
நிதிபதிஎன்பதி தேரே அதில்
நீங்காமல்உன்கண்முன் நேரே
உன்பகையோரெனும் காமக்குரோதிகள்
உற்றாரேஜெயம் பெற்றாரே ஓ (இன்)

3. நெஞ்சகவலைக்கு வீடா ஐயா
நின்சோதனைக்குநான் ஈடா
அஞ்சாநீஇங்கு வாடா என்
றருளாதின்னம்வேறு பாடா
தஞ்சமெனவேதநாயகன் போற்றிடும்
தாதாவேபெற்ற மாதாவே ஓ (இன்)

---

## 124. இராகம்-உசேனி-திரிபுடைதாளம்

பல்லவி

ஏகநாதா அரும்பரம் போகம்நீதா

அநுபல்லவி

பாகவிகசித கற்பகாரண்ணிய
பதிதபாவன பரமகாருண்ணிய

தேகம்நிறையதி ரூபலாவண்ணிய
தீயர்தமைச்சிக்ஷை செயும்நிர்த்தாக்ஷண்ணிய (ஏக)

சரணங்கள்

1. நாளுமூழ்கினன் பாப அங்கணம்
நாடினேன்பெரி யோர்கள்வங்கணம்
ஆளும்படிதரித் தனை நீகங்கணம்
அன்போடெனைச்சேர் நல்லோர்கள் தங்கணம்
நீளும்அகண்டித மாகியோங்கிய
மாளுந்தொழிலுறு மரசுநீங்கிய (ஏக)

2. அடியன்மீதுனக் கென்னபிணக்கமே
அகற்றுவாயென தகங்கள்உனக்கமே
நெடியநின்பத மலர்க்குவணக்கமே
நிதமும்நான்செய்ய அருள்நல்லிணக்கமே
கடியதுயர்க்கடல் கடக்கஉனதிணை
அடியலாதினி அயலுண்டோபுணை (ஏக)

3. உதிர்க்கும்பலகதிர் நிகரும்விதுரனே
உயிர்நித்தியானந்த நகரச்சதுரனே
துதிக்கத்துதிக்கவே இனிக்கும்மதுரனே
சூழும்சிவராசிகள் தம்பிதிரனே
குதிக்குமாயையைக் கொன்றுதாழ்விக்கும்
மதிக்கும்வேதநாயகனை வாழ்விக்கும் (ஏக)

---

125. இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்

பல்லவி

தயைபுரியே எனதுளத் துயர்பிரிவே

அநுபல்லவி

உயரும்தர்மசம் வர்த்தனு
உத்தமர்தம்மன நிர்த்தனு
கயலர்இழிகுல மலர்த்தனு
கருதரும்புண்ய யத்தனு (தயை)

சரணங்கள்

1. புண்ணியம்நாயேனுக் கெட்டி
பொய்களெல்லாம் வெல்லக்கட்டி
திண்ணியமெய்ஞ்ஞான திட்டி
சிறிதீயில் என்னநட்டி
சின்மயமே மெய்வேத நன்மயமே எனையுறு
தின்மைப்பழியோடே நனவைப்பலன்நீட
உண்மெய்ப்பதம்நாட கன்மப்பயிர்வாட (தயை)

2. என்குறை பாராட்டாதே
இன்னம்என்னை வாட்டாதே
நின்கோபங் காட்டாதே
நிபங்கள்என்மேற் சாட்டாதே
நிச்சயமேநிலைபெறும் அக்ஷயமேகனமுறு
நேசத்திடம்ஓங்க பாசத்திடும்நீங்க
மாசற்றறம்வீங்க வாசத்தைதாங்க (தயை)

3. அண்டசராசர ரூபா
அகதிகளுக் கநுதாபா
விண்டலமண்டல ரூபா
வேதநாயகன் லாபா
விண்மணியே எனதிரு கண்மணியே பழிசெய்யும்
வேகப்பவமோட்டி மோகப்பகைவீட்டி
பாகப்பதம்சீட்டி யோகப்பதிகாட்டி (தயை)

---

126. இராகம்—ஜங்கலா—ரூபகதாளம்

பல்லவி

நல்லவரந்தந்தாளுவாய்
நாதனே அபேதனே

அநுபல்லவி

அல்லும்பகலும் உன்னைநாடி
அற்புத யரமார்த்தங்தேட (நல்ல)

சரணங்கள்

1. அன்பருடனேகூடவும் அநுதினம்துதிபாடவும்
இன்பசாகரம்ஆடவும் ஈனரைக்கண்டால்ஓடவும் (நல்ல)

2. பஞ்சபுலனை அடக்கவும் பாவக்கடலைகடக்கவும்
நெஞ்சம்ஒடுங்கிக்கிடக்கவும் நீதிநெறியில்நடக்கவும் (நல்ல)

3. தினர்களையே தாங்கவும் சிந்தைத்துயரம்நீங்கவும்
ஞானவழியில்ஓங்கவும் நானும்அடியில்தூங்கவும் (நல்ல)

4. பத்தர்பரவுந்தேவனே பரமதிவ்வியசுபாவனே
வித்தகமனோபாவனே வேதநாயகன்ஜீவனே (நல்ல)

---

127. இராகம்-பூரணச்சந்திரிகை-ஆதிதாளம்

பல்லவி

இன்னம்தான்பராமுகமோ இதுதகுமோ ஸ்வாமி

அநுபல்லவி

சந்நிதிதான்தெரிசனம் அருளாமல் (இன்னம்)

சரணங்கள்

1. செந்தாமரைப்பதமே சேரேன்நானிதமே
நொந்தேன்பலவிதமே நோய்தீர்த்தருள்ஹிதமே
சிந்தைதனிற்பிரமை கொண்டேன்
தீமைகள்செய்து கைகண்டேன்
சந்ததமும்நலம் விண்டேன்
சஜ்ஜனசங்கமும் அண்டேன் (இன்)

2. பூண்டேன்அபசரிதம் புகழேனின்சரிதம்
ஆண்டோய்என்துரிதம் அறவேசெய்துரிதம்
நீண்டபெருந்தகை பூணேன்
நீதிதனையுமே பேணேன்
மூண்டபெரும்பழி நாணேன்
முத்திபெரும்வழி காணேன் (இன்)

3. அடியார்திரவியமே அமலோதயஸ்வயமே
வடிவார்ஆலயமே வளர்த்தேதஜோமயமே
திடமுறு புவனாதாரா
தினகரகோடி சரீரா
விடயமுறு அதிகாரா
வேதநாயகன் உபகாரா (இன்)

## 128. இராகம்-பிலகரி-ரூபகதாளம்

பல்லவி

கருணாலயநிதியே—தினமும்உன்
சரணாம்புயம்கதியே (கருணா)

அநுபல்லவி

சருவபேதவிநோதகாரண
பரமசாதகபவநிவாரண (கருணா)

சரணங்கள்

1. நிதம்வெளுக்க வெளுக்கவெண்தூசு
நிமிஷங்தோறும் நிறையுமேமாசு
அதுபோல்என்தன் அகமுறும்ஆசு
அகலவேஉன் அருள் ஒளிவீச
அகிலகோடி விசாலகற்பித
சகலஜீவதயாள அற்புத (கருணா)

2. இங்கென்செய்கைகள் யாவும்நிகிர்ஷ்டம்
எனக்குப்புண்ணியம் என்றும்அநிஷ்டம்
பங்கம்தீர்க்கில் உனக்குண்டோகஷ்டம்
பரமனேயருளாயோ உத்கிரிஷ்டம்
பாரமாகவே பண்ணும்பாதகம்
தீரவேநீசெய்வை சாதகம் (கருணா)

3. அமலபாஸ்கரா கோடிசொரூபா
அகண்டசச்சிதானந்த பிரதாபா
நிமலவேத வேதாந்தநிரூபா
நிர்விகற்ப வரஞ்சனதீபா
நீதபூரண நிலயமஞ்சித
வேதநாயகன் இதயரஞ்சித (கருணா)

---

## 129. இராகம்—அமீர்கல்யாணி—ரூபகதாளம்

பல்லவி

நாதாகிடையாதா வரமேஜெகநாதா

அநுபல்லவி

பாதாரவிந்தம்நம்பும் பாவியமேதாவியாக்க (நாதா)

சரணங்கள்

1. எந்தநாளுமுடவிர்த்தி இல்லையேதிரிகரணசுத்தி
மந்தமானஎன்துர்ப்புத்தி மாறவேஅருளாயோசித்தி (நா)

2. அவமெனுமதயானைஎன்வசம் ஆகவேயருள்ஞானஅங்குசம்
சுகதுக்காதிகளில்சமரசம்தோன்றவே அருள்வாய்தயாரசம் (நா)

3. அபயவரதகாரநிர்வாக ஆபதபாந்தவஅருட்பிரவாக
விபவசார்வகௌமயோக வேதநாயகன்ஸ்வாநுபோக (நா)

---

## 130. இராகம்—அபூர்வம்

பல்லவி

சருவவிநோதா திருவருள்தாதா—சருவ

அநுபல்லவி

இரவுபகல் உனதிணையடிநாடவும்
தருமநிர்மலசுக சாகரம்ஆடவும் (சருவ)

சரணங்கள்

1. பசிதாகசோகரோக பாபசரீரம்
கசிவுறுமலஜல காமபண்டாரம்
சுகிஅறும்இதில்வினை தோஷம்-அபாரம்
நிசமயனேஅருள் நீபரிகாரம் (சருவ)

2. கடல்நடுவேகரை காணுதகாகம்
இடர்உறல்போலவே ஏதுன்நிர்வாகம்
மடம்அறஅருள்செய்நீர் மலபரிபாகம்
கடவுளேநாடினேன் கருணைப்பிரவாகம் (சருவ)

3. சுரகணசேவித துரிதவிநாசன
சருவதயாபர சாபவிமோசன
கருமநிவாரண கருணைவிலோசன
வரவேதநாயகன் மனகமலாசன (சருவ)

---

## 131. இராகம்-சரசாங்கி-ரூபகதாளம்

பல்லவி

எத்தனைகவிபாடினும் பலன்ஏதுமில்லையே

அநுபல்லவி

சித்தம்வாக்குக்கிரியை அத்தனையும்தினம்
உத்தமமார்க்கத்தில் ஒத்துநில்லாமல் (எத்த)

சரணங்கள்

1. சந்ததமும்யான் சுந்தரபாதத்தை
அந்தரங்கந்தனில் சிந்தனைசெய்யாமல் (எத்தனை)

2. மோகஞ்செயும் ஆசாபாசங்களென்னும்வி
சாகந்தனைச்சர்வம் நாசஞ்செய்யாமல் (எத்தனை)

3. கோபம்பொறாமைபொய் லோபம்மதமுதற்
பாபங்கட்கோமனஸ் தாபங்கொள்ளாமல் (எத்தனை)

4. மும்மலபாசத்தை நிர்மூலமேசெய்து
நிர்மலசித்தனாய் தர்மஞ்செய்யாமல் (எத்தனை)

5. தாயாகனும்வேத நாயகன்றினர்ச
காயன்றனைநெஞ்சுள் நேயம்பண்ணாமல் (எத்தனை)

---

### 132. இராகம்-ஹம்சத்தொனி-ஆதிதாளம்

பல்லவி

ஞானோதயம்வரம் அருளே

அநுபல்லவி

பானோதரம்பொருளே (ஞானோ)

சரணங்கள்

1. மாயாவிகாரசெகமே தேயாமல்அருள்சுகமே
தூயர்நேசனே ஸ்வயம்பிரகாசனே
தீயர்நாசனே சித்விலாசனே (ஞானோ)

2. தேகாபிமானம்உறவே யோகாநுசாரம்உறவே
பாகம்நீட்டுவாய் பாதம்நாட்டுவாய்
மோகம்ஓட்டுவாய் முத்திகாட்டுவாய் (ஞானோ)

3. ஆதாரம்எதுமிலையே பாதாரவிந்தம்நிலையே
போதநாயகா புண்ணியஆயகா
வேதநாயகா விமலதூயகா (ஞானோ)

---

## 133. இராகம்-தீரசங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி

ஆதிமூலனே நீதிநூலனே நித்ய

அநுபல்லவி

வேதபோதசாதகம்பெற நீதயைபுரிவாய்நித்திய (ஆதி)

சரணங்கள்

1. திட்டமாகமாயைக்கே அஷ்டதிக்கும்விஜயமாநான்
துஷ்டன் ஆதலால் உனக்கும்என்கிட்டவரப்பயமா
கெட்டஇதயமே அதில்கஷ்டம்உதயமே
சிஷ்டரோடணைக்கூட்டிஞானநிஷ்டன் ஆக்குவாநித்திய (ஆதி)

2. துணைஉன்பாதஇணையலாது சொல்லவேறுண்டோ [டோ
இணையிலாயொரு திணையிலாய்தெய்வம் எனக்குத்தான்இரண்
குணம்தருவாயே அருள்மணம்தருவாயே
உணரொண்ணாதநினதுசேவைபுணரவேஅருள்வாய்நித்திய ()

3. மனையைச்சுத்தஞ்செய்தினிதுறல்மனிதர்க்கும்சகசமே
நினதகமெனும் எனதுநெஞ்சம்நிதமலவசமே
புனிதம்செய்வாயே அதில்இனிதகர்வாயே
தநயன்வேதநாயகனுக்குன் தரிசனமருள்வாய்நித்ய (ஆதி)

## 134. இராகம்-பியாகு-ரூபகதாளம்

பல்லவி

பிக்ஷைஅருளாயோ ஞான

அநுபல்லவி

அக்ஷயநிர்மல லக்ஷணனேஜீவ
ரக்ஷணனேஅதி பக்ஷமுடன்ஞான (பிக்ஷை)

சரணங்கள்

1. சத்தியுமாறுத புத்தியும்ஓயாத
பத்தியுமெய்ஞ்ஞான சித்தியும்ஓயாத (பிக்ஷை)

2. நேசருடன்சகவாசமும் ஞானப்பிர
காசமும்என்விசுவாசமும்நேசமும் (பிக்ஷை)

3. தானம்பொறைஅருள் வானம்இதாபி
மானம்நிதானமும் மோனமுந்தியானமும் (பிகைக்ஷ)

4. பூதமெல்லாம்விபரீதம்உருமலே
ஆதரவுசெய்யும் வேதநாயகனே (பிகைக்ஷ)

---

135. இராகம்-சௌராஷ்டிரம்-சாப்புதாளம்

பல்லவி

இந்தமனம்-கெட்டதையா
பந்தவலைப்-பட்டதையா (இந்த)

அநுபல்லவி

சந்ததம் புண்ணியந்திரண்ட
சுந்தரதேகர் நான்கொண்ட (இந்த)

சரணங்கள்

1. சொன்னபடி கேளாச்சண்டி
தோஷமூட்டை தூக்குவண்டி
உன்னிடம்வரவே நொண்டி
ஓடும்விஷயத்தை அண்டி (இந்த)

2. இதரர்வாழக்கண்டால் வாட்டம்
எவருங்கெட்டாலோ கொண்டாட்டம்
மதனநெருப்புக்குக் காஷ்டம்
வாயுவினும் வேகம் ஓட்டம் (இந்த)

3. சுகதுக்கபேதம் போதிக்கும்
சூழ்நலமெல்லாம் பேதிக்கும்
பகல் இரவென்று சாதிக்கும்
படும்விஷம் உண்டு சோதிக்கும் (இந்த)

4. காடுங்கரையும் சஞ்சாரம்
காமப்பசாசுக் காகாரம்
நாடும்பிரபஞ்ச வியாபாரம்
ஞானம் இதற்கெட்டாத தூரம் (இந்த)

5. பாதகங்கட்கெல்லாங் குரு
பாசம்விளைவிக்கும் எரு
ஏதுவில்லா விஷதரு
எனக்கனுகூல சத்துரு (இந்த)

6. பஞ்சபூதாதி நிர்மாணு
பக்தர்கள் இதயவாணு
விஞ்ஞையாம் சாஸ்திரபுராணு
வேதநாயகம் பிரமாணு (இந்த)

---

136. இராகம்-மனோகரம்-திரிபுடைதாளம்

பல்லவி

எந்தையே-உனக்கும்-அடியேனுக்கும்
எத்தனை-பேதம்—ஐயா (எந்தை)

அநுபல்லவி

சந்ததசர்வ சாம்பிராஜ்யபிரபுத்துவ
சாசுவதமே தவமே தவ மகத்துவ (எந்தை)

சரணங்கள்

1. தேவனீசகல புவனேசன்
சிறியனுன் உன்தன் தாசானுதாசன்
காவலனுனநீ ஸ்வயம்பிரகாசன்
கசடனுன் அந்த கரப்பிரவேசன் (எந்தை)

2. சத்தியமாக நீதர்மசொரூபி
தாரணிமீதிலே நான்பெரும்பாபி
நித்தியனுன நீசுத்த அரூபி
நிச்சயமாக நான்மெத்தக்குரூபி (எந்தை)

3. சமமில்லாதநீயே மலரகிதன்
சாமிநான் உலகில் மலசகிதன்
விமலனேநீபல பிராணிகள்விகிதன்
வேதநாயகனேநான் எவர்க்குமேஅகிதன் (எந்தை)

---

## காலை ஸ்தோத்திரம்

137. இராகம்-தேசிகதோடி—ஆதிதாளம்

பல்லவி

உனக்கேநமஸ்காரமையா-இடர்
ஒன்றும்வாராமலே-நன்றுசெய்தாயே (உனக்கே)

அநுபல்லவி

தனக்கோர்நிகர் என்றுமிலாத
தயாபரனுன பராபரனே (உனக்கே)

சரணங்கள்

1. நேத்திரங்களைநீயெம் மாத்திரமுமூடாமற்
காத்திருந்தாயெனை இராத்திரிமுழுதும் (உனக்கே)

2. சத்துருபயமின்றி நித்திரைசெயவெனைப்
பத்திரமாயுன்கையில் வைத்திருந்தாயே (உனக்கே)

3. மூர்க்கும்அரவம்விஷ ஜெந்துக்களால்அபாயம்
வந்துகொடாமலேகா பந்துசெய்தாயே (உனக்கே)

4. தீயும்வெள்ளமும்காற்றும் பேயும்விலங்கும்பல
நோயும்வாராமற்காத்தாய் தாயும்தந்தையும்போல (உனக்கே)

5. நாங்களோர்தடையின்றித் தூங்கஇராமுழுதும்
வீங்கிருட்போர்வைதனைத் தாங்கினின்றாயே (உனக்கே)

6. இருட்டுமாறிவிடியும் பொருட்டுநீபுவிதனை
உருட்டிஇராமுழுதும் புரட்டினாய்தாயே (உனக்கே)

7. பூதநாயகனேபிர போதநாயகனேசங்
கீதநாயகனேநல் வேதநாயகனே (உனக்கே)

### 138. இராகம்-கமாஸ்-ஆதிதாளம்

#### பல்லவி

சருவஜீவாதார-பரனே நமஸ்காரம்-சாக்ஷாதிவகனே நின்
தயவினுக்களவிடொணுதே-பரிஷ்காரம்

#### அநுபல்லவி

கருணம்பரகுண கர்த்தவ்யனே-ஞான
திருவிலாசமறையின் தெளிவேபூரண த்யான (சருவ)

#### சரணங்கள்

1. எந்தத்தறியினிலுங் காத்தருள்புரிதேவே
எல்லாமுணர்ந்தருளீயும்
ஏகவைபோகனே மாசிலாமெய்க்கோவே
சந்ததவம்வந்தடுக்கும் சிந்தையனைத்துந்தீர்த்த
சுந்தரசுகுணமலி துத்யநின்விழிபார்த்த (சருவ)

2. பாழுலகிடுத்தெந்தனை வாதித்திடுங்கோரம்
பரிபூர்ணக்ருபையாலித்து
பாதுகாத்தருளதை தந்தேயுபகாரம்
தாழும்படிசெய்பல சதிசற்பனைகள்நாளும்
தானடையாமலாண்டாய் தயவதுவோவிலாசம் (சருவ)

3. இருள துமாறிதிங்க ளவன்ஒளியைத்தாவே
இமையதுமூடாமற்காத்தனை
இடர்தரும்சத்துருவோடு பல்விஷம் அண்டாமற்காத்த இறையே
கருத்துக்கெட்டாதவெல்லாம் கருதிசிந்தனைசெய்த
கனசுகமேமெய்வாழ்வே கலங்காதெனக்குள்உய்த (சருவ)

4. வாதும்பற்பலசூதும்காதக மெல்லாம்துரந்த்ரா
வள்ளலாய்க்கிருபைக்கண்பார்த்த
மாசிலாதபரனே வல்லவனேநிரந்தரா
வேததாயகன்மனம் போதநாயகனே துதி
விபூதர்ப்பரவிதொழும் விமலனேயருளகதி (சருவ)

---

## 139. இராகம்-தோடி-ஆதிதாளம்

### பல்லவி

ஆளாயோஎனையே-நம்பினேன்நெடு
நாளாகஉனையே (ஆளா)

### அநுபல்லவி

நீளும்புவனாதாரா-நேயருக்குபகாரா
நிகரறும்இகபர சுகமருள்வரதா
அகம்அறுசுகுணர்கள் புகள்அநவரதா (ஆளா)

### சரணங்கள்

1. எத்தனைபதங்களுக் கெடுப்பேன்கற்பனைநிதம்,
எல்லாஞ்செலவாய்ப்பாட்டுக் கினிமேல்இலைஆஸ்பதம்
அத்தனேஇரங்கிநீ அருள்வாய்பரமபதம்
அன்றேழ்பழம்பாட்டன்றி அறியேனுன்புதுப்பதம்
அல்லல்வினையகல நல்லவரந்தந்தெனை ஆளுவாய்அரு
ளல்லவெனிற்பதங்கள்சொல்ல நல்வாக்குதவிமூளுவாய் கண
அகணித-சுகுணபிர-முகபரமேகா
ஜெகமயல்-அகலமெய்-திகழ்உபதேசா (ஆளா)

2. கனியிலால்மரத்துக்குப் பலனுண்டோஅதுபோல
காசினிமீதடியேன் பேசினநிதிநாலே
இனியபன்பிறருக் கீயினும்அதனாலே
எள்ளளவுநலந்தான் எனக்குண்டோபுவிமேலே
இலக்கஅந்நூலின்மிசைவிலக்கிய தூர்க்குணங்கள்யாவுமேவெகு
கலக்கமுறநான்மனமலர்க்கண் அநுதினமுமேவுமே-என்தன்
இதய-மதயமலை-முதல்அறநீக்கி
நிதம்நிதம்-உனதிரு-பதமலர்தேக்கி (ஆளா)

3. ஓங்கயிலாண்டகோடி தாங்கிடும்பரிசன்னியா
உத்தமமூர்த்திதா சுத்தபிரமசைதன்னியா
நீங்கருமாமகிமை வீங்கிவளர்செயஜன்னியா

நீதநெறிவிலகுபாதகம்அற அறனூட்டுவாய்-பெருங்
கோதகல்இகபரசாதக ஞானநிலைகாட்டுவாய்-அரு
நிதிபர-கதிவயனும்-விதிஉபதேசா
துதிசெய்வேதநாயகன்-மதிஅபர்நேசா (ஆளா)

### 140. இராகம்-பைரவி—அடதாளம்

பல்லவி

நெடுநாள்நம்பினேனையா-நீனிலத்திலுந்தனைமெய்யா
நின்னருள் புரிந்தாளையா
நிபுணருளத்தேதாங்கும்-நித்தியானந்தபரனே
நித்திரையினுமறவா-பத்திகொண்டேன்கரனே (நெடு)

அநுபல்லவி

படவியுமுளவியாவும் புரந்தவனேமெய்போதா
புகலொணுஞானமிழ்தே பூசுரர்துதிநாதா
திடமுஞ்செய்வாதனைத்தும் தீர்த்திடுவோனேநீதா
தினமும்நின்கழலை சிந்தித்தேன்தெரியாதா (நெடு)

சரணங்கள்

1. கருணைவாரிதியேமா காருண்யசீலனே
ககனமெல்லாம்பணிசெய் கமழுமறைநூலனே
அருணோதயனேசுந்தர அபாஞ்சிதமூலனே
அழகுநின்பதங்காண ஆசைகொண்டேன்பாலனே (நெடு)

2. எல்லோரும்உணர்ந்தோனீயே எங்குமநிறைந்தநீயே
இயாவும்சிருஷ்டித்தோனீயே காந்துளத்தோனுநீயே
வல்லபகாப்பொருள்நீ மயல்தவிர்ப்போனும்நீயே
மஞ்சுரும்பதங்காண மகத்வஆசையும்நீயே (நெடு)

3. வேதநாயகன்மன வியாபகனேவினோதா
விண்ணவர்பரவிய விமலனேகுணநீதா
பாதமேகதியென பற்றியனந்தகாலம்
பணிந்தேன்நினைந்தேன்திவ்ய பரனேவிசாலம் (நெடு)

## ஈசுரவருடத்துப் பஞ்சத்தைப்பற்றிப் பாடியது

141. இராகம்-உசேனி-திஸ்ரஜாதி-மட்டியதாளம்

பல்லவி

பஞ்சம்தீர்ஐயா-உனையன்றித்
தஞ்சம்ஆர்-ஐயா (பஞ்சம்)

அநுபல்லவி

வஞ்சகமேகம் உலோபர்கள்போலே
மண்ணில்மழை பொழியாமையினாலே
சஞ்சலமாகித் தளர்ந்தோமென்மேலே
சாமிகதிஉன் தன்-தாமரைக்காலே (பஞ்சம்)

சரணங்கள்

எட்டுநாள்பத்துநாள் பட்டினியோடே
இடையிலேகந்தை இருகையில்ஓடே
ஒட்டிஉலர்ந்தஉடல் என்புக்கூடே
ஒருகோடிபேர்கள் வசிப்பதுகாடே
ஊரும்இல்லாமல் குடிக்கத்தண்
ணீரும்இல்லாமல் அன்னமெனும்
பேரும்இல்லாமல் பசிதீர்க்க
பாரில்அனேகர் பரதேசிஆனரே
ஊரில்அனேகர் உயிர்மாண்டுபோனாரே (பஞ்சம்)

3. தாரங்களையே புருஷர்கைவிட்டார்
தந்தைதாய்பிள்ளைகளை விலையிட்டார்
வேறும்இலையுங்கிழங்கும் சாப்பிட்டார்
வெறுங்கையராய்வெளியே புறப்பட்டார்
வேலியும்அற்றார் பெண்சாதிகள்
தாலியும்விற்றார் வேலைசெய்து
கூலியும்பற்றார் பலபல
சோலிகள் உற்றார்
தேளும்எலும்புமாய்த் தோன்றியேசோம்பினார்
பலரும்தாய்முலைப்பால் அற்றுத்தேம்பினார் (பஞ்சம்)

3. பஞ்சம்இதுபோலக் கண்டதில்லையே
பலபேர் அடுப்பில் வையார்கள் உலையே
நஞ்சம்போல்நாட்கு நாள்ஏறும்விலையே
நாங்கள் படுந்துன்பம் நாணூறுமலையே
நரர்கள்மெய்வாடி மனமிக
உருகித்தள்ளாடிக் கண்ணீர் ஆறாய்ப்
பெருகியேஓடிப் பிச்சைகேட்க
வருபவர்கோடி
இரவுபகல்எங்கும் ஏழைகள் சத்தமே
பரனேகலியொடு பண்ணினார்யுத்தமே (பஞ்சம்)

4. ஏரிகுளம்நதியாவும் நீர்கண்ட
ஏகமாக்கோடைக்கனல் எங்குமண்ட
சேரிமாடாடுகள் செத்துப்போய்வெண்ட
ஜெகமுழுதும் உதராக்கினிஅண்ட
தீனர்கள்நாட அவர்களை
ஈனர்கள் ஜாட தங்கள்கத
வானைதமூட அதுகண்டு
மானிகள்வாட
மேனிகுலைந்து மெலிந்தாரே இப்படி
கோன்உனையன்றிக்குடியாவதெப்படி (பஞ்சம்)

5. மண்ணில்அனேகர் என் கண்ணின்முன்மாய்ந்தார்
மரஞ்செடிபுல்லையு மாடுபோல்மேய்ந்தார்
எண்ணிலாப்பேர்கள் சருகுபோற்காய்ந்தார்
இளைத்துக்களைத்துத் தவித்துடல்ஓய்ந்தார்
ஏங்கிடுவாருமகளைகொண்டு
தூங்கிடுவாரும் அன்னம்உண்ண
வாங்கிடுவாரும் உடன்உயிர்
நீங்கிடுவாரும்
ஈங்கித்தவண்ணம் இருண்டதாமேதினி
தாங்கும்வேதநாயகா தஞ்சம்எதினி (பஞ்சம்)

## ஹிதோபதேசக் கீர்த்தனைகள்

## கடவுளைத் தியானிக்கும்படி வற்புறுத்தல்

### 142. இராகம்-குந்தளவராளி-ஆதிதாளம்

பல்லவி

மனமேநீ-ஈசனுமத்தைவாழ்த்துவாய்-தினம்
வாழ்த்துவாய்

அநுபல்லவி

அனவரதமும்நீ அரும்பதம்பாடிக்
கனசுகமேவிடக் கலந்துகொண்டாடி (மனமே)

சரணங்கள்

1. வம்புவார்த்தைகளே பெரும்பாவம்
வாய்க்கும்சேதமல்லால் என்னலாபம்
எம்பிரான்திருமகிமைப் பிரதாபம்
எடுத்துப்பேசுவது சத்காலக்ஷேபம் (மன)

2. ஏகமாகஉள் ளுருகியேபரிய
இருகண்ணானந்த பாஷ்பங்கள்சொரிய
தேகபரவசம் தாயன்புவிரிய
சிரகராதிகள் அஞ்சலிபுரிய (மன)

3. கரும்புதின்னக் கைக்கூலியும்வேணோ
கற்கண்டோஅமுதோ பசுந்தேனோ
விரும்பும்பிரமானந்த மேயதுதானோ
வேதநாயகன்பேர்க் கிணைசொல்லலாமோ (மன)

---

## இதுவும் அது

### 143. இராகம்-அடாணா-ஆதிதாளம்

பல்லவி

மனமேநீமறவாதே-ஐயன்பதத்தை

அநுபல்லவி

கனவிலும் நிதமுறு நனவிலும்பலபல
நினைவினும் ஒழியாமல் அனவரதமுமே (மனமே)

சரணங்கள்

1. மண்ணுஞ்சராசரமும் விண்ணும்படைத்தளித்துநீக்கும்
 பராபரன்தன்
வண்ணமலர்ப்பதத்தைக்கண்ணும்பொழுதில்இன்பந்தேக்கும்
 ஆசையினாலே
உண்ணும்பொழுதும்வேலை-பண்ணும்பொழுதும் ஒன்றை
எண்ணும்பொழுதுந்-துன்பம்-நண்ணும் பொழுதுமே (மன)

2. கல்லும்பெருமரமும் புல்லும்புனமுமேசஞ்சாரம்
 செய்யுமந்திபோய்
தில்லும்புல்லும்திரியாவரமுஞ் செய்தென்னசாரம்
 வெளியிதேதான்
செல்லும்பொழுதும்-வார்த்தை-சொல்லும்பொழுதும்-பகை
வெல்லும்பொழுதும்-பின்னும்-அல்லும்பகலுமே (மன)

3. அஷ்டதிசையும்ஓடிக் கெட்டலைந்தோம்புவோம்சரீரம்
 இருப்பிடத்தை
விட்டகலாமல் தியானநிஷ்டைசெய்வதில் என்னபாரம்
 பலவியாதி
குஷ்டம்வந்தாலுந்-துரைப்-பட்டம்வந்தாலும்-பெரும்
கஷ்டம்வந்தாலும்-பிறர்-வெட்டவந்தாலுமே (மன)

4. கெடுக்கும்மகாவினையை ஒடுக்கும்வேதநாயகனுமம்
 துயர்வராமல்
தடுக்கும்இகபரமும் கொடுக்குந்தினமும் உண்டுக்ஷேமம்
 நித்திரைசெய்யப்
படுக்கும்பொழுதுந்-துகில்-உடுக்கும்பொழுதும் ஒன்றைத்
தொடுக்கும்பொழுதும்-சுகம்-அடுக்கும்பொழுதுமே (மன)

---

## 144. இராகம்-கல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

இனியாகிலுமே-ஐயனை-நினையாயோதினமே
இகபரசித்திபெறவே

அநுபல்லவி

தனியிளம்பருவமுந் தாண்டிப்போனேமே
பனைபோல்வளர்ந்து கிழப்பருவமானேமே (இனி)

சரணங்கள்

1: ஆஞ்சக்கொருகறுப்பு மயிரேனும்இலையே
ஐயையோகொக்குப்போல் நரைத்ததுதலையே
காசுக்குதவாக்கிழ மென்பதுநிலையே
கன்னியர்க்கும்இனிநாம் கசக்கும்வேப்பிலையே (இனி)

2. கண்கள் இரண்டும் மூக்குக்கண்ணாடிதேடும்
காலூசலாடும்ஓர் கழியைக்கைநாடும்
தண்கொள்ளும்வேரற்றுத் தந்தங்கள்ஆடும்
தடுத்தாலும்நில்லாமல் யௌவனம்ஓடும் (இனி)

3. பசிவந்தபின்னெல்லை விதைப்பதுமதியோ
படுந்தாகம்வந்தபின் வெட்டுதல்நதியோ
விசயஞ்செய்திடச்சாகுங் காலமேதகியோ
வீணேயுனக்குக்கௌடும் போகச்சம்மதியோ (இனி)

4. காலந்தனக்கென்ன செய்தோம்அபகாரம்
கனத்தைதஆயுசைஅநு தினஞ்செய்யுஞ்சோரம்
மேலும்மேலும்உடலில் விளைக்கும்விகாரம்
வேதநாயகன்சொல்லே வேதாந்தசாரம் (இனி)

---

145. இராகம்-சஹாணு-ஆதிதாளம்

பல்லவி

மறவாதே-கருணாம்பரனடியிணை-மறவாதே
மாசிலாதபரனை-நேசக்ருபாகரனை

அநுபல்லவி

நிரந்தரநிராதார நின்மலவடிவினை
நித்யானந்தவாழ்வினை நிகரில்முடிவினை (மறவா)

சரணங்கள்

1. பஞ்சவேடர்மயலில் தஞ்சமென்றேபுகுந்து
சஞ்சலமாம்பிறவி தன்னில்உவந்து (மறவா)

2. உலகவ்யாபாரத்தில் உன்மத்தம்போலலைந்து
நலமிலாகுணத்தினை நாடிமதிகுலைந்து (மறவா)

3. சகலசுகுணமலி சாஸ்விதபதந்தள்ளி
பகலந்தகன்போல்துள்ளி பாவந்தனைக்கையள்ளி (மறவா)

4. நிமைமூடாமல்காக்கும் நிமலனடியைத்தேக்கும்
சுமையாம்பிறவிபோக்கும் சுத்தமனத்தனுக்கும் (மறவா)

5. பாதகம்நிறைவாழ்வை பற்றிமயலோகொள்ளி
வேதநாயகன்குண வியாபகனைத்தள்ளி (மறவா)

---

## துர்க்குணங்களை வெளியிடல்

146. இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்

பல்லவி

நெஞ்சே-இந்தநாடெங்குந்தேடினும்
நீசர்நமைப்போலுண்டோ

அநுபல்லவி

அஞ்சாமல்நாளும் அகந்தைகள்நீடுவோம்
சஞ்சலப்பேயால் தலைசுற்றிஆடுவோம் (நெஞ்சே)

சரணங்கள்

1. தேகம்உயிர்முதல் யாவையுமேதந்த
தேவன்தனைமறப்போம்-கரு
மேகநிழல்போல் மறையும்பொய்வாழ்வை
விரும்பிநலந்துறப்போம்
மோகவிகாரத்தில் தடுமாறுவோம்
முன்னொன்றும்பின்னொன்றுமாகப் பொய்கூறுவோம்
ஏகமாய்எங்கும் பிறர்களைத்தூறுவோம்
எப்படிஐயையோ நாங்கரைஏறுவோம் (நெஞ்சே)

2. கோயில்குருக்கள் ஜெபதபம்யாவும்
கொடுவிஷம்போல் வெறுப்போம்தினம்
நேயமதாகவே தூயமறைசொல்லும்
நீதிகளைமறுப்போம்
ஆயிரம்பாவம் அடிக்கடிபண்ணுவோம்
அன்னியமாதரை ஆசையாய்எண்ணுவோம்
ஈயாஉலோபகுணத்தையே நண்ணுவோம்
ஏழைபசியோடிருக்க நாமுண்ணுவோம் (நெஞ்சே)

3. உள்ளபடிநமக் கெள்ளளவென்கிலும்
உத்தமம்தான் இலேயே-பாவ
வெள்ளம்நிறைந்திடும் பள்ளமதனிலே
விழுந்துவிட்டோம் நிலேயே
வள்ளலைப்போல்வெறு மாயாகூத்தாடுவோம்
வந்தஎளியர்க்கு வாசலைமூடுவோம்
உள்ளேபகையும் உதட்டன்பும்நீங்குவோம்
ஊரைஅடித்தே உலையிலேபோடுவோம் (நெஞ்சே)

4. உற்றகலையெல்லாம் கற்றமெய்ஞ்ஞானிபோல்
ஊரைமயக்கிடுவோம்-பழு
தற்றமெய்ஞ்ஞானத்தில் பற்றுதலின்றி
அலையஉடம்படுவோம்
மற்றவரைக்கெடுத்துப் பழிவாங்குவோம்
வாழ்வோரைக்கண்டால் வயிறுப்பிவீங்குவோம்
நற்றவஞ்செய்யாமல் நாளெல்லாம்தூங்குவோம்
நல்வேதநாயகன் பாதத்தைநீங்குவோம் (நெஞ்சே)

## 147. இராகம்-பியாகு-அடதாளம்

பல்லவி

பாழ்மனமேயுன்னைப் போலொருபேதை
பாரில் காணேனே-உன்தந்த்ரம்
பற்றும் வேணேனே

அநுபல்லவி

வாழ்நாளனைத்தும் வீணிற்கழித்து
மமதைப்பூண்டாயே தினம்
சூழ்ந்துமேகொல்லும் பஞ்சவேடரின்
சினத்தி லீண்டாயே வழுவி
தீதில் மாண்டாயே ஐயா (பாழ்)

சரணங்கள்

1. பொய்க்குருக்கள்போல் போதனைச்செய்து
புகழ்ச்சி கொண்டாயே உனக்குள்
புத்தியைநிலைநிறுத்தாமலேவீண்
புன்மையில் நின்றாயே மாய்கை
போக்கிறையோ பேயே ஐயோ (பாழ்)

2. வள்ளலுக்குநிக ரெனப்பொய்மொழி
வசனித்தாட்டுவாய் ஞான
வாக்கியந்தனை பலர்க்குமூட்டியும்வீண்
வழியில் பூட்டுவாய் குணம்
மாறியெனை யோட்டுவாய் ஐயோ (பாழ்)

3. எண்ணித்தொலையா பாவஞ்செய்யினும்
ஏங்கிநினைந் திலையே தனத்தால்
இறுமாப்பினைக் கொண்டலைந்தென்றும்
எங்கு மலைந்தாயே உனைப்போல்
எவருளர் சொல்வாயே ஐயோ (பாழ்)

4. யாவுந்தந்தாள் பரனடித்தொழ
யாதும் கருதிலையே புல்லர்மேல்
பாவியசைத்துப்பாடி எக்களித்துக்கொண்ட
பாவமோ மலையே இதற்கு
பரிதாப மிலையே ஐயோ (பாழ்)

5. தீதிலாதசின் மயபரமானந்தம்
தேடிபணிந் திலையே ஞான
வேதநாயகன் மனங்கமழ்தேவை
வேண்டிநினைந் திலையே பவமற
விரும்கனிந் திலையே ஐயோ (பாழ்)

---

## மனமயக்கந் தவிர்த்தல்

148. இராகம்-யதுகுலகாம்போதி-அடதாளசாப்பு

பல்லவி

நீமலைக்காதே நெஞ்சே-நீமலைக்காதே

அநுபல்லவி

நேசத்துடன்ஐயன்-நாமத்தைப்போற்றிடில்
க்ஷேமத்தைக்கொள்ளுவோம்-காமத்திலேசிக்கி (நீமலை)

சரணங்கள்

1. மோகத்தையும்அவி வேகத்தையும்தரும்
போகத்தையும்உத்தி யோகத்தையும்நம்பி (நீமலை)

2. ஆட்டையும்மங்கையின் மாட்டையுங்கட்டிய
வீட்டையுமுன்கட்ட கேட்டையுமேஎண்ணி (நீமலை)

3. கீச்சுக்கீச்சென்றோடும் மூச்சுப்போனால்ஒரு
பேச்சுக்காகாமலப் பூச்சுக்குழல்நம்பி (நீமலை)

4. நாட்டைக்கொள்ளையிடும் வேட்டைக்காரன்நமன்
காட்டைக்கலைத்துயிர்க் கூட்டைக்கொள்வான்ஐயோ (நீமலை)

5. கேட்டைத்தருஞ்சோற்று மூட்டைதனைஎன்ப
தோட்டைப்பாண்டத்தைக் கற்கோட்டையெனநம்பி (நீமலை)

6. கொண்டையிலேரத்நத் தண்டையிலேவிழிக்
கெண்டையிலேமதன் சண்டையிலேசிக்கி (நீமலை)

7. சேலையென்றும்முத்து மாலையென்றும்தினம்
வேலைகொள்ளும்பெண்கள் காலைத்தழுவியே (நீமலை)

8. சொத்துதமக்கென்று கத்துவதன்றிஆ
பத்துக்குதவாத புத்திரரைநம்பி (நீமலை)

9. தாயகனைவேத நாயகனைவிட்டு
மாயவலைபட்டுத் தூயநெறிகெட்டு (நீமலை)

## நற்புத்திகூறல்

149. இராகம்—சுருட்டி—திரிபுடை

பல்லவி

போனதுபோகட்டும் நீஇனியாகிலும்
புத்தியாய் வாழ்மனமே

அநுபல்லவி

ஞானமில்லாத நடக்கையைத்தொட்டாயே
நம்பினஎன்னை நட்டாற்றிற்கைவிட்டாயே (போனது)

சரணங்கள்

1. எத்தனைநாள் இருந்தாலும்-ஒருநாள்
இறப்பது சத்தியமே-அப்போ
தென்னவரும்புண்ணிய பாவம்அல்லாமல்மற்
றெல்லாம் அநித்தியமே
பீத்தஉடம்பை வளர்த்திடச்செய்கிறாய்
பிரேதவைத்தியமே-என்றும்
பேதமில்லாப்பரன் பாதம்பணிந்தோர்க்குப்
பேரின்பம் சாதித்தியமே

பந்தர்சங்கத்தைநீ நித்தம்பிரிந்தாயே
பங்கம்புரிந்தாயே எங்குந்திரிந்தாயே (போனது)

2. தன்றாரம்அன்றிப் பரதாரந்தாய்க்குச்
சமானம்இதுநேரே—கெட்ட
தாசியைக்கண்டால் நமஸ்காரஞ்செய்துநீ
தப்பவழிபாரே
இன்றுநாளையென்று நாள்போக்காமல்வினை
இக்ஷணமேதீரே—பின்னும்
எந்தஉயிரையுஞ் சொந்தஉயிரென
எண்ணித்தயைகூரே
என்றும்பணப்பேய் தனைநீகும்பிட்டாயே
ஏச்சுக்குட்பட்டாயே சீச்சீநீகெட்டாயே (போனது)

3. நாதனைப்பேசிடும் நாவினால்அற்ப
நரஸ்துதிபாடாதே—நாளும்
நானெனதென்றபி மானம்பிடித்துநீ
நாடெங்கும் ஓடாதே
சாதகபாதகம் என்னவந்தாலும்
தவம்விடக்கூடாதே-கோடி
தர்மம்உனக்குண்டு கர்மம்வினைக்கும்
தனத்தினைத் தேடாதே
போதவேதநாயகன் தாள்விடுத்தாயே
பொன்னைஅடுத்தாயே என்னைக்கெடுத்தாயே (போனது)

---

## நித்தியானந்தந்தேடல்

### 50. இராகம்—ஹிந்துஸ்தான்—காப்பி—ஆதிதாளம்

பல்லவி

நித்தியானந்தத்தைநாடு-பர
நின்மலசுகந்தேடு-மனமே

அநுபல்லவி

சத்தியமார்க்கந் தனிலேகூடு
சற்சனசங்கத் துடன்உறவாடு (நித்தியா)

சரணங்கள்

1. இந்திரஜாலம் உலகவைபோகம்
இன்றைக்கிருப்பதுவோ சந்தேகம்
அந்தரமின்னல்போல் அழியுந்தேகம்
ஐயோஅதனுடன் உனக்கென்னஸ்நேகம் (நித்தி)

2. தனதானியமுத லானசம்பத்து
சாசுவதமோஅதற் காயிரந்தத்து
தினமுங்கவலை விளைத்திடும்வித்து
சீச்சீ அவனை விரும்பல்விபத்து (நித்தி)

3. மெய்யேஒன்றுக்கும் உதவாப்பண்டம்
மிருகாதிகள்சூழ் மாமிசகண்டம்
பொய்யோஇதற்கிங்கு நித்தியகண்டம்
புண்ணியஞ்செய்யுனக் காயிரந்தண்டம் (நித்தி)

4. காண்பதெல்லாம்நிலை யல்லஅநித்தியம்
காயம்இறங்கிட வேண்டும்அகத்தியம்
வீண்பெருமாள்மீதுனக் கென்னவைத்தியம்
வேதநாயகன் சொல்லேசத்தியம் (நித்தி)

---

## 156. இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

மனமேநான்-சொல்வதைக்கேள்-வீண்
மாயச்செருக்கிலே-மலைந்துகுலைந்துகெட்ட
மனமேநான்-சொல்வதைக்கேள்

அநுபல்லவி

கனகமிராயுன்னை காட்டிலேமறைகிறாய்
காலங்கழித்துப்பொய்கண் கட்டுவித்தைசெய்கிறாய்
சினமதுமிகுந்துவீண் செய்கையிலுழல்கிறாய்
தெய்வதாபக்தியை சிந்தியாதலைகிறாய்
சீச்சீபுதவாது இதிலென்னசுகம்
மூச்சுப்போமுன்னேது தெய்வவிஸ்வாச

பேச்சைப்பயிலாதே தூ முடிவிலொன்றும்
ஆச்சர்யமில்லாது இதுகுணமாமல்
அலைந்துமதிகுலைந்து நிலைதவறியுழலும் (மனமே)

சரணங்கள்

1. காரணங்கடந்துநின்றுயே கணக்
கடங்காதீமைசெய்தாயே கடையில்விழிப்பாய்நீயே
கருத்தறியாதேன்பேயே
தாரணிமுழுதினும் ஆண்டிடநினைந்தாய்
தகைவிலாகுணத்தில் தழைத்துநீநனைந்தாய்
ஆரணநெறியெல்லாம் அறிந்தாற்போல்குனிந்தாய்
அற்பமுந்தெரியாமல் அறியாமல்பணிந்தாய்
ஐயோ இதென்னநன்மை இதையறிந்தால்
மெய்யாகவதின்மை வீணில்மயங்கி
செய்தாயேகோடிவன்மை ஆர்க்குதானேற்கும்
நெய்தாய்பவங்கள்பன்மை இனிதுணர்ந்து
நிமலனடிதுதிப்பாய்-விமலகுணங்கதிப்பாய் (மனமே)

2. செய்வதெல்லாம் பலதாத்ரமே-உனது
சிந்தைகளியாவும்வீணே ஜெனித்தாய்பூவினில்தானே
தெரியாபடிப்பாய் மந்த்ரமே
ஐவர்நிறைந்தகாட்டை அருமலையெனவெண்ணி
ஆசைபூண்டலைந்தாயே யதினுலேதினங்குண்ணி
வையகத்தாசையில் மலைத்தனையேபண்ணி
மாசற்றவெளியினில் மகத்வனைநிதமெண்ணி
உப்பும்வகையைத்தேடு உன்னை
உணர்ந்தால்சுகமோநாடும் இது
மெய்யல்லபொய்க்கூடு நம்பும்
வீணர்க்குமும்மலஓடு இதை
விட்டுமதியைநாடு-விபூதர் வாழ்வினில்நீடு (மனமே)

3. எத்தனைஉனக்குபோதிப்பேன்-இருது
எவ்வினையினைகெடுக்கும் இன்பவழியில்விடுக்கும்
எத்தகைமையாக சாதிப்பேன்
பித்துபிடித்தலைந்தாய் பேதைகுரங்கே
பிரபஞ்சவாழ்க்கையிற் சுகமுண்டோதிரங்கே

அத்தனைப்பணிந்திட வாசைகொண்டிரங்கே
அற்பபாவங்களுனை யணுகுமுன்னுரங்கே
சுத்தனடியோசிமை மாய
சுகத்திலேதனுகூலம் ஞான
பத்தரின்மறைமூலம் படித்தால்
பயனும்ஞானத்தின்பாவம் ஆதலால்
வித்தகன்கழலோசெந்தம்-வேதநாயகன்சொல்லந்தம் (மன)

---

152. இராகம்-யமுனகல்யாணி-ஆதிதாளம்

பல்லவி

நித்தியானந்தமேசொந்தம்-இதை
நினையார்க்குமுடிவில்-நிர்ப்பந்தம்
நிகரிலாபயம்பொரு-ளிணையிணை தினந்தொழு
நிபுணர்ப்பராவும்ஞான-நிமலன்பாதத்திற்கழு (நித்தி)

அநுபல்லவி

பத்தர்மனம்பரவும் பகரொணுயமனை
பாலித்தருண்மலியும் பாக்கியமாநயனை
சத்தசாகரமியாவும் தந்தவிற்பயனை
சதானந்தபூர்ணந் தருகும்பொற்புயனை (நித்)

சரணங்கள்

1\. உலகஞ்செய்திகமேதா மாயனென்றுரைப்பாய்
உத்தமர்பணிபதம் உசிதத்தால்நிறைப்பாய்
நலம்புகும்வகையினில் நாடியேகறைப்பாய்
நாடோறும்பகவானை நம்பிமயலைமறைப்பாய் (நித்)

2\. காமக்குரோதமதத்தை காட்டாமலடிப்பாய்
கர்த்தவ்யன்கழலுக்கே காலத்தைமுடிப்பாய்
க்ஷேமந்தனைவேண்டிடா தீயர்முன்னொடிப்பாய்
திவ்யரசக்யமுதை தேடியேகுடிப்பாய் (நித்)

3\. பொல்லாமயலனைத்தும் புறம்பேநீதள்ளு
புனிதமெய்ஞ்ஞானநெறி போற்றியுட்கொள்ளு
நில்லாகடந்தனை நிசமலவென்றெள்ளு
நிபுணர்பணிந்தநிலை நீபெறதுள்ளு (நித்)

4. பாவவழியகன்று பத்தியில்தேரு
பரமானந்தசந்தோஷம் பார்க்கவேகோரு
ஆவல்நிறையுலக நித்யமதைப்பாரு
அல்லாமல்கதிவேறு யில்லையெனமீது (நித்)

5. பாதகஞ்செய்யாத வகையதுநீதம்
பரவசங்கொண்டா லுண்டுசுகாதீதம்
வேதநாயகன் விளம்பினதுநற்போதம்
விதமறுந்தவர்க்கு என்வேறொருவேதம் (நித்)

---

## கள்ளஞானம்

153. இராகம்-இந்துஸ்தான்-காப்பி-ரூபகதாளம்

பல்லவி

புண்ணியம்போய்-பாபம்-மனமே
புரிந்தோம்நாம்--தினமே

அநுபல்லவி

திண்ணமாகக்குளிக்கப் போயெந்தன்மேலே
சேற்றைப்பூசிக்கொண்டு திரும்புதல்போலே (புண்)

சரணங்கள்

1. கையிலேநாம்பிடிப்பது ஜெபமாலை
கக்ஷகத்தில்வைப்பதுவோ கன்னக்கோலை
மெய்யாகத்தினம் படிப்பது தர்மநூலை
மேலுமேலும்நமக்கு துன்மார்க்கவேலை (புண்)

2. ஒருபெண்வேண்டாமென்று கொள்வோம்சந்நியாசம்
ஊரில்உள்ளபெண்கள் மீதெல்லாம்நேசம்
பருகப்பசியில்லாத போதுபவாசம்
பசித்தால்ஒருபானைப் பருக்கையும்நாசம் (புண்)

3. கடவுளைத்துதிப்பது போல்வாய்பாடும்
கண்ணுங்கருத்துங்கண்ட இடமெங்கும்ஓடும்
திடமாகக்கோயிற்குள்ளே தேகம்போய்க்கூடும்
சிந்தனைவெளியிலே திரிந்துதிண்டாடும் (புண்)

4. ஆன தலையில்வளர்ப்பது ஜடைமுடியே
அனுதினமும்கெடுப்ப தாவிரங்குடியே
தானம்பிறர் அறியக் கொடுப்பதோர்நொடியே
தனியேவந்தவனுக்குத் தான் தடி அடியே (புண்)

5. அடித்திடும்கொடுமையிற் புலிக்குநாமேலே
ஆகையினால்சனம் புலித்தோலே
நடித்திடும்குரங்கு நாம்சேஷ்டையினாலே
நமக்குள்ள குறைவு பின்புறத்தொருவாலே (புண்)

6. அங்கமெல்லாங்கரு மேகவியாதி
அதனைமறைக்கமெய்யில் அணிவோம்விபூதி
நங்கையாள் இல்லாப்பொருள் மனையாதி
நாம்துறந்தோம்நல்ல துறவறநீதி (புண்)

7. ஏகஅன்னம்தள்ளிப் பிடிப்போம்ஒருசந்தி
இதரபக்ஷணங்களால் நிறைப்போம்தொந்தி
தேகபடும்ஒடுங்கில் விரக்தியாம்பிந்தித்
திடமானால்நம்செய்கை சிரிக்குமேசந்தி (புண்)

8. உள்ளத்தின் அழுக்கை எந்நாளுமேகழுவோம்
உடலைக்கழுவநீரில் அடிக்கடிவிழுவோம்
கள்ளத்தனமாகச்சந் நிதிமுன்னே அழுவோம்
காசுக்குநாயையும் கைகட்டித்தொழுவோம் (புண்)

9. பசியில்லாதவர்க்குச் செய்வோம்அன்னதானம்
பசித்துவந்தோரைச் செய்வோம்அவமானம்
சுசியாகப்பிறர்க்குப தேசிப்போம்ஞானம்
துர்க்குணக்கடலிலே தினஞ்செய்வோம்ஸ்நானம் (புண்)

10. பெருமையாயணிவது காவிவஸ்திரமே
பிரதிஷ்டைசெய்வது தர்மசத்திரமே
பாவியநமது துர்க்குணசமுத்திரமே
பாடோம்வேதநாயகன் சரித்திரமே (புண்)

## 154. இராகம்-கேதாரகௌளம்-ஆதிதாளம்

பல்லவி

புண்ணியம்போல்பாபம்மனமே-புரிந்தனையேதினமே
புகழிதிலுண்டோ-சனமே
புகழ்ச்சியும்இகழ்ச்சியும்-பேதமறியாமலே
அகந்தைபிலிறுமாப்புற்-றலைந்தாய்தெரியாமலே (புண்)

அநுபல்லவி

கன்மவசத்தினாலே காயந்தனையறிந்து
கருதறியாதலைந்து கரணம்புண்ணாய்ப்பரிந்து (புண்)

சரணங்கள்

1. ஒன்பதுவாசலும்ஊத்தை இதைமறுத்திடவாசனை
ஊட்டிவைப்பாயேசோத்தை
ஒளியிருந்துமந்தகன் போலலைவாயேசேட்டை
ஒன்றுக்குதவாத உசிதமில்மண்கோட்டை-என்
எண்ணிக்கையில்லாமல் நல்லோர்க்கிடரென்றுமேபுரிவாய்
ஏதுமிலார்க்குதுரோகம் ஏந்நாளுஞ்செய்துதிரிவாய் (பு)

2. வையகத்தோர்காணநீர்பூசுவாய் வாயிலோஹீனசொற்களை
வழுத்திமலைத்துபேசுவாய்
கையில்செபமாலைகொண் டகம்வேறேசொல்லுவாய்
கழுத்தில்ஆரங்கள்பூண்டே கட்டுகதைபுல்லுவாய்-வைய
துய்யஞானங்குழகுமென்று சொல்கட்டியேயுகட்டி
தூயநெறிபோல்கெடுப்பாய் தொகையாயிரம்புகட்டி (பு)

3. பசியில்லாதோரை அழைப்போம் பசித்தவரைவெருட்டிமிகப்
பாதகஞ்செய்தே பிழைப்போம்
பரனின்நாள்ஒருபோது என்றுசொல்லியேபசித்தால்
பானைசோற்றையுமுண்டு பந்தடிப்போம்நிசத்தால்-பசி
விசனித்தோர்கள்தன்னை வேசாறிபல்கடிப்போம்
வேதநாயகன்சொல்லை வேண்டாதுயிர்மடிப்போம் (பு)

## பொருளாசையொழித்தல்

155. இராகம்-கனகவசந்தரம்—ஆதிதாளம்

பல்லவி

பொருளைவிரும்பவேண்டாம்-மனமே
பொருளைவிரும்பவேண்டாம்

அநுபல்லவி

ஒருவரிடமும்மில்லா தூரெங்கும்பறக்கும்
திருவேதநாயகன் சேவடிதுறக்கும் (பொருளை)

சரணங்கள்

1. பணமுள்ளவர்க்கு நமன்பயப்படுவானோ
குணமுடன்அவர்களைக் கும்பிடுவானோ (பொருளை)

2. தனவான்களைத்துயர் சாரஅஞ்சிடுமோ
தனசுகம்அவருடன் கலந்துகொஞ்சிடுமோ (பொருளை)

3. பார்க்கவொட்டாமலே பார்வையைக்கெடுக்கும்
வார்த்தைசொல்லாமலே வாயையுந்தடுக்கும் (பொருளை)

4. மண்டலத்தில்நமக்கு வயிறொருகுதிரா
கண்டபடிஉண்ண நாம்கபந்தனுக்கெதிரா (பொருளை)

5. ஊரில்நம்மிருப்பிடம் ஒருமுழமட்டே
பாரிலேநமக்கேன் பலமனைக்கட்டே (பொருளை)

6. உலகில்வயிறுநமக் குள்ளதுகாணே
மலைமலையாக்குவித்து வைக்குதல்வீணே (பொருளை)

7. சங்கையில்லாமற் பணந்தலைவெட்டும்ஒருவாள்
தங்கைவருவாள்பின்பு தமக்கையும்வருவாள் (பொருளை)

8. வித்தாரமாகப்பொருள் வேண்டுதல்தாழ்வு
செத்தால்தெரியுமே செட்டியார்வாழ்வு (பொருளை)

9. அருளுடன்ஏழைக் குதவாப்பணம்பிணமே
பொருள்அதைக்குழிவெட்டிப்புதைக்குதல்குணமே (பொருளை)

10. பூதமானாலும் உண்ணப்போதுமாகாணி
ஆதலால்நமக்கேன் ஆயிரங்காணி (பொருளை)

11. பெண்டைச்சேலைக் காரிதான்கிழவியாகாளோ
கொண்டைப்பூமுடித்திடும் குமரிசாகாளோ (பொருளை)

12. வெறுங்கழுத்தாயிருந்தால் விக்குமோதொண்டை
உறுங்கலைஅணிபோனால் உடையுமோமண்டை (பொருளை)

13. கடுக்கன்இல்லாவிட்டாற் காதுகேளாதோ
உடுப்புகள்இல்லாவிட்டால் உடம்புநீளாதோ (பொருளை)

14. கந்தலைஅணிந்தவள் கர்ப்பம்ஆகாளோ
விந்நகைஉள்ளவள் மெலிந்துபோகாளோ (பொருளை)

15. பொருந்தச்செலவிடாமல் புதைத்திடும்பணமே
இருந்தென்னபோயென்ன இதில்என்னமணமே (பொருளை)

16. நிதிவெள்ளியாதிகள் நிச்சயம்பண்ணே
புதையல்தன்னினமென்றுபுசிப்பாள்மண்பெண்ணே (பொருளை)

## செல்வச்செருக்கு

### 156. இராகம்-தேவமனோகரி-ஏகதாளம்

பல்லவி

வீண்கர்வம் ஏன்மனமே எனக்கு
வீண்கர்வம் ஏன்மனமே

அநுபல்லவி

காண்பொருள்சகலமுங் கடவுள்ஆதீனம்
கனதொண்டமாதுர தோட்டியுமெசமானம் (வீண்)

சரணங்கள்

1. நம்முடன்பிறந்ததுண்டோ உத்தியோகம்
நமக்குமுன்னேஅதுபலர் அநுபோகம்
அம்மஅதற்குக் காத்திருப்பார்அநேகம்
அனைவர்க்கும்உண்டு ராஜீகதெய்வீகம்(வீண்)

2. தாசிகள்போல்செல்வம் பலருடன்கூடும்
தனமிருந்தஇடத்தில் தரித்திரம்நாடும்
கூசாமல்யானையைக் கொசுகுமேசாடும்
குப்பைஉயர்ந்து கோபுரத்தைமூடும்(வீண்)

3. கனவில்கண்டகத்திரிக்காய் கறிக்காமோ
கல்லால்இரும்பால்காயங் கொண்டோமோ
தினம்அசையாமல்மண்ணில் வேர்கொண்டநாமோ
சினந்துநாம்சபித்திடில் திசையெல்லாம்வேமோ (வீண்)

4. தம்பொருளென்பர் மனைவியர்மைந்தர்பேரர்
தப்பினால்விடுவரோ தாயாதிக்காரர்
வெம்பிச்சமயம் பார்த்திருப்பார்சோரர்
மிச்சத்தைச்சுருட்டுவார் மேல்அதிகாரர் (வீண்)

5. இடையிற்கோவணமின் றிப்பிறந்தோமெய்யே
இறந்திடுங்காலத்தும் நாம்வெறுங்கையே
உடைமைநமதுசொந்தம் என்பதுபொய்யே
ஊரார்பொருளைநாம் சுமந்தோம்ஐயே (வீண்)

6. ஜெகமுழுதும்நமக்கு சர்வமானியமா
சிந்தித்தகாரியம்எல்லாம் ஜயமா
சுகதுக்கபேதம் இல்லாதிவ்யமயமா
துஷ்டன்இயமனுக்கு நமைக்கண்டால்பயமா (வீண்)

7. நீடுந்தங்கையுந் தமக்கையும்அதிநேசம்
நிதமுங்கைம்மாறிக் கொள்வார்அவர்வாசம்
சூடுண்டமாடுபோல் துள்ளல்ஆபாசம்
துள்ளினமாடுபொதி சுமக்கும்பிரகாசம் (வீண்)

8. தாய்வயிற்றில்இருந்து ஜனித்திட்டபோது
சட்டைதலைப்பாகுடன் நாம்வந்ததேது
மாயப்பிரபஞ்சத்தின் வாழ்வெல்லாஞ்சூது
மாவேதநாயகனை மறக்கலொண்ணாது (வீண்)

---

157. இராகம்-தன்யாசி-ஆதிதாளம்

பல்லவி

மனமேஉனக்கு-ஏன்கர்வம்-முடிவில்
வாய்த்திடுமோசொல்-தர்மம்-பாழ்

அநுபல்லவி

கனவிற்கண்டவுண்மையின் கதைபோல்முடியும்வாழ்வு
கனமிலையெனநம்பி காலங்கழித்திடில்தாழ்வு (மனமே)

சரணங்கள்

1. பொருளதுவும்மலையமோ-கம்பிடில்
புரை தவிர்த்திடும் நிலையமோ
கருணம்பரசுகுண — கர்த்தவ்யனடிதினம்
கவனியாதலைந்தாயே — காதகமுப்பசைமுனம்
தருணமறிந்துவரும் — தகைவிலா எமனின்சினம்
தணித்திடலாகுமோ — சஞ்சலநிறைகன (மன)

2. அத்தியைகொசுகு சாடிடுமே-உனது
அவபக்தியாவும் பொய்யாய்விடுமே
சத்தசாகரம்யாவும் — தந்தருள்செய்காரண
சருவாநுக்ரஹகுண — சாஸ்விதனும்பூரண
அத்தனடிநினையா — தகந்தைபூண்டாய் ஆரண
அந்தரங்கமறந்து — அலைந்தனையேஹீன (மன)

3. மோகப்பிணியதிலே நிலைத்தாய்-உன்னை
முழுதுணராமல் காலங்கழித்தாய்
யோக உத்தியோகமென — முற்றினும்வாடி
போகவத்தியாயத்தில் — மலைத்தனைநாடி
தேகம் நிலையென்றெண்ணி — தீங்கினுல்கோடி
செருக்கினிலுழன்றயே — திரமென்னநீடி (மன)

4. உண்டாகில்வருவார் பற்பலசுற்றம்-அதனை
உரைப்பதற்கியல் புண்டோசிற்றம்
கண்டவுடன்பணிந்து — காலைக்கும்பிடுவார்
காசிலாவிடிலோவீண் — கதைபுகன்றிடுவார்
அண்டர்க்கும்விசிதமாய் — ஆசீர்கூடுவார்
அநியாயமிதைக்கண்டு — அகந்தைகொண்டிடுவார் (மன)

5. தீததுநிறைந்தலைந்தாயே-உனது
செய்கையனைத்துணரில் மாயே
போதனுசக்தியை — போக்கடித்திடுவாய்
பொல்லாபஞ்சவேடரால் — பொழுதைநோக்கிடுவாய்
வேதநாயகன்சொல்லை — விடிலோநீகெடுவாய்
விமலனடிமறந்தால் — வேதையுட்படுவாய் (மன)

## உலகவாழ்வை வெறுத்தல்

158. இராகம்-ஹிந்துஸ்தான்காப்பி-ரூபகதாளம்

பல்லவி

வாழ்வைநம்பாதே-மனமே-வாழ்வைநம்பாதே

அநுபல்லவி

தாழ்வில்லாத நமதுஸ்வாமி
தானைத்தேடுபாடு பூமி (வாழ்வை)

சரணங்கள்

1. தேகமாம்ஸ மூட்டை பல
ஜெந்துவுக்கும்நல்ல வேட்டை அதில்
ஓகோ அனந்தம் ஓட்டை உயிர்
ஓடிடஎத்தனை பாட்டை இந்த (வாழ்)

2. இன்றைக்காளுவார் நாடு நாளை
எடுப்பார்கையிலே ஓடு உடல்
ஒன்றுக்குதவாத கூடு அதை
உற்றுப்பார்த்தால் வெட்கக்கேடு புவி (வாழ்)

3. பெண்டுபிள்ளைக்கென்ன வாட்டம் நம்மைப்
பிடுங்கித்தின்பதில் நாட்டம் கையில்
உண்டாகும்போது கொண்டாட்டம் செல்வம்
ஓய்ந்தால்சகலரும் ஓட்டம் புவி (வாழ்)

4. இந்தஉலகத்திற் பிறந்தார் முன்னம்
எத்தனையோபேர்கள் இறந்தார் பெற்ற
தந்தைதாய்பாட்டரும் பறந்தார் நாலு
தாரங்கள்போய்நம்மை மறந்தார் புவி (வாழ்)

5. இன்றுபல்லக்கினிற் போவார் நாளை
எடுக்கும்ஆள்களும் ஆவார் நார்
என்றவர்யாவருஞ் சாவார் மதி
ஈனர்நரகத்தில் வேவார் புவி (வாழ்)

6. கூத்தில்அரசனைப் போலே வேஷம்
கொண்டவர்க்குண்டோ செங்கோலே புவி

சாத்தியநாடக சாலை அந்தச்
சாலையில்நாம் எந்தமூலை இந்த (வாழ்)

7. வண்டியும்ஓடத்தில் ஏறும் ஓடம்
வண்டியில்ஏறும் நாள்தோறும் நாம்
கொண்டபொருள் கைம்மாறும் வேதம்
கூறுஞ்சொல்லே நிறைவேறும் புவி (வாழ்)

8. எண்ணிக்கையில்லாமல் இங்கே முன்னம்
இருந்தவரெல்லாம் எங்கே நாமும்
நண்ணிப்போகவேண்டும் அங்கே வேத
நாயகன்பாதம் நம்பங்கே புவி (வாழ்)

---

## 159. இராகம்-கனகவசந்தம்-ஆதிதாளம்

### பல்லவி

நம்பாதே-வாழ்வை-நம்பாதே-நெஞ்சே
நம்பனடிபோற்று-வேத
நாயகன் துதியை சாற்று
நாளும்கொண்டேற்று

### அநுபல்லவி

வெம்பிதினமும்வாடும் வேதைதமவிந்துகூடும்
வம்புநிறைந்துநாடும் மயங்கிமுடிவில்ஓடும்
வாதுமுழுதும்சூது-இது
தகாதுவீண்மயலிது (நம்பாதே)

### சரணங்கள்

1. ஐம்புலர்கூடியவீடு அநித்யவூத்தைக்காடு
ஐயோயிதின்பற்பாடு அழிந்திடும் ஓட்டை ஓடு
பொய்யால்வந்ததிது-வீண்
புரணிபூண்டதிது
போகுங்கால் சொல்லாதிது (நம்பாதே)

2. எத்தனைபேர்களேஜனித்தார் எல்லாருமெங்கேயொளிந்தார்
சித்தமொடுங்கிகளைத்தார் சீரிலாதென்றேதொலைத்தார்

சித்துநிறைந்ததிது-மாய
பித்துபிடித்ததிது
சத்துபோனால் தெரியுமிது (நம்பாதே)

3. மண்டலீகர் இருந்தாரே மாய்ந்துமாய்ந்துஒடுங்கினாரே
கண்டபடிதிரிந்தாரே காலங்கழித்து முடங்கினாரே
கண்கட்டுவித்தையிது-ஹீன
பண்பட்டுவந்ததிது
துன்புற்றுழல்வதிது (நம்பாதே)

4. எண்சாணிதுகோட்டை எக்காலத்தும்மிருகவேட்டை
நண்பிலாதவீட்டை நம்பிடில்வருங்கேட்டை
நாயகனடிசொந்தம்-வேத
நாயகன்பிரபந்தம்
நாளுந்துதிஅந்தம் (நம்பாதே)

---

## உடலை வெறுத்தல்

160. இராகம்-இந்துஸ்தான்-காபி-ரூபகதாளம்

பல்லவி

உடலைநம்பாதே-மனமே

அநுபல்லவி

குடலுந்தசையும் எலும்பும்நரம்பும்
கொழுத்துப்பழுத்துப் புழுத்துநிரம்பும் (உடலை)

சரணங்கள்

1. இந்திரியம்மலமூத்திரம்—தசை
இரத்தம்நிறைந்தபாத்திரம்—பாச
பந்தப்பேய்வளர்க்ஷேத்திரம்—வெறும்
பவந்தநாடகசூத்திரம்—இந்த (உடலை)

2. ஆசைப்பட்சியின்கூடு—பல
அசுத்தஞ்சேர்குப்பைமேடு—இதை
ஏசிப்போபோவென்னும்வீடு—கிட்ட
எட்டிவாவாவென்னுங்காடு—இந்த (உடலை)

3. கண்ணிற்பீளைவடியும்—இரு
காதிற்குறும்புபடியும்—சளி
வண்ணமூக்கில்வந்திடியும்—நல்ல
வாயும்எச்சிலாய்முடியும்—இந்த (உடலை)

4. பயனின்றிவிழுமட்டை—கொடும்
பாம்புகழற்றுஞ்சட்டை—போலே
உயிர்போனால்வெறுங்கட்டை—இதை
உற்றுப்பார்த்தால்லொடலொட்டை—இந்த (உடலை)

5. காகம்நாய்நரிக்கூட்டம்—பல
கழுகுக்கும்நல்ல ஊட்டம்—கரு
மேகநிழல்போல் ஓட்டம்—இது
மெய்யல்லப்பொம்மலாட்டம்—இந்த (உடலை)

6. எத்தனைபேர்புவியாண்டார்—அவர்
எல்லவருமுன்னே மாண்டார்—இங்கே
செத்தவரில் எவர்மீண்டார்—தெய்வ
சித்தம் ஒருவருந் தாண்டார்—இந்த (உடலை)

7. மோடியேன் ஒருக்காலே—உடல்
முழுதும் எலும்புந்தோலே—அதில்
நாடிஒடுங்கினாலே—பின்பு
நமக்கிங்கே என்னவேலை—இந்த (உடலை)

8. கணவன்தெய்வமென்பாள்பாரி—அவள்
காரியத்திற்கெட்டிக்காரி—செத்த
பிணமுன்வருவாளோநேரில்—சுகம்
பிரிந்ததற்கல்லோ ஒப்பாரி—இந்த (உடலை)

9. கிருமிகட்குபகாரணம்—தசை
கிழிந்துவடியும் இரணம்—சிறு
கருமமேற்கொள்ளுந்திரணம்—இது
கரணந்தப்பினால் மரணம்—இந்த (உடலை)

10. வேதநாயகன் கூறும்—சொல்லை
மீறினால்நலமாறும்—பல
காதந்தூர்க்கந்தம்நாறும்—பித்தம்
கபமலஞ்சலம் ஊறும்—இந்த (உடலை)

---

161. இராகம்-கமாசு-ரூபகதாளம்

பல்லவி

உடலைநம்பாதே-என்மனமே
உடலைநம்பாதே

அநுபல்லவி

புடவியோர்புகழ்ந் தேற்றுங்கனத்தால்
மடமையாய்நம்பி வாழும்சினத்தால் (உடலை)

சரணங்கள்

1. சீழும்பிணந்தானே-இதில்
சேர்ந்ததெல்லாம்வீணே
பாழாம்கடமதைப் பற்றிச்சுகமுண்டோ
வீழ்ந்தவுடன்நரிநாய் விழுங்கதடையுண்டோ (உடலை)

2. மூத்திரமிந்த்ரியமே-இதில்
முற்றுமாதந்த்ரமே
காற்றும்பஞ்சகருவி சரிந்திடும்நாற்றமே
சாஸ்விதமாய்நினைந்து சாவதுபாத்ரமே (உடலை)

3. பறவைக்கேவேட்டை-உற்றுப்
பாருலகினில்மண்கோட்டை
பிறந்துமிறந்தும் பிணியதேசேட்டை
பிரபஞ்சவாழ்க்கையில் பேசில்நவ ஓட்டை (உடலை)

4. நாறுசமுத்திரமே-இதை
நம்பிலனித்தியமே
ஊறுமலசலம் பீற்றற்றுருத்தியே
பேசாமலோடுங்கால் பின்னென்னசித்தியே (உடலை)

5. பீறுநிறைக்குணமே-காற்று
செயல்முடிந்தால்தணமே
வேதநாயகன் விளம்புதலுண்மையே
விற்பன்னவாக்கினை யுணர்ந்திடினன்மையே (உடலை)

## பண தூஷணை

### 162. இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி

பணமேஉன்னால் என்னகுணமே—தண்டம்
பண்ணினேன்சற்றும்-என்கண்ணின்முன்னில்லாதே (பண)

அநுபல்லவி

மணமில்லாதமத மோகங்குரோதந்தான்
மார்க்கமுமூர்க்கமும் யார்க்குமேபோதிக்கும் (பண)

சரணங்கள்

1. தேடி உனைவைத்து மூடியவர்க்குந்
தீர்க்காயுசுதருவாயோ
நாடியமன்வந்து சாடிடும்போதுநீ
நானென்றுமுன்வருவாயோ
கூடியபேர்கள் குடியைக்கெடுப்பாயோ
கொல்லச்சொல்லிப்பின்னுங் காட்டிக்கொடுப்பாயே
ஓடிஓடி அற்பரைப் போயடுப்பாயே
உத்தமரைக்கண்டால் ஓட்டமெடுப்பாயே (பணமே)

2. மத்தியில்உன்னைப் படைத்ததல்லால்முன்
வரும்போதுகூடவந்தாயோ-இஷ்ட
சித்தியும்சத்தியும் நித்தியங்கைகூடச்
சிலாசாசநம் நீதந்தாயோ
புத்தியிருக்கும் இடம்விட்டுநீங்குவாய்
பொய்யும்பாட்டும்உள்ள இடத்தேதாங்குவாய்
எத்திசையுங்கெடுத்துப் பழிதாங்குவாய்
ஈயாதவர்கையகப்பட்டுத்தூங்குவாய் (பணமே)

3. மண்ணில்உனைநரர் பண்ணினதன்றி
மனிதரைநீபண்ணினாயோ-உயர்
விண்ணினைமண்ணினைப் பண்ணினோன்நேசம்
விலகச்செய்சத்துரு நீயோ
எண்ணரிதான இடமெங்கும்ஓடுவாய்
இந்திரஜாலஞ்செய்து விளையாடுவாய்

வண்ணநரர்கள் மனக்கண்ணை மூடுவாய்
வைத்துப்புதைப்பவர் வாயில்மண்போடுவாய (பணமே)

4. வஞ்சகமாம் பிரபஞ்சமெல்லாம்நீ
விளைத்துச்செய்வாய்கொடுங்கோன்மை-கெட்ட
நஞ்சம்நிகருனை நெஞ்சம்எண்ணுதமெய்ஞ்
ஞானிகட்கல்லவோ மேன்மை
பஞ்சமாபாதகங் கட்குநீ ஆலயம்
பாரில்துன்பமென்பதெல்லாம் உன் தன்மயம்
அஞ்சஉனையுடையோர்க் கொழியாப்பயம்
வேதநாயகன்மே லுனக்குண்டோஜயம் (பணமே)

---

163. இராகம்-தோடி-ரூபகதாளம்

பல்லவி

பணமேஉன்னாலென்னநற்குணமே-பாழுமயலைத்தரும்
பணமேவந்து-பெறுதம்பற்சினமே

அநுபல்லவி

கணநேரமும்கருத்துநிலையாகாலங்கழித்துயினரைப்புகழும்
கவனங்கொண்டவர்பாதத் தொண்டுசெய்து
காட்டுகிறுய்-எண்ணம்-மூட்டுகிறுய்-ஐயோ (பணமே)

சரணங்கள்

1. அலக்கழித்து யாவரையும்சேர்ந்து
அற்பரிடத்தெலாம் அன்பதுகூர்ந்து
கலக்கமுறவேசெய்கிறுய் தேர்ந்து
கண்ணின்முன்னில்லாதே காட்டுமயல்தீதே (பண)

2. புத்தியற்றோரிடம் புதையலாவுய்
பூர்த்திசிந்தையில் லார்மேல்தயவாவுய்
சத்தியம்நீங்கி அசத்தியமாவுய்
சார்ந்தோர்க்கெல்லாம் பொல்லாசற்பனையாவுய் (பண)

3. உன்னால்விளைவதற் குண்டுமோகணக்கு
ஊரையெல்லாம்வாயில் போடுவாய்பிணக்கு
நன்றியில்லாரிடம் நடஞ்செய்யுனக்கு
நாட்டமுடனேதிண் டாட்டம்வீண்மணக்கு (பண)

4. வாதுடன் தீதுபலவும் வாய்த்தாயே
வஞ்சகவாழ்விற்கே துணையதுநீயே
வேதநாயகன் வெறுத்ததுமுன்னையே
வேண்டேனுனைக்கையால் தீண்டேன் இனியே (பண்)

## பரஸ்திரீகமனம் விலக்கல்

### 164. இராகம்-கமாஸ்-ஆதிதாளம்

பல்லவி

மாதரை நினையாதே-நெஞ்சே

அநுபல்லவி

பூதலமேல்பெரும் பாதகமும்விப
ரீதமுமேவரும் ஆதலினால்மறு (மாத)

சரணங்கள்

1. அருமஞ்சட்பூச் சல்லவோமுகக்காந்தி
அடிக்கடிபெண்கள் நிறமாறும்பச்சோந்தி
ஒருமையா அவர்களை விரும்புதல்பிராந்தி
உடற்குட்புகுந்துபார்த்தால் வரும்வாந்தி (மாத)

2. முன்னழகும் பின்னழகுமேபட்டு
முகஅழகானது நெற்றியிற்பொட்டு
அன்னநடையென்பது கவிஞர்கள்கட்டு
அழகுநில்லாமற் பறந்திடுஞ்சிட்டு (மாத)

3. மரித்திடுமாதர்கள்சுகம் அரைக்ஷணமே
மறுநிமிஷத்தில் உண்டாந்துன்பமே
பிரித்திடில்ஜலம் எலும்புதோல்நிணமே
பிராணன்போனால் நரியாய்பிடுங்கிடும்பிணமே (மாத)

4 மேனிமுழுதும் வெளிவேஷத்தின்தனுக்கு
மினுக்கெண்ணெய்பூசியே காட்டுவார்களுக்கு
ஈனம்அறவேதினந்தினந் தண்ணீர்முழுக்கு
இல்லாவிடில்கப்பல் ஏற்றலாம்அழுக்கு (மாத)

5. இடையில்மயக்குவது சாலியன்சேலை
இருகாதில்சொலிப்பது தட்டான்கைவேலை
கடையிலேவிற்பது கொண்டைப்பூமாலை
கனிக்குச்சொந்தமெல்லாம் வெறுங்தோலை (மாத)

6. கன்னியர் விழிஉயிர் பிளந்திடும் அம்பு
கன தனம் நமன் குழல் உனைக்கட்டுந் தும்பு
அன்னியமாதர்கள் விஷமெனநம்பு
அவருடன்பேசுவதே பெரும்வம்பு (மாத)

7. இதமாகவேமணஞ் செய்தசீமாட்டி
இகபரம் இரண்டுக்கு மேவழிகாட்டி
இதரமின்னார்களைச் சேர்வோன்காமாட்டி
என்றைக்கும்அவனுக்கு மூத்தவள்பேட்டி (மாத)

8. என்றுங்காமாதுரர்க்கு ரோகங்கள்நிலையே
ஈனறும்போட்டகையில் வேண்டும்வேப்பிலையே
அன்றுகொண்டவன் அறிந்தால்வருங்கொலையே
அற்பசுகத்தில்வரும் ஆபத்துமலையே (மாத)

9. கழுவிவாசனைஊட்டாவிடிற் கெட்டவீச்சு
காதவழி அடிக்கும் இதுநிசப்பேச்சே
தொழும்அழகென்பதெல்லாம் மேற்பூச்சு
தோகையர்கிழமானல் கனவுச்சு (மாத)

10. அழகழகென்பதெல்லாம் வெறும்ஜாலம்
அணியும் துணியும்போனல் அலங்கோலம்
விழல்நிகர்சுகத்தினை வெறுப்பதுசீலம்
வேதநாயகன்சொல் அநுகூலம் (மாத)

---

165. இந்துஸ்தான்காபி-ஆதிதாளம்

பல்லவி

கேள்மனமே-நான்சொல்வதையநுதினம்பல
கேடுதரும்வீண்மாதர்-கேட்டையொருத்தல்குணம்

அநுபல்லவி

சூழ்புவிவாழ்வை சுகமெனநம்பாதே
தாழ்வினைகொடுத்திடும் தாசிகளால்வெம்பாதே (கேள்)

சரணங்கள்

1. திரேகமென்பதுகண்ணில் கண்டதுதசையே
நிரோகமவரால்வந்து நோயுறுபகையே (கேள்)

2. நாறும்உடலில்வாசம் நாடோறும்பூசுவார்
சீறும்தனத்தைக்காட்டி செய்கைகண்ணைவீசுவார் (கேள்)

3. சிக்கடித்திடுங்கூந்தல் தினமும்வாரிடுவார்
புக்கும்கடிதடத்தில் புகவேசெய்திடுவார் (கேள்)

4. ஒய்யாரக்கதைபடித் துலகைவசமாக்குவார்
மையும்படிசெய் துன்னை நமக்கிரையாக்குவார் (கேள்)

5. தட்டான்செய்தநகையால் சாடைகாட்டிடுவார்
ஒட்டாரமாகவுன்னை உருக்கியோட்டிடுவார் (கேள்)

6. நலமிலாநாயைப்போல் நாளுமேதிரிவாள்
குலமொன்றிலாமலே கூகைபோல்சரிவாள் (கேள்)

7. பரஸ்திரீகளைநண்ணினால் பார்ப்பதுதோஷம்
நிரமாறியாடைபூண்டு காட்டுவார்வேஷம் (கேள்)

8, பூதவுடல்வளர்க்க புத்திமயங்கிடுவார்
வேதநாயகன்சொல்லை விரும்பாமல்தியங்கிடுவார் (கேள்)

---

இதுவுமது

166. இராகம்-கௌளிபந்து-ஆதிதாளம்

பல்லவி

மனமேஉனக்குமக்ாசுகிர்தம்-மறு
மாதரைநினையாதே

அநுபல்லவி

தினமென்சொற்படி கேட்டால்உனைத்துதி
சேய்வேன்மறுத்திடில் வைவேன்வைவேன் (மனமே)

சரணங்கள்

1. சட்டிமுகத்தைச்சந்திரபிம்பமென்றும்-வெறும்
சதைக்கட்டிகளைத்தங்கக்கும்பமென்றும்
முட்டிக்கால்களைச்சொர்னஸ்தம்பமென்றும்-மாதர்
முன்கமலைக்குஞ்சபாக்கம்பமென்றும்
மொட்டைத்தலைக்குமுழங்காலுக்கும்பிணைத்தே
முடிந்தாயே-வினை-வடிந்தாயே-கெட்ட (மனமே

2. உச்சிட்டதைஅமிர்தக்கட்டியென்றும்-நாறும்
ஊத்தைவாயைப்பவளப்பெட்டியென்றும்
மச்சம்பிளைவடியுந்திட்டியென்றும்-தே
வாங்குருமைஆபூர்சிட்டியென்றும்
பிச்சைக்காரன்கந்தையைமெச்சிக்கொள்வதுபோல்
பிடித்தாயே-பொய்யைப்-படித்தாயே-கெட்ட (மனமே)

3. செட்டிகளால்அல்லவோஇடையழகு-எண்ணெய்ச்
செக்கார்களால்அல்லவோ-சடையழகு
தட்டார்களால்அல்லவோநடையழகு-மாதர்
தம்மழகெல்லாம்பலகடையழகு
குட்டிச்சுவரில்முட்டவெள்ளெழுத்தோநீ
குதித்தாயே-பெண்ணைத்-துதித்தாயே-கெட்ட (மனமே)

4. சொத்தைப்பற்களைமுத்துச்சரங்களென்றும்-மிகச்
கும்பியதோளைமூங்கில்மரங்களென்றும்
சித்தமாசுக்கமலங்காங்களென்றும்-நாறும்
சிக்குமயிரைச்சலதரங்களென்றும்
பித்தன்போல்வர்ணித்துவேதநாயகன்அடி
பிரிந்தாயே-துன்பன்-புரிந்தாயே-கெட்ட (மனமே)

---

## இதுவும்அது

167. இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி

பெண்ணாலேபெரும்-அதில்
பிரமிப்பதெல்லாம்விபத்து

அநுபல்லவி

கண்ணாலேவலைபூட்டிஅற்பசுகம்
காட்டிப்புருஷரைவாட்டிவதைக்கும் (பெண்)

சரணங்கள்

| | |
|---|---|
| 1. கலகலெனஅசைப்பார் | அவர்தண்டை |
| காட்டுமிருகமயிரே | கொண்டை |
| உலகைமயக்கும் | அவர்சேலைக்கெண்டை |
| உற்றுப்பார்த்தால் | நன்மைஏதவர்அண்டை (பெண்) |

2. கேவலம்அங்கமெல்லாம் பிணநாற்றம்
கிறுகிறெனமயக்கந் தலைக்கேற்றம்
ஓவியமேனிமினுக்கும் பொய்த்தோற்றம்
உள்ளே திருப்பிப்பார்த்தால் முழுநாற்றம் (பெண்)

3. கட்டிகட்டியாகக்கண் பீளைசோறும்
காதிற்குறும்பிசளி எச்சில்சேரும்
கொட்டும்வியர்வை தலைப்பேனும்ஈரும்
கும்பிநாற்றமகங் குளித்திட்டநீரும் (பெண்)

4. மண்ணில்எலும்புதோல் அல்லவோமாது
மற்றதெல்லாஞ்செட்டி தட்டார்செய்சூது
பெண்ணில்லாவிட்டால் பிழைப்பவர்க்கேது
பெண்ஜெபமும் அவர்போனால்செல்லாது (பெண்)

5. மண்ணிற்பரஸ்திரீயைச் சேரும்நிமித்தம்
வாழ்வுஞ்சுகமுந்தனமும் அநர்த்தம்
எண்ணில்லாத்துன்பமும் புண்களும்சித்தம்
ஈனறும்புக்குமகோற்சவம் நித்தம் (பெண்)

6. இரவிற்கூத்தாடிகள் வேஷம்எடுப்பார்
இருட்டில்எவருமயங்கிக் கொடுப்பார்
தரையில்மின்னார்பகல் வேஷம்கொடுத்தார்
ஜாலவித்தைசெய்துலகைக் கொடுப்பார் (பெண்)

7. உண்டால்விஷம்வெட்டினற் கொல்லுங்கத்தி
உன்னினோர்கண்டோரைக் கொல்லும்பெண்சக்தி
அண்டாமல்ஆடவர் ஓடுதல்புத்தி
அமர்வேதநாயகன் சொற்கேட்டால்சித்தி (பெண்)

---

## உய்யும்வழி

168. இராகம்-சங்கராபரணம்.

பல்லவி

உய்யும்வகையிதுநெஞ்சே-வேறு
செய்யும்உபாயங்கள் வஞ்சமே

அநுபல்லவி

மையல்தருமும்மலங்களைநீக்கு
ஐயன்பொற்பாதத்துக்குன்னை ஆளாக்கு (உய்யும்)

சரணங்கள்

1. நிந்தைதமலந்த மூவாசையே-நாளும்
நிக்கிரகஞ்செய் அப்பசாசையே
எந்தவிதத்திலு மாசையே-ஒழித்
தென்றென்றுஞ்செய் தெய்வபூசையே (உய்யு)

2. நான்எனதென் றபிமானமே-மிக
நாட்டுவது மதியீனமே
ஏன்உனக்கிந்த அஞ்ஞானமே-நீதான்
என்றுஞ்செய்வாய் ஜெபத்தியானமே (உய்யு)

3. பெண்சேய் பண்டபதார்த்தமே-பெரும்
பீடையாம் அந்தச்சங்கார்த்தமே
கொண்ட அறந்தான்யதார்த்தமே-உதைக்
கூடில்உண்டாம் பரமார்த்தமே (உய்யு)

4. மையல்மிகுந்து கெடாதே-புவி
வாழ்வென்பது வெறுஞ்சூதே
ஐயும்மெய்யன்பு விடாதே-வேத
நாயகனை நிதம்ஓதே (உய்யு)

---

169. இராகம்-தங்யாசி-ஆதிதாளம்

பல்லவி

வழியிது உய்வதற்காமோ-பல
மாய்கையுந்தனை விட்டுப்போமே-நெஞ்சே

அநுபல்லவி

அழுந்திடும்மலம்-யாவையும்தள்ளு
அருள்பெறும்வகைக்காய்-அநுதினம்துதிகொள்ளு (வழி)

சரணங்கள்

1. வீண்சம்பிரதாயங்களை-வெறுப்பாயே
நான்எனும்அபிமானம் நாடிமறுப்பாயே (வழி)

2. வையகவாழ்வு-பொல்லாதே
தையலுடன் தனமும்-சற்றும்நில்லாதே (வழி)

3. மாயையில் மலைத்துநீ திரியாதே
தூயநெறியசற்றில் தூய்மைவறியாதே (வழி)

4. செய்யும் தருமம்நினை-யாகுமல்லாது
பொய்நிறைவாழ்வின்-பூரிப்போநில்லாது (வழி)
5. பாதகந்தொலைந்திட-பரனடிதேடும்
வேதநாயகன்சொல்லை விரும்பிகொண்டாடு (வழி)

---

## நெஞ்சொடு பிணங்கல்

### 170. இராகம்-அசாவேரி-ஆதிதாளம்

பல்லவி

அநுதினம்இந்தப்படி-உன்னுடன்போர்கொடுக்க
யாராலாகும்நெஞ்சே

அநுபல்லவி

கனபக்தரொடுசேர்ந்தளாய்-கர்மானுபந்தந்தள்ளாய்
தினமும்என்னுரைகொள்ளா-சீச்சீ-இதென்னபிள்ளாய் (அநு)

சரணங்கள்

1. அனந்தமுறைநான்சொல்லக்-கேளாய்
அகந்தை யழியாதோ
தினந்தினமும் நீபுரிந்திடுதுற்
செய்கைகள் ஒழியாயோ-நீ
நினைந்ததே திடமா-உன்னால்
நிதமுஞ் சங்கடமா
சினந்தகவலைக்கு நீஇருப்பிடமா
செய்வதெல்லாம்-ஹடமா (அநுதி)

2. படித்தனிவேதந்தான் சொல்லிய
படிநீநடவாயோ
கடித்தவிஷம் ஒப்பாகியவினையின்
கடலைக்கடவாயோ-நீ
பிடித்தபிடியா-ஆசைப்
பேயுன்னிடங்குடியா
எடுத்தமாயைக்கு நீமிதியடியா
உன்தொழில் இப்படியா

3. கடந்தமேலோர் பகர்ந்தமொழியைக்
கனவினுமதியாயோ
நடந்தபொய்யாகி வழிநீங்கி
நல்வழிமிதியாயோ-நாம்
அடைந்தவுடல்சதமா-புவிவாழ்
வானதுசாசுவதமா
தொடர்ந்துவேதநாயகன் ஹிதமாய்ச்
சொல்லியுமே மதமா (அதி)

## துர்க்குணம்போன்ற நற்குணங்கள்

### 171. இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி

செய்யவேண்டுமோநல்-நீ அநுதினம்
செய்-செய்-செய்-மனமே

அநுபல்லவி

ஐயோவெறுத்தாய் நற்செய்கைகளையே
ஆகையிற்பின்சொலுந் துர்ச்செய்கைகளையே (செய்ய)

சரணங்கள்

1. எதிர்உதவிகருதி ஈயாலோபம்
ஈனர்கள்காற்றடிக்கினும் அதில்சோபம்
வதிதீவினைமேல் தீராக்கோபம்
வருவதுவாட்டும் இப்படிப்பாபம் (செய்ய)

2. பரன்அடிமீதில் அடங்காமோகம்
பலதெய்வங்களைப் பணியாததுரோகம்
இரவும்பகலும் புண்ணியந்தன்னில்இராகம்
இப்படியேதான் பாபம்அநேகம்(செய்ய)

3. பலருக்கும்உதவிசெய்வதில் பலவந்தம்
பரஸ்திரீக்கிடம் ஈயாதநிர்ப்பந்தம்
தலமிசைபிறர்க்கிடர் செய்வதில்மந்தம்
தளராதிவ்வகை தோஷம்அனந்தம்(செய்ய)

4. பொய்கொலைகளவுகள் செய அறியாமை
புனிதர்போல்நாம் இலையென்னப்பொறுமை
மெய்யிலகிய அவதூறு தராமை
மேன்மேல் இப்படியேபலதீமை(செய்ய)

5. நற்குணந்துர்க்குணம் எனச்சொலும்அசத்தியம்
தன்காரியம்பேணுத அபத்தியம்
நற்கதிபெறுவதில் ஒழியாப்பைத்தியம்
நானிலத்திவ்விதமான துஷ்க்கிருத்தியம்(செய்ய)

6. நன்மைதுன்மைகள் காமக்குரோதம்
நாளும்அச்செய்கையிலே பிடிவாதம்
தன்மநிமித்தம் சர்வலோகவிரோதம்
தளராதிவ்வாறே அபராதம்(செய்ய)

7. ஆட்கொள்வேதநாயகன் பாதமுத்தாரம்
அணியெனஉனக்குரைத்தேன் சவிஸ்தாரம்
கேட்கிலைஆதலிற் கொடுத்தேன்உத்தாரம்
கெட்டசெய்கைகள் உனதிஷ்டப்பிரகாரம்(செய்ய)

---

## மனவஞ்சகத்தைப்பற்றி

### 172. இராகம்-பந்துவராளி—ஆதிதாளம்

பல்லவி

புரட்டெல்லாம்எங்கே-படித்துக்கொண்டனை
புகலுவாய்மனமே-இந்தப்

அநுபல்லவி

முரட்டுமார்க்கம் சென்றிழைகிறாய்-அனு
முனையின்உள்ளும்நீ நுழைகிறாய்-இந்தப் (புரட்)

சரணங்கள்

1. பொருளைத்தந்தவன் அருளைமறந்து
பொருளுக்கேஉபசாரம்-செய்யும்
மருளர்போல்அந்தப் பொருளைவிரும்பி
வான்பரன்உபகாரம்-தன்னை

மறந்தாய்என்னைத் துறந்தாய்பொன்னைச்
சிறந்தாய்பின்னைப் பறந்தாய்பாரில்
உருளில்லாமல்தேரோட்டுகிறாய்-பானு
உதயம்இரவிற்காட்டுகிறாய்-கன
இருள்கொள்பாசத்தில் மாட்டுகிறாய்-நாளும்
எனைப்பரம்ஆட்டுகிறாய்-இந்தப் (புரட்)

2. மண்டலந்தனில் கண்டபொருளெலாம்
வண்மையென்றுநீ குறித்தாய்-பிர
சண்டஆசைக்கள் உண்டதாலேநீ
தலைமயங்கியேவெறித்தாய்-தனத்
தாசி எனப் பேசி வினை
பூசினையே சீசீ பாச
அண்டங்களைக்கைஅடக்குகிறாய்-கால்போல்
ஆழ்கடல்மீதும்நடக்குகிறாய்-கால்போல்
எண்டருவின்னுங்கடக்குகிறாய் புண்யம்
என்றால்எழாமற்கிடக்குகிறாய் இந்தப் (புரட்)

3. என்னசொல்லினும் இன்னல்செய்யுனக்
கேனிந்தத்தலையாட்டை மானும்
முன்னமேஐயோ பின்னஞ்செய்கிலை
மூன்றுந்தீவினைத்திரட்டை இது
மோசம் எய்தும் நாசம் லவ
லேசம் விசு வாசம் இன்றி
அன்னம்போலெங்கணும்பறக்கிறாய் கல்வின்
ஆவிடத்தும் பால்சுறக்கிறாய் சுக
நன்னலந்தனைத்துறக்கிறாய் வேத
நாயகன்சொல்லைமறக்கிறாய் இந்தப் (புரட்)

---

## மனமயக்கம்

### 173. இராகம்-வசந்தா—ஆதிதாளம்.

பல்லவி

மயங்குகிறாய்மனமே ஐயோவீணே

அநுபல்லவி

மயங்குகிறாய்மனமே வாழ்வுசொப்பனமே
மாறாமல்தினமே ஐயோவீணே (மயங்)

சரணங்கள்

1. ஏகனைமோக்ஷத் தியாகனைக்கருணைப்பிர
வாகனைப்பணியாமல் ஐயோவீணே (மயங்)

2. எண்ணியபெரியோர் நண்ணியபொருளாம்
புண்ணியம்புரியாமல் ஐயோவீணே (மயங்)

3. நேயம்உள்ளோர்கள் தாயகன்வேத
நாயகனைத்தொழாமல் ஐயோவீணே (மயங்)

---

174. இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

மனமேநீ மயங்குவதேனோ தினம்
மருந்துக்காகினும்நல் வழியில்லாதேனோ ஐயோ

அநுபல்லவி

அனுதினம்செய்வது அகந்தையேரலாம்
அகற்றிடசொன்னாலே வரும்ஹீனமூலம் ஐயோ (மன)

சரணங்கள்

1. நிலையில்லாவாழ்வினை நிசமாய்நம்பினையே
தொலையாவிசாரத்தில் துவண்டுவெம்பினையே-ஐயோ (மன)

2. கவலையேகுடிகொண்டு காலங்கழித்திட்டாயே
அவனியிலுனைப்போன்ற அற்பருண்டோசொல்வாயே (மன)

3. நித்தம்துன்பத்தினாலே நீயலைந்தாயேஐயோ
அத்தன்பதம்வேண்டாமல் அலைந்தனையிதுபொய்யோ (மன)

4. கருணையென்பதில்லாமல் காணத்தைக்கெடுத்தாய்
அருனெறியுணராமல் அகந்தையில்படுத்தாய் ஐயோ (மன)

5. விஞ்சையதுவெறுத்து வீணிலேமலைத்தாய்
அஞ்சலெனவந்தோரை ஆதரியாதொலைத்தாய் ஐயோ (மன)

6. போதநாயகனைநீ புகழ்ந்திடாதிருந்தாய்
வேதநாயகனுனை விரும்பில்நீயறந்தாய் ஐயோ (மன)

## காலதூஷணை

### 175. இராகம்-தர்பார்-ஆதிதாளம்

பல்லவி

ஓகோகாலமே—உன்போல்எவர்க்-குண்டிந்திரஜாலமே

அநுபல்லவி

போகமாகவே அண்டம்பூவெல்லாமேய்வாய்
பூனைபோலிருந்துநீபுலியைப்போற்பாய்வாய் (ஓகோ)

சரணங்கள்

1. ஊரெல்லாந்தூங்கினும் உனக்கில்லைதூக்கம்
ஓயாமல்ஓடுவா யுனக்குண்டோதேக்கம்
ஆர்கெட்டால்உனக்கென்ன அறியாய்நீநோக்கம்
அதிகவட்டிகள்கொடுப் பவர்க்குண்மேல்ஏக்கம் (ஓகோ)

2. பாலரைக்கிழவராய் பண்ணியேகெடுப்பாய்
பங்கைமதன்ஜெயப்பட வாமலேதடுப்பாய்
காலிரண்டுடையார்க்குக் கோலென்றுகொடுப்பாய்
காலனுக்குயிரெல்லாங் காட்டியேவிடுப்பாய் (ஓகோ)

3. ஆயுதமில்லாமல் யாவையும்அறுப்பாய்
அழுதாலுந்தொழுதாலும் அகன்றெம்மைவெறுப்பாய்
சாயுந்திராசுபோலே சகலமுந்நிறுப்பாய்
சகலஉயிரையுஞ்சட்டி யிலிட்டுவறுப்பாய் (ஓகோ)

4. கல்லைப்போல்உடம்பையும் வில்லைப்போல்வளைப்பாய்
கணந்தினம்மதிவாரம் ஆண்டெனக்கிளைப்பாய்
வில்லைப்போல்வதனத்தைச் செல்லைப்போல்துளைப்பாய்
விங்கமழகியர்க்குத் தேவாங்குருவிளைப்பாய் (ஓகோ)

5. துக்கம்உற்றவர்க்குநீ தொலையாமற்கிடப்பாய்
சுகமுள்ளபேர்க்குநீ துரிதமாய்நடப்பாய்
விக்கலும்இருமலும் வேதையுங்கொடுப்பாய்
மிஞ்சுங்கருமயிரைப் பஞ்சுபோற்கெடுப்பாய் (ஓகோ)

6. மலைகள்மண்டபங்களை வலிமையாஇடிப்பாய்
வாரிஎழுகடலும் வற்றிடக்குடிப்பாய்
தலைதடுமாறநீதான் கொள்ளை அடிப்பாய்
தனிவேதநாயகன் தயையாலேஓகோவடிப்பாய் ()

## உத்தியோக சம்பந்தக்கீர்த்தனைகள்

### நியாய பரிபாலனஞ்செய்ய வரவேண்டல்

176. இராகம்—சாவேரி-ஆதிதாளம்

பல்லவி

நானே பொதுநீதி தானேசெலுத்திட
நல்லவரம் அருள்கோனே

அநுபல்லவி

தானேயாகிய சாக்ஷாத்காரமே
தேனேஅமுதே திவ்யஞானசாகரமே (நானே)

சரணங்கள்

1. வட்டஉலகில்யாரும் பொதுவில்அநுபவிக்கும்
மழைகால்வெயில்பூதாதி போலவே
இஷ்டர்அநிஷ்டர்தமர் எளியர்செல்வர்பெண்புமான்
என்னும்பேதம் உன்னுமல்லலவே
திட்டமாநிகரிநீதி செலுத்தலின்மனம்நாட்டிச்
சிறியவழக்கும்பெரு வழக்கெனத்திண்ணம்நீட்டி
சட்டசாஸ்திரங்கள்மிக உணர்ந்தறிவினைத்தீட்டி
சகலஉயிர்களும்என் தன்உயிர்போல்பாராட்டி
சிட்டபரிபாலனனெனுமுடிசூட்டித்
தீயர்மொழிபுகாமற் செவிவழிபூட்டிக்
கொட்டஞ்செய்துட்டர் கண்ணில்விரலைவிட்டாட்டிக்
கூகூஎனப்போய் கதறும்படிமாட்டி (நானே)

2. அருணன்சந்திரனிலை நீங்கினுந்தரைமேல்கீழ்
ஆயினும்அறத்தைநான் விட்டாமல்
வருணன்போற்பொருள்மாரி வழங்கர்பெய்யினும்அதை
வாங்கயாசகன் போற்கைநீட்டாமல்
வரும்வழக்கர்மனத்தை வன்சொற்களாற்கடாமல்
மற்றைக்கீழ்உத்தியோகஸ்தர் வம்புக்கிடங்கொடாமல்
அருமடியால்வழக்காராய்ச்சியில்பின்னிடாமல்
அப்பன்பாட்டன்சொன்னாலும் அறநெறிகைவிடாமல்

தருமதேவதைநாய ஸ்தலந்தனில்நடிக்கத்
தப்புச்சாக்ஷிகள் கிடுகிடெனவேதுடிக்க
இருமையகல்அநீதியே ஓட்டம்பிடிக்க
இலஞ்சம்வாங்கிகள் வெட்கத்தால்உயிர்மடிக்க (நானே)

3. அந்தவிலங்குமுடன் கூன்குருடூமைமுத
லானஜென்மம்வராமல் தடுத்தாயே
முந்தமானிடஜென்மந் தந்ததுமன்றிப்பின்னும்
முன்சிபதிகாரமுங் கொடுத்தாயே
இந்தஉபகாரத்தை இதயத்தெழிதித்தேக்கி
எவர்க்கும்பெரியவனு னெனும்அகங்காரம்நீக்கி
நந்தாவிளக்கம்போல் நவைபிருளினைப்போக்கி
நான்செய்தநீதிநூற்கென் நடையைத்திட்டாந்தமாக்கித்
தொந்தமெனவேவினை யாடிஉண்டுதூங்கிச்
சுகஉடல்வளர்க்குஞ் சோற்றினைநீங்கி
விந்தைநன்முயற்சியில் மேன்மேலோங்கி
வேதநாயகன்நல்லோன் எனஇசைதாங்கி (நானே)

---

## துர்வழக்காளிகளைப்பற்றி

### 177. இராகம்—சௌராஷ்டிரம்-அடதாளசாப்பு

பல்லவி

இந்தவழக்குக்கெல்லாம்நாம்தானு கோர்ட்டில்
வந்தவன்எல்லாம்நமக்கெஜமானு

அநுபல்லவி

நந்தன்வலியச்சண்டைபிடித்தாலும் அந்த
நாகனைத்திட்டிஅவன் அடித்தாலும் (இந்த)

சரணங்கள்

1. தந்தைதுர்மார்க்கஞ்செய்துகெட்டாலும் பிள்ளை
தாரங்களைத்தெருவில்விட்டாலும்
மூந்தஅதிகக்கடன்பட்டாலும் நிலம்
முழுதுந்துர்விநியோகம்இட்டாலும் (இந்த)

2. அண்ணன் தன் தம்பிகளைவெறுத்தானும் அவர்க்
காஸ்திபாகங்கொடாமல் மறுத்தானும்
கண்ணன்வயலைப்பொன்னன் அறுத்தானும் கடைக்
காரன்கேட்டசாக்கை நிறுத்தானும் (இந்த)

3. ககனப்பூவந்திமகன் கொய்தானும் அதைக்
கண்டுகுருடன் அம்பால் எய்தானும்
ஜெகமிசைஊமையானும் வைதானும் அதைச்
செவிடன்கேட்டுநகை செய்தானும் (இந்த)

4. துங்கனவாதியைக்கண்டு சிரித்தானும் சிங்கன்
விம்மிஇருமிநெட்டி முறித்தானுங்
தங்கள் இரண்டுகையும்விரித்தானும் அந்தச்
சாந்தனுந்தன்முகத்தைச் சுரித்தானும் (இந்த)

5. கரமிலான்வாதியைப் பிடித்தானும் இரு
காலிலான்உதைத்துதைத் திடித்தானும்
சிரமில்லாதவன்நடித் தடித்தானும் பதம்
தினம்வேதநாயகன் படித்தானும் (இந்த)

---

## உத்தியோக சங்கடம்

### 178. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி

அப்பா இதென்ன அதிகாரம்-ஐயோ
எப்போது பக்திசெய்ய இல்லையேநேரம்

அநுபல்லவி

சுப்பையரோ அபத்தமூட்டை அந்தச்
சுந்தரையர்வழக்கிலே தெள்ளாயிரம்ஓட்டை
அப்பையர்கற்பிப்பார் பொய்ச்சீட்டை அந்த
அனந்தையர்கட்டுவார் ஆகாசக்கோட்டை (அப்பா)

சரணங்கள்

1. சிலர்கேட்பார் கற்பகச்சோலை வேறு
சிலர்கேட்பார் நமன்அணு காமலேஓலை
பலர்கேட்பார் நூறுபுலிப்பாலை அல்லும்
பகலும்உலகில் நமக்கிதுதானுவேலை (அப்பா)

2. அண்டப்புரட்டன் அந்தவாதி-அகி
லாண்டப்புரட்டன் அப்பா அவன்பிரதிவாதி
சண்டப்பிரசண்டன் நியாயவாதி-நாளும்
சகஸ்திரப்புளுகன்சாக்ஷிக் காரனெனும்கியாதி (அப்பா)

3. எப்போதும்பொய்வழக்கர் கூட்டம்-அவர்க்
கிந்திரலோகங்கிடைத்தாலும் இன்னமுந்தான்வாட்டம்
தப்புச்சாக்ஷிகள்வாய் நீட்டம்-பொய்ச்
சத்தியம்ஆணையென்றால் அவர்க்குக்கொண்டாட்டம் (அப்பா)

4. பேராசைக்காரன் குப்பன்செட்டி-அவன்
பிரமாதிகளிடத்தும் வாங்குவான்வட்டி
சேரான்வழக்கில்சிங்கக்குட்டி-இவர்
கூதால்வேதநாயகன் பதம்தொழஅட்டி (அப்பா)

---

## இதுவும் அது

179. இராகம்-புன்னாகவராளி-திரிபுடைதாளம்

பல்லவி

போதும்போதும் உத்தியோககனமே-இதில்
ஏதுசுகம்நமக்குமனமே

அநுபல்லவி

ஓதக்கடகன் அலைக்கோய்வுண்டோ ஆரவாரம்
வேதநாயகன்நாமம்விளம்பஉண்டோநேரம் (போதும்)

சரணங்கள்

1. சிலர்நிலவழக்குகள்தொடுப்பார்-வேறு
சிலர்பணவழக்குச்செய்தடுப்பார்
பலரும்நம்முடன்சண்டைதொடுப்பார்-அல்லும்
பகலும்பிராணனைஎடுப்பார்
உலகில்வழக்கிழந்தோர்ஊரெங்குந்தூற்றுவார்
நலமில்அப்பீல்கேட்டார்நம்தீர்ப்பைமாற்றுவார் (போதும்)

2. ஒருவன்கேட்பான் அளகாபுரியை-வே
றொருவன்கேட்பான்மேருகிரியை
ஒருவன்கேட்பான்அருணன்பரியை-வே
றொருவன்கேட்பான்வெள்ளைக்கரியை
நரர்பக்ஷந்தீர்த்தால்விண்ணாட்டோர்க்குமனஸ்தாபம்
சுரர்பக்ஷந்தீர்ப்புச்செய்தால்துஷ்டநரர்க்குக்கோபம் (போது)

3. எந்தநேரமும்ஓயாவேலை-இதில்
என்னபெற்றோமுத்துமாலை
அந்தஉத்தியோகமேஆலை-அதில்
அகப்பட்டநாம்கரும்புபோலே
சந்ததமும்உழைத்துந்தணிந்ததுண்டோக்ஷாமம்
இந்தக்கூழுக்குத்தானாஇருபதுபட்டாராமம் (போதும்)

4. எழுதிஎழுதிஎன்னகிரீடம்-பெற்றோம்
இங்கிதம்தெரியார்கிர்மூடம்
பழுதுசொல்வதிவர்க்குப்பாடம்-பஞ்ச
பாதகங்களுக்கிவர்பீடம்
அழுதாலுங்கொழுதாலும்அவர்துர்க்குணம்போமோ
கழுதைக்குவாழ்க்கைப்பட்டுக்கடிஉதைக்கஞ்சலாமோ (பேர்)

---

## பெரியதுரையாகிய கடவுளுக்கும் மனுஷத்துரைக்கும் உள்ள பேதம்

180. இரகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

### பல்லவி

அந்தப்பெரிதுரைக்-கிந்தத்துரைகள்சரியா
மூடமனமே
விந்தைப்பொன்னுக்குநிகர்-நிந்தைக்குறியகரியா (அந்த)

### அநுபல்லவி

இந்தப்புவியில்நமைச்-சொந்தப்பொருளாகச்செய்தூ
தந்தைக்குநிகராகச்-சிந்தைக்குள்உறையும் (அந்த)

சரணங்கள்

1. அந்தத்துரை நாம்செய்யும் எந்தப்பிழைகளையும்பொறுப்பான்
இரக்கமின்றி
இந்தத்துரை நாம்செய்யும் எந்தப்பிழைக்கும்தலை அறுப்பான்
வேலைகொள்ளாமல்
அந்தத்துரை தான்நமக் கெந்தப்பொருளுந்தந்துநிறுப்பான்
வேலைவாங்கியும்
இந்தத்துரைநமது சொந்தப்பொருளையுமேமறுப்பான்
விளையாட்டாக

அந்தத்துரைஉலகம் அமைத்தளித்தழிப்பான்
இந்தத்துரைகந்தலை இரண்டாகக்கிழிப்பான்
அந்தத்துரை தனிமை யசப்பகைஒழிப்பான்
இந்தத்துரைபடைகள் இருந்துமேவிழிப்பான்(அந்)

2. அந்தத்துரைவாகனமின்றி அண்டங்களெல்லாங்கடப்பான்
முடவன்போலே
இந்தத்துரைவாகனம் இல்லாவிட்டால் விழுந்துகிடப்பான்
எக்காலமுமே
அந்தத்துரை தானொன்றும் அருந்தாமல்நமக்கன்னம்படையான்
சோறுங்கறியும்
இந்தத்துரை தான்நமக் கீயாமல்தன்வயிற்றில் அடைப்பான்
பலவகையில்

அந்தத்துரை தான்நமக் கனுதினம்உதைப்பான்
இந்தத்துரை தான்நம்மை ஏவல்கொண்டுபிழைப்பான்
அந்தத்துரைஎன்றைக்கும் அழிவின்றித்தழைப்பான்
இந்தத்துரையை இனி இயமன்வந்தழைப்பான்(அந்)

3. அந்தத்துரைசகல அந்தரங்களையுந்தெரிவான்
குருடன்போலே
இந்தத்துரைஉலகில் எதுந்தெரியாமலேதிரிவான்
துஷ்டரையெல்லாம்
அந்தத்துரை அடங்கி முந்திச்சிஷ்டருக்கருள்சொரிவான்
பொய்யரையெல்லாம்
இந்தத்துரைஉயர்த்தி வந்தநல்லவர்க்கிடர்புரிவான்
சத்தியமாக

அந்தத்துரை தான்சுத்த அமலசொரூபி
இந்தத்துரைஉலகில் இணையில்லாப்பாவி
அந்தத்துரைவேத நாயகன்மனவிபாவி
இந்தத்துரைஎவர்க்கும் ஈயாதலோபி (அந்)

---

## கோட்கொள்ளும் உத்தியோகஸ்தர்களைப்பற்றி

### 181. இராகம்-அசாவேரி-திரிபுடைதாளம்

பல்லவி

எந்தநாளிலும் தர்மமேஜெயம்-ஏன்மயங்குகிறாய்-பெண்ணே

அநுபல்லவி

நிந்தனைபலர் கூறட்டும்-அவர்
நினைவெல்லாம் நிறைவேறட்டும்-பின்பு
சிந்தனை தடுமாறட்டும்-அவர்
சிரிப்பார் சிரித்துநாறட்டும்-பெண்ணே (எந்த)

சரணங்கள்

1. எரிகிறவீட்டில் பிடுங்குவதுலாபம்
என்றுசொல்வார் அந்தவண்ணமே
பெரியகோட்சொல்லிநம் உத்தியோகத்தைப்
பிடுங்குவதிர் எண்ணமே
சரியிவர்எண்ண முடிக்கட்டும்-லஞ்சம்
சர்வகொள்ளைகள் அடிக்கட்டும்-உண்மை
துரைமகன்கண்டு பிடிக்கட்டும்-அந்தத்
துஷ்டரைடஜன் அடிக்கட்டும்-பெண்ணே (எந்த)

2. வரும்இடரெல்லாம் வரட்டும்நாம்-அதில்
வருத்தங்கொண் டென்னசாரமே
சருவமூடர்கள்வாழும் நாட்டினில்
சாதுக்கட் கபசாரமே
துரை மகன்நம்மைக் கெடுக்கட்டும்-அந்தத்
துஷ்டர்க்குத்தியோகங் கொடுக்கட்டும்-அவர்
தரையில்கெட்டபே ரெடுக்கட்டும் பின்பு
தம்பிமார்களை முடுக்கட்டும்-பெண்ணே (எந்த

3. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
வாழ்வது நமக்கருமையா
நல்லவர்க்கிதுகாலமா இங்கு
நாமிருப்பது பெருமையா
கல்வில்நார் இவர் உரிக்கட்டும்-அவர்
கால்விலங்கு தரிக்கட்டும்-கண்ட
எல்லவருமே சிரிக்கட்டும்-மிக
என்செயல் அப்போது சரிக்கட்டும்-பெண்ணே (எந்த)

4. கோளும்பொய்களும் கூறட்டும்-நாய்
குலைத்துநத்தம் பாழாகுமா
மூளும்சூரியன் ஒளியைக்கையினுல்
மூடமறைந்து போகுமா
நீளுந்தீயர்கள் குதிக்கட்டும்-அவர்
நெஞ்சில்வஞ்சகம் பதிக்கட்டும்-நமை
நாளுமே அவர்மதிக்கட்டும்-வேத
நாயகன்சிக்ஷை விதிக்கட்டும் பெண்ணே (எந்த)

## சுவாமியை நினைக்க நேரமில்லையென்று முறையிடல்

182. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி

நினைப்பதெப்போதுநெஞ்சே-ஐயன்பதத்தை
நினைப்பதெப்போது-நெஞ்சே

அநுபல்லவி

தனத்தையும்மாதர்-யௌவனத்தையும்-உத்தியோக
கனத்தையும்-எண்ணிப்பல-தினத்தையும்கழித்தால் (நினை)

சரணங்கள்

1. பாட்டிலும்பலவிளை யாட்டிலும்துர்விஷயக்
காட்டிலும்புத்திதனை நாட்டிநாள்கழித்தால் (நினை)

2. தாரத்தைப்பிள்ளைகள்சம் சாரத்தை எண்ணித்துர்வியா
பாரத்திலேநமது நேரத்தைக்கழித்தால் (நினை)

3. தரைக்குள் ஒருசாண்குக்ஷி இரைக்காகவெள்ளைக்காரத்
துரைக்குக்கைகட்டிச்சாகும் வரைக்கும்நாம் உழைத்தால் (நினை)

4. பாருக்குள்வரும்கக்ஷிக் காரர்க்குப்பின்னும் இந்த
ஊருக்கும்உழைத்துநம் வீரத்தைக்குலைத்தால் (நினை)

5. தொண்டைகிழித்துக்கொண்டு சண்டைசெய்யும்வக்கீல்கள்
அண்டையில்இருந்துநம் மண்டையைஉடைத்தால் (நினை)

6. ஞாலத்தில்பெண்கள்செய்யும் சாலத்தைநம்பி அவர்
மூலத்திலேநமது காலத்தைக்கழித்தால் (நினை)

7. உழக்கில்தெற்குவடக்குக் கிழக்குமேற்கென்றுசொல்லும்
வழக்கர்பெருஞ்சமுத்திர முழக்கத்திலிருந்தால் (நினை)

8. வேதநாயகன்திருப் பாதங்களைமறந்து
பூதஉடல்வளர்க்கக் காதங்கள் அலைந்தால் (நினை)

---

## உத்தியோகத்தை வெறுத்தல்

### 183. இராகம்—மோகனம்—ஆதிதாளம்

பல்லவி

இந்தஉத்தியோக-மென்னப்பெரிதா-நெஞ்சே
இதுபோனால் நாம்பிழைப்பதரிதா

அநுபல்லவி

எந்தஇடம்போனாலுங் கந்தபொடிவாசிக்கும்
அந்தவிதமாய்நம்மை அகிலமெல்லாம்பூசிக்கும் (இந்த)

சரணங்கள்

1. நல்லபிரபுக்களெல்லாம் நாட்டைவிட்டேஅகன்றார்
ஞானசூரியரெல்லாம் நமக்கதிபதியென்றார்
இல்லாததோஷம்நம்மேல் எடுத்தவர்முடிகின்றார்
இரவியினுங்களங்கம் இருக்குமெனப்புகன்றார் (இந்)

2. ஆகாதகாதம்இதில் அசடர்தலைஎடுத்தார்
அருங்குணசீலர்கள் அதிகாயங்கைவிடுத்தார்
போகாமற்கோளரும் பொய்யரும்வந்தடுத்தார்
(பூவிற்றகடையிலே புல்லுவிற்கத்தொடுத்தார் (இந்)

இந்தஉலகுக்கெல்லாம் இவரே அதிபதியா
இவருக்குழைக்கநமக் கென்ன தலைவிதியா
அந்தமாகவேபடி அளப்ப திவர்பொதியா
ஆயிரந்தொழிலும்நாம் அறியாதசங்கதியா (இந்)

4. பாரில்இவரைக்கண்டோ படித்திட்டோம்பலபாடை
பட்டதற்கென்ன தந்தார் பாக்கியங்கூடைகூடை
ஊரில்உத்தியோகம்போனால் ஒழியும்பிடித்தபீடை
உயர்வேதநாயகன் உதவுவான் அன்னம் ஆடை (இந்)

---

## துன்பத்துக்கு அஞ்சாமை

### 184. இராகம்-முகாரி-ஆதிதாளம்

பல்லவி

என்னவந்தாலும்-மனமே-ஐயன்
இருக்கையில்-என்னவிசனமே

அநுபல்லவி

மன்னர்பகைக்கில் உயிர் தன்னைவதைப்பர்வே
றென்னசெய்வார்நிதம் பன்னரும்இடர்கள் (என்ன)

சரணங்கள்

1. உத்தமமானசஞ்சீவி-கையில்
உடையவரைக்கொல்லுமோ-நாவி
அத்தனைநம்பும்மேதாவி-தன்னை
அலைக்குமோதுயரமு-மேவி
கத்தனைமறந்தவர் சித்தமேகவலைகள்
வைத்தபாத்திரமாகும் நித்தமும்துன்பம் (என்ன)

2. ஈடறுகாவுடன்ஓடை-அரு
ளிருக்கையில் என்செய்யுங்-கோடை
மாடகூடகோபுர மேடை-தனில்
வசிப்பவர்க்குண்டோ குளிர்-வாடை
தேடரியபண்ணிபொற் பீடம் அமர்ந்தன்பெறும்
கிரீடந்தரித்தோர்க்கின்பம் நாடகம் செயும்நோய் (என்ன)

3. ஓதரும்தேவதாபத்தி-நாளும்
உலகில்யாவையும் வெல்லும்-கத்தி
போதமுடன் அதுவேமுத்தி-அதில்
புருஷார்த்தங்களெல்லாம்-சித்தி
வேதநாயகன்பத்தர்-மீதடருந்துன்பங்கள்
ஆதவன்முன்பனியாம்-ஆதலில்துயரம் (என்ன)

---

## பிறர்மேற் குறை கூறுமை

### 185. இராகம்-ஈசமனோகரி-ஏகதாளம்

பல்லவி

ஒருவர்மேலுங்குறைநீ கூறுதே-திரு
உனக்செயற்காப்பிறரைச் சீறுதே

அநுபல்லவி

வருவதுங்தொழிய மாறுதே-கரு
மஞ்சுக்கிணைகிருபேசன்-கஞ்சக்கழல்மறந்து
வஞ்சக்கடலில்விழும்-நெஞ்சக்குரங்கேநீ (ஒருவர்)

சரணங்கள்

1. துன்பம்என்பதெவர்க்கும் சுதந்தரமே-அதைத்
தொலைப்பதற்குண்டோ-ஒருதந்திரமே
இன்பம்உற்றவரெவர்-நிரந்தரமே-பிறர்
இடிக்கவந்தாலுங்-கட்டி-அடிக்கவந்தாலும்-பழி
முடிக்கவந்தாலும்-உயிர்-மருக்கவந்தாலும்-நீ (ஒருவர்)

2. பொறுமைஎக்காரியமும் சாதிக்குமே-அதைப்
பூண்டவர்க்கேசுகம் ஆதிக்கமே
மறுமையின் துயரத்தைப் பேதிக்குமே-மிக
மகிழ்ந்தபோதிலும்-துயர்-நிகழ்ந்தபோதிலும்-பிறர்
புகழ்ந்தபோதிலும்-உனை-இகழ்ந்தபோதிலும்-நீ (ஒருவர்)

3. மற்றவர்தாம்செய்பினும் பெருந்தீங்கு-அதை
மனதிற்கொள்ளாதிருப்பதே-பாங்கு
குற்றமாகியவழிதனை நீங்கி-மிகக்
கோத்தபலபுவனம்-காத்தபரன்-அடியை
ஏதும்வேதநாயகன்-வார்த்தையின்படி-நீ (ஒருவர்)

---

## பரிதான கண்டனம்

186. இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்

பல்லவி

சீச்சீநீர்லஞ்சம்வாங்கல் ஞாயமாமோ-அதனால்உமைச்
சேர்ந்ததரித்திரம் விடிந்துபோமோ

அநுபல்லவி

வீச்சிலும்வீண்பகட்டுப்-பேச்சிலும்பணம்வாங்கும்
தேர்ச்சியுடையவிளைப்-பூச்சி ஒப்பவரே (சீச்சீ)

சரணங்கள்

1. வரவேண்டியகடனை வகையுடன்கேட்டுவாங்கக்கூசிப்
பலரிருக்க
வலியநீர்கேட்டுவாங்க மனம் எப்படிவந்ததோ சீசீ
உலகில் நீங்கள்
பரவியபெருந்தவம் பதினாயிரம்வருஷம் ஊசி
முனையில்நின்று
பண்ணினும்போமோ அந்தப்பாவம் ஒருமுந்திரிவாசி
இலஞ்சந்தனைக்
கரம்வாங்கினோர்கள் தந்தோர்க்கும்பாதநாசி
கள்ளர்க்கும்வேண்டும்நடு இரவமாவாசி
இரவும்பகலும் உமக்கேஏகராசி
எவரையுமயக்கிடும் நீர்புருஷசாதி (சீச்)

2. தனதுகேடறியாமல் சகலர்க்கும்சாஸ்திரஞ்சொல்லும்பல்லி
கழுநீர்வீழ்ந்து
சாகுதல்போலயாவுந் தெரிந்தமகிமைக்கொத்து மல்லி
ஆகிய நீங்கள்
மனமயங்கும் எளியரிடம் வாங்கலாமோதனம் இல்லிக்
குடநீர்போலே
வாழ்வுந்தனமுங்கெட்டுத் தாழுமென்பதுள்ளங்கை நெல்லி
ஆகையால் ஏழை
ஜனம்அழவாங்கிடுந் தனம்உயிர்கொல்லி
சாய்க்குமேஅதுவாழ்வின் வேரினைக்கெல்லி
தினமுமேஅடிக்கிறீர் நீர்ஜெகஜல்லி
திருட்டுத்தொழிலில்நீங்கள் ருத்திராக்ஷப்பில்லி (சீச்)

3. இழிவுக்காலயமான உமையஷ்டமச்சனி பற்றுதோ
பொல்லாத்துஷ்டர்நீர்
என்றுசனிபிடிக்க அஞ்சினும்பாதகஞ்சுற்றுதோ
புண்ணியங்கைவிட்டு
வழிகெட்டஉங்களுக்கு வளநிதியாவுமேவற்றுதோ
ஒருசாண்கும்பி
வளர்த்திடஉங்களுக்கு வருமாதச்சம்பளம்பற்றுதோ
குண்டோதரன்போல்
ஒழிவில்உம்முதரந் தூராப்பெருங்குழியா
உம்மாற்சகலஉத்தி யோகர்க்கும்பழியா
விழியவிழியாதோஉமக் கென்னமெட்டசுழியா
வேதநாயகன்உரைப்பது வீண்மொழியா (சீச்)

---

## இதுவும் அது

187. இராகம்-சங்கராபணம்-சாப்புதாளம்

பல்லவி

ஏதுக்குவாங்கிறீர்லஞ்சம்-உமக்
கிதைவிடவேறுண்டோபஞ்சம்

அநுபல்லவி

வாதுக்குவீணே வழக்குரைபேசி
வாங்கிறீர் என்னபிழைப்பது சீசீ (ஏதுக்கு)

சரணங்கள்

1. நீசப்பொருளினை ஆசைப்பட்டேகல்ல
நீதியைநீக்குகிறீர்-ஐயோ அபக்
கியாதியைத்தூக்குகிறீர்-உமக்கும்பொய்த்
தாசிக்குமென்னபேதம்-நீர்தான்
சாதிப்பதென்னபிரமாதம்-பிறர்
காசுக்கேன் இந்தவிதாதம்-அப்பு
காத்தான்முதலோர்க்கு நீர்முதற்பாதம் (ஏதுக்கு)

2. மணமுமலரும்போன்ற நேயர்களிடத்திலும்
வாங்குவீர்பரிதானம்—உமைவிட்டு
நீங்குமோஅவமானம்—அலக்ஷயம்
பணமென்னகாணும்பாஷாணம்—பிறர்
பணமென்றல்விடுகிறீர்பிரமாணம்—அதில்
குணமுண்டோகடுகுப்பிரமாணம்—வாங்கக்
கூசுகிறீரிலைகிடையாதோநாணம் (ஏதுக்கு)

3. பாழில்இறைத்தஜலம்போல உமக்குப்
பரிசளித்தாவதுண்டோ—துரைதீர்ப்புப்
பண்ணுவதும்மைக்கொண்டோ—வெட்கமின்றி
ஏழைகளிடத்திற்கூலி—வாங்க
இச்சைகொண்டீர்என்னகேலி—வந்து
சூழுமேபலபலசோலி—நிஜச்
துரையறிந்தால்உங்கள்உத்தியோகம்காலி (ஏதுக்கு)

4. உழக்கிற்கிழக்குமேற்குண்டாக்கி—ஒருக்காலே
ஊரைப்புரட்டுகிறீர்—விவாதிக்கும்
பேரைமருட்டுகிறீர்—நிச்சயமுண்டோ
வழக்குச்சேற்றினில்நட்டகம்பம்—பிச்சை
வாங்கியும்உமக்கென்னடம்பம்—ஞாயம்
இழுக்கின்றபேர்படுந்துன்பம்—உமக்
கிசைந்திடுஞ்செல்வத்தை அறுத்திடும்கம்பம் (ஏதுக்கு)

5. சிலையில்நார்உயுப்பதுபோலேஎவரையும்
திட்டமாளத்துகிறீர்—கைகளில்அகப்
பட்டதைச்சுற்றுகிறீர்—பெரிதான
மலையோஎமதுகாயஸ்தூலம்—நீர்தாம்
வாழ்வதுண்டோகோடிகாலம்—ஊரில்
கொலைஞர்களவர்கள்விசாலம்—ஆனல்
கொடுக்கவேண்டுமுந்திஉமக்குத்தாம்பூலம் (ஏதுக்கு)

6. ஆடுங்கறங்கெனவாடும்பஞ்சைகளிடம்
அடிக்கிறீர்சர்வகொள்ளை—உமைவந்து
பிடிக்குமேபெரியசெள்ளை—வாங்கினபின்பு
போடுகிறீர்பட்டாராமம்—ஒரு
போதும்விடியுமோக்ஷாமம்—உமை
நாடிமிஞ்சாதொருரோமம்—வேத
நாயகன்சொற்கேட்டால்உமக்குண்டுக்ஷேமம் (ஏதுக்கு)

## இதுவும் அது

188. இராகம்-பியாகடை சாப்புதாளம்

பல்லவி

ஆர்வேணுமோ அவர்—வாங்கட்டுகீலஞ்ச
ஆசைவையாதே—நெஞ்சே

அநுபல்லவி

சீர்வளரும்குளத்தூ ரெனும்பதி உள்ளார்
செல்வன்வேதநாயகன்சொல்லும்உரையைக்கொள்வார் (ஆர்)

சரணங்கள்

1. சம்பளமிருக்கப்பின் மேல்வருமானம்
தனைநாடி ஏன் அதன்மேல் நித்தியதானம்
அம்புவிமிசை விளைந்திடும்அவமானம்
அதைவிடஎடுக்க லாமேஉபாதானம்.
அஞ்சிடும்பல-பஞ்சையோர்களையே-நிதம்துன்பஞ்செய்து
மிஞ்சவேஅவர்—லஞ்சமேதர
வஞ்சமேபுரி—பஞ்சபாதகர் (ஆர்)

2. கக்ஷிக்காரருக்குன்னல் ஏதுபகாரம்
கனதுரைதீர்ப்பான தன்மனப்பிரகாரம்
ரக்ஷிப்பேனெனப்பொய் சொய்வதில்என்னசாரம்
வஞ்சமென்பதுபட்டப் பகலிற்செய்சோரம்
ரத்னராசியும்அர்த்த—நாணயமும்—தந்தால்உன்காரியம்
சித்தியென்றுப-யத்திரானையும்
எத்திவாங்கிடும்—உத்தியோகர்கள் (ஆர்)

3. அயலார்பொருளின்மேல் நமக்கென்னசொந்தம்
அகதியைமடிபிடித் தேன்பலவந்தம்
இயலவாங்கிகெட்ட குடிகள்அநந்தம்
இகபரம்போம்வரும் நகரநிர்ப்பந்தம்
இக்கணத்தில் உன்பக்கமாகிடவே-செய்வேன்—தந்தாவென்று
அக்கிரமத்தில்-அலேக்கழித்து
வழக்கரைத்தொடர் துர்க்குணத்தர்கள் (ஆர்)

4. ஒருகாசாகிலும் வாங்குதல்துரோகம்
ஊர்கொள்ளையடிக்கவோ உனக்குத்தியோகம்
தருபவர்க்கென்ன உன்னாலேநிர்வாகம்
தனதுக்கேன்செய்கிறாய் நீபிராணத்தியாகம்
சட்டம்நீதிபுரட்டி-வாதியையே தினம்தெட்டித்தங்கக்
கட்டிவெட்டி-உருட்டிஓட்டிய
பெட்டிகொட்டி-மருட்டுமட்டிகள் (ஆர்)

---

## பிரபத்துவ தூஷணை

### 189. இராகம்-தன்னியாசி-ஆதிதாளம்

பல்லவி

ஓஓபிரபத்துவமே-தினமும்
உன்னால்கன-உபத்திரவமே

அநுபல்லவி

காவளர்பூமியில் என்னிடத்துன்தொழிலைக்
காட்டாதேஎன்னை-வாட்டாதே (ஓஓ)

சரணங்கள்

1. அன்னத்தைக்கண்டால் விஷம்போல்வேம்புபோலே
அருவருத்துண்ணத் துணியாய்
ஆயிரம்பக்குவஞ்செய் தொருவாய்சாதம்உண்
டாலும்நீ ஜீரணியாய்
என்னத்துக்கிந்தஅன்ன மென்றெண்ணிஏழைகளுக்
கீந்தவர் பசிதணியாய்
இறுமாப்போதிமிர் வாதமோ
ஈசன்வந்தாலும் எழுந்துபணிவாய் (ஓஓ)

2. பார்க்கச்சகியா அந்த ஈனர் அழகரென்று
பலருந்துதிக்க விதிப்பாய்
பலசாலிநானென்று துள்ளிக்கொண்டுசெத்த
பாம்பையுமே மிதிப்பாய்
ஊன்னையே நீ துதிப்பாய்
உண்மைசொல்வோரைத்தள்ளிப்
பொய்சொல்லுவோர்களை
உற்றுவரென்றுமதிப்பாய் (ஓஓ)

3. காரியமில்லா வீண்டம்பவிஷயத்தில்
காசெல்லாம் செலவழிப்பாய்
காலத்தையும்உனது காயத்தையும்விஷய
காமத்திலே யழிப்பாய்
பாரில்சுகம்எளிய ராலென்றுநினையாமல்
பத்துப்பேர் நித்தம்
உனைத்தாங்க இல்லாவிட்டால்
பரக்கப்பரக்க விழிப்பாய் (ஓஓ)

4. பாலையும்விஷஞ்செய்யும் பாம்புபோற்சுகமெல்லாம்
பாழாக்கிக் கெடுப்பாய்
பலநோய்களுக் கிருப்பிடமாய்வைத்தியர்
பலருக்குவேலை கொடுப்பாய்
காலையுமாலையுங் காரணமின்றிக்கடு
கடுத்துநீ சிடுசிடுப்பாய்
கைப்பொருள்போனாலும் ஒருவேலையுந்தெரியாமல்
கையிலே ஓடெடுப்பாய் (ஓஓ)

5. சீமையிற்கவிசொல்லக் கம்பனும்நிகரல்லச்
சேஷன்நானென்று விரிப்பாய்
சேஷனீயென்பதற்குச் சாட்சியாகவிஷத்தைத்
தேகமுழுதுந் தரிப்பாய்
ஊமைக்குளறுவாயன் சண்டப்பிரசண்டனென
ஓயாமல் விவகரிப்பாய்.
உயர்கவிஞரைக்கண்டால் ஒன்றும்பேசாமல்நீ
ஓட்டத்தை அநுசரிப்பாய் (ஓஓ)

6. பெருநொண்டிபோல்உனைத் தூக்கச்சொல்லிப்பல
பிராணிகள் கழுத்தொடிப்பாய்
பெருந்தொழில்செய்து களைத்தவன்போல்உடம்பெல்லாம்
பிடிக்கச்சொல்லி அடிப்பாய்
அரும்பலசாலிநான் தூக்கிவிட்டால்பிணக்கா
டாக்குவேனென்று நொடிப்பாய்
ஐயன்வேதநாயகன் அடியைமறந்துபெண்கள்
அடிகளையே பிடிப்பாய் (ஓஓ)

## குடும்பசம்பந்தக் கீர்த்தனைகள்

### தாய் தந்தையரை நமஸ்கரித்தல்

190. இராகம்-பியாகு-ஆதிதாளம்

கண்ணிகள்

1. உற்றவரேஎனைப் பெற்றவரேதினம்
உமக்கே நமஸ்காரம்
முற்றுமேநீர்செய்த உதவிக்குநான்என்ன
மொழிவேன் உபசாரம்

2. பத்துமாதம்என்னை வயிற்றிலேசுமந்து
பலதுயர் சகித்தீரே
எத்தனைபிராண சங்கடமுடனேஎனை
நன்றுநீர் வகித்தீரே

3. பெற்றீர்வளர்த்தீர் பெயரும்இட்டீர்ஜீவப்
பிரதிஷ்டைசெய்வித்தீரே
உற்றஉம்உதிரத்தை முலைப்பாலாகவே
ஊட்டியே உய்வித்தீரே

4. தேனினும் அமிர்தினும் இனிதேஎனக்குநீர்
செப்பியதாலாட்டு
வானினும் அமரர்க்குவருமோ இதுபோல்
மங்களத் திருப்பாட்டு

5. மாந்தவியாதிகள் எனையணுகாமலே
மருந்துகள் கொடுத்தீரே
வாந்தியும்மலஜல அசுத்தமும்சகித்தெனை
மார்புற எடுத்தீரே

6. உடல்உயிர்சகலமும் நீர்தந்ததேயன்றி
உண்டோ இனிவேறு
அடரும்உலகமெலாம் உமக்களித்தாலுமே
ஆமோ கைம்மாறு

7. சிவன்போல்நீர்என்னை வளர்த்திடஅருமையைச்
செப்பஎன்னால் ஆமோ
நாலேஆயிரம் இருக்கினும்நீர்செய்த
நன்மையைச் சொல்லப்போமோ

8. கவலைஎல்லாம்என் கவலையல்லால்வேறு
கவலையொன் றறியீரே
புவியிலேஎன்சுகம் அல்லதுவேறொரு
பொருளைக்குறியீரே

9. பாலவியாதிகள் எனையணுகாமலே
பத்தியம் பிடித்தீரே
காலமெல்லாம்பல விரதங்கள் அனுஷ்டித்துக்
கருமங்கள் முடித்தீரே

10. இரவுமுழுதுமே தூங்காதிருந்துநீர்
எந்தனைக் காத்தீரே
அரவுமுதற்பல ஜெந்துக்களால்வரும்
ஆபத்தைத் தீர்த்தீரே

11. தரணியில்என்சுகம் வேண்டியேநீர்பல
தருமங்கள்செய்தீரே
காணிக்கைசெய்கும்படி கடவுளைத்துதித்துநற்
காணிக்கை பெய்தீரே

12. சற்றுநீர்என்னைமுன் மறந்திருந்தால்நான்
சடலம் பெரும்பேறே
உற்றஉலகிலே இந்நாள்மட்டும்நான்
உயிர்வாழ்ந் திருப்பேனோ

13. காணாதெய்வத்தின் அருளாலேவந்த
கண்கண்டதெய்வம்நீரே
ஆணும்பெண்ணுமிரா அந்தத்தேவையும்
அன்னைதந்தை என்பாரே

14. எனக்கொருசுகம்வரில் உமக்குவந்ததுபோல்
எக்களிப் படைந்தீரே
எனக்கொருதுயர்வரில் உமக்குவந்ததுபோல்
ஏங்கிஉள் ளுடைந்தீரே.

15. பாலும்சோறும் பக்ஷணங்களும்எனக்கிட்டுப்
பழஞ்சோ றுண்பீரே
காலமெல்லாம்நல்ல சோமனுன்உடுக்கநீர்
கந்தையைக் கொண்டீரே

16. சப்பிரமஞ்சத்தில் நான்படுத்துறங்கநீர்
தரையிலே படுத்தீரே
கைப்பொருளெல்லாம் என்னிமித்தம்பரி
காரிக்குக் கொடுப்பீரே

17. வாக்கால் உளறும்என் மழலைச்சொற்கேட்டுநீர்
மகிழ்ந்தே துதித்தீரே
காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சென்பதுபோல்
தரிசனம் பதித்தீரே

18. குற்றம் எத்தனையோ செய்தேன் அவற்றைக்
குணமாய்க் கொண்டீரே
சற்றுநான்நோய்கொள்ளில் அன்னம்நித்திரையின்றித்
தளர்ந்துமெய் துவண்டீரே

19. தோளினும்மார்பினும் இடையினுமேயெனைத்
தூக்கிக்கொண் டலைந்தீரே
நீள்பஞ்சகாலத்தில் உள்ளசோறெனக்கிட்டு
நீர்பசித் தலைந்தீரே

20. சுயநலம்வேண்டிஇங் கொருவருக்கொருவர்
துணைசெய்வர் மெய்தானே
பயனொன்றும்வேண்டா தெனைநீர்வளர்த்திட்ட
பக்ஷம்என் சொல்வேனே

21. உறவினரெல்லாம் உம்மாலேவந்த
உறவினர் தாமலவோ
அறநெறிகாட்டும் குருவுமேநீரெனில்
அயலினி என்சொலவோ

22. பலபொருள்எனக்குச் சம்பாதித்துவைக்கவே
பலவிதம் உழைத்தீரே
நிலமிசைஉம்முயிர்க் குயிர்நானேஎன்று
நினைத்துநீர் பிழைத்தீரே

23. தாரம்போனால்மறு தாரம்வருவர்பெற்ற
தநயரும் அப்படியே
நீர்போனால்வேறு தாய்தந்தையர்வந்து
நேருவதெப்படியே

24. தக்கபருவத்தில் எனை அடக்கிப்பாட
சாலையில் விட்டீரே
பக்கமெல்லாந்திரிந் தென்னாலேபல
பாடுகள் பட்டீரே

25. இளந்தைப்பருவந்தில் என்னால்வருந் துன்பம்
எல்லாம் பொறுத்தீரே
தளர்ந்தபருவத்தில் உம்மால்வருந் துன்பம்
சகிப்பது பெருஞ்சீரே

26. துக்கங்களெல்லாம் நீர்வகித்துக்கொண்டு
சுகம்எனக் களித்தீரே
மக்களேசகலபாக்கிய மென்றெண்ணி
மனமிகக் களித்தீரே

27. மண்பிள்ளை ஆயினுந் தன்பிள்ளையென்றெனை
மகிழ்ந்தாதரித்தீரே
பண்புடன்என்பொருட் டாகநீர்பலரையும்
பணிந்துபசரித்தீரே

28. தெரியாமல்நான்செய்த பிழைபொறுத்தென்னிடம்
திருவருள் பதிப்பீரே
அருமைவேதநாயகன் அருள்செய்யும்படிஎன்னை
ஆசீர்வதிப்பீரே (உற்றவரே)

---

## தகப்பன் மகனுக்குப் புத்திகூறல்

### 191. இராகம்-மோகனம்-ஆதிதாளம்

பல்லவி

மார்க்கம் இதுமகனே-சந்திரன்
தோற்கும் எழில்முகனே-சன்

அநுபல்லவி

மூர்க்கருடனே உறவாடாதே-பழி
மூண்டிடும்சூதுவிளையாடாதே-இந்தப்
பார்க்குள் ஒருபொய் சொல்லக்கூடாதே-மது
பானம்விரும்பிமனம்வாடாதே-சன் (மார்க்கம்)

சரணங்கள்

1. நித்தியன்பொன்னடியிணையே-துயர்க்கடலை
நீக்குதற்குதவும் பணையே
பத்திமான்கட்குண்டோ இணையே-கடவுள்நேசம்
பரகதிக்கு வழித்துணையே
சத்தியமார்க்கத்தைப்பிரியாதே-பல
தப்புவழியை அனுசரியாதே-சுய
புத்தியில்லாமல்-எங்குந்திரியாதே-இந்தப்
பூவில் எவர்க்கும் இடர்புரியாதே-சன் (மார்க்கம்)

2. புண்ணியபாவங்கள் இரண்டே-நிச்சயம்-அந்தப்
புண்ணியவழியைநீ அண்டே
மண்ணினுமேமகிமைகொண்டே-பிழைப்பதன்றி
மறுமையினும்பாக்கியம் உண்டே
கண்ணியமாகஎன்றும் பிரகாசி-நல்ல
கனதந்தைதாய்பெரியர் அடிபூசி-தினம்
அண்ணன்தம்பி சோதரிகளைநேசி-நிதம்
அன்னம்எளியர்க்கிடு நயம்பேசி-என் (மார்க்கம்)

3. சத்தியம்அடக்கம் பொறையே-முதலாகிய
சற்குணங்களொடுநிறையே
சித்திபெறில் ஒருகுறையே-அனுகாதுனைச்
செப்பினேன் நான்நீதிமுறையே
சுத்தமாகவே தினம்நீராடு-நல்ல
தூயவஸ்திரங்களைக் கையாடு-கன
புத்திமான்களுடனே தினம்கூடு-கெட்ட
புல்லரைக்காணில் அஞ்சியேஓடு-சன் (மார்க்கம்)

4. கல்விநமக்கவசியமே-கற்றவர்க்கிந்தக்
காசினி எல்லாம் வசியமே
செல்வமுடன்வரும்நயமே-கற்றவர்க்கென்றும்
ஜீவனத்துக்கில்லை பயமே
பல்வகைப்படிப்பையும் நீங்காதே
பாடம்படிக்காமலே-தூங்காதே-நீ
நல்வழிநடக்கப் பின்வாங்காதே-எந்த
நாளும்நீகடன் வாங்கி ஏங்காதே-சன் (மார்க்கம்

5. பாடமெல்லாம்நெஞ்சில் இருந்து-எழுதப்பேசப்
பாடவும்பழக்கம் பொருந்து
நீடுகையெழுத்தும் திருத்து-கற்றபடிநீ
நிற்கவேண்டும் ஈதென்கருத்து
ஏடுங்கையுமா இரு வாடாதே-நீ
என்றும்பிறர்பொருளை நாடாதே-சர்வ
மூடரைக்கூடிவிளையாடாதே-என்றும்
மூக்குத்தூள்புகையிலே போடாதே-சன் (மார்க்கம்)

6. சீலத்தைக்கைவிடாதே-துர்ப்போதனை
செய்பவர்க்கிடங்கொடாதே
ஜாலத்துட்படாதே-மாதுஷ்டனென்று
தாரணியிற்பேர் எடாதே
காலத்தைவிருதாவிற்கழிக்காதே-உன்
கைப்பொருள்வீணிற்செலவழிக்காதே-இந்த
ஞாலத்தொருவரையும்பழிக்காதே-வேத
நாயகனைமறந்துவிழிக்காதே-சன் (மார்க்கம்)

---

## தகப்பன்மகளுக்குப் புத்திகூறல்

192. இராகம்—சஹானா—ரூபகதாளம்

பல்லவி

புத்தி இதுமகளே—உனக்குநற்—புத்தி இதுமகளே

அநுபல்லவி

நித்தியமும்பரன் நேசம்விடாதே
சத்தியமார்க்கத்தைத் தாண்டிக்கெடாதே (புத்தி)

சரணங்கள்

1. ஆலயம்குருக்களை அசட்டைபண்ணாதே
அடிக்கடிஜெபஞ்செய்யா திருக்கவெண்ணாதே
காலந்தனைவீணிற் கழிக்கஎண்ணாதே
கண்ணேபிக்ஷையிடாமல் நீஉண்ணாதே (புத்தி)

2\. மாதாபிதாக்களை மகிழ்ந்துநீ தாங்கு
மண்ணில்நல்லபிள்ளை யென்றுபேர்வாங்கு
தீதுகள் உனக்குஞ் செய்தோர்க்குமேதீங்கு
செய்யாமலிருப்பது திருவுளப்பாங்கு (புத்தி)

3\. ஞானபுஸ்தகங்களை நாளும்நீவாசி
நல்லவருடன்கூடி நாதனைநேசி
ஈனர்தமக்குஞான மே உபதேசி
என்றுங்குணவதி யேமகராசி (புத்தி)

4\. உயிர்போனாலும் நீ ஒருபொய்சொல்லாதே
உன்வீடுகடந்தயல் வீடுசெல்லாதே
பயில்மறுபுருஷர்கள் பார்க்கநில்லாதே
பாவத்தைக்கனவிலும் நினைத்தல்பொல்லாதே (புத்தி)

6\. அம்புவிழியே அறங்கைவிடாதே
அற்பப்பொருள்விரும்பி ஐயோகெடாதே
வம்புக்காரிகளுடன் வார்த்தைகெடாதே
மற்றவர்பொருளைக்கண் டாசைப்படாதே (புத்தி)

6\. வாழ்வுவந்தாலும்நீ மயங்கித்துள்ளாதே
மற்றவர் இழிவைஉன் வாயால்விள்ளாதே
தாழ்வுவந்தாலும்நீ சலித்துக்கொள்ளாதே
சகலமும்பரன்செயல் தடுத்துத்தள்ளாதே (புத்தி)

7\. மாமிநாத்திகளை மதித்துறவாடு
மகளுந்தாயும்போலே மகிழ்ந்துநீகூடு
சாமியாடுங்கணவன் தயவைநீதேடு
தலையணைமந்திரம் ஓதுதல்கேடு (புத்தி)

8\. தப்பாமல்எளியரைத் தாங்கிக்கைதூக்கு
தானதருமம்ஜெப தபத்தில்நாள்போக்கு
கைப்பாகத்தாலேஉன் கணவனுர்மூக்கு
கம்மென்றுமணமேறக் காய்கறியாக்கு (புத்தி)

9\. விடியுமுன்எழுந்துநீ வேலையைநாடு
வீட்டைக்கண்ணாடிபோல் விளக்கிக்கையாடு
உடலும்ஆடையும்அழுக் கொழியநீராடு
உடலம்பெருக்கத்தினி உண்பதுகேடு

10. சொந்தவேலைகள்செய்யச் சோம்பிநையாதே
துன்பஞ்செய்தவர்க்கும்நீ துன்பஞ்செய்யாதே
வந்தஎளியவரை வாட்டிவையாதே
மாவேத நாயகன் வார்த்தைபொய்யாதே (புத்தி)

---

## உத்தமஸ்திரீயின் லக்ஷணம்

### 193. இராகம்-சாரங்கா-ரூபகதாளம்

பல்லவி

எவளோ அவளேகுலநாரி-அவள்
இகபரம் இரண்டுக்கும் உபகாரி

அநுபல்லவி

அவனிதனைவிதிக்கும்-ஆண்டவனைத்துதிக்கும்
அனகபூஷணி-அமிர்தபாஷணி
கனகதூஷணி-கலகதுவேஷணி (எவளோ)

சரணங்கள்

1. நித்திரையிலுங்கணவன் தியானம்-என்றும்
நீங்காதபெரிய அபிமானம்
பத்தினிகளுக்கெல்லாங் குருஸ்தானம்-அவள்
பரபுருஷருக்குமாதா சமானம்
சத்தியம்பொறை-இருள்-சாந்தம் அவட்குப்பொருள்
தர்மகஞ்சனி-சமயரஞ்சனி
கர்மபஞ்சனி-கனநிரஞ்சனி (எவளோ)

2. உத்தமகுணங்களே ஆபரணம்-ரத்ன
ஓலைமுதல்நகைகள் ஒருத்ரணம்
பத்தாவைப்பிரிவது வேமரணம்-வரும்
பந்துஜனங்கட்கெல்லாம் ஆதரணம்
சுத்தசித்தம் உடையாள்-தூய அன்னநடையாள்
துதிகொள்சுந்தரி-சுபநிரந்தரி
மதியில்மந்திரி-வசனதந்திரி (எவளோ)

3. சந்திரபிம்பம்போ லுந்திருமுகமே-அவள்
தரிசனம்பிர்மா னந்தசுகமே
எந்தவேளையு மிருதுவாசகமே-சீலம்
ஈவான் அருந்ததிக்கும் யாசகமே
வந்துதனை அடுக்கும்-வறியர்க்கெல்லாங்கொடுக்கும்
மலநிவாரணி-வடிவபூரணி
குலசிரோமணி குண உதாரணி (எவளோ)

4. குண அழகொன்று லக்ஷாந்தரமே-கொல்லுங்
கொடுவிஷம்குணமில்லாள் சுந்தரமே
உணர்வில்லாள்வீடு வனாந்தரமே-ஞானம்
உத்தமிக்கென்றுஞ் சுதந்தரமே
அணுகும்பர்த்தாகுரூபம்-அவட்குத்திவ்யசொரூபம்
அதிகநயவதி-அமிர்தகிரணமதி
புதியசுபநதி-புருஷர்தவநிதி (எவளோ)

5. சகலமுங்தெரிந்த வித்தியாதீபம்-என்றும்
தலைவன் ஊழியமே காலக்ஷேபம்
பகர ஒண்ணுமகிமைப் பிரதாபம்-அவள்
பாக்கியங்கணவன் பிரியசல்லாபம்
நிகரில்வேதநாயகன் நேசமேபேசுஞ்சுகம்
நிதியநவமணி-நிகர்வகுண அணி
அதிகவிதரணி-அரியகிரகணி (எவளோ)

---

## பெண்பார்க்கத் தூதனுப்புதல்

### 194. உசேனி-ஆதிதாளம்

பல்லவி

நல்லபெண்ணைப்பார்நீ தூதா
நல்லபெண்ணைப்பார்நீ தூதா

அநுபல்லவி

அல்லடாகேள் இந்தப்பூமியின்மேலே
ஆயிரங்காலத்துப்பயிராகையாலே (நல்ல)

சரணங்கள்

1. அதிகபேச்சுக்காரி பெரும்வம்பி
ஆயிரமானாலும் அவள்வேண்டாந்தம்பி
நிதம்நிதம்ஊரெல்லாம் நீட்டுவாள்கம்பி
நிச்சயம்அவள் ஆகாள் நீ என்சொல்நம்பி (நல்ல)

2. எழுத்துவாசகம் அறி யாதவள்மட்டி
ஏதும்அறியாள் அவள் சுரண்டுவாள்சட்டி
கழுத்திலேஅவளுக்குத் தாலியைக்கட்டிக்
காரியமில்லை அது காசிக்குநஷ்டி (நல்ல)

3. அழகுங்குணமுள்ள வள்நல்லஜோடு
அழகில்லையாயினும் குணத்தையேதேடு
பழகுநற்குணமில்லா அழகியின்வீடு
பாம்புபுலிகரடி வாழ்ந்திடுங்காடு (நல்ல)

4. வீட்டுவேலைதெரி யாதவள்வேம்பு
மினுக்கும்அவள் குலுக்கு மேவெறும்வீம்பு
கூட்டுநற்குணமில்லாக் கொடியவள்பாம்பு
குலத்தைக்கெடுக்கவந்த கோடாலிக்காம்பு (நல்ல)

5. நகைகள் தரித்துமஞ்சள் வாடைகள்பூசி
நாடெங்குந்தெரியவே நகைத்துக்கைவீசி
சொகுசுடன்நடப்பவள் ஆயிரந்தாசி
சும்மாவந்தாலும் அவள் வேண்டாம்சீசீ (நல்ல)

6. தேவதாபத்தி இல்லாதவள்கள்ளி
திருட்டுக்கும்புரட்டுக்கும் அவள் ஒருபள்ளி
தாலிபுருஷன்குடிக் கவள்பெருங்கொள்ளி
சனியனைவிலைக்கு வாங்காமல்நீ தள்ளி (நல்ல)

7. உடமைகளுடன்பணங் காசின்மேல்இச்சை
உள்ளவள்சண்டைக்குக் கட்டுவாள்கச்சை
இடைவிடாமல்கெடுமே [என்லச்சை
இவளைக்கொள்ளுவதிலும் எடுக்கலாம்பிச்சை (நல்ல)

8. சந்ததங்கணவன்மேல் ஒழியாப்பத்தி
சாந்தம்பொறுமை தயைதானம்நற்புத்தி
எந்தவேளையும்உடல் ஆத்துமசுத்தி
இல்லாதவள் அவன் கழுத்துக்குக்கத்தி (நல்ல)

9. நல்லவள்என்னையா றுழும்விடத்தே
நானூறுபோனாலும் நீபின்னிடத்தே
பொல்லாதவள்கையில் காட்டிக்கொடாதே
புலியைக்கொண்டுவந்தென்னைத் தெருவில்விடாதே (நல்ல)

10. சகலகாரியமுந் தெரிந்தவள்சிலாக்கியம்
தரித்திர திசையிலும் அவள்பெரும்பாக்கியம்
இகபரம்இரண்டுக்கும் அவளேயோக்கியம்
என்றுசொன்னான்வேத நாயகன்வாக்கியம் (நல்ல)

---

## தூதன் பெண்பார்த்துவந்து சொல்லல்

195. இராகம்-சௌராஷ்டிரம்-அடதாளசாப்பு

பல்லவி

பஞ்சவர்ணக்கிளிபோல் ஒருபெண்ணை நான்
பார்த்துவந்தேன்சாமி

அநுபல்லவி

கொஞ்சமுஞ்சந்தேகமில்லாமலே அந்தக்
கோலமயிலைநீர்கொள்ளும்-அநு
கூலம்வந்ததென்று துள்ளும்-நல்ல
காலம்கவலையைத்தள்ளும் (பஞ்ச)

சரணங்கள்

1. பூரணச்சந்திரன்போலும்முகத்திற்குப்
பூமியிலுண்டோசமானம்-தெய்வப்
பூவையர்சுந்தரம்வேண்டில் அவளிடம்
போய்வாங்கவேண்டுமேதானம்-அந்த
நாரிகண்வாய்செவிமூக்குவமையை
நாட்டுவதுமதியீனம்-அவள்
நடைஅழகுக்கும்சடைஅழகுக்குமே
நான்என்சொல்வேன்உபமானம்-அந்த
மானின்சொல்தேவகானம்-இடை
தானுண்டென்பதனுமானம்-நாறும்
மீனுங்கண்ணினில்அவமானம் (பஞ்ச)

1. பாக்கியவதி அவள் பக்கத்திலிருந்தாலும்
பாவம்எல்லாம்பறந்தோடும் அவள்
பால்வடியும்முகம்பார்த்தாலும்போதும்சௌ
பாக்கியம்வந்துவிளையாடும்-திரு
வாக்கால்அவள்மழைபெய்யென்றால்பெய்யுமே
வர்ணிக்கயாராலேகூடும்-கிட்டி
வந்ததுமக்குத்துரந்தரயோகம்
வருத்தத்தைநீர்தள்ளிப்போடும்-இனிக்
கருத்தில்அவளையேநாடும்-மிகு
திருத்தமாகக்கவிபாடும்-நல்ல
பொருத்தம்ஆனந்தக்கூத்தாடும் (பஞ்ச)

3. வெள்ளியும்தங்கமும்அள்ளிக்கொடுத்தாலும்
வேறொருவர்முகம்பாராள்-நல்ல
மேன்மைத்துரைமகள் ஆனாலும்விட்டு
வேலைக்குப்பின்னிட்டுச்சோராள்—நிதம்
தள்ளிநீர்வைத்தடித்தாலும்கைநோகுமே
சாமிஎன்றுதொழுஞ்சீராள்-பெற்ற
தாய்தகப்பன்அழைத்தாலும்உமைவிட்டுச்
சற்றேநவமணிநேராள்-நாளும்
குற்றமுள்ளோர்சபைசேராள்-செய்த
சற்றும்பிரிந்திடநேராள்-பழு
நற்றவைத்தால்அன்றிவாராள் (பஞ்ச)

4. காரியம்பார்ப்பள்கணக்கும்எழுதுவள்
காய்கறியாக்கவும்கெட்டி-அவள்
கைபட்டால்வேம்புங்கரும்பல்லவோருசி
கண்டுநீர்மண்டுவீர்சட்டி-அவள்
ஊரிலேமாமியார்நாத்திமார்எல்லாம்
உவந்திடுகற்கண்டுக்கட்டி-தினம்
ஓயாவிருந்துவந்தாலும்சலியாமல்
உண்ணச்சொல்வாள் அன்னங்கொட்டி-அந்த
வண்ணக்குயிலைநீர்கிட்டி-இரு
கண்ணிற்கண்டாற்படும்திட்டி-துரை
பெண்ணைக்கொள்என்ன அட்டி (பஞ்ச)

5. சிந்தாமல்மங்காமல விட்டுப்பொருள்களைச்
சீவன்போல்காக்கும்நிர்வாகி- தினம்
செலவைக்குறைத்துவரும்படியில்
சேர்த்துவைக்குமதியூகி-நிதம்மிச்சம்
கந்தம்உறவே தன்வீட்டையுந்தன்னையும்
கனசுத்தம்செய்நாகரீகி காணும்
கனவில்நனவில்எப்போதும்தெய்வத்தைக்
கணவனைத்தியானிக்கும்ஸ்நேகி-நகை
பணம்விரும்பாதவிவேகி-சாந்த
குணமுடையகனதியாகி-நல்ல
உணர்வுடையஉபயோகி (பஞ்ச)

6. ஆபத்துவேளையில் அறிவுசொல்மந்திரி
அரும்பிணிக்கவளே சஞ்சீவி- துன்பம்
அணுகும்போதாறுதல்தரித்திரகாலத்தில்
அருநிதியாம்-அந்தத்தேவி-உம்மைப்
பாபத்தில்வீழாமல் போதிக்கும்சற்குரு
பாடவும்வல்லமேதேவி-தெய்வ
பத்திநற்புத்திஇரக்கம்பொறுமை
பரவியசற்குணவாவி—கொள்ளும்
ஒருவருக்கே அவள் ஆவி-மற்றப்
புருஷருக்கவள்வசநாவி-அவள்
பெருமைக்கோர்குறைசொல்வோன்பாவி (பஞ்ச)

7. சங்கீதம்பாடியும் இங்கிதம்பேசியும்
தாள்பிடித்துத்துயர்தீர்ப்பாள்-நாளும்
தன்வேலைக்காரர்பலர் இருந்தாலும்
சகலமும்தன்கண்ணுற் பார்ப்பாள்-வீட்டில்
அங்கும்இருப்பாள்பின் இங்கும்இருப்பாள்-உம்
அண்டையிலும் கட்டிக்கார்ப்பாள்உமக்
கற்பவருத்தம் இல்லாமல்கவலைகள்
அத்தனையும்தலை-ஏற்பாள்-தருச்
சித்தமென்னவென்று கேட்பாள்-மொழிப்
புத்தமிசைச்செவி வார்ப்பாள்-உம்மை
உத்தமமார்க்கத்தில்சேர்ப்பாள் (பஞ்ச)

8. நீர்மகிழ்ந்தால்அவள் தான் மகிழ்வாள் துன்பம்
நீர்கொள்ளில்அவட்கும் விசாரம்அன்னம்
நீர்உண்ணில்அவள்பசி தீரும்இருவர்க்கும்
நிச்சயம்ஏகசரீரம் இந்த
ஊரில்நீர்இல்லா போதுராங்காள் அன்னம்
உண்ணாள்பண்ணாள் அலங்காரம்-நீர்
ஊமைகுருடர்ஆனாலும் செய்வாள்—உமக்
குரிமையாய் ராஜோபசாரம்-ஆனால்
பரமாதருடன்நீர்சஞ்சாரம்-செயில்
வரும்அவளுடைய நிஷ்டூரம்—அதற்
கொருநாளும் இலைபரிகாரம் (பஞ்ச)

9. பாவம்நீர்செய்யச் சொன்னாலும்செய்யாள்வேறே
பண்ணாள்உமக்கபசாரம்-பெறும்
பாலர்க்குநல்வழி காட்டித்தினமும்
படிப்பிப்பாள் வேதாந்தசாரம்
தாவும்எளியவர்க்கில்லை என்னாமலே
தாய்போய்செய்வாள் உபசாரம்-செல்வம்
தாழினும்ஏழைக்குத் தான்உண்ணும்அன்னத்தைத்
தந்துமெலிவாள்-சரீரம்-தம
யந்திபுமேநமஸ்காரம்
சுந்தரிசீலம்விஸ்தாரம்-உமக்
கந்தமின்னேநல்லதாரம் (பஞ்ச)

பாயும்படுக்கையுமாக நோய்கொண்டாலும்
பர்த்தாவேலைக்குப் பின்வாங்காள்—உந்தம்
பக்ஷம்ஒன்றேகோடி லக்ஷம்என்றெண்ணிப்
பலதுன்பம்வந்தாலும் ஏங்காள்பெற்ற
தாயும்பிதாவும் நிகர்வேதநாயகன்
தாமரைப்பாதத்தை நீங்காள்—நல்ல
சத்தியநிரந்தரை புத்தியின்மந்திரி
சட்டக்குடித்தனப்பாங்காள்-வேலை
முட்டமுடியுமுன் தூங்காள்என்றும்
கெட்டவள்என்று பேர்தாங்காள்-உமக்
கிஷ்டமுள்ளாள் பழிஓங்காள் (பஞ்ச)

## தலைவியிடத்து வைக்கவேண்டிய நேசத்தைப்பற்றி தலைவன் கூறுதல்

196. இராகம்-சௌராஷ்டிரம்-அடதாளசாப்பு

பல்லவி

பத்தினிபோல்நமக் கித்தரைமீதினில்
உற்றவர்யார்மனமே

அநுபல்லவி

சத்தியமாகவே தாய்க்குப்பின்தாரம்
தாரத்தினால்அல்லவோ சமுசாரம் (பத்தினி)

சரணங்கள்

1. இல்லாளும்நாமுமே ஏகசரீரம்
என்பதுவேமநு நீதியின்சாரம்
நல்லவளேநம் மனைக்கலங்காரம்
நாட்டிலேமற்ற உறவெல்லாந்தூரம் (பத்தி)

2. கைப்பொருள் இல்லா விட்டாலும்நற்பாரி
கைவசமானால் அவளேபொன்மாரி
எப்பொருளும்இருந் தாலும்ஓர்நாரி
இல்லாதவீடு தண்ணீரில்லாஏரி (பத்தி)

3. பெண்ணென்றாற்பேயும் இரங்குமென்பாரே
பெண்ணை அடித்தால் வருங்கெட்டபேரே
கண்ணை இமைகாப் பதுபோலநேரே
காதலி தன்னைக் காப்பாற்றுதல்சீரே (பத்தி)

4. பந்துஜனமெல்லாம் வீண்பரிவாரம்
பாரில்அவரால் உண்டோஉபகாரம்
அந்தரந்தன்னில் உதருவாள் தாரம்
ஆபத்துவேளைக் கவளே ஆதாரம் (பத்தி)

5. தாய்தந்தையாரையும் விட்டுவந்தாளே
சம்சாரபந்தத்தைத் தாங்கிநின்றாளே
நோய்சூல்பிரசவந் தன்னில்நொந்தாளே
துன்பத்தைத்தான்கொண்டு சுகத்தைத்தந்தாளே (பத்தி)

## தலைவனுடைய மேன்மையைத் தலைவி தோழிக்குக் கூறுதல்

197. இராகம்-பிலகிரி-திரிபுடைதாளம்

பல்லவி

நாயகர்பக்ஷமடி-எனக்கது
ஆயிரம்லக்ஷமடி

அநுபல்லவி

நீயறிவாயோ அவர்குணம்மானே
நாயறியுமோ ஒருசுந்திரப்பானை (நாயகர்)

சரணங்கள்

1. பத்தாவின்பக்ஷம் உள்ளான்மகராசி
பத்தாவின்பக்ஷம் இல்லாள்பரதேசி
வித்தாரமாகத் திரவியராசி
மேன்மேலிருந்தும் பலமென்னசீசீ (நாய)

2. ஏழையானாலும் எனக்கேசமானே
என்றும்அடிமை அவருக்குநானே
கூழைஉண்டாலும் எனக்கதுதேனே
கொண்டார்இருக்கக் குறைவென்னமானே (நாய)

3. மாலைபொன்னோலைகள் வண்ணமுத்தாரம்
மற்றநகைகளெல் லாம்பெரும்பாரம்
சீலமுங்கற்புமே தேகசிங்காரம்
திவ்யமாணிக்கத்துக் கேன்அலங்காரம் (நாய)

4. ஆயிரந்துன்பங்கள் வந்தாலும்நானே
ஐயர்கிருபை உண்டானால்அஞ்சேனே
பாயோபிடித்தவன் என்னசெய்வானே
பாணிபிடித்தவள் பாக்கியந்தானே (நாய)

## துன்பஞ்செய்தாலும் தலைவனேகதியென்று தலைவி தோழிக்குச்சொல்வது

### 198. இராகம்-சாவேரி-ஆதிதாளம்

பல்லவி

அடித்தாலும் அவரே துணையல்லாமல்
ஆர் துணையடிதானே

அநுபல்லவி

மடித்தாலும்அவருடன் வாய்மதமிஞ்சலாமோ
வானத்தின்கீழிருந்து மழையிடிக்கஞ்சலாமோ (அடி)

சரணங்கள்

1. குற்றங்குறைகள்கண்டால் கொண்டவர்பொறுப்பாரோ
குணமாகநாம்நடந்தால் கோபித்துவெறுப்பாரோ
இன்றைக்குச்சொல்வோரெல்லாம் என்னுடனிருப்பாரோ
இழவுக்குவந்தவரெல்லாந் தாலியறுப்பாரோ (அடி)

2. அடிக்கும்ஒருகைஅவ ரணைப்பதும்ஒருகையே
அழுதழுதும்பிள்ளை அருள்பெறவேண்டுமெய்யே
இழுக்குங்கணவருடன் எதிர்த்தால்வாழ்வதுபொய்யே
எரிகிறநெருப்பிலே இடலாமோபின்னும்நெய்யே (அடி)

3. என்னஅவர்சொன்னாலும் எதிர்மொழிவிள்ளலாமோ
எரியும்அக்கினிதன்னை இருகையால்அள்ளலாமோ
சின்னமதியாலேநம் செல்வத்தைத்தள்ளலாமோ
தின்கின்றசோற்றிலே மண்போட்டுக்கொள்ளலாமோ (அடி)

4. நன்மையாகநடந்தால் நமக்குண்டாம்அவர்நேயம்
நல்லஉத்தமிக்கெந்த நாளுந்தெய்வசகாயம்
செல்வம்உள்ளமட்டுக்குஞ் சேருமோஓர்அபாயம்
சீவனும்உடலும்போற் சேர்ந்துவாழுவதுபாயம் (அடி)

5. ஆனைகட்டச்சங்கிலிதான் எடுத்துக்கொடுக்கும்
அப்படிப்போல்நமது வாயேநம்மைக்கெடுக்கும்
ஞாயமாகநடந்தால் நன்மையெல்லாம்அடுக்கும்
நல்லவள்தெய்வமென்று நாடெல்லாங்கையெடுக்கும் (அடி)

6. மதயானைமேலெடுத் தெரியலாமோமண் ணுண்டை
மணவாளர்இடத்திலே வளர்க்கலாமோசண்டை
முதலாளிஇல்லாவிட்டால் மூத்தவளேநம் அண்டை
மொட்டைத்தலையிலேநாம் முடிக்கலாமோகொண்டை(அடி)

## தலைவன்செய்த நன்மையைத் தலைவிகூறல்

199. இராகம்-அசாவேரி-திரிபுடைதாளம்

பல்லவி

எத்தனை ஆனாலும்-பத்தாவைப்போல்எனக்
கிசைந்தவர் ஆரடி

அநுபல்லவி

வித்தாரக்கள்ளிநீ வீண்வம்புபடியாதே
ஒத்துவாழாக்குடி ஒருநாளும்விடியாதே (எத்தனை)

சரணங்கள்

1. மாணிக்கச்சிலைபோலப் பெண்கள்பலிருக்க
மானேஅவரையெல்லாம் விட்டாரே
மைத்துனியேசொந்தப் பத்தினியென்றென்னை
மாலையிடஉடன் பட்டாரே
காணிக்கையாகநான் புத்தியறியுமட்டும்
காத்திருந்தென்னைக்கை தொட்டாரே
கால்முதல்தலைமட்டும் பொன்காய்த்தமரம்போலக்
கனத்தநகைகளெல்லாம் இட்டாரே
ஆணிப்பொன்னேஅறியேன் நான்ஒருகஷ்டம்
அத்தாலல்அல்லவோ எனக்கித்தனைஅதிர்ஷ்டம்
பாணிக்கிரகணஞ்செய் தவருடனேஇஷ்டம்
பாராட்டினல்நமக் குண்டோஒருநஷ்டம் (எத்தனை)

2. தங்கக்கிண்ணியில்சோறும் வெள்ளிக்கிண்ணியில்பாலும்
சட்டம்சட்டமாக உண்டேனே
தாதியர்கால்பிடிக்க மேல்மாடியில்நல்ல
சப்பிரமஞ்சத்துயில் கொண்டேனே

அங்கமாய்நான்ஏற வண்டிபல்லக்குகள்
அற்பவருத்தமும் அண்டேனே
அன்னத்துக்கில்லாமல் என்னேடொத்தபெண்கள்
அழுதுவலியன்குத்தக் கண்டேனே
மங்களமாகவே சிங்காரமனைக்கட்டு
வகைவகையாயுடுக்க ஜெகமோகனப்பட்டு
எங்கும்பஞ்சமானல் எனக்குண்டோஒருதட்டு
இத்தனைபாக்கியம் எல்லாம் அவரைத்தொட்டு (எத்தனை)

3. கோபம்உள்ளஇடத்தில் குணமும்இருக்கும்அவர்
கோபித்தோர்வார்த்தை சொல்லலாகாதா
கொண்டவர்இடத்திலே திண்டுமிண்டுஞ்செய்தல்
கோதையேகுடிகெட்டுப் போகாதா
சோபனஞ்செய்தெனைக் காத்தவர்மேலொரு
தோஷஞ்சொன்னலும்வாய் வேகாதா
சூரியனைக்கண்டபனிபோல் அவர்முன்னென்
துன்பமெல்லாம்பறந் தேகாதா
ஆபந்தீர்ப்பவர் அவர்பெருநிதியடி
அடித்தாலும்வைதாலும் அவரேகதியடி
பாபபுண்ணியம்பா ராதவள்மிதியடி
பாலுந்தேனும்போல்வாழ்வதுமதியடி (எத்தனை)

4. ஏரியைக்கோபித்துக் கால்கழுவாவிட்டால்
ஏரிக்குண்டோநஷ்டம் ஓதடி
ஏசமானைக்கோபித்தால் எனக்கேநஷ்டம்அல்லால்
எஜமானுக்குநஷ்டம் ஏதடி
சூரியனைக்கல்லால் அடிப்பதுபோலத்
துணைவரைப் பகைத்தால் தகாதடி
துள்ளினமாடே பொதிசுமக்கும்கெட்ட
துஷ்டைகளுக்கென்றுந் தீதடி
நீருள்ளமட்டுக்கும் மீனுக்குக்கொண்டாட்டம்
நீர்வற்றினல்பின்பு நிற்குமோமீன்கூட்டம்
பாரியர்க்குப்பர்த்தா வாலேஆட்டபாட்டம்
பத்தாவுக்குப்பின்பு சோற்றுக்குத்திண்டாட்டம் (எத்தனை)

## மாமிநாத்தி முதலானவர்களின் கொடுமையைப்பற்றி ஒருஸ்திரீ முறையிடுதல்

200. இராகம்-கல்யாணி-அடதாளசாப்பு

பல்லவி

ஊருக்கெல்லாம்ஏச்சா—சகியே-இது
ஆருக்கும்-ஒருபேச்சா

அநுபல்லவி

பாருக்குள்ளே எந்தன் கணவரும்நானுமே
பாசமாய்விசு வாசமாய்அதி
நேசமாய்ச்சக வாசஞ்செய்வது (ஊருக்)

சரணங்கள்

1. பந்தாவுடனேநான் கூடிச்சல்லாபம்
பண்ணினால்மாமியார்க் கென்னகோபம்
ஒத்திருந்தால் அவட் கேன்மனஸ்தாபம்
ஓகோசகியே இதுவென்னலாபம்
ஓதடி இது-சூதடிபெரும்
வாதடிகன-தீதடி இது (ஊருக்)

2. நானும்அவரும்பேசில் நாத்திக்கேன்சலிப்பு
நாங்கள்பிணங்கிக்கொண்டால் அவட்கென்னகெலிப்பு
ஆனாலும் எனைக்கண்டால் அன்னுக்கேன்வலிப்பு
ஐயையோ ஊரெங்கும் இதுவேஓமலிப்பு
அன்னமேயடி-சொன்னமேமொழி
பன்னவேதடை-இன்னம்ஏதடி (ஊருக்)

3. கலியாணஞ்செய்தும் உண்டோசந்நியாசம்
கடனுடன்வாங்கியும் ஏன்உபவாசம்
பலமாகவேகங்கைக் கரையிலேவாசம்
பண்ணியங்குளிப்பதற் கென்னபிரயாசம்
பாபமோ இது-சாபமோதெய்வ
கோபமோபரி-தாபமோதினம் (ஊருக்)

4. சட்டமாய்பேசா விட்டால்வாழ்க்கைப்பட்டு
சபலம்என்ன இது பிரமாணக்கட்டு
கட்டனையாகக் கலத்தினிற்சோறிட்டு
கையைப்பிடிப்பது போல்என்ன தட்டு
காந்தரோடதி-சாந்தமாகவ
காந்தமாகவே-சேர்ந்துவாழ்வது (ஊருக்)

5. பிரபலமாக முகூர்த்தமுங்கோலிப்
பேசாதிருக்கவோ கட்டினூர்தாலி
அரசர்க்கும்எனக்கும் உண்டோநடுவேலி
ஆனாலுங்தோழி இதுவென்னகேலி
அக்கரைப்படு-சக்களத்திகள்
அக்களிப்பொடு-செக்கலிப்பட (ஊருக்)

---

## கணவனைப்பகைத்த ஸ்திரீயை
## அவள்தாய் கண்டித்தல்

201. இராகம்-காம்போதி-ஆதிதாளம்

பல்லவி

மார்க்கம்அல்லடிமானே-கணவருடன்
மூர்க்கஞ்செய்வது-தானே

அநுபல்லவி

தீர்க்கமாய்ச்சொல்லச்சொல்லத் தினம்வாதுசெய்யலாமோ
ஜென்மகுணத்தைச்செருப் பால்அடித்தாலும்போமோ (மார்)

சரணங்கள்

1. அரும்பிழைசெய்துபத்தா அன்பைமுறிக்கலாமோ
அணைகடந்தால்வெள்ளத்தை யாருமறிக்கலாமோ
கரும்புருசியென்றுவே ரோடுபறிக்கலாமோ
கண்ணானவரைப்புண் ணாக்கிப்பிரிக்கலாமோ (மார்)

2. தலைவன்முகங்கோணினால் சகலவாழ்வுமேகோணும்
சபையிலேபுனைச்சேர்க்கச் சகலர்மனமும்நாணும்
தொலையவிசாரமெல்லாஞ் சூழ்ந்துவந்துனைக்காணும்
சுவரைவைத்துக்கொண்டல்லோ சித்திரம்எழுதவேணும் (மா)

3. தணல்என்பதேஇல்லாமல் தானேஉண்டாமோபுகை
சரியாகநீநடந்தால் தலைவற்குண்டாமோபகை
குணபூஷணிகட்கு வேண்டுமோவேறுநகை
குப்பையிற்கிடந்தாலும் மாணிக்கம்பெருந்தொகை (மார்)

4. கணவனைப்பகைத்தவள் கரையேறுவதேதடி
கடல்கொதித்தால்விளாவத் தண்ணீர்எங்கேஊதடி
உணர்வாகநீநடந்தால் உண்டோஒருதீதடி
உறுதிநான்சொல்லச்சொல்ல உனக்கேன்இன்னம்வாதடி (மா)

5. கனமோடிசெய்துதுயர்க் கடலிலேமுழுகிறாய்
கலியாணவீட்டிலே கட்டிக்கொண்டழுகிறாய்
உனதுமனதுபோன படியெல்லாம்ஒழுகிறாய்
உற்சாகத்தாலேநீ மச்சேறிவிழுகிறாய் (மார்)

---

## தங்களுக்குப் படிப்பிக்கும் ஸ்திரீகள் புருஷர்களை வேண்டுதல்

### 202. இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி

வித்தைதயைப்படிப்பியுங்கள் - தயைசெய்து
வித்தைதயைப்படிப்பியுங்கள்

அநுபல்லவி

உத்தமவான்களே - சத்தியபூமான்களே
உங்கட்குக்கண்களான பெண்களாம்எங்களுக்கு (வித்தை)

சரணங்கள்

1. திருத்தமாவேலைகள் எல்லாம்முடிப்போம்-வேலை
தீர்ந்தபின்பு புஸ்தகங்களேபடிப்போம்
வருத்தம்நீர்படக்கண்டால் மனம்முடிப்போம்-கீத
வண்ணங்கள்பாடிக் கொண்டுகால்பிடிப்போம்-பாட
மாட்டோமோ-வீணை
மீட்டோமோ—நயம்
காட்டோமோ-சுகம்
ஊட்டோமோநல்ல (வித்தை)

2. வரவுசெலவின்கணக் கெழுதிவைப்போம்
வகைவகைஉடுப்புகள் உமக்குத்தைப்போம்
பரவும்பலதொழில்நீர் பண்ணஓப்போம்-நல்ல
பக்ஷணம்கறிகளும் செய்யத்தப்போம் நாங்கள்

படியோமோ இருள்
விடியோமோ மருள்
முடியோமோ அருள்
பிடியோமோ-நல்ல (வித்தை)

3. வாணியும்நீரும்ஒரு கோத்திரமா அவள்
வரப்பிரசாதம்உமக்கு மாத்திரமா
வீணில்அவட்கெங்கள்மேல் க்ஷாத்திரமா நாங்கள்
மெய்ஞ்ஞானமார்க்கத்துக் காபத்திரமா உம்மை

வெல்லோமோ கல்வி
கல்லோமோ கவி
சொல்லோமோ-புத்தி
இல்லோமே-நல்ல (வித்தை)

4. கொஞ்சம்நீர்கோபம்செய்யில் அஞ்சிடுவோம் எங்கள்
குற்றம்பொறுக்கச்சொல்லிக் கெஞ்சிடுவோம்
தஞ்சமதாகஉமை நம்பிடுவோம் உம்மேல்
சாகித்தியம்செய்துதினம் கும்பிடுவோம்-நாங்கள்

தாழ்ந்தோமே துயர்
ஆழ்ந்தோமே உம்மைச்
சூழ்ந்தோமே காலில்
வீழ்ந்தோமே-நல்ல (வித்தை)

5. அடித்தாலும்இகழ்ந்தாலும் கதியே உம்மை
அன்றிஎங்களுக்கினித் துணையாரே
படித்தால்பிழைத்துப்போவோம் பெரியோரேஇந்தப்
பஞ்சைகள்முகம்பாரும் துரைமாரே-உங்கள்

பதம்பூண்டோம் அபி
மதம்நீண்டோம் உங்கள்
இதம்தாண்டோம் அசங்
கதம்வேண்டோம்—நல்ல (வித்தை)

6. படியாதஆண்கள்உடனேநேசம்-சற்றும்
பண்ணாதீர்சம்மதியீர் லவலேசம்
மடம்உறும்எங்களுடன் சகவாசம் செய்ய
மட்டும்உமக்கில்லையோ சங்கோசம்-இது

மதிமோசம் வரும்
அதிஹாசம்-மனம்
பதிபாசம் அற
இதிகாசம் உடன் (வித்தை)

7. வித்தையில்லாபுருஷன் செய்கையைப்பாரும்-அந்த
விதமல்லவோபடி யாமடவாரும்
உத்தமியைவிரும்பிநீர் நீருருங்கல்வி
உணராவிட்டால்குணம்எப் படிச்சேரும்-இதை

ஓரீரோ முகம்
பாரீரோ துயர்
தீரீரோ தலைக்
கூரீரோ-நல்ல (வித்தை)

8. உத்தியோகம்தந்தாலும்ஒரு கைபார்ப்போம் தினம்
உதவிசெய்துங்கள் தொழில்களைத்தீர்ப்போம்
பக்தியாய்க்குடித்தனம் தலைஏற்போம் கல்வி
பாலர்க்குப்போதித்துநல் வழிசேர்ப்போம் எங்கள்

பதிநீரே சர்வ
நிதிநீரே தினம்
கதிநீரே கன
மதிநீரே-நல்ல (வித்தை)

9. படித்தால்மிருகம்போல்நாள் கழிப்போமோ என்றும்
பரபுருஷர்முகத்தில் விழிப்போமோ
அடித்தாலும்முகம்கோணிச் சுழிப்போமோ கல்லா
தவர்கணவரானாலும் பழிப்போமோ பல

அணிவேண்டோம் நல்ல
துணிவேண்டோம் நவ
மணிவேண்டோம் நல்ல
பிணிவேண்டோம்-நல்ல (வித்தை)

10. இரவில்நீர் தூங்கினபின் நாம்படுப்போம்-நீங்கள்
எழுமுன்எழுந்துவேலை களைத்தொடுப்போம்
தருமவதிகள்என்று பெயர்எடுப்போம்-நாங்கள்
சந்ததம்வேதநாய களைஅடுப்போம்-மிகத்
தழையோமோ-கல்வி
நுழையோமோ-உமை
அழையோமோ-ஜீவன்
பிழையோமோ-நல்ல (வித்தை)

## இதுவும் அது

203. இராகம்-மோகனம்-திரிபுடைதாளம்

பல்லவி

கேளும்பூமான்களே-கிருபைவைத்
தாளும்சீமான்களே

அநுபல்லவி

நாளும்கதிஇல்லா எங்கள்மேல்வர்மமோ
தாளுறும்தூசிபோல் தள்ளுதல்தர்மமோ (கேளும்)

சரணங்கள்

1. காலைக்கும்மாலைக்கும் மூலைக்குள்எங்களை
ஆலைக்கரும்புபோல் தேய்த்தீர்-பாக
சாலைக்கும்மன்மத லீலைக்கும்ஏவின
வேலைக்கும்எங்களை மாய்த்தீர்
மூலக்கல்விநாங்கள் வாசித்தால்ஆபத்தோ
மூடப்பெண்கொள்வீர் உமக்குப்பெரும்பித்தோ
ஓலைக்கிரந்தங்கள் உங்கள்பாட்டன்சொத்தோ
உமக்கென்னகாணும் தலைமேல்தலைபத்தோ (கேளு)

ஆதியிற்பெண்ணாலே மேதினியோர்கள்உண்
டானவகைமறந்தீரோ-பெண்
சாதிபுருஷனில் பாதியென்றேமனு
நீதியையுந்துறந்தீரோ

பாதிஉடலைப் பாக்கவிடலாமோ
பாவபுண்ணியம்தெரி யாமல் கெடலாமோ
நீதிஇல்லாதெம்மை நிந்தித் திடலாமோ
நிந்தித்துப்பின்எங்களை நீர்தொடலாமோ (கேளு)

3. நாரியரை ஒரு காரியம்இல்லா
நடைப்பிணம்என் றெண்ணினீரே-தேவர்
ஊரில்பெண்கள்கொண்டசீரினை ஆகிலும்
உற்றுப்பாரும் ஐயர்மாரே
பாரிதனைநாவில் வைத்தான் பிதாமகன்
பாகம்சிரம்வைத்த தால்சிவன் மாசுகன்
மார்பில்வைத்தான் ஹரி பெண் திருடன்குகன்
மங்கைதேடிச்சந்தி வந்தான்கரிமுகன் (கேளு)

4. உங்கட்குதவியாய் எங்களைத்தேவன்
உண்டாக்குவதை அறியீரோ-செல்வ
மங்கைஉடன்கல்வி நங்கைமுதலானோர்
மாதர்என்று குறியீரோ
எங்களை அல்லாமல் நீங்களுதித்தீரோ
ஏறிஆகாயத் திருந்துகுதித்தீரோ
அங்கப்பால் உண்ணுமல் தேகம்உதித்தீரோ
அடிமைஎன் றெங்கள் தலையில்விதித்தீரோ (கேளு)

5. போதகயூரோப்பு மாதர்களைக்கண்டு
பொங்கிப்பொறுமை கொண்டோமே-என்றும்
பேதம்இல்லாஇந்தி யாவினில்நாங்கள்
பிறந்தென்னலாபம் கண்டோமே
நாதக்கல்விக்கு நகைஎந்த மூலையே
நாங்கள்விரும்போம் நவரத்னமாலையே
வேதநாயகன்செய் பெண்மதி மாலையே
வேண்டினோரும்தாரும் விடோம்உங்கள்காலையே (கேளு)

## மூடனை விவாகஞ்செய்யாதபடி ஒருஸ்திரீயைத் தடுத்தல்

204. இராகம்-புன்னாகவராளி-அடதாளசாப்பு

பல்லவி

மாதே-என்வார்த்தைதள்ளாதே-அந்த
மாப்பிள்ளைதன்னைக்-கொள்ளாதே

அநுபல்லவி

ஆதரவாக அரவைத் தொடலாமோ
ஆழமறியாமற் காலையிடலாமோ
போதமில்லானுக்கு வாழ்க்கைப்படலாமோ
பொன்னே ஒளி-மின்னேகெடு
முன்னேமதி-சொன்னேனடி (மாதே)

சரணங்கள்

1. பொன்னே அவன் ஆளழகனானுமே
புத்தியில் உலக்கைக் கொழுந்து-வித்தை
தன்னைஅறியானைக் கொள்வதைப்பார்க்கிலுஞ்
சாகலாங்கிணற்றில் விழுந்து
உன்னைக்கைப்பாடுபடச் சொல்லித்தாக்குவான்
ஊர்மாடுமேய்க்கவே தான்தடிதூக்குவான்
பின்னையும் உன்னைத்தான் பேய்க்கோலம் ஆக்குவான்
பெண்ணே இரு-கண்ணே இதை
எண்ணேமொழி-பண்ணேநிகர் (மாதே)

2. உத்தமியே அவன் ஞானமிருக்கின்ற
ஊரையும்பார்த்தறியானே-தினஞ்
சுத்தநிர்மூடரைக் கூடிக்குடித்துன்
சுகநலத்தைக் குறியானே
நித்தமும்தாசிகள் வீடுகட்டோடுவான்
நீங்காமற்சூதுநிதம் விளையாடுவான்
சித்தமுனக்குப்பட்டா ராமம்போடுவான்
தேனேமட-மானேதிடம்
நானேசொன்-னேனேயடி (மாதே)

3. மண்ணுக்குள் ஆணுக்கழகுபடிப்பும்
மதியுஞ்சுகுணமுந்தானே-வெறுங்
கண்ணுக்கழகும்பணமும் இருந்தென்ன
காரியஞ்சொல்லடி தேனே
புண்ணியவான் ஏழைபானாலுங்கொள்ளடி
பொய்யன்பணக்காரனானாலுந் தள்ளடி
வண்ணங்கொள்பெண்ணுக்காண் பஞ்சமோவிள்ளடி
மாதே இது-தீதே இனி
வாதேசெய்யாதேயடி (மாதே)

---

## மைத்துனர் கலியாணத்திற் பாடிய பாரிகாசக் கீர்த்தனை

205-இராகம்-பரசு-அடதாளசாப்பு

பல்லவி

மைத்துனனாரே-இன்றுமுதல்-மகாராஜர்நீரே

அநுபல்லவி

கொத்தார்குழலி எங்கள் குயிலைக்கொண்டீரே

சரணங்கள்

1. எதும்வஸ்திரங்கட்டி அறியாதும் இடுப்பு
இனி உமக்குப்பல வகைவகைஉடுப்பு
ஓதும்புகைந்ததுண்டோ முன்உமதடுப்பு
உள்ளத்தைநான்சொன்னால் உமக்கென்னகடுப்பு (மைத்)

2. சொன்னமயம் எங்கள் சுந்தரிதேகம்
தோற்குமோ உமக்கண்டங் காக்கை அனேகம்
என்னவிதமாகவோ அடுத்தது யோகம்
ஈடோ இதற்குத் தேவேந்திரபோகம் (மைத்)

3. உழவுதொழில்செய்துமக் குடும்பெல்லாஞ்சேறு
ஊத்தைகழுவப் பற்றுமோ என்பதாறு
பழங்கூழுண்ட உமக்குப் பாலுடன்சோறு
பயப்படாதிரும் உமக் காயிசுநூறு (மைத்)

4. காதழிகடப்பீர் காலேசாக்ஷி
காடுபல்லக்கினி உமக்குண்டோதாக்ஷி
வீதுமற்றஉமக்குப் பலகாணியாக்ஷி
இசைந்ததுஹோஹோ ஹோஎன்னகாட்சி (மைத்)

5. எருமைநுழையும்உம திருகாதின்தொள்ளை
இனிஉமக்குவச்சிரக் கடுக்கன்கள்கொள்ளை
ஒருவகையும்இல்லாமல் உற்றீரேசள்ளை
ஊர்அதிபதிக்கிப்போ துகந்தமாப்பிள்ளை (மைத்)

6. சந்திரசூரியர்மழைபனி காற்றுக்கோட்டை
தாங்கியஉமக்கினி நவரத்னமேடை
உந்தம்அசுத்தங் கொள்ளுமேபலகூடை
உமக்கினிப்புஷ்பசந் தனம்பன்னீர்வாடை (மைத்)

7. இப்போதுமக்குவாச தைலங்கள்கடலே
இதற்குமுன்எண்ணெய்பட் டறியாதும்முடலே
அப்படியிருக்கஎன் வீண்தடபுடலே
ஆகாசந்தனைமறைப் பதற்குண்டோபடலே (மைத்)

---

## மைத்துனருக்குப் புத்திபோதித்தல்

### 206. இராகம்-ஹிந்துஸ்தான்-காப்பி-ஆதிதாளம்

பல்லவி

மைத்துனரேநாளும்-நான்சொல்லும்
புத்தியையே-கேளும் (மைத்)

அநுபல்லவி

நித்தலும்உம்மிடம் நேசமேநீளும்
உத்தமிஇவளைஉம் உயிரெனஆளும் (மைத்)

சரணங்கள்

1\. நன்றாயிப்பெண்ணுமக்கு வாய்த்ததே அதிர்ஷ்டம்
நரிமுகத்தில்விழித் தீர்நல்லசட்டம்
இன்றுமுதல்உமக்கு விடிந்ததுகஷ்டம்
இதைமறந்தாற்பயித் தியக்காரப்பட்டம் (மைத்)

2\. சந்திரபிம்பம்இவள் முகமென்றுதேரும்
சர்வகோணவில்உமக் கிணையில்லைபாரும்
சந்தேகமிருந்தால்கண் ணாடியைப்பாரும்
தலையைக்கவிழ்ந்துகொண்டு மூலையிற்சேரும் (மைத்)

3\. அணங்கின்அழகுக்குப்பெண் களுங்கொள்வார்ஆசை
அழகிலேநீர் ஆயிரம்அமாவாசை
இணங்கியேவாழ்வதில் என்னபிரயாசை
இவளைநீர்மணஞ்செய்ய என்னசெய்தீர்பூசை (மைத்)

4\. சுந்தரிஇவளும் நீரும்ஒருதேகம்
சுகதுக்கம்இருவர்க்குமே சமபாகம்
வந்தமருமாரைச் சேர்வதுரோகம்
மலருமணமும்போல வாழ்வதுஸ்நேகம் (மைத்)

5\. தெரியாமற்செய்தபிழை பொறுப்பதுநேயம்
திட்டிப்பெண்சாதிகளை அடிப்பதந்நியாயம்
பிரியமாய்ப்பேசித்திருத் துவதேஉபாயம்
பெண்ணென்றால்பேயுமே செய்யும்சகாயம் (மைத்)

6\. நயமில்லாவார்த்தைக ளாற்பகைமூளும்
நன்மையினாற்குறை வில்லைஎந்நாளும்
தயையுடன்என்னைப்போற் பாரியைஆளும்
சந்தேகமிருந்தால்உந் தமக்கையைக்கேளும் (மைத்)

7\. இவளைப்பிரிந்தாள்இவள் தாய்தந்தைமாரே
இனிமேல்தாய்தந்தை சகலமும்நீரே
அவனியில்இவள்உம தாவிக்குநேரே
அன்பில்லாவிடில் எடுப்பீர்கெட்டபேரே (மைத்)

8. நற்புத்தி இவள்சொன்னால் அதைச்செவிகொள்ளும்
நமக்கொருமிகரில்லை யென்றுநீர்துள்ளும்
துற்புத்திதான்சொன்னாற் கேளாமல்தள்ளும்
தோஷத்தைநீக்கிநற் குணங்களை அள்ளும் (மைத்)

9. தந்தைதாய்குருசொன்ன படிநீர்நில்லும்
சாஸ்திரம்உணர்ந்தறி யாமையைக்கொல்லும்
அந்தமின்னாளையும் படித்திடச்சொல்லும்
அடிக்கடிசொல்லிடிற் கரையுமேகல்லும் (மைத்)

10. உன்னரியகடவுள் அடிக்கன்புகூரும்
உத்தமவான்களையே என்றுஞ்சேரும்
இன்னங்தெரியாவிட்டால் மாயூரம்வாரும்
இதைவேதநாயகன் நீதிநூல்பாரும் (மைத்)

---

207. இராகம்-தோடி-ஆதிதாளம்

பல்லவி

அருமைமைத்துன பாக்யமே உமதரியகுணம்பார்க்கில்
அனைத்துமுமக்கே வாய்க்குமே
அவனிமேலுடைசெல்வம் யாவும்வந்ததுவே
அம்பரன்கருணையென் றெனநினைவதுவே (அருமை)

அநுபல்லவி

அருமைமிகுந்தவுந்தன் உண்மைக்குண்டோநிகர்
உயராமவாழ்க்கைமிகுந்த துயருமில்லையேபகர்
உண்டென்றெனவறியேன் உலகமதனில்சுகம்
உவர்வால்சர்வசந்தோஷம் ஒப்புடன்வரும்இக
பரசுகமதுவந்து பற்றினதல்லவோ
பாருயர்ந்தோரில்நீயே பண்பதனைச்சொல்லவோ (அரு)

சரணங்கள்

1. எல்லாசுகமும்வந்ததே எங்கள்குலமதை தவிர்த்திக்க
எண்ணிநங்கைபின் தந்ததே
எப்பாரும்போற்றிட இனியமங்கலமே
எடுத்துக்கொண்டதால் எப்போதும்நல்வளமேஎல்லா

நல்லதபோபலத்தால் நாடிகொண்டோமேபெண்
நாணில்புகழுமே நற்கனதனமேஉன்
உல்லாசகுணத்திற்கு உண்டுமோகிகழும்நன்
உயர்வாம்மணத்தைச்செய்து உகந்தீர்சுகமதுஎன்

உத்தமியாள்வந்த வுடனேநல்கீர்த்தி
உசிதமாய்வருவது உண்மையாம்நேத்தி (அருமை)

2. தந்தையால்அல்லோசிலாக்யம் தான்வந்தடைய
சம்ப்ரமங்கொண்டோர் யோக்யம்
சதிருடன்பெண்ணிஞல் வருவதுயோகம்
தானெனவுலகோர் சொல்வதேபோகம்-தங்கை

துங்கவளம்பெறுக சுபசோபனமதாக
தூயகுணம்வரவே சொல்லும்சுகமாக
எங்கும்புகழுந்தங்க இனியவைபவமாக
எத்திசையும்போற்ற எங்கள் தங்கையும்சுக

இங்கிதமாகவே மங்களமதுகொண்டோர்
எல்லாம்சுகம்வந்ததே எங்கள்முன்விண்டோர் (அருமை)

3. தாலமதுகொண்டாட சம்பத்ததுநீட
தனகனமிகுகூட
சந்தோஷகரமாக தங்கைமனங்களிக்க
சருவஆடம்பரங்கள் தான்பூண்டோர்மதிக்க

வேலைநிகர்விழியென் விசிதபொன்னொளிபோல
விசித்திரகிளைசுற்றம் மேவினதேகசால
மேலவனுக்கீயும் விளங்கினையேசில
வேதநாயகன்மனம் வியப்புறவேமேலும்

மின்னுங்குணந்திகழ் மன்னும்புகழ்மழ
துன்னும்மனமகிழ சுபகரமதுசூழ (அருமை)

## மைத்துனனை வாழ்த்தி புத்திகூறல்

208. இராகம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்

பல்லவி

புத்தியாய்வாழ்வீர்-மனமொரு
மித்துபுகழ்-சூழ்வீர்
புனிதருள்-நணிகொண்டிட (புத்தி)

அநுபல்லவி

சத்தசாகரம்நிரூ பித்தகாருண்ணிய
சுத்தப்பிரசத்துவ அத்தவிதரண்ணிய
கர்த்தன்மாபுண்ணிய வித்தகசைதன்னிய
பத்தருளத்தேதாங்கும் முத்தன்வரநண்ணிய
படிமீதில் திடமாகவே (புத்தி)

சரணங்கள்

1. மங்களமாகுண வைபவமேகுண
துங்குணமிகு தூய்மைதாங்கண
எங்கும்நிராதர ஏகனருள்மனந்
தங்கும்மலர்போல தங்கைநீரும்இனம்
தயவாம்நீட வரம்கூட (புத்தி)

2. இத்தரைமீதிலே சுத்தகுணம்தங்க
எழிலார்வசுற்றம் இதங்கிசூழ்ந்திலங்க
இத்தர்க்கருடந்த முன்னேனருள்விளங்க
முகிலதைபோலவே முயன்றுநீதுலங்க
முதிருஞ்சுவை மதுரம்போல (புத்தி)

3. கொண்டமனைவியின் குணத்தையறிந்து
குற்றங்களைந்துநல் குபேரனாய்நினைந்து
அண்டர்பிரானருள் ஆகுளித்தணைந்து
அவனிமேல்தங்கை ஆசையைமணந்து
அதிபோகயோகமாய் (புத்தி)

4. சீதகுணத்துடன் மாதர்க்கணிகலம்
சிறப்புடன்ஞான சீர்த்தியால்சீலம்
வேதநாயகம் விளம்பியநூலும்
வேண்டியபேர்க்கு விசிதயுத்திஞாலம்
மிகவாம்புகழது தங்க (புத்தி)

## மங்களம்

இராகம்—தேசிகம்-அடதாளம்

### பல்லவி

மங்களம்-மங்களம்-சுபஜெய
மங்களம்-மங்களம்

### அநுபல்லவி

எங்குந்துங்கமாய் தங்கும்பரனுக்கும்
புங்கவர் துதி விளங்கும்பூர்ந்த்ரனுக்கும் (மங்களம்)

### சரணங்கள்

1. சருவலக்ஷ சாஸ்விதநாதனுக்குங்
கருணையாய்முத்தொழில் கடக்கும்நீதனுக்கும் (மங்களம்)

2. நித்திரவைபவ நின்மலரூபிக்கும்
முத்திதந்தாளும் மோனவியாபிக்கும் (மங்களம்)

3. வேதமியாவும் விளம்பும் விமலனுக்கும்
ஸீதமோக்ஷானந்த செய்யவமலனுக்கும் (மங்களம்)

4. வானவர்பணி வள்ளல்திகம்பரர்க்கும்
ஞானவாழ்வருள் நற்சுதாதீதர்க்கும் (மங்களம்)

5. எண்குணந்திகழ் அண்ணல்கழலுக்கும்
பண்ணவர்பணி பங்கயத்தாளுக்கும் (மங்களம்)

6. முத்தர்பத்தர்க்கும் முன்னமறைகட்கும்
சுத்தமாய்நிறை தூய்கலையர்கட்கும் (மங்களம்)

7. நிரந்தரஞான நிரூபிக்குமிதனை
பிரசுரஞ்செய்திடும் பிரபல்யசீலர்க்கும் (மங்களம்)

8. பூதலம்புகழ் நீதமதாகவே
வேதநாயகன் விளம்பும்வித்யாதிக்கு (மங்களம்)

சர்வசமயசமரசக் கீர்த்தனை முற்றிற்று